


# 1952 - 1986


# தோழர் விசுவானந்ததேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோழர் விசுவானந்ததேவன் நினைவு நூல்

ஆய்வகம் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சமூகத்தில் நிலவுகின்ற வர்க்க – சமூக – இன ஒடுக்குமுறைக்கும், சுரண்டலுக்கும் எதிராகப் போராடி, சமத்துவமிக்க சோசலிச சமூகமொன்றை உருவாக்குவதற்காகத் தமது வாழ்நாளை அர்ப்பணித்த அனைத்துப் போராளிகளுக்கும் இந்நூலினைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

- தோழர் விசுவானந்ததேவன் நினைவு நூல் வெளியீட்டுக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர் விசுவானந்ததேவன் நினைவு நூல்

முதற்பதிப்பு: செப்டம்பர் 2016

வெளியீடு: ஆய்வகம்

மின்னஞ்சல்: aaivakambooks@gmail.com

அட்டைப்படம்: மனோகரன்

அச்சுப்பதிப்பு: கணபதி எண்டர்பிரைஸ், சென்னை 600 005

விலை: ரூ250/-

Comrade Viswananthathevan's commemorative book

First published: September 2016

Published by: Aaivakam

Email: aaivakambooks@gmail.com

Cover: Manokaran

Printed by: Ganapathy Enterprise, Chennai 600 005

Price: Rs250/-

ISBN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | ix |
| விசுவானந்ததேவன் உறவுகள் | 1 |
| சின்னத்துரை தருமராசன் | 5 |
| சண்முகம் சுப்பிரமணியம் | 11 |
| ரஞ்சிதபாலன் | 39 |
| எஸ்.வி.ராஜதுரை | 41 |
| சமுத்திரன் | 54 |
| இரா.பாண்டியன் | 62 |
| எம். ஏ. நு..மான் | 64 |
| அ.யேசுராசா | 70 |
| தோழர்களின் அஞ்சலி | 74 |
| சந்திரசேகரம் | 82 |
| மு.சி.கந்தையா | 85 |
| வ.அழகலிங்கம் | 102 |
| மாவை நித்தியானந்தன் | 136 |
| அ.மார்க்ஸ் | 140 |
| ஆதவன் | 150 |
| லோகநாதன் | 152 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நல்லையா தயாபரன் | 159 |
| சிறிதரன் | 173 |
| சந்திரபாலன் | 177 |
| பரமதயாளன் | 191 |
| ஆனந்தி பாலசூரியன் | 193 |
| வசந்தன் | 196 |
| சம்பந்தன் ரவீந்திரன் | 205 |
| பா.பாலசூரியன் | 208 |
| விசுவானந்ததேவன் கடிதம் (1) | 254 |
| விசுவானந்ததேவன் கடிதம் (2) | 256 |
| விசுவானந்ததேவன் கட்டுரை (1) | 258 |
| விசுவானந்ததேவன் கட்டுரை (2) | 272 |
| தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி | 277 |
| போராளிகளை நினைவில் நிறுத்துதல் | 282 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தனது வாழ்நாளில் அரைவாசிக்கு மேற்பட்ட காலத்தை மக்களுக்காகச் செலவிட்டு, தனது முப்பத்து நான்காவது வயதில் கடற் பயணமொன்றில் காணாமற் போய்விட்ட எமது தோழர் விசுவானந்ததேவனுக்கு நினைவுப்பதிவுகள் எதுவுமில்லையென்ற கவலை நீண்டகாலமாகவே எங்களில் பலருக்கு இருந்தது. மார்க்சிசக் கோட்பாட்டு அரசியலாக இருந்தாலும் சரி, தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமாக இருந்தாலும் சரி, இலங்கையின் வரலாற்றில் விசுவானந்ததேவனுக்கு முக்கிய பாத்திரம் உண்டு என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் இலங்கையின் கால் நூற்றாண்டுகால யுத்தம், இவரைப் போன்ற பல உண்மையான மக்கள் போராளிகளை மறக்கடிக்கச் செய்துவிட்டது. அதனால் இந்த அவரது நினைவு நூல் அவரின் வரலாற்றினை சொல்ல விழையும் ஒரு சிறு முயற்சியெனக் கொள்ளலாம்.

பல வருடங்களாக எமது சிந்தனையில் கருக்கொண்டிருந்த விசுவானந்ததேவனின் நினைவுநூலினை வெளிக்கொணரும் முயற்சியினை இவ்வருடத் தொடக்கத்தில் ஆரம்பித்தோம். விசுவானந்ததேவன் இறந்து இருபத்தொன்பது வருடங்களாகிவிட்டன. முப்பதாவது வருடம் முடிவதற்குள் நினைவுநூலினை வெளியிட வேண்டும், என்பதே எமது எண்ணமாக இருந்தது. தோழர் விசுவானந்ததேவனை அரசியல் ரீதியாக நன்கு தெரிந்தவர்களென நாம் கருதுபவர்கள், உலகம் முழுவதும் சிதறிக் கிடந்தார்கள். இவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து, அவர்களது நினைவுகளிலிருந்து ஒரு நூலை உருவாக்குவதென்பது சாதாரண விடயமல்ல என்பது எமக்குத் தெரிந்திருந்தது.

முதலில் பலருடன் மின்னஞ்சல் வாயிலாகவும் தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு நினைவுக் கட்டுரைகளைத் தருமாறு கேட்டுக் கொண்டோம். நாங்கள் தொடர்பு கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் அவரை மறக்காமல் இருந்ததோடு, எமது முயற்சியை உற்சாகப்படுத்தும் செய்திகளையும் அனுப்பினார்கள். அத்தோடு நினைவுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளை எழுதித் தருவதற்கும் எந்த மறுப்புமின்றி உடனடியாகவே இசைந்தார்கள். விசுவாவை நினைவு கூர்வதற்கு முப்பது வருடங்கள் காலந்தாழ்த்தியதேன் என்று சிலர் கேட்டார்கள். நாங்கள் தொடர்பு கொண்டவர்களில் சிலர் விசுவானந்ததேவனிற்கு தெரிந்த வேறு சிலரின் பெயர்களையும் அவர்களின் இருப்பிடங்களையும் தெரிவித்தார்கள். அவர்களோடு தொடர்பு கொள்ளவும், அவர்களும் மேலும் சிலரின் பெயர்களைக் கூறவும், தொடர்பு கொண்டவர்களின் பட்டியல் சங்கிலித் தொடராக நீண்டு சென்றது. விசுவானந்ததேவனை தனிப்பட்ட வகையிலும் அரசியல் ரீதியாகவும் தெரிந்தவர்களில் பெரும்பாலானோர் கட்டுரைகளை எழுதித்தர முன்வராவிடினும், அவர் பற்றிய தங்கள் நினைவுகளை எங்களுடன் பகிர்ந்து கொண்டதோடு, பிரயோசனமான பல தகவல்களையும் எங்களுக்கு வழங்கினர்.

இந்நூலிற்கு மொத்தமாக இருபத்தைந்து பேர்கள் ஆக்கங்களை வழங்கியிருக்கிறார்கள். எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, சிரமம் பாராது, தங்களின் நேரங்களை ஒதுக்கி, தோழர் விசுவானந்தேவனை மீள நினைந்த இவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகள். இவர்களின் ஆக்கங்கள் இல்லாவிடின் இந்த நூல் பொலிவுற்றிருக்காது. விசுவானந்தேவன் பற்றிய ஒவ்வொருவரது கருத்துக்களும், அவருடனான ஒவ்வொருவரது அனுபவங்களும் தனித்துவமானவை. இதனால் இந்த நினைவு நூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொருவரது ஆக்கங்களும், விசுவானந்தவேனின் வெவ்வேறு விதமான பரிமாணங்களைச் சொல்கின்றன. விசுவானந்ததேவன் மிகக் குறுகிய காலமே எங்களுடன் வாழ்ந்திருந்தாலும், அவரின் உலகம் பரந்து விரிந்திருந்தது. இந்த நூல் வெளியீட்டுக் குழுவினருக்கு அதில் ஒரு பகுதியே தெரிந்திருந்தது. அத்தோடு அவர் இரகசியமாகவும் பல வேலைகளை முன்னெடுத்திருந்தார். அந்த விபரங்கள் அவரைத்தவிர, வேறு ஒரு சிலருக்கே தெரிந்திருந்தது. அதனால் ஆக்கங்களில் சொல்லப்பட்டுள்ள தகவல்களும் சம்பவங்களும் எங்களால் முழுமையாக உறுதி செய்யப்பட முடியாதுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் தற்போது பிரான்சில் வாழும் விசுவானந்ததேவனின் பள்ளிக்காலத்து தோழர், விசுவானந்ததேவன் 1982 ஆம் ஆண்டில் தனக்கு எழுதிய இரண்டு கடிதங்களை இவ்வளவு காலமும் பாதுகாத்து வைத்தது மாத்திரமன்றி, அவற்றினை இந்நூலில் முழுமையாக இணைப்பதற்கும் எமக்கு அனுமதி வழங்கியுள்ளார். அவருக்கும் எமது நன்றிகள்.

இது தவிர, விசுவானந்ததேவன் பல்வேறு வகைப்பட்ட பத்திரிகைகளில் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். ஆனால் அவர் தனது சொந்தப் பெயரில் அவற்றினை எழுதியதாகத் தெரியவில்லை. இதனால் அவரது சொந்தப் படைப்புகள் எவையென முழுமையாக எம்மால் அறிய முடியவில்லை. எனினும் அவர் புனைபெயரில் எழுதிய கட்டுரையொன்றும் புத்தக விமர்சனமொன்றும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அவரது படைப்புகளில் கணிசமானவற்றையேனும் இந்நூலில் இணைக்க முடிந்திருந்தால், இந்நூல் மேலும் சிறப்புப் பெற்றிருக்குமென நாம் நம்புகிறோம். அதுபோலவே ஒருவரது நினைவுநூலென்றால் அவர் சார்ந்த புகைப்படங்களுக்கும் முக்கிய இடம் உண்டு. அதனால் விசுவானந்ததேவனின் புகைப்படங்களைச் சேகரிக்க கடும் பிரயத்தனங்கள் எடுத்தோம். ஆனால் அவரது புகைப்படங்களை அதிகளவில் எம்மால் தேடிக்கண்டு பிடிக்க முடியவில்லை.

1983 ஜூலை இனவன்செயலுக்குப் பின்னர் தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைக்காக ஆயுதப்போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த எல்லா இயக்கங்களுமே பிளவுகளைச் சந்தித்திருந்தன. அந்த வகையில் விஸ்வா இணைந்திருந்த 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யும் இரண்டாக உடைந்து, விஸ்வா தலைமையில் 1986 இல் 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி' உருவாகியது. இந்தப் புதிய அமைப்பு உருவாக்கத்திற்கான நியாயப்பாட்டின் முக்கியத்துவம் கருதி, 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி'யின் அரசியல் நிலைப்பாட்டினை விளக்கும் கட்டுரையொன்றினையும் இந்நூலில் இணைத்துள்ளோம்.

'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி' மற்றும் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' என்ற இரு அமைப்புகளிலிருந்தும் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் விடுதலைக்காக போராளிகள் தமது உயிர்களை அர்ப்பணம் செய்துள்ளார்கள். போராட்டம் என்றால் இழப்புகள் தவிர்க்க முடியாதது. ஆனால் இந்த இரு அமைப்புகளுமே முற்றுமுழுதாக செயலிழந்த பின்னரும், இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறிய 1989, 1990 ஆண்டு காலப்பகுதியில் வடபகுதியிலிருந்த பல போராளிகள் 'தமிழீழ விடுதலைப்புலிகளா'ல் வேட்டையாடப்பட்டுள்ளனர். தோழர் விஸ்வாவை நினைவு கூரும் இந்தச் சந்தர்ப்பத்தில், இலங்கை அரச படைகளாலும் தமிழ்த் தேசியவாத இயக்கங்களாலும் விபத்துகளிலும் பலியான மற்றும் காணாமற்போன போராளிகளையும் இந்த நூலில் நினைவு கூர்ந்துள்ளோம். இந்த மறைந்த போராளிகளின் விபரங்களைத் திரட்ட உதவி புரிந்தவர்களுக்கு எமது நன்றிகள்.

இந்நூலுக்கு ஆக்கங்கள் வழங்கியவர்கள் உட்பட, விசுவானந்ததேவனுக்கு நினைவுநூல் வெளியிடப்பட வேண்டுமென விரும்பியவர்கள் கடந்த சில மாதங்களாக எப்போது நூல் வேலைகள் பூர்த்தியடையும், எப்போது நூல் வெளியிடப்படும் என்பதிலும் ஆர்வங்காட்டி வருகிறார்கள். சிலர் புத்தக வெளியீட்டுக்கு பண உதவி செய்யக்கூட முன்வந்தார்கள். அவ்வாறானவர்களின் விசாரிப்புகள், அக்கறைகள் எங்களை மென்மேலும் உற்சாகப்படுத்தியது என்பதை நன்றிப் பெருக்கோடு இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்கின்றோம்.

இந்நூலில் வெளியாகியிருக்கும் சில கட்டுரைகளை தட்டச்சு செய்து தந்த எமது உறவுகளுக்கும், இந்நூலின் உள்ளடக்கம் மற்றும் வடிவமைப்புகளை பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கிய எமதருமை தோழர்களுக்கும் நண்பர்களுக்கும் மற்றும் இந்நூல் வெளிவர சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**தோழர் விசுவானந்ததேவன் நினைவு நூல்**
**வெளியீட்டுக்குழு சார்பாக,**
**பா.பாலசூரியன்**

Email: balasooriyan@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மைந்தன் விசுவானந்ததேவனின் நினைவுகள் சில

வளம் கொழிக்கும் வயல்கள் சூழ்ந்த கல்லுவம் என்னும் கிராமம் வடமராட்சி கரணவாய் மேற்கில் உள்ளது. இக் கிராமத்தில் அதி ஊக்கமுடைய விவசாயிகளில் ஒருவரான திரு விஸ்வலிங்கத்திற்கும் அவர் அன்பான மனைவி நாகம்மாவுக்கும் மூத்த மகனாக 29-11-1952 இல் விசுவானந்ததேவன் அவதரித்தார். இவர் பிறக்கும் போதே சிறிய தோற்றம். ஆனால் சிரசு சற்றுப் பெரியது. அச்சிரசு தோற்றத்தில் பெரியதாய் இருந்ததைப் போன்றே, அதனுள்ளேயும் நல்ல புத்திசாதுரியங்களை இயற்கை வழங்கியிருந்ததை பின்னாளில் நாங்கள் கண்டோம்.

இவரை, இவரது பெற்றோர் யாழ்ப்பாணம்/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் ஆரம்பக்கல்வி கற்கச் சேர்த்திருந்தார்கள். பின்னர் அந்தப் பாடசாலையிலேயே உயர்தர வகுப்பு வரை பயின்று பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார்.

உயர் வகுப்புக்களில் படித்துக் கொண்டிருந்த இவரது தாயின் தங்கை, சிறியதாய் (ஆசையம்மா என்று இவர் அழைப்பார்) ஆரம்ப வகுப்புக்களில் இவரை தினமும் பள்ளிக்குக் தன்னுடன் கூட்டிச் செல்வார், தனது பிள்ளைபோல்.

இவர் ஆரம்ப வகுப்புக்களில் படிக்கும் போது ஒரு குட்டித்தம்பியாக எல்லோரும் ஆசைப்படும்படி கொச்சைத் தமிழில் (மழலைத் தமிழில்) நன்றாகக் கதைப்பார். இதனை எல்லோரும் இரசிப்பர். ஓய்வு நேரத்தில் ஆசிரியர்கள் கூட இவரை மேசைமீது ஏற்றிவிட்டு, எல்லோரும் கதைகொடுத்து கதைகேட்டு மகிழ்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் முதலாம் வகுப்பில் சேர்க்கப்பட்ட காலங்களில் இவரது ஆசையம்மாவிற்கு காலையிலிருந்து மாலை வரை பாடசாலையில் வகுப்புகள் நடைபெறும். ஆனால் இவருக்கோ காலையுடன் வகுப்புகள் முடிவடைந்துவிடும். எனினும் ஆசையம்மாவின் வகுப்புகள் முடியும்வரை பாடசாலையில் வேறு சில சிறு பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடிப் பொழுதைப் போக்குவார். சில வேளைகளில் ஆசையம்மா 'எப்ப வருவா எப்ப வருவா' என்று கவலைப்பட்டு கேட்டுக் கொண்டே இருப்பாராம். ஒரு நாள் ஏதோவிதமாக ஆசையம்மாவின் வகுப்பினைக் கண்டு பிடித்துவிட்டார். அந்த நேரத்தில் வகுப்பில் அங்கு ஆசிரியர் இல்லாததால், வகுப்பிற்குள் புகுந்து விட்டார். அங்கே ஓடிச் சென்று ஆசையம்மாவிற்குப் பக்கத்தில் இருந்து விட்டார். ஆசையம்மாவின் சக மாணவர்கள் எல்லோரும் பெரிய சத்தம் போட்டு சிரித்து விட்டார்கள். ஆசையம்மாவிற்கு அவரிடமிருந்த பாசத்தால், அவவினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்த வேளையில் ஆசிரியர் வகுப்பிற்குள் வந்து விட்டார். வகுப்பிலிருந்த மாணவர்கள் எல்லோரும் சிறுவன் ஒருவனின் துணிவான விநோதச் செயலைக்கண்டு மகிழ்ச்சியால் ஆரவாரித்தார்கள். அதனாலோ என்னவோ ஆசிரியரும் அவரைக் கண்டிக்க முடியாது முதலில் திக்கு முக்காடினார். ஆசிரியர் அவரை மிரட்டி வகுப்பைவிட்டுத் துரத்தாமல் இருந்தது மாத்திரமன்றி, அவரை அருகில் அழைத்து, அவரது மழலைக் கதைகளைக் கேட்டுச் சமாளித்து விட்டார். பின் அவரது ஆசையம்மாவை அழைத்து, அவரை வெளியில் கூட்டிச் சென்று விடுமாறு ஆசிரியர் பணித்தார். இப்படியே அவரின் சிறு பராய சுட்டித்தனங்கள் ஏராளம் உண்டு. ஆசையம்மாவின் பாடசாலைக் காலங்களில் பெரும் பகுதி இவரோடு இணைந்ததாகவே கழிந்தது.

படிப்பிலும் வலும் சுட்டி. எல்லா வகுப்புகளிலும் இவரே முதல் மாணவராய் வருவார். அடிக்கடி மேடைகளில் பாடத்திறனுக்காக பரிசில்கள் வாங்குவார். பேச்சுத் திறமைக்காகவும் பரிசில்களைத் தட்டிச் செல்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இவர் ஐந்தாம், ஆறாம் வகுப்புக்களில் படிக்கும் காலங்களில் கடவுள் பக்தி நிறைந்தவனாக இருந்தார். கோயிலில் மார்கழித் திருவெம்பா படிக்கும் காலங்களில் அதிகாலையிலேயே எழுந்து நீராடிவிட்டு, திருவெம்பாப் பதிகம் அடங்கிய புத்தகத்தோடு, இவர் வீட்டின் அருகே இருக்கும் வைரவகோயில் மணி கேட்கவும், ஓட்டமும் நடையுமாக கோயில் நோக்கிச் செல்வார். இவர் பின்னாளில் ஒரு சமயபக்தனாகிவிடக் கூடும் என்று எண்ணிய எண்ணம் முழுக்கப் பொய்த்து விட்டது.

பாடசாலை நூல் நிலையமும், அப்போ கற்பித்த நல்லாசிரியர்களின் தூண்டுதலாலும் நல்ல வாசிப்புப்பழக்கம் இவரை ஆட்கொண்டுவிட்டது. நிறைய நிறைய வாசிக்கும் ஒருவராக மாற்றமெடுத்தான்.

ஒரு நாள் இவரது நெருங்கிய உறவினரும் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் அதிபருமான செல்லத்துரை அவர்கள் ஏதோ தவறுக்காக அக்கால வழக்கப்படி பிரம்பினால் இவருக்குத் தண்டனை வழங்கினார். அவர் பிரம்பால் அடித்துக்கொண்டிருக்கும் போதே, அதாவது அடியை வாங்கிக்கொண்டே, அடித்து விட்டால் எல்லா பிரச்சினைகள் தீர்ந்து விடுமா என்று அதிபரைப் பார்த்துக் கேட்டு விட்டார். இதனைக் கேட்ட அருகிலிருந்தவர்கள் சிரித்து விடவே அதிபரும் அடிப்பதை நிறுத்திக் கொண்டார்.

மேல் வகுப்புக்கள் வரை ஓயாது புத்தகங்கள் வாசித்து வந்த இவரை, மார்க்சிச சிந்தனைகள் இவரை ஈர்த்துக் கொண்டுவிட்டது.

அக்காலகட்டத்தில் உயர்தரம் (A/L) பரீட்சையில் தோற்றுபவர்களுக்கு செய்முறைப் பரீட்சை (Practical Test) ஒன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும். அதற்கு இவருக்கும் அழைப்பு வந்தது. அப்போது மே தினமும் வந்தது. அதில் பங்குபற்றுவதற்காக கொழும்புக்குப் போய் அதில் விடிய விடிய பங்கேற்ற பின், மறுநாள் செய்முறைப் பரீட்சைக்காக பேராதனைக்குப் போனார். நித்திரையின்மையால் ஏற்பட்ட உடல் சோர்வின் காரணமாக செய்முறைப் பரீட்சையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சித்தியடையத் தவறிவிட்டார். எவருமே எதிர்பார்க்கவில்லை.

பின்னர் மீள் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து, தனது பதினெட்டாவது வயதில் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற் பீடத்திற்கு தெரிவாகி, ஒரு பொறியியலாளராக வெளியேறினார்.

ஒரு சகோதரனும் மூன்று சகோதரிகளும் இவருக்கு உடன் பிறந்த சகோதரர்கள். அவர்கள் தங்களுக்கு மூத்தண்ணா எதுவும் உதவி செய்யவில்லையே என்று ஒருபோதும் குறைபட்டது கிடையாது. இவரது வஞ்சகமற்ற அன்புள்ளத்தினால் வீட்டினர், உறவினர்கள் மற்றும் அயலவர்கள் கவரப்பட்டிருந்தார்கள். இவர் எப்போதுமே நல்ல சுதந்திரப் பறவையாகத் திகழ்ந்தார்.

இறுதியாக காங்கேசன்துறை சீமேந்து கூட்டுத்தாபனத்தில் பொறியியலாளராகப் பணி புரிந்தார். சில காலமே பணியில் இருந்த இவரை, நிர்வாகம் பணி நீக்கம் செய்ததினால், அத்தோடு தம் தொழிலை உதறித் தள்ளிவிட்டு, முழுமையாக மார்க்சிச அரசியலில் மூழ்கிப்போனார். இவரோடு பழகுபவர்கள் எளிதில் இவர் வசமே ஆளாவார்கள். நல்ல கபடமற்ற உண்மையான உள்ளம் அவர்களைக் கவர்ந்ததில் வியப்பேதும் இல்லை.

பின்நாட்களில் மார்க்சிச தோழர்கள் ஏராளமானோர் இவர் பின்னாலேயே சென்றார்கள்.

அவர் கனவு நனவாகுவதன் முன், அந்தோ பரிதாபம் இளவயதிலேயே இவர் நேசித்த அரசியல் இவர் ஆவியைப் பிரித்தது. அரசியலில் பல நல்ல உள்ளங்கள் இவ்வாறு மரணத்தைத் தழுவிய வரலாற்றில், இவரது வாழ்வும் கரைந்தது.

இவரது பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரியவராக, அக்காலத்தைய காலஞ்சென்ற கேரளாவைச் சேர்ந்த உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் அதிபர் திரு K.T. John (ஜோன்) விளங்கினார். அவரது தள்ளாத வயதில் கேரளா சென்று அவர் உடல்நலம் பற்றி விசாரிக்க, இவர் தவறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் விசுவானந்தேவனின் நெருங்கிய உறவினர், முதுபெரும் தோழர் சின்னத்துரை தருமராசன் அவர்களுடன் ஒரு செவ்வி

**கேள்வி:** நீங்கள் கல்லுவம் கிராமத்தில் நீண்டகாலம் வாழ்ந்தவர் என்ற முறையிலும், தோழர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன் அவர்களின் நெருங்கிய உறவினர் என்ற வகையிலும் அவரைப் பற்றி கொஞ்சம் கூற முடியுமா?

**பதில்:** எனது சொந்த ஊர் கல்லுவத்துக்கு அருகிலுள்ள உடுப்பிட்டிக் கிராமம் ஆகும். 1963இல் நான் விசுவானந்ததேவனின் நெருங்கிய உறவினரான ஒரு பெண்ணைத் திருமணம் செய்த பின்னர் கல்லுவம் கிராமத்தில் நிரந்தரமாக வாழ்ந்துகொண்டு, தொழில் ரீதியாக இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஒரு சாரதியாக இணைந்து பணிபுரிந்தேன்.

கல்லுவத்தில் வாழத் தொடங்கியதும் விசுவானந்ததேவனின் பெற்றோருடன் நெருங்கிய பழக்கமும், உறவும் ஏற்பட்டது. விசுவானந்ததேவனின் தந்தையார் விசுவலிங்கம் தம்பதியினருக்கு இரண்டு ஆண்களும், மூன்று பெண்களுமாக மொத்தம் ஐந்து பிள்ளைகள். அவர்களில் விசுவானந்ததேவனே மூத்தவர்.

**கேள்வி:** நீங்கள் மிகவும் இளம் வயதிலேயே கம்யூனிஸ்ட் கட்சியால் ஈர்க்கப்பட்டு அதனுடன் இணைந்து வேலை செய்ததாக அறிந்துள்ளோம். கல்லுவத்தில் வாழத் தொடங்கியதும் அந்தக் கட்சிப் பணிகளைத் தொடர்ந்தீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதில்:** ஆம். அன்றிலிருந்து இன்றுவரை – எனக்கு இப்பொழுது 85 வயதாகிறது – பொதுவுடமைக் கொள்கையில் அசையாத பற்றுறுதியுடனேயே இருக்கின்றேன். நான் எனது இளமைக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தோழர்கள் மு.கார்த்திகேசன், அ.வைத்திலிங்கம், ஐ.ஆர்.அரியரத்தினம், எம்.சி.சுப்பிரமணியம் போன்றவர்களுடன் இணைந்து கட்சியின் முழுநேர ஊழியராகச் செயற்பட்டுள்ளேன். கட்சி, முற்போக்குப் பிரசுரங்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்காக யாழ்.நகரில் 'யாழ்.புத்தக நிலையம்' என்றொரு புத்தக நிலையத்தை உருவாக்குவதில் நானும் பங்குபற்றியுள்ளேன். அப்போது கட்சியின் பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருந்த 'தேசாபிமானி' பத்திரிகையின் விற்பனையிலும் ஈடுபட்டுள்ளேன். 1956இல் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்ட தோழர் பொன்.கந்தையா அவர்களின் வெற்றிக்காகவும் அப்போது இளைஞர்களாக இருந்த என் போன்றவர்கள் தீவிரமாக உழைத்துள்ளோம். அதன் தொடர்ச்சியாக நான் கல்லுவத்திலும் எனது அரசியல் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வந்தேன்.

**கேள்வி:** கல்லுவத்தில் நீங்கள் ஆரம்பத்தில் என்ன மாதிரியான அரசியல் பணிகளை முன்னெடுத்தீர்கள்?

**பதில்:** அங்கு ஒரு சனசமூக நிலையமும், வாசிகசாலையும் இருந்தன. ஆனால் அவைக்கு ஒரு நிரந்தரக் கட்டிடம் இல்லாமல் இருந்தது. நான் அவ்வூர் மக்களின் உதவியுடன் 'கலைநேசன் சனசமூக நிலையம்' என்ற அந்த வாசிகசாலைக்கு நிரந்தரக் கட்டிடம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றேன். அந்த வாசிகசாலையில் எல்லாவிதமான பத்திரிகைகளையும், முற்போக்குப் பிரசுரங்களையும் வரவழைத்து மக்களை வாசிக்கச் செய்தோம். எனது இந்த முயற்சியில் அப்பொழுது உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியில் மாணவனாகக் கல்வி கற்றுக் கொண்டிருந்த விசுவானந்ததேவனும், ஏனைய மாணவர்கள் வாலிபர்களும் ஊக்கமுடன் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சனசமூக நிலையத்தில் பல தடவைகள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களான மு.கார்த்திகேசன், பொன்.கந்தையா போன்ற தோழர்களை அழைத்து மார்க்சிய வகுப்புகளையும், அரசியல் கருத்தரங்குகளையும் நடாத்தியிருக்கிறேன்.

அத்துடன், நான் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஒரு சாரதியாகப் பணியாற்றியதினால் அங்கு கம்யூனிஸ்ட் கட்சியினால் உருவாக்கப்பட்ட 'இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம்' என்ற போக்குவரத்து ஊழியர்களின் தொழிற்சங்கத்தின் வட பிரதேசத் தலைவராகவும் செயலாற்றியுள்ளேன்.

**கேள்வி:** உங்களுடைய ஆரம்பகால அரசியல் வேலைகளால்தான் தோழர் விசுவானந்ததேவன் போன்றவர்கள் முற்போக்கு அரசியல் பாதையில் பயணிப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது தெளிவாகின்றது. தோழர் விசுவானந்ததேவனின் இளமைக்காலம் பற்றி நீங்கள் அவதானித்ததைக் கூற முடியுமா?

**பதில்:** விசுவானந்ததேவனின் பெற்றோரின் குடும்பம் கடின உழைப்புள்ள ஒரு விவசாயக் குடும்பம். அவரது தகப்பனாரான விசுவலிங்கம் தனது பிள்ளைகளை நன்கு படிப்பித்து நல்ல நிலைக்கு ஆளாக்க வேண்டும் என விரும்பினார். அவரது விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், விசுவானந்ததேவன் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் மிகவும் கெட்டிக்கார மாணவனாக இருந்தார். அதன் காரணமாக அவர் அதிக புள்ளிகள் எடுத்து பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்துக்குத் தெரிவாகி, தான் கற்ற கல்லூரிக்கும், தனது பிறந்த ஊரான கல்லுவத்துக்கும் பெருமையை ஏற்படுத்தினார்.

உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியில் கல்வி கற்ற காலத்திலேயே அவர், கல்லூரி மாணவர் மன்றத்தில் பேசுவதற்கு மு.கார்த்திகேசன் போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்களை அழைத்து வந்து பேச வைத்திருக்கிறார். அவரது இந்த அரசியல் ஈடுபாட்டை அங்கு பணியாற்றிய சில அதிபர்களும், ஆசிரியர்களும் விரும்பாவிடினும், அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித் திறமை காரணமாகவும், சில ஆசிரியர்களினது அன்பையும், ஆதரவையும் அவர் பெற்றிருந்த காரணத்தாலும், அவர் மீது கல்லூரி நிர்வாகம் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

பிற்காலத்தில் அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலத்தில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து தீவிரமான அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டார். தமிழ் மாணவர்களுடன் மட்டுமின்றி, சிங்கள – முஸ்லீம் – மலையக மாணவர்கள் மத்தியிலும் அவருக்கு நிறையத் தோழர்கள் இருந்தனர்.

**கேள்வி:** பிற்காலத்தில் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை தீவிரமடைந்த பொழுது, தோழர் விசுவானந்ததேவன் தனியாக ஒரு தமிழ் தேசிய இயக்கத்தை உருவாக்கி வேலை செய்ததை அறிந்திருப்பீர்கள். அந்த இயக்கத்தில் உங்களுக்குத் தொடர்புகள் ஏதாவது இருந்ததா? அவரது அந்தச் செயற்பாடுகள் குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** அவர் ஆரம்பித்த தமிழ் தேசிய இயக்கம் பற்றி அறிந்திருக்கிறேன். அவரது இயக்கத்தில் எமது கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களும், வடமராட்சி மற்றும் பல பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்களும் இணைந்திருந்ததும் தெரியும். எமது உறவினர் ஒருவரின் தோட்டக் காணி ஒன்றில் கொட்டகை ஒன்று போட்டு, அதில் பல இடங்களிலுமிருந்து அடிக்கடி இளைஞர்களை அழைத்து வந்து விசுவானந்ததேவன் கருத்தரங்குகளும் நடாத்தியிருக்கிறார். அவர் தனது இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதற்கு முழுமூச்சுடன் வேலைகளில் ஈடுபட்டார்.

ஆனால் இதில் என்னைப் போன்ற கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத சில விடயங்கள் இருக்கின்றன. முதலாவதாக, கட்சியின் தலைமையையும், வழிகாட்டலையும் புறக்கணித்துவிட்டு, வெறுமனே தமிழ்த் தேசியவாத இயக்கம் ஒன்றை ஆரம்பித்தது ஏற்புடையதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக, ஐக்கிய இலங்கைக்குள் எல்லா இனத்தவர்களும் சமத்துவமாக வாழ வழிவகுக்கும் வகையில் எமது கட்சி 1954இல் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பிராந்திய சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்றொரு தீர்மானத்தை எடுத்திருந்தது. அந்தச் சரியான கொள்கையை நிராகரித்துவிட்டு, தனித் தமிழீழக் கொள்கையை ஏற்றதும், அதற்காக ஆயுதப் போராட்டப் பாதையைத் தேர்ந்தெடுத்ததும் தவறான முடிவுகளாகும்.

பல தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் இந்தமாதிரித் தவறான பாதையை எடுத்ததாலேயே பின்னர் அழிவுக்கு உள்ளாயின. அந்த மாதிரியான ஒரு அழிவையே விசுவானந்ததேவனின் இயக்கமும் சந்தித்ததுடன், அவரது துன்பகரமான முடிவும் அமைந்துவிட்டது. கட்சியின் வழிகாட்டலில் அவர் செயற்பட்டிருந்தால், அவரது துன்பியல் முடிவைத் தவிர்த்திருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

நல்ல கல்வியறிவும், மக்களை நேசிக்கும் பக்குவமும், விசேடமான செயற்திறனும், மாற்றுக் கருத்துள்ளவர்களையும் வசீகரிக்கும் அணுகுமுறையும் உள்ள விசுவானந்ததேவன் போன்றவர்கள் சமூகத்து ஆற்ற வேண்டிய பணிகள் நிறைய இருந்தும், சில தவறான முடிவுகள் எப்படி ஒரு மனிதனின் தலைவிதியை மாற்றி அமைத்துவிடும் என்பதற்கு அவரது இழப்பு ஒரு சரித்திரச் சான்றாக வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ளது.

அவர் இன்று உயிருடன் இருந்திருப்பாரேயானால், கம்யூனிஸ்ட்டுகளுக்கு உள்ள தனித்துவமான பண்பான சுய – விமர்சன முறையில் தனது தவறுகளைக் களைந்து, பல சாதனைகளை நிலைநாட்டியிருப்பார் என்ற நம்பிக்கை எங்கள் எல்லோருக்கும் இருக்கின்றது.

**குறிப்பு:** தனது பதின்ம வயதிலேயே கம்யூனிஸ்ட் இயக்கத்தில் செயற்படத் தொடங்கிய தோழர் சி.தருமராசன் அவர்கள், இலங்கையில் ஏற்பட்ட கொடிய உள்நாட்டு யுத்தம் காரணமாக தனது பிள்ளைகளின் அழைப்பை ஏற்று கனடா நாட்டுக்குச் சென்று அங்கு தனது மனைவி மற்றும் பிள்ளைகள், பேரப் பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார். கனடாவில் வாழந்தாலும், தனது தாய் நாடான இலங்கை மண்ணில் நடைபெறும் நிகழ்வுகளை உன்னிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்து வருவதுடன், கனடிய மண்ணில் வாழும் இலங்கையர்கள் மத்தியில் முற்போக்கு சிந்தனைகளை வளர்ப்பதில் தனது முதுமைக் காலத்திலும் அயராது உழைத்து வருகிறார்.

செவ்வி கண்டவர்: தோழர் மணியம் *(2016, செப்ரெம்பர் 03)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்முகம் சுப்பிரமணியம்

# சோசலிச இலட்சியத்துக்காக தேசிய இனப் பிரச்சினையை பரீட்சித்துப் பார்த்த புரட்சியாளர்

தோழர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன் காணாமற் போய் (போகவைக்கப்பட்டு) 30 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், அவரைப்பற்றிய நினைவுகளை மீட்டுப் பார்ப்பது, காலத்தின் ஒரு தேவையாக மட்டுமின்றி, என்னைப் போன்ற அவருடன் மிகவும் நெருங்கிப் பழகியவர்களுக்கு ஆத்மரீதியான ஒரு தேவையாகவும், திருப்தியாகவும் கூட இருக்கின்றது என்பதைச் சொல்வதில் தவறேதும் இல்லை என நினைக்கின்றேன்.

தோழர் விசுவானந்ததேவனைப் பற்றி நான் 1960களின் பிற்பகுதியில் சில வடமராட்சித் தோழர்கள் மூலமாக கேள்விப்பட்டிருந்தபோதிலும், நேரடியாக அவரைச் சந்தித்தது ஜே.வி.பி. இயக்கத்தின் 1971 ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சியின் பின்னரான காலத்திலாகும். நாங்கள் இருவரும் சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி என அழைக்கப்பட்ட புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியுடன் வேலை செய்தவர்களாக இருந்த போதிலும், அதுவரை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்பு அதற்கு முதல் கிட்டியிருக்கவில்லை.

இயக்கச்சியிலுள்ள முகாவில் என்ற கிராமத்தைச் சேர்ந்த நான், ஜீ.சி.ஈ. பரீட்சையில் சித்தியெய்திவிட்டு, படிப்பை மேலே தொடராமல் அக்கட்சியின் (1966 ஜனவரி முதல்) முழுநேர ஊழியராக கிளிநொச்சிப் பிரதேசத்திலும், வவுனியா பிரதேசத்திலும் விவசாயிகள் மத்தியில் வேலை செய்து கொண்டிருந்தேன். என்னைவிட சற்று வயது இளையவரான வடமராட்சியிலுள்ள கல்லுவம் கிராமத்தைச் சேர்ந்த தோழர் விசுவானந்ததேவன், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் கல்வி கற்றுவிட்டு, பேராதனை பொறியியல் பீடத்துக்குத் தெரிவாகி அங்கு கல்வி கற்றுக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் இன்னொரு சுவாரசியமான விடயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். எனது முகாவில் கிராமத்தில் வாழும் எனது உறவினர்களில் பெரும்பாலானவர்கள் அச்சுவேலிக்கு அடுத்ததாக உள்ள இடைக்காடு கிராமத்தைச் சேர்ந்தவர்கள். எனது தாய் தந்தையரும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களே. அதேநேரத்தில், எமது முகாவில் கிராமத்தில் வாழ்பவர்களில் பெரும்பான்மையானோர் தோழர் விசுவானந்ததேவனின் சொந்த ஊரான கல்லுவத்தைச் சேர்ந்த அவரது உறவினர்களாகும். எப்படி இந்த இரண்டு கிராமத்தவர்களும் முப்பது மைல்களுக்கப்பால் உள்ள முகாவிலில் ஏதோ ஒரு காலத்தில் குடியேறினார்கள் என நானும், தோழர் விசுவானந்ததேவனும் ஆச்சரியமடைந்து ஆராய்ந்திருக்கிறோம்.

பின்னர்தான் ஒரு உண்மை புலனாகியது. அதாவது எனது பெற்றோரின் இடைக்காட்டுக் கிராமத்துக்கு கிழக்காக தொண்டமானாறு கடலேரி இருக்கின்றது. அதற்கு அடுத்ததாக உள்ள முதல் கிராமம் கல்லுவமாகும். எனவே, இந்த இரண்டு கிராமத்தவர்களுக்கிடையிலும் ஏதோ ஒரு வகையில் உறவு இருந்திருக்க வேண்டும். அதன் காரணமாக இரு கிராமத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் கிழக்கே இருந்த முகாவில் கிராமத்துக்கு இடம் பெயர்ந்தபோது, ஒன்றாக இடம் பெயர்ந்திருக்க வேண்டும் என நாம் இருவரும் ஒரு முடிவுக்கு வந்தோம்.

எமது கிராமத்தில் இருக்கும் பிரசித்தி பெற்ற திரியாய் அம்மன் கோயிலில் வைகாசி விசாகத்தின் போது பொங்கல் சிறப்பாக நடைபெறும். அப்போது, இடைக்காட்டிலிருந்தும், கல்லுவத்திலிருந்தும் மக்கள் வந்து இரண்டு மூன்று நாட்கள் தமது உறவினர்களுடன் தங்கிக் கொண்டாடிப் போவது வழமை. எனக்கும் தோழர் விசுவானந்ததேவனுக்கும் உறவு ஆரம்பமான பின்னர் அவரும் நானும் கூட இந்தப் பொங்கலுக்காக எமது கிராமத்துக்குச் சென்று சந்தித்து அளவளாவி இருக்கிறோம்.

எங்கள் இருவரையும் சந்திக்க வைத்ததில், அன்றைய காலகட்டத்தில் எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியில் நிலவிய சில பிரச்சினைகள் தூண்டுகோலாக இருந்தன. அதாவது, எமது கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த நா.சண்முகதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் தலைமைத்துவம் சம்பந்தமாக எமது கட்சியில் அபிப்பிராய பேதங்களும், அதிருப்தியும் ஏற்கெனவே உருவாகி இருந்தன. அவரது இடது சந்தர்ப்பவாத, ஒருமுனைவாதப் போக்கு சம்பந்தமான விமர்சனங்களில் வடக்கில் கிளிநொச்சிப் பிரதேசமும், தெற்கில் கண்டி பிரதேசமும் முன்னணியில் திகழ்ந்தன.

கண்டிப் பிரதேசத்தில் கட்சி வேலைகளில் முக்கிய பங்கு வகித்திருந்த, கட்சியின் மத்திய குழு உறுப்பினரான தோழர் காமினி யாப்பா (விமல் ரணசிங்க), ஹிங்கிராங்கற்ற கிராமசபைத் தலைவராக இருந்த தோழர் விமால் விஜயக்கூன் போன்றவர்கள் சண்முகதாசனுடன் முரண்பட்டு கட்சியை விட்டு வெளியேறி, 'கீழைக்காற்று இயக்கம்' என்ற தனியான அமைப்பொன்றை அமைத்து வேலைசெய்ய ஆரம்பித்திருந்தனர். அதற்கு முன்னதாக கட்சியின் கண்டி மாவட்டச் செயலாளராகவும், மக்கள் செல்வாக்கு மிக்கவராகவும் இருந்த தோழர் ஜெயரத்ன மல்லியகொடவும் கட்சியை விட்டு ஒதுங்கியிருந்தார். இந்த நிலைமைகள் பின்னர் கண்டி கட்சிக் கிளையில் வேலை செய்த தோழர் விசுவானந்ததேவன் போன்ற தோழர்களை பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியிருந்தது.

இந்தச் சூழ்நிலையில், எமது கட்சியில் இணைந்து வேலை செய்து, கட்சித் தலைமையில் அதிருப்தியுற்று கட்சியை விட்டு வெளியேறி, ஜே.வி.பி. என்ற இயக்கத்தை உருவாக்கி, எமது கட்சி பிரச்சாரம் செய்து வந்த ஆயுதப் போராட்டத்தின் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற விடயத்தை ஏதோ ஒரு வகையில் 1971 ஏப்ரலில் நடைமுறைப்படுத்த முயன்ற ரோகண விஜேவீரவின் செயற்பாடு, எமது கட்சியின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஜே.வி.பியின் கிளர்ச்சியின் பின்னர் எமது கட்சியும் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு உள்ளாகியது. பல தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டனர். எம்மைப் போன்ற பலர் தலைமறைவாக இருந்தோம். கட்சி முழுவதுமாகச் சீர்குலைந்து போயிருந்தது. அதைவிட முக்கியமான விடயமாக கட்சியின் பெரும்பாலான கீழ்மட்ட உறுப்பினர்கள் கட்சித் தலைமை மீது, குறிப்பாக சண்முகதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது, முற்றிலுமாக நம்பிக்கை இழந்து போயிருந்தனர். ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சியின் பின்னர், எமது கட்சி இனியும் புரட்சி பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை என்பதே பெரும்பாலான கட்சி உறுப்பினர்களின் கருத்தாக இருந்தது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான், 1971 நடுப்பகுதியில் தோழர் விசுவானந்ததேவன் கண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த தேவப்பிரிய (புனைபெயர் என்று நினைக்கிறேன்) என்ற ஒரு தோழரையும் அழைத்துக்கொண்டு எம்மைச் சந்திப்பதற்காக கிளிநொச்சிக்கு முதன்முதலாக வருகை தந்தார். அவர்கள் இருவருக்கும், அப்பொழுது கிளிநொச்சிப் பிரதேசத்தில் கட்சி முழுநேர ஊழியர்களாக வேலை செய்து கொண்டிருந்த பத்துக்கும் மேற்பட்ட தோழர்களுக்கும் இடையிலான சந்திப்பு விசுவமடுவில் உள்ள ஒரு தோழரின் வீட்டில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்புக் குறித்து கட்சியின் வட பிரதேச குழு உறுப்பினர்களாக இருந்த நானோ அல்லது கிளிநொச்சிப் பகுதியில் வேலை செய்த இன்னொரு தோழரோ, பிரதேசத் தலைமைக்கு அறிவிக்காமல் இரகசியமாகவே வைத்திருந்தோம். அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, ஏற்கெனவே சண்முகதாசன் தலைமையை விமர்ச்சித்த தென்னிலங்கைத் தோழர்கள் பலர் பழிவாங்கும் நோக்குடன் கட்சியிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர். இரண்டாவது, வட பிரதேசக் கட்சித் தலைமையிலும் இருந்த சிலர், சண்முகதாசன் மீது குருட்டு விசுவாசம் கொண்டவர்களாக இருந்தனர். அதனால் வட பிரதேசத் தலைமைக்கு அறிவித்தால் கண்டியில் இருந்து வந்த தோழர்களுடனான பேச்சுவார்த்தைக்கு தடை வந்துவிடும் என அஞ்சினோம்.

விசுவமடுவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, தோழர்கள் விசுவானந்ததேவனும், தேவப்பிரியவும், இனியும் சண்முகதாசன் தலைமையில் உள்ள கட்சியில் இருப்பது பயனில்லை என்றும், கட்சித் தலைமையில் அதிருப்தியுற்றுள்ள வட பகுதித் தோழர்களும், தென்னிலங்கைத் தோழர்களும் இணைந்து புதிய கட்சி ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர். எம்மில் பலருக்கும் கூட அந்தக் கருத்தில் உடன்பாடு இருந்தது. இந்தப் பேச்சுவார்த்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியாக நானும், இன்னொரு தோழரும் கிளிநொச்சியிலிருந்து கண்டிக்குச் சென்று பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தோம்.

அதன்பின்னர், நாம் பெரிதும் மதிப்பு வைத்திருந்தவரும், கட்சி மத்திய குழுவிலும், கட்சியின் வட பிரதேசக் குழுவிலும் சண்முகதாசன் தலைமையின் தவறான போக்குகள் குறித்து தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைத்து வந்தவருமான கட்சியின் வட பிரதேசச் செயலாளர் தோழர் வி.ஏ.கந்தசாமி அவர்களை கிளிநொச்சிக்கு அழைத்து கண்டி தோழர்களுடன் நடாத்திய கலந்துரையாடல் குறித்துத் தெரியப்படுத்தினோம்.

எமது கருத்துக்களைக் கவனமாகச் செவிமடுத்த தோழர் வி.ஏ.கந்தசாமி, நாம் அவசரப்பட்டு தற்போதைய கட்சியை விட்டு வெளியேறிப் புதிய கட்சி ஒன்றை அமைப்பது புத்திசாலித்தனமல்ல என எமக்கு விளக்கினார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மொஸ்கோ சார்பு – பீக்கிங் சார்பு என்று பிரிந்த பின்னர், எமது கட்சிக்கு சண்முகதாசன் தலைமையேற்ற காலம் முதல் அவரது செயற்பாடுகளை விமர்சித்த பலர் வருடாவருடம் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், ஆனால் தற்போது அவருக்கு எதிராக நடைபெறும் போராட்டத்தில் கட்சி மத்திய குழுவிலும், சாதாரண அங்கத்தவர் மட்டத்திலும் பெரும்பான்மையினர் எம்முடன் இணைந்திருப்பதால், நாம் பொறுமையாக இருந்து உட்கட்சிப் போராட்டத்தின் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும், அதன்மூலம் விரைவில் நல்லதொரு தீர்வு ஏற்படும் எனவும் எடுத்துரைத்தார்.

அவரது கருத்தை ஏற்றுக்கொண்ட கிளிநொச்சி கட்சி கிளை, அதை தோழர் விசுவானந்ததேவன் ஊடாக கண்டித் தோழர்களுக்கும் தெரியப்படுத்தியது. அதை கண்டி தோழர்களும் ஏற்றுக் கொண்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று சில மாதங்களின் பின்னர், 1971 ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில் அரசாங்கம் கைது செய்து வைத்திருந்த சண்முகதாசன் உட்பட எமது கட்சித் தோழர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட கட்சியின் பொதுச்செயலாளர் சண்முகதாசன், மோசமாகச் சீர்குலைந்திருந்த கட்சியைச் சீரமைக்கும் பணிகளை முன்னெடுப்பதற்குப் பதிலாக, வைத்திய சிகிச்சைக்கு என வெளிநாடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அங்கு சென்ற அவர், இலண்டனிலிருந்து இரு நூல்களை எழுதி வெளியிட்டார். அதில் ஒன்று ஜே.வி.பியின் 1971 ஆயுதக் கிளர்ச்சி சம்பந்தமானது. அதில் முன்னர் எமது கட்சி ஜே.வி.பி. சம்பந்தமாக எடுத்திருந்த, அந்த இயக்கம் ஒரு சிறுமுதலாளித்துவ எதிர்ப்புரட்சிகர இயக்கம் என்ற கருத்தை மாற்றி எழுதி இருந்தார். அதேபோல, அன்று பதவியிலிருந்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி - இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி – லங்கா சமசமாஜக் கட்சிகளைக் கொண்ட கூட்டரசாங்கம் ஒரு ஏகாதிபத்திய – எதிர்ப்பு முற்போக்கு அரசாங்கம் என்ற கட்சியின் முன்னைய கருத்தும் மாற்றப்பட்டிருந்தது.

அத்துடன் ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சி உள்நாட்டில் ஐ.தே.க. உட்பட சில பிற்போக்கு சக்திகளினதும், சில சர்வதேசப் பிற்போக்கு சக்திகளினதும் தொடர்புடன் நடாத்தப்பட்டது என்ற காரணத்தாலும், அந்தக் கிளர்ச்சியைப் பயன்படுத்தி சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்த வலதுசாரிப் பிரிவினர் அரசை மேற்கத்தைய சார்பாகக் கொண்டு செல்வதற்கு எடுத்த முயற்சியைத் தடுப்பதற்காகவும், சீன அரசாங்கம் இராஜதந்திர ரீதியாக சில நடவடிக்கைகளை எடுத்து, சிறீமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையை ஸ்திரப்படுத்தியதையும் சண்முகதாசன் குறைகூற ஆரம்பித்திருந்தார். இவை எல்லாமே கட்சி மத்திய குழுவின் அனுமதியின்றி சண்முகதாசன் மேற்கொண்ட நடவடிக்கைகளாகும்.

இந்தச் சூழ்நிலையில், கட்சியின் மத்திய குழு கூடி, ஏகப்பெரும்பான்மையானவர்களின் ஒப்புதலுடன், சண்முகதாசனை கட்சியின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்தும், உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கியது. இந்தச் செயல் எமது நீண்டகாலப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி என்றபடியால், தோழர் விசுவானந்ததேவன் உட்பட எம்மெல்லோரையும் பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், சண்முகதாசன் முதலாளித்துவப் பத்திரிகைகளில் தனக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, தானே இன்னமும் கட்சியின் பொதுச் செயலாளர் என அறிக்கைகளை விடுத்துக் கொண்டிருந்தார். வழமையாக அவர் தன்னை விமர்ச்சிப்பவர்களை வசைபாடப் பயன்படுத்தும் "சீர்குலைவாளர்கள்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தி, கட்சியின் பெரும்பான்மையானவர்களைத் தாக்கிக் கொண்டிருந்தார். இருப்பினும் வரலாற்றில் முதற் தடவையாக கட்சி மத்திய குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களும், சாதாரண உறுப்பினர்களும், கட்சி தலைமையிலான தொழிற்சங்கங்கள், விவசாயிகள் சங்கங்கள் என்பனவும், அவரை முற்றுமுழுதாக நிராகரித்துவிட்டன.

சண்முகதாசனுக்கு எதிரான போராட்டத்தில் தோழர் விசுவானந்ததேவன் வகித்த பாத்திரம் மிகவும் முக்கியமானது. அப்பொழுது கட்சியின் கண்டிக் கிளையுடன் வேலை செய்த அவர், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், வெளியிலும் இருந்த தமிழ் - சிங்கள – முஸ்லீம் தோழர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி, அயராமல் இரவு பகலாகச் செயற்பட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

சண்முகதாசன் விடாப்பிடியாக கட்சியின் பெயரைத் தனதாகப் பயன்படுத்தி வந்தபடியால், அவரை நிராகரித்த உறுப்பினர்கள் ஒரு மாநாடு கூடி, "இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட)" என்ற பெயரில் இயங்க முடிவெடுத்தனர். அந்தக் கட்சியின் உருவாக்கத்திலும் தோழர் விசுவானந்ததேவன் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கினார்

மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் உருவாக்கம் எளிதாக இருக்கவில்லை. ஏற்கெனவே புரட்சிகர கட்யூனிஸ்ட் கட்சியில் செயற்பட்டுக் கொண்டிருந்த பழம்பெரும் தோழர்களான ஆரியவன்ச குணசேகர, மு.கார்த்திகேசன், ஹிக்கொட தர்மசேன, டி.என்.நதுங்கே, வொட்சன் பெர்னான்டோ, வி.ஏ.கந்தசாமி, சாகுல் ஹமீது, ஓ.ஏ.இராமையா, ஈ.ரி.மூர்த்தி போன்றோர் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்தனர். இவர்களுடன் அடுத்த தலைமுறையைச் சேர்ந்த ரி.பெனடிக்ற்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்ரர், எச்.எல்.கே.கரவிட்ட, ச.சுப்பிரமணியம், அ.இராமநாதன், எம்.குமாரசாமி போன்றோரும் புதிய கட்சியின் மத்திய குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

நா.சண்முகதாசனை நிராகரித்த பின்னர் நடாத்தப்பட்ட மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டில் புதிய மத்திய குழுவுக்கு தோழர் விசுவானந்ததேவன் போட்டிக்கு நிற்கவில்லையாயினும், முந்தைய கட்சி போல இல்லாமல் புதிய கட்சி இலங்கையின் பருண்மையான நிலைமைகளுக்கு ஏற்ப மார்க்சிச – லெனினிச தத்துவத்தைச் சரியாகப் பிரயோகிக்க வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையாக இருந்தபடியால், தகுதியானவர்கள் புதிய மத்தியகுழுவில் இடம்பெற வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தார். அதற்காகக் கடுமையாக உழைத்தார்.

ஏனெனில் 1943 யூலை 03ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், 1935இல் உருவான லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேறி வந்தவர்கள். சமசமாஜக் கட்சி இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியாகவும், அதேவேளையில் இடதுசாரிக் கட்சியாகவும் இருந்தது. அக்கட்சி பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டங்களை நடாத்தியதுடன், தொழிலாளர்களின் உரிமைகளுக்கான பல போராட்டங்களையும் நடாத்தி வந்தது. அதனால் அதற்கு மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க செல்வாக்கும் இருந்தது.

அப்பொழுது உலகின் முதலாவதும், ஒரேயொரு சோசலிச நாடாகவும் இருந்த சோவியத் யூனியனில், தோழர் லெனின் மறைவுக்குப் பின்னர் தோழர் ஸ்டாலின் கம்யூனிஸ்ட் கட்சியினதும், அரசினதும் தலைமைப் பதவியை ஏற்று கட்சியையும், அரசையும் சிறப்பாக வழிநடாத்தி வந்தார். அவருக்கு எதிராக கட்சியின் இன்னொரு மூத்த உறுப்பினரான லியோன் ரொட்ஸ்க்கி நடைமுறைக்கொவ்வாத கருத்துக்களை முன்வைத்து எதிர்ப்புரட்சிகர சக்திகளுடன் இணைந்து வேலைசெய்து வந்தார். இந்தச் சூழ்நிலையில் சமசமாஜக் கட்சியிலிருந்த சில தலைவர்கள் கட்சிக்குள் ரொட்ஸ்க்கியின் கருத்துக்களைத் திணிக்க முயன்றனர். அதை ஏற்காத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ்ட்டுகள் கட்சியை விட்டு வெளியேறி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினர்.

கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினாலும், இலங்கையின் பருண்மையான சூழலுக்கு ஏற்ப கட்சி சரியான கொள்கையை வகுத்திருக்கவில்லை. கட்சியின் தலைமையில் இருந்த சிலர் பிரித்தானியாவில் கல்வி கற்றவர்களாகவும், பிரித்தானியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாகவும் இருந்ததினால், பிரித்தானியக் கட்சி பின்பற்றிய தொழிற்சங்கவாத – சீர்திருத்தவாதப் பாதையில் கட்சியை இழுத்துச் செல்ல முயன்றனர். இன்னொரு பகுதியினர் சோவியத் புரட்சியின் பாணியில் இலங்கையில் வேலை செய்ய முயன்றனர்.

இந்தச் சூழ்நிலையிலேயே சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட சிந்தாந்த முரண்பாடு, பிளவாக மாறியதின் காரணமாக, சோவியத் அணி – சீன அணி என இரண்டு அணிகள் உருவாகி, இலங்கையிலும் அதன் தாக்கம் ஏற்பட்டது. எனவே பழைய கட்சி முற்றுமுழுதான நாடாளுமன்றப் பாதையில் செல்ல, அதிலிருந்து வெளியேறிய மார்க்சிச – லெனினிசவாதிகள் புதிய புரட்சிகரக் கட்சி ஒன்றை 1964இல் உருவாக்கினர். இக்கட்சியில் பிரேம்லால் குமாரசிறி, ஆரியவன்ச குணசேகர, நா.சண்முகதாசன், மு.கார்த்திகேசன், டி.என்.நதுங்கே போன்றவர்கள் முக்கியமானவர்களாக இருந்தனர்.

இந்தக் கட்சி பழைய நவீன திரிபுவாதக் கட்சிக்கு எதிராக சித்தாந்தத்துறையில் வேலை செய்தபோதிலும், நடைமுறையில் கட்சியின் தொழிற்சங்க இயக்கத்திற்குத் தலைமைதாங்கிய நா.சண்முகதாசனால் இந்தக் கட்சியும் தொழிற்சங்க சீர்திருத்தப் பாதையில் இழுத்துச் செல்லப்பட்டது. அத்துடன், பழைய கட்சி சோவியத் பாணிப் புரட்சியை இலங்கையில் செய்வது பற்றிப் பேச, புதிய புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி சீனப் பாணியிலான புரட்சியை இலங்கையில் செய்வது பற்றிப் பேசி வந்தது.

இந்த இரண்டு இரு பாதைகளும் இலங்கையின் பருண்மையான நிலைமைகளுக்குப் பொருந்தாதவை என்பதை, தோழர் விசுவானந்ததேவன் உட்பட என்னைப் போன்ற பலர் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தோம். இதன் காரணமாகவே புதிய மார்க்சிச – லெனினிசக் கட்சி இலங்கைக்கு ஏற்ற சரியான ஒரு கொள்கையை வகுக்க வேண்டும் என விரும்பினோம்.

இதுபற்றி நானும் தோழர் விசுவானந்ததேவனும் பல நாட்கள் இரவு பகலாகக் கதைத்திருக்கிறோம். நான் கட்சிக் கூட்டங்களுக்காக கொழும்பு செல்லும் ஒவ்வொரு தடவையும், அப்பொழுது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த தோழர் விசுவானந்ததேவன் கொழும்பு வந்து என்னை பேராதனைக்கு அழைத்துச் சென்று, பல்கலைக்கழகத்தில் உள்ள தனது விடுதியில் தங்க வைத்து, பல உரையாடல்களை நடாத்தியதுடன், பல்கலைக்கழகத்திலும் வெளியிலும் உள்ள பல தோழர்களை அறிமுகமும் செய்து வைத்திருக்கிறார்.

புதிய மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது மாநாட்டை வெற்றிகரமாக்குவதில் வடக்கில் நாம் தீவிரமாக உழைத்த அதேநேரத்தில், தென்னிலங்கைத் தோழர்கள் மத்தியிலும், மலையகத் தோழர்கள் மத்தியிலும் தோழர் விசுவானந்ததேவனும் ஏனைய சில தோழர்களும் தீவிரமாக வேலை செய்தனர். முக்கியமாக புதிய கட்சியின் மத்தியகுழுவைத் தெரிவு செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தினோம். ஏனெனில், முதலாளித்துவக் கட்சிகள் போலல்லாது, கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பொறுத்த வரையில், அதன் தேசிய காங்கிரஸ்களில் தெரிவு செய்யப்படும் மத்தியகுழுவே அடுத்த காங்கிரஸ் நடைபெறும் வரையிலான காலத்தில் கட்சியை வழிநடாத்துவதில் மிக முக்கிய பங்கு வகிப்பது வழமை.

புதிய மத்தியகுழுவில் பெரும்பாலும் புதிய முகங்களையே நாம் தெரிவு செய்தோம். இந்த மாநாட்டிலேயே நானும் முதன்முதலாக கட்சியின் மத்தியகுழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டேன். என்னை மத்தியகுழுவுக்குத் தெரிவு செய்வதில் வட பகுதித் தோழர்கள் முக்கிய பங்கு வகித்தபோதிலும், தென்னிலங்கை மற்றும் மலையகத் தோழர்களின் வாக்குகளைப் பெற்றுத்தருவதில் தோழர் விசுவானந்ததேவன் முக்கிய பங்கை வகித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது புதிய கட்சி உருவான காலகட்டத்தில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை ஒரு தீவிர நிலையை எடுக்க ஆரம்பித்திருந்தது. அப்பொழுது நாட்டில் பிரதமர் சிறீமாவோபண்டாரநாயக்க தலைமையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி - இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி – லங்கா சமசமாஜ கட்சி என்பவற்றின் கூட்டரசாங்கம் பதவியில் இருந்தது. 1965 முதல் 1970 வரை ஆட்சியில் இருந்த பிரதமர் டட்லி சேனநாயக்கவின் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி உள்ளடங்கலான ஏழுகட்சி கூட்டரசாங்கம் பின்பற்றிய மக்கள் விரோத, தேச விரோதக் கொள்கைகள் காரணமாக, அந்த அணியை 1970 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தோற்கடித்த பொதுமக்கள், சிறீமாவோ தலைமையிலான மக்கள் முன்னணி அரசை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெறச் செய்திருந்தனர்.

இந்த வெற்றியை சீரணிக்க முடியாத உள்நாட்டு, வெளிநாட்டுப் பிற்போக்கு சக்திகள், மக்கள் அரசுக்கு எதிராகப் பல சூழ்ச்சித் திட்டங்களை வகுத்துச் செயற்படத் தொடங்கினர். பொதுமக்களை ஜனநாயக வழியில் அரசுக்கு எதிராகத் திருப்ப முடியாது எனக்கண்ட அப்பிற்போக்கு சக்திகள், 1971 ஏப்ரலில் ஜே.வி.பி. தலைமையில் நடைபெற்ற ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியின் மூலம் மக்கள் அரசைத் தூக்கி எறிய முயன்றனர். அதற்காக ஐ.தே.க. மறைமுகமாக ஜே.வி.பி. கிளர்ச்சிக்கு ஆதரவு வழங்கியது.

அதற்கு ஓர் உதாரணத்தைக் கூறுவதானால், அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த 'அரசியல் குள்ள நரி' என வர்ணிக்கப்படும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது, "நான் இப்பொழுது ஓர் இளைஞனாக இருந்தால், ஜே.வி.பியில்தான் இருப்பேன்" என பகிரங்கமாகக் கூறி, இளைஞர்களை ஜே.வி.பியை நோக்கித் திருப்பிவிட முயன்றார். அவரது உரையை அப்பொழுது ஜே.ஆரின் மைத்துனரின் கைகளில் இருந்த லேக்ஹவுஸ் நிறுவனம் வெளியிடுகின்ற 'டெயிலி நியூஸ்' பத்திரிகை, ஜே.வி.பி. ஆயுதக் கிளர்ச்சி நடைபெற்ற 1971 ஏப்ரல் 5ஆம் திகதிக்கு மூன்று நாட்கள் முன்னதாக, ஏப்ரல் 2ஆம் திகதி முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து மீண்டும் மறுபிரசுரம் செய்தது. ஆனால், ஜே.வி.பி. இற்கு வெளிநாட்டு – உள்நாட்டு பிற்போக்கு சக்திகளின் ஆதரவு இருந்த போதிலும், ஜே.வி.பி. கிளர்ச்சி தோல்வியைத் தழுவியது.

அதன்பின்னர், சிறீமாவோ அரசு 1972இல் இலங்கைக்கென புதிய குடியரசு அரசியல் யாப்பை நிறைவேற்றியது. இந்தப் புதிய அரசியல் யாப்பில் பல்வேறு குறைபாடுகள் இருந்த போதிலும், இலங்கை மக்களின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், இலங்கையை இருநூறு வருடங்களுக்கும் மேலாக ஆட்சி செய்துவிட்டு, 1948இல் பெயரளவிலான சுதந்திரத்தை வழங்கிவிட்டு வெளியேறியிருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் மீதமிச்சமான பிடியையும் விடுவிக்கும் வகையில், பிரித்தானிய முடியரசுடன் இருந்த கடைசி இழையும் அறுக்கப்பட்டு, இலங்கை பூரண சுதந்திரமும், இறைமையும், சுயாதிபத்தியமும் கொண்ட குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

சிறீமாவோ அரசின் இந்த நடவடிக்கை, குறிப்பாக பிரித்தானிய ஏகாதிபத்தியத்தையும், பொதுவாக மேற்குலகையும் ஆத்திரம் கொள்ள வைத்தது. ஜே.வி.பி. கிளர்ச்சியின் மூலம் பயன்பெற முடியாது போன அவர்கள், வேறு வாய்ப்புகளை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அந்த வாய்ப்பு குடியரசு அரசியல் சாசன வடிவத்தில் வந்து சேர்ந்தது.

அதாவது, புதிய குடியரசு அரசியல் யாப்பில் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளைத் தீர்த்து வைக்கும் ஏற்பாடுகள் ஏதும் செய்யப்பட்டிருக்காததுடன், முன்னைய சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மை இனங்களின் பாதுகாப்புக்கென செய்யப்பட்டிருந்த 28ஆவது சரத்தும் நீக்கட்டிருந்தது. எனவே, இந்தப் பிரச்சினை அரசுக்கெதிரான சக்திகளுக்கு குறிப்பாக இனவாத, பிற்போக்கு தமிழ் அரசியல் சக்திகளுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. எனவே, ஐ.தே.கவும், வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளும் தமிழ் இனவாதக் கட்சிகளைப் பயன்படுத்தி முதலில் குடியரசு எதிர்ப்புப் போராட்டங்களையும், அதன் தொடர்ச்சியாகப் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநாட்டுக்கான பிரிவினைப் போராட்டத்தையும் அவை தூண்டிவிட்டன.

மறுபக்கத்தில், இந்தக் குடியரசு அரசியல் யாப்பில் இனப் பிரச்சினைக்கான தீர்வு காணப்படாதது எம்மைப் போன்ற உண்மையான இடதுசாரிகளையும் விசனத்தில் ஆழ்த்தியது. இந்த நிலைமையை எதிர்கொண்டு எப்படி வேலை செய்வது என்பது பற்றி தோழர் விசுவானந்ததேவன் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து எம்முடன் ஆராய்ந்த வண்ணம் இருந்தார். அப்பொழுது எமது கட்சியினால் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்பட்டு வந்த 'போராளி' என்ற பத்திரிகையிலும் இதுசம்பந்தமாக கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

எனவே, எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசக் குழுவைக் கூட்டி இதுபற்றி நாம் ஆராய்ந்தோம். இந்தக் கூட்டம் நடைபெற்றபோது, நாமும் சண்முகதாசனும் பிரிந்திருக்கவில்லை. இந்தக் கூட்டத்தில் அன்றைய தேசிய அரசியல் நிலைமை குறித்தும், குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் பிரிவினைவாத சக்திகளால் உருவாக்கப்பட்டுள்ள நிலைமை குறித்தும் ஆராய்ந்தோம்.

1970இற்கு முன்னர், எமது கட்சியின் சரித்திரத்திலேயே, ஏன் தமிழ் மக்களின் சரித்திரத்திலேயே என்றும் கூட சொல்லக்கூடிய வகையில் வட பகுதி முழுவதும் தீண்டாமைக்கு எதிரான புரட்சிகர எழுச்சிப் போராட்டமொன்றை நாம் 1966 முதல் 69 வரை வெற்றிகரமாக நடாத்தி முடித்திருந்தோம். அதன் காரணமாக, வடக்கின் சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினரான தாழ்த்தப்பட்ட மக்களின் பெருவாரியோர் எமது கட்சியின் பின்னால் அணிதிரண்டிருந்தனர். இதர மக்கள் மத்தியிலும், குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் மத்தியிலும் கட்சிக்கு ஆதரவு பெருகியிருந்தது.

இந்தப் போராட்டம் தனது இலக்கில் 90 சத வீதமான இலக்கைப் பூர்த்தி செய்துவிட்ட சூழலில், எமது அடுத்த போராட்டக்களம் எது என்ற தேடல் கட்சித் தோழர்கள் மத்தியில் தலைதூக்கியிருந்தது. இந்தச் சூழலிலேயே தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை விசுவரூபம் எடுக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியிருந்தது. அதனால் இயல்பாகவே அது பற்றிய அக்கறை கட்சித் தோழர்கள் மத்தியில் கொழுந்துவிடத் தொடங்கியிருந்தது.

எனவே இந்த விவகாரம் குறித்து விவாதிப்பதற்காக கட்சியின் வட பிரதேசக்குழு விசேட கூட்டமொன்றை ஏற்பாடு செய்தது. கூட்டம் யாழ்ப்பாண நகருக்குள் அமைந்திருந்த பாரதி வித்தியாசாலையில் நடைபெற்றது. 18 பேர் கொண்ட வட பிரதேசக்குழுவில் சண்முகதாசனின் விசுவாசியான கே.ஏ.சுப்பிரமணியம் தவிர்ந்த ஏனைய அனைவரும் பங்குபற்றினர்.

கூட்டத்தில் அன்றைய சூழலில் தேசிய இனப்பிரச்சினையில் ஏற்பட்டுள்ள புதிய பிரச்சினைகள், அரசாங்கத்தின் செயற்பாடு, தமிழ் கட்சிகளின் செயற்பாடுகள் என்பன விரிவாக ஆராயப்பட்டதுடன், எமது கட்சி இந்த விடயத்தில் என்ன நிலைப்பாடு எடுப்பது என்பது குறித்தும் ஆராயப்பட்டது. அதன் அடிப்படையில், கூட்ட முடிவில் நாட்டு நிலைமையையும், எமது நிலைப்பாட்டையும் விளக்கி பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை வெளியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1944ஆம் ஆண்டிலேயே தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்று, அவர்களுக்கு சுய – நிர்ணய உரிமை உண்டு எனத் தீர்மானம் நிறைவேற்றியதையும், அதன் அடிப்படையில் 1954இல் வல்வெட்டித்துறையில் கூடிய கட்சியின் பிரதேச மாநாடு, தமிழ் மக்கள் செறிந்து வாழும் அவர்களது தாயகப் பகுதியான வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்கு பிராந்திய சுயாட்சி வழங்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றியதையும் நினைவுகூர்ந்த வட பிதேசக்குழு, இன்றும் அந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என உறுதி செய்தது.

அதன் அடிப்படையில், இன்று தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள தேசிய ஒடுக்குமுறையை எதிர்ப்பது என்றும், அதேநேரத்தில் பிற்போக்குத் தமிழ் தலைமைகளால் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ள பிற்போக்கானதும், அழிவுகரமானதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைச்சாத்தியமற்றதுமான 'தமிழீழ' தனிநாட்டு கோரிக்கையை நிராகரிப்பது என்றும் வரலாற்று முக்கியத்துவமுள்ள தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இந்தத் தீர்மானம், "தேசிய ஒடுக்குமுறைக்கும் பிரிவினைக்கும் எதிராக தமிழ் மக்களே ஐக்கியப்படுவீர்!" என்ற தலைப்பில் 1975 வைகாசி 19ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கையை அன்று யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த ஒரேயொரு பிராந்திய தினசரியான 'ஈழநாடு' பத்திரிகை முக்கியத்துவம் கொடுத்து முன்பக்கத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டது. ஏனைய பத்திரிகைகளும் பிரசுரம் செய்தன. கட்சியால் துண்டுப்பிரசுரமாகவும் அச்சடித்து விநியோகிக்கப்பட்டது. மக்கள் மத்தியில் அந்த அறிக்கைக்கு கணிசமான வரவேற்பும் இருந்தது.

அதுவரை காலமும் இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக பிராந்திய சுயாட்சியையும், லங்கா சமசமாஜக் கட்சி சம அந்தஸ்து கொள்கையையும் முன்வைத்தாலும், தமிழ் பேசும் மக்கள் நாளாந்த வாழ்க்கையில் இனப் பாரபட்சத்தத்துக்கு உள்ளாகும் போது அதற்கு எதிரான போராட்டங்களை நடாத்தவில்லை. அதுமட்டுமின்றி, 1965இல் பதவிக்கு வந்த ஐ.தே.க. தலைமையிலான ஏழு கட்சி கூட்டரசாங்கம் தமிழ் மொழி விசேட மசோதா என்றொரு மசோதாவைக் கொண்டு வந்தபோது, அதற்கெதிராக இனவாத அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து பங்குபற்றியதின் மூலம் மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும், சமசமாஜக் கட்சியும் இனவாதிகள் என்ற அவப்பெயரையும் பெற்றுக் கொண்டன.

மறுபக்கத்தில், மேற்படி இரு கட்சிகளையும் திரிபுவாதக் கட்சி எனவும், சீர்திருத்தவாதக் கட்சி எனவும் விமர்சித்து, நாம்தான் உண்மையான மக்களுக்கு விசுவாசமான புரட்சிகரக் கட்சி எனச் சொல்லிக்கொண்ட, சண்முகதாசன் தலைமையிலான எமது கட்சியும் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையில் உருப்படியாக எதுவும் செய்யவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலும் மோசமான விடயம் என்னவெனில், கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த சண்முகதாசன், தென்னிலங்கையில் வேலை பார்த்த ஒரு சிறு குறிப்பிட்ட எண்ணிக்கையான தமிழ் அரசாங்க ஊழியர்கள் தமது குடும்பத்தினருக்கு மாதாமாதம் அனுப்பும் 'மணி ஓடர்' எனப்படும் காசுக்கட்டளையை வைத்துக்கொண்டு, தமிழ் மக்களின் பொருளாதாரம் மணி ஓடர் பொருளாதாரம் என்றும், எனவே அவர்கள் ஒரு தேசிய இனம் அல்லவென்றும் தொடர்ந்து வாதிட்டு வந்தமை ஆகும். (ஆனால் 1972இல் சண்முகதாசன் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு அரசியல் அனாதையாகப் போனபின்னர், தமது கடைசிக் காலத்தில் புலிகள்தான் உண்மையான புரட்சிவாதிகள் எனச் சொல்லி அவர்களை ஆதரித்து அறிக்கை வெளியிட்டார். அவருடன் இருந்து பின்னர் பல குழுக்களாகப் பிரிந்து போனவர்களும் இன்றுவரை புலிகளுக்கு ஆதரவாகவே செயல்பட்டு வருகின்றனர்)

அதன் காரணமாக, 1972இல் கட்சியின் வட பிராந்தியக் குழு இனப் பிரச்சினை சம்பந்தமாக எடுத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தையும் சண்முகதாசனும், வட பிராந்தியக் குழுவிலிருந்த அவரது ஆதரவாளர்களும் (18 பேர் கொண்ட குழுவில் சண்முகதாசன் விசுவாசிகளாக மூவர் மட்டும் இருந்தனர்) எதிர்த்தனர்.

இந்த நிலைமைகளைக் கணக்கில் எடுத்த எமது மார்க்சிச – லெனினிசக் கட்சி, முன்னைய இடதுசாரிக் கட்சிகள் போல் வாய்ப்பேச்சுடன் நிற்காது, தேசிய இனப் பிரச்சினையில் நடைமுறை ரீதியாக வேலை செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தது. அன்றைய சூழ்நிலையில் இப்பணியை எமது கட்சி மட்டும் தனித்துச் செய்ய முடியாது என்று கருதிய கட்சி, இந்தப் பிரச்சினையில் ஒரு குறைந்தபட்ச வேலைத்திட்டத்தில் தன்னும் இணையக்கூடிய கட்சிகளை ஒன்றிணைத்து வேலை செய்வதே சரியாக இருக்கும் எனக் கருதியது.

எனவே, சில தமிழ் அரசியல் கட்சிகளுக்கும், இடதுசாரிக் கட்சிகளுக்கும் இந்தப் பிரச்சினை குறத்துப் பேச வருமாறு அழைப்பு விடுத்தது. தமிழரசுக் கட்சி சார்பாக எமது அழைப்பை ஏற்று அப்பொழுது மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினராக இருந்த வி.தர்மலிங்கம் எம்முடன் பேச்சுவார்த்தை நடாத்தினார். எமது கட்சி சார்பாக தோழர்கள் மு.கார்த்திகேசன், வி.ஏ.கந்தசாமி ஆகியோருடன் நானும் கலந்து கொண்டேன்.

தமிழர் சுயாட்சிக் கழகம் சார்பாக அதன் பொதுச் செயலாளர் செ.கோடீஸ்வரன் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார். எமது கட்சி சார்பாக தோழர்கள் வி.ஏ.கந்தசாமி, இ.வே.துரைரத்தினம், நான் ஆகியோர் கலந்து கொண்டோம்.

நவ சமசமாஜயக் கட்சி சார்பாக அதன் வட பிரதேச அமைப்பாளர் ஆ.க.அண்ணாமலை (பின்னர் புலிகளால் படுகொலை செய்யப்பட்டவர்) பேச்சுவார்த்தைக்கு வந்தார். எமது கட்சி சார்பாக தோழர்கள் வி.ஏ.கந்தசாமி, இ.வே.துரைரத்தினம் மற்றும் நான் கலந்து கொண்டோம்.

தமிழ் இளைஞர் பேரவை சார்பாக மாவை சேனாதிராசா, வே.இறைகுமாரன் ஆகியோர் பேச்சுவார்த்தைக்கு வந்தனர். எமது கட்சி சார்பாக தோழர்கள், இ.வே.துரைரத்தினம், அ.கதிர்காமநாதன், நான் கலந்து கொண்டோம்.

நாம் அழைப்பு விடுத்தவர்களில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி என்பன பேச்சுவார்த்தைக்கு முன்வராததுடன், எவ்விதமான பதிலும் அளிக்கவும் இல்லை.

எம்முடன் பேச்சுவார்த்தை நடாத்தியவர்களும் தொடர்ந்து அதில் அக்கறை காட்டவில்லை. அதனால் இந்தப் பிரச்சினையில் அக்கறையுள்ள கட்சிகளைக் கொண்டு நாம் உருவாக்க எண்ணியிருந்த ஐக்கிய முன்னணி நடைமுறைக்கு வராமல் போய்விட்டது. எனவே, அடுத்து என்ன செய்வது என எமது கட்சி வட பிராந்தியக் குழு கூடி ஆராய்ந்தது. முடிவில், கட்சிகளின் ஐக்கிய முன்னணி சாத்தியமாகாதபடியால், நேரடியாக மக்கள் மத்தியிலிருந்து தமிழ் மக்களுக்கான வெகுஜன அமைப்பொன்றை உருவாக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. தோழர் விசுவானந்ததேவனும் இத்தகைய ஒரு கருத்தையே ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பொன்றை உருவாக்குவது சம்பந்தமாகத் தீர்மானம் எடுக்கப்பட்டாலும், அந்த அமைப்பு எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது குறித்து கட்சியின் வட பிராந்தியக் குழுவிற்குள் பலவிதமான கருத்துக்கள் நிலவின. ஒரு சாரார் கட்சியின் தலைமையில் தொழிற்சங்கம், விவசாயிகள் சங்கம், வாலிபர் சங்கம் மற்றும் மாதர் – மாணவர் சங்கங்கள் இருப்பது போல, தமிழ் மக்களுக்கான இந்த வெகுஜன அமைப்பும் கட்சியின் நேரடிக் கட்டுப்பாட்டிலும், வெளிப்படையாகவும் இருக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

இன்னொரு பகுதியினர் கட்சியினால் இந்தப் பணியை நேரடியாகச் செய்ய முடியாதபடியால்தான், புதிய அமைப்பொன்றை உருவாக்குகிறோம் என்றபடியால், அது கட்சியுடன் சம்பந்தமில்லாத சுயாதீனமான அமைப்பாக இருக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

மற்றொரு பகுதியினர் இந்த அமைப்பு ஓரளவு சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், அதேநேரத்தில் அந்த அமைப்பு எமது அடிப்படைக் கொள்கைகளில் இருந்து விலகவோ அல்லது வெறும் தமிழ் தேசியவாதத்தில் மூழ்கிப்போகவோ சந்தர்ப்பம் இருப்பதால், கட்சியின் தலைமைத்துவமும் வழிகாட்டலும் மறைமுகமாக எப்பொழுதும் இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர். அதை உறுதிப்படுத்துவதற்காக, புதிய அமைப்பின் மத்திய குழுவில் மூன்றில் ஒரு பங்கினராக எப்பொழுதும் எமது கட்சியின் உறுப்பினர்கள் இடம் பெறுவதை உத்தரவாதம் செய்ய வேண்டும் எனவும் ஆலோசனை கூறினர். என் போன்றவர்கள் இந்தக் கருத்தையே ஆதரித்தோம். இறுதியில் இந்தக் கருத்தே ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் புதிய அமைப்பு 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற பெயரில் 1975ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதற்கான முதலாவது மத்திய குழுவை கட்சியே தெரிவு செய்ததுடன், அதன் பொதுச் செயலாளராக கட்சியின் வட பிராந்தியக் குழுவின் உறுப்பினராக இருந்த "சண்" என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவைச் சேர்ந்த தோழர் சின்னத்தம்பி சண்முகநாதன் (2016 ஏப்ரல் 7ஆம் திகதி கனடாவில் காலமாகிவிட்டார்) அவர்களைத் தெரிவு செய்தது.

அமைப்பின் முதல் வேலையாக தமிழ் பேசும் மக்களின் உடனடிப் பிரச்சினைகள் சம்பந்தமாக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சுவரொட்டிப் பிரச்சாரம் ஒன்றை முன்னணி நடாத்தியது. சிங்களத்துடன் தமிழும் ஆட்சி மொழி அந்தஸ்து, தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நிறுத்துதல், கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இன ரீதியிலான பாரபட்சத்தை அகற்றுதல், பதிவுப் பிரசைகள் என்று அழைக்கப்பட்ட மலையக இந்திய வம்சாவழியினருக்கும் இலங்கைப் பிரசைகளுக்கும் இடையிலான வேறுபாட்டை நீக்குதல், இனப் பிரச்சினைக்குத் தீர்வாக குறைந்த பட்சம் பண்டா – செல்வா ஒப்பந்தத்தையாவது நடைமுறைப்படுத்தல் என்பனவே அந்த ஐந்து அம்சக் கோரிக்கைகளின் சாராம்சமாகும்.

இந்தச் சுவரொட்டிகள் வடக்கு கிழக்கில் மட்டுமின்றி, கொழும்பு, மலையகம் போன்ற இடங்களிலும் ஒட்டப்பட்டன. (சில இடங்களில் சுவரொட்டி ஒட்டிய சில தோழர்களை பொலிசார் கைது செய்து தடுப்புக் காவலிலும் வைத்தனர்) அதனை வாசித்த மக்கள் மத்தியில் உற்சாகமான வரவேற்பை அவதானிக்க முடிந்தது. இதன் இரண்டாவது கட்டமாக, தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் கொள்கைகளை விளக்கி வடக்கு கிழக்கிலும், கொழும்பு, மலையகம் போன்ற இடங்களிலும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. இந்தக் கருத்தரங்குகளில் கட்சித் தோழர்கள் மட்டுமின்றி, தேசிய இனப் பிரச்சினையில் அக்கறையுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பாடசாலை – பல்கலைக்கழக ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள், சட்டத்தரணிகள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். பொதுமக்களும் பெருமளவில் அக்கறையுடன் கலந்து கொண்டனர்.

இத்தகைய கருத்தரங்குகளை பேராதனைப் பல்கலைக்கழகம், கண்டி நகர், கொழும்பு தமிழ் சங்கம், கொழும்பு சட்டக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி போன்ற இடங்களில் ஏற்பாடு செய்ததில் தோழர் விசுவானந்ததேவன் முக்கிய பங்கு வகித்தார்.

அதேவேளை, எமது மார்க்சிச – லெனினிசக் கட்சி தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக ஆராய்வதற்காக தேசிய ரீதியிலான விசேட மாநாடொன்றையும் கொழும்பில் கூட்டியது. அதற்கான அறிக்கையைத் தயார் செய்வதில் நானும், தோழர் விசுவானந்ததேவனும் பங்கு வகித்ததுடன், அதை அவரும் நானும் பேராதனை பல்கலைக்கழகத்தில் இரு வாரங்கள் தங்கியிருந்து தமிழாக்கமும் செய்தோம்.

முதல் தடவையாக இடதுசாரிக் கட்சியொன்று தமிழ் மக்கள் பிரச்சினையில் நேரடியாகக் களத்தில் இறங்கி வேலை செய்ய ஆரம்பித்தமை, பொதுமக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்ற அதேநேரத்தில், பாரம்பரியமாக தமிழ் மக்களின் தலைவிதியைக் குத்தகைக்கு எடுத்திருந்த கட்சிகள் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்தியது. அந்த நேரத்தில் எமது நோக்கம் முழுவதும் காலங்காலமாக இடதுசாரிகள் இனப் பிரச்சினை விடயத்தில் விட்ட தவறைச் சீர்செய்து, தமிழ் மக்கள் மீதான தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடுவதும், அதேநேரத்தில் தமிழ் மக்கள் பிற்போக்குத் தமிழ் தலைமையால் அழிவுகரமான தனிநாட்டுக்கான போராட்டப் பாதையில் இழுத்துச் செல்லப்படுவதைத் தடுப்பதுமாகும். அதுவே பிற்போக்குத் தமிழ் தலைமைக்கு அச்சத்தைக் கொடுத்த விடயமாகும்.

இந்த அச்சம் தமிழரசுக் கட்சியின் அன்றைய செயலாளர் நாயகமாக இருந்த அ.அமிர்தலிங்கத்தின் வாயாலேயே நேரடியாகக் கேட்க முடிந்தது. யாழ்ப்பாணத்திலிருந்த தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு மனைவி மங்கையற்கரசியுடன் வந்திருந்த அமிர்தலிங்கம், அங்கு சென்றிருந்த அவருக்குப் பழக்கமான எமது கட்சியின் வட பிரதேச முக்கியஸ்தரான ஆசிரியத் தோழர் ஒருவரைக் கண்டபொழுது, "என்ன மாஸ்ரர் சாதிப் பிரச்சினையை முடிச்சுக் கொண்டு இனப் பிரச்சினைக்குள்ளை கால் வைச்சிருக்கிறியள் போலை?" எனக் கேட்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சூழ்நிலையில்தான் தமிழரசுக் கட்சி முன்னின்று தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை (தமிழர் விடுதலைக் கூட்டணி) உருவாக்கி இருந்த காலமாகும். அதேபோல, தமிழ் இளைஞர்களின் முதலாவது ஆயுதப்போராட்ட இயக்கமான 'புதிய புலிகள் இயக்கம்' உருவான காலமுமாகும். இதைத் தொடர்ந்து, 1976இல் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பன வட்டுக்கோட்டையில் ஒன்றுகூடி தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பின் பெயரில் 'தமிழீழ' தனிநாட்டுத் தீர்மானத்தைப் பிரகடனம் செய்தன.

அவர்களது இந்தத் தீர்மானம் எமது தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி நடாத்த இருந்த வடக்கு கிழக்கிற்கான பிராந்திய சுயாட்சிப் போராட்டத்தை பெருமளவுக்கு பின்தள்ளிவிட்டது. அவர்களது இந்தத் தீர்மானம் பின்னர் தமிழ் இளைஞர்களின் தனிநாட்டுப் போராட்டமாக உருவெடுத்து, தமிழ் மக்களுக்கு வரலாறு காணாத பேரழிவுகளை ஏற்படுத்தியதை நோக்கும் போது, தெரிந்து கொண்டே அன்றைய தமிழ்த் தலைமை கம்யூனிஸ்ட்டுகள் இந்தப் பிரச்சினையில் தலையிடுவதைத் தடுப்பதற்காகவே தனிநாட்டுத் தீர்மானத்தை எடுத்ததோ என ஐயுற வைக்கிறது.

ஏனெனில், அன்று வட்டுக்கோட்டையில் தனிநாட்டுத் தீர்மானத்தை எடுத்ததில் பங்குபற்றியவர்களில் ஒரு பகுதியினரைக் கொண்ட இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை, 30 வருடப் போரின் பின்னர் இன்று ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு என்ற கோசத்தை முன்வைத்திருக்கிறது. இதையே நாம் அன்று தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி ஊடாக முன்வைத்தோம். அது மாத்திரமின்றி, அதை அடைவதற்காக சகல தமிழ் அமைப்புகளுடனும் இணைந்து வேலை செய்யவும் தயாராக இருந்தோம். ஆனால், எமது சரியான, தீர்க்கதரிசனமிக்க கொள்கையை பின்னுக்குத் தள்ளி, தமது தலைமைத்துவ ஏகபோகத்தைப் பாதுகாப்பதற்காக, பிற்போக்குத் தமிழ் தலைமை எம்முடன் சேர்ந்து வேலை செய்வதை நிராகரித்ததுடன், தனிநாட்டு கோசத்தை முன்வைத்து கபட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் ஆடியதை இன்று வரலாறு தெட்டத் தெளிவாக நிரூபித்துவிட்டது.

இந்த இடத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனிநாட்டுத் தீர்மானமும், அதனால் எழுந்த தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டமும், எமது தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியையும் எவ்வளவு தூரம் பாதித்தது என்பதைக் குறிப்பிடுவது அவசியமானது. அதன் ஊடாக தோழர் விசுவானந்ததேவனின் பிற்காலத்திய அரசியல் வரலாற்றுப் பாத்திரத்தை விளக்குவதும் பிரயோசனமானது எனக் கருதுகின்றேன்.

ஏற்கெனவே எமது மார்க்சிச – லெனினிசக் கட்சி பின்பற்றிய தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமான கொள்கையில் அதிருப்தி உற்றிருந்த தோழர் விசுவானந்ததேவன், புதிய கொள்கைகளையும், வேலைமுறைகளையும் தேட ஆரம்பித்திருந்தார். இதுபற்றி என்னுடன் பல தடவைகள் உரையாடியும் இருக்கிறார். என்னைப் பொறுத்தவரை, எதுவானாலும் கட்சியின் ஸ்தாபன வழிமுறையின் ஊடாகவே பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற கருத்தில் உறுதியாக இருந்தேன். ஆனால் தோழர் விசுவானந்ததேவனைப் பொறுத்தவரையில், கட்சி அன்றைய சூழலுக்கு பொருத்தமான வழியில் வேலை செய்யத் தவறினால், கட்சித் தலைமையை மீறித்தன்னும் சில செயற்பாடுகளில் ஈடுபடுவதில் தவறில்லை என்ற முடிவுக்கு வந்திருந்தார். ஏற்கெனவே கட்சி வேலைகளின்போது அவர் அவ்வாறான சில வேலைகளில் ஈடுபட்டு விமர்சனங்களுக்கு உள்ளாகியும் இருந்தார்.

தோழர் விசுவானந்ததேவன் கட்சித் தலைமை மீது அதிருப்தியுற்றதற்கு சில நியாயமான காரணங்களும் இருந்தன. தேசிய இனப் பிரச்சினையில் மட்டுமின்றி, வெகுஜனங்களைப் பாதித்த ஏனைய பிரச்சினைகளிலும் கட்சித் தலைமை செயலற்ற ஒரு நிலையிலேயே இருந்து வந்தது. குறிப்பாக, மார்க்சிச – லெனினிசக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராகவும், வழிகாட்டியாகவும் இருந்த தோழர் மு.கார்த்திகேசன் அவர்கள் 1977 ஓகஸ்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான அன்றைய ஐ.தே.க. அரசால் தமிழ் மக்களுக்கு எதிராகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டவிழ்த்துவிட்ட இன வன்செயலைத் தொடர்ந்து செப்ரெம்பர் மாதம் காலமானர். அதைத் தொடர்ந்து கட்சி ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்திருந்தது.

கட்சித் தலைமையில் இருந்த சிலர், சண்முகதாசன் எடுத்திருந்த இடது ஒருமுனைவாத நிலைப்பாட்டுக்கு நேர் எதிரான வலது சந்தர்ப்பவாத நிலையை எடுத்து, கட்சியை தொழிலாளி வர்க்கத்தின் ஒரு புரட்சிகரக் கட்சியாகக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, அன்றைய சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி – கம்யூனிஸ்ட் கட்சி – லங்கா சமசமாஜக் கட்சி கூட்டரசாங்கத்தை நிபந்தனையின்றி ஆதரிப்பதிலேயே அக்கறையாக இருந்தனர். கட்சித் தலைமையின் இந்த நிலைப்பாடு கீழ்மட்ட உறுப்பினர்களிடையே - குறிப்பாக அன்றைய அரசாங்கத்துக்கு எதிராக பிற்போக்கு தமிழ்த் தலைமையால் தூண்டிவிடப்பட்டிருந்த கடும் எதிர்ப்புணர்வால் பாதிக்கப்பட்டிருந்த தமிழ் பகுதிகளில் - கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்தச் சூழ்நிலையில் கட்சித் தலைமையின் செயற்பாடு தமிழ் மக்கள் மத்தியில் வேலை செய்துவந்த தோழர் விசுவானந்ததேவன் போன்ற நேர்மையான விசுவாசமான தோழர்களை ஒரு நெருக்கடியான நிலைக்குத் தள்ளியது. 'மரம் ஓய்வை விரும்பினாலும், காற்று அதற்கு இடமளிக்காது' என்ற ஒரு சீனப் பழமொழி கூறுவதுபோல, தமிழ்ப் பகுதி நிலைமைகள் அங்குள்ள தோழர்கள் ஒவ்வொருவரையும் ஓய்ந்திருக்கவிடாது உலுப்பியது. அவர்கள் தமிழ்ப் பகுதிகளில் அன்று நிலவிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஏதாவது செய்ய வேண்டிய நிர்ப்பந்தச் சூழ்நிலையில் இருந்தனர்.

ஆனால், இங்குதான் தவறுக்கான சூழலும் உருவாகின்றது. கட்சித் தலைமையில் நம்பிக்கை இழந்தவர்கள் தொடர்ந்து செல்வதற்கான ஒரு வழிமுறை இருந்தது. அதன்படி முதலாவதாக சரியான கொள்கைகளுக்காக உட்கட்சிப் போராட்டத்தை நடாத்தியிருக்க வேண்டும். அதனால் பயன் இல்லையெனில், அதிருப்தியாளர்கள் ஒன்று கூடி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாட்டை நடாத்தி புதிதாக சரியான ஒரு மார்க்சிசக் கட்சியை உருவாக்கிவிட்டுத் தமது வேலையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றிருக்க வேண்டும். ஆனால் அதிருப்தியாளர்களில் முக்கியமானவராகக் கருதப்பட்ட தோழர் விசுவானந்ததேவன் அவ்வாறு செய்யவில்லை.

அவர் கட்சித் தலைமையைப் புறக்கணித்துவிட்டு, தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி ஊடாகத் தனது நோக்கங்களை நிறைவேற்றும் முடிவை எடுத்தார். அந்தக் காலகட்டத்தில் அவரது சிந்தனையில் இருந்தது என்ன என்பது, அவருடனான நெருக்கமான தொடர்புகள் மூலம் எனக்கு நன்கு தெரியும். அதன்படி, இலங்கையில் வர்க்க முரண்பாட்டை விட தேசிய இன முரண்பாடு பிரதான இடத்தை எடுத்திருப்பதால், அதைப் பயன்படுத்தி ஒடுக்கப்பட்ட தேசிய இனமான தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயுதப் போராட்டம் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி ஒரு தற்காலிக சோசலிச அரசை அமைத்துவிட்டு, அந்த அரசைப் பின்தளமாகக் கொண்டு தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் போராட்டத்தை நடாத்தி, முழு இலங்கையிலும் சோசலிச அரசை அமைக்க வேண்டும் என்பதே அவரது எண்ணக் க(ன)ருவாக இருந்தது.

உண்மையில் இது ஒரு கற்பனாவாத சிந்தனையே. இந்த மாதிரியான ஒரு சூழல் ஏற்பட அக மற்றும் புறச் சூழ்நிலைகள் இடம் கொடுக்கமாட்டா என்பதையோ, அப்படி ஒரு சூழல் ஏற்பட்டால், இலங்கையின் முதலாளித்துவ அரசு, இந்தியாவின் பிராந்திய விஸ்தரிப்புவாத அரசு, தமிழ் பிற்போக்குத் தலைமை, சர்வதேச ஏகாதிபத்திய சக்திகள் என்பன கூட்டுச் சேர்ந்து அந்தப் போராட்டத்தை முளையிலேயே கிள்ளியெறிந்து விடுவார்கள் (2009இல் அதை நாம் கண்கூடாகக் கண்டோம்) என்பதையோ தோழர் விசுவானந்ததேவன் உணரத் தவறிவிட்டார்.

இருந்தும், அவர் தனது திட்டத்தில் உறுதியாகவே இருந்தார். (இது அவரது தனித் தன்மைகளில் ஒன்று) அவர் தனது நோக்கங்களை ஈடேற்றுவதற்காக, தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் இரண்டாவது மாநாட்டைக் கூட்டி, அந்த முன்னணியின் பெயரைத் தனது நோக்கத்தைப் பிரதிபலிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' (National Liberation Front of Tamil Eelam – NLFT) எனப் பெயர் மாற்றம் செய்து கொண்டார். இந்த மாநாடு நடைபெறுவது சம்பந்தமாக அப்போது தமிழகத்தில் தங்கியிருந்த தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் சி.சண்முகநாதன் கூட அறிந்திருக்கவில்லை. (மாநாட்டு அறிக்கை கூட, பின்னர் இன்னொரு தமிழ் இயக்கத்தின் தலைவரான தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் மூலமே தோழர் சண்முகநாதனுக்குக் கிடைத்தது)

தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் மாநாடு நடாத்தப்பட்டு, அதன் பெயரும் மாற்றப்பட்டு புதிய மத்திய குழு அமைக்கப்பட்ட பொழுது, முன்னர் கட்சியால் அதன் மத்தியகுழுவுக்கு நியமிக்கப்பட்ட பெரும்பாலானோர் நீக்கப்பட்டுவிட்டனர். அவர்களுக்குப் பதிலாக முன்னர் புலிகள் இயக்கத்தில் இருந்தவர்கள் உட்பட முழுக்க முழுக்க வெறும் தமிழ் தேசியவாதிகளே மத்திய குழுவுக்குத் தெரிவானார்கள். அதாவது, அமைப்பு முழுக்க முழுக்க தமிழ் தேசியவாத அமைப்பாக மாற்றப்பட்டது. அதன் மூலம், தேசிய இனப் பிரச்சினையைப் பயன்படுத்தி சோசலிச அரசொன்றை நிறுவும் தோழர் விசுவானந்ததேவனின் கனவில் மண் விழுந்துவிட்டது என்பதை அவர் அந்த நேரத்தில் புரிந்திருக்கவில்லை.

தோழர் விசுவானந்ததேவனின் இந்தச் செயற்பாட்டிற்குப் பின்னர், எமது கட்சித் தலைமைக்கும் அவருக்குமான உறவுகள் சீர்குலைந்தது மட்டுமல்லாமல், எமக்கும் அவரது அமைப்புக்கும் இடையில் பகைமை ரீதியான நிலையும் தோன்ற ஆரம்பித்திருந்தது. அவர் தலைமையிலான அமைப்பு முன்வைத்திருந்த 'தமிழீழம்' என்ற கருதுகோளையும், அதற்கான ஆயுதப் போராட்ட வழிமுறையையும் எமது கட்சி சிறிதும் ஏற்கவில்லை.

இதனால், எனக்கும் அவருக்கும் இடையிலான நீண்டகால தோழமை உறவுகூட பாதிக்கப்பட்டது. அவருக்கும் எனக்கும் இடையிலான கடுமையான வாக்குவாதத்தின் பின்னர் சுமார் ஒரு வருடம் வரையிலும் நாம் இருவரும் கதைப்பதைக் கூட நிறுத்தியிருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காலகட்டத்தில் தோழர் விசுவானந்ததேவன் தலைமையிலான தமிழீழ தேசிய விடுதலை முன்னணி தமது இயக்க செயற்பாடுகளுக்காகவும், ஆயுதங்கள் வாங்குவதற்காகவும், வங்கிக் கொள்ளை போன்ற சில தவறான வழிமுறைகளிலும் கூட ஈடுபட்டது. அதன் மூலம் மற்றைய முதலாளித்துவ அடிப்படையிலான தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் போன்றதொரு நிலைப்பாட்டை நோக்கி அவரது இயக்கமும் சரியத் தொடங்கியது.

இயக்கத்தில் மேலும் மேலும் தமிழ் தேசியவாதப் போக்கு ஆதிக்கம் பெற்றதுடன், வெறும் தமிழ் தேசியவாத உணர்வு மட்டும் உள்ளவர்களால் இயக்கம் நிரம்பத் தொடங்கியது. இயக்கத்தில் தமிழ் தேசியவாதக் கருத்தின் ஆதிக்கம், சுத்த இராணுவக் கண்ணோட்டத்தின் வளர்ச்சி, வங்கிக் கொள்ளைப் பணத்தின் மீதான கவர்ச்சி, தலைமைத்துவ மோகம் என்பன தலைதூக்கியதுடன், பாசிசப் புலிகளுடன் ஐக்கிய முன்னணி அமைத்துப் போராட வேண்டும் என்ற மிக மோசமான கருத்தும் தலைதூக்கியது.

தனிப்பட்ட முறையில் தோழர் விசுவானந்ததேவன் மார்க்சிசத்தின் மீதும், சோசலிச இலட்சியத்தின் மீதும் மிகவும் பற்றுறுதி உள்ளவராக இருந்தபோதிலும், ஒரு பாட்டாளி வர்க்கத் தலைமை இல்லாமல் அவர் முன்னெடுத்த முயற்சிகள் அவரையே திருப்பி அடிக்கத் தொடங்கின. தமிழ் தேசியவாத சக்திகள் அமைப்பின் ஆதிக்கத்தை எடுத்துக்கொண்டு அவரையே ஓரம்கட்ட முயற்சித்தன. அமைப்பின் அதிகாரமும், கொள்ளையடித்த பணமுமே அவர்களது இலக்காக இருந்தன. இதனால் அவர்களுக்கும் தோழர் விசுவானந்தவேனுக்கும் இடையிலான உறவுகள் சீர்குலைந்தன.

இந்தச் சூழ்நிலையில் தோழர் விசுவானந்ததேவன் தனது கருத்துடன் ஒன்றி இருந்தவர்களை இணைத்துக்கொண்டு, 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி' என்ற தனியான அமைப்பொன்றை உருவாக்கிக்கொண்டு செயற்பட ஆரம்பித்தார். இந்தக் கட்டத்தில்தான் அவர் தனது தவறுகளை திரும்பிப் பார்த்ததுடன், நான் அவரது செயற்பாடுகள் சம்பந்தமாக முன்னர் முன்வைத்த விமர்சனங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்தூக்கிப் பார்த்திருக்கிறார். அவர் தனது தவறுகளை உணர்ந்தவுடன், தனது அமைப்பின் முக்கியமான உறுப்பினர் ஒருவர் மூலம் எனக்கு கடிதம் எழுதி, தன்னுடன் கலந்துரையாடுவதற்கு தமிழகம் வருமாறு அழைப்பு விடுத்தார்.

அவரது அழைப்பை ஏற்று, நான் தமிழகம் சென்று இரண்டு வாரங்கள் வரை தங்கியிருந்து அவருடன் பல்வேறு விடயங்கள் குறித்தும் விவாதித்தேன். பின்னர் அவர் சில நாட்களில் தாயகம் திரும்பி கல்லுவத்தில் உள்ள அவரது தாய் தந்தையர் வீட்டில் தங்கியிருந்த போதும், எமது கலந்துரையாடல்கள் தொடர்ந்தன. இறுதியாக அவர் தமிழகம் புறப்பட்ட 15.10.1986 அன்று காலையில் அவரது மனைவியாரின் கோண்டாவிலுள்ள வீட்டில் தங்கியிருந்த அன்றும் எமது கலந்துரையாடல்கள் தொடர்ந்தன.

இந்த விவாதங்களின் போது, அவர் பெருந்தன்மையுடன் தனது தவறுகளை ஏற்றுக் கொண்டதுடன், எனது முன்னைய விமர்சனங்களின் பெறுமதியையும் மனதார ஏற்றார். அத்துடன் சில புதிய முடிவுகளும் எட்டப்பட்டன. அதில் முக்கியமானது, எதிர்காலச் செயற்பாடுகளுக்கு கட்சித் தலைமையின் அவசியமும். ஸ்தாபன ரிதியான செயற்பாடும் என்பனவாகும். ஏனைய முடிவுகள் என்ன என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை.

அந்த உரையாடல்களின் பின்னர், ஒரு புதிய தொடக்கத்துக்கான ஒளிக்கீற்றைக் காணும் ஆவலுடன் நான் காத்திருந்த வேளையில், அவர் தமது தமிழகப் பயணத்தின் போது கடலில் வைத்து துஸ்ட சக்திகளால் இல்லாமல் செய்யப்பட்டார் என்ற பேரிடிச் செய்திதான் என் செவிகளை வந்தடைந்தது.

தோழர் விசுவாந்ததேவன் பற்றிய எனது மதிப்பீடு என்றைக்கும் உயர்வாகவே இருக்கும். அவர் அரசியல் ரிதியாகவும், ஸ்தாபன ரிதியாகவும் சில பாரதூரமான தவறுகளை இழைத்தார் என்பதில் ஐயமில்லை. ஆனால் மக்கள் மீதும், சோசலிச இலட்சியத்தின் மீதும் அவர் கொண்ட தீவிர விசுவாசம் காரணமாகவே அந்தத் தவறுகள் நிகழ்ந்தன எனக் கருதுகிறேன். அவரது தவறுகளை விட, அவரது சாதனைகள் மேலானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஒரு புரட்சிகர மார்க்சிசவாதியாகவே வாழ்ந்து மறைந்தார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தேக்கத்தை உடைத்து, அந்த இயக்கம் தீண்டத்தகாதது எனக் கருதியிருந்த தேசிய இனப் பிரச்சினையை ஒரு பரிட்சார்த்தக் களமாகப் பயன்படுத்தி, சோசலிசத்தை நோக்கிய புதிய சூழல் ஒன்றை உருவாக்க அவர் முயற்சித்தார் என்பதே, அவரது வரலாறு எமக்கு விட்டுச் சென்றுள்ள முதிசமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஞ்சிதபாலன்

## In Memory of Mr.V.Visuvandadevan

I first met Visuvanandadevan in 1970 at the faculty of engineering. We entered the University of Peradeniya from North of Sri Lanka. He was very quiet and a friendly person. I came to know more about him during the first year at the campus.

From the start he was a follower of Marxist philosophy. He was always willing to talk on issues relating to students in the faculty. During that period he made good friends not only in the Engineering faculty but also in Medical, Science and Art faculties at the campus. He was fluent in all three languages including Sinhalese. He was always part of the the Engineering faculty union meetings at the campus. He liked to discuss issues on the political situation in the country with students and lecturers.

After the second year he decided to join the Mechanical Engineering stream and I too joined in that group. After leaving the University in 1975, I joined the cement corporation.

When we were constructing the Lanka cement plant in early 1980's he worked with me in the planning division. During his short stay with us, he married one of my secretaries Jeyalakshmi. When he had been working with us, he was always interested in the issues related to the construction workers at site and frankly discussed the political issues during that time.

During the troubled times in the North I came to know that he died during a voyage at sea in 1986. We all miss him and it is hard to believe that thirty years have passed since his death in 1986.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

As wave merges in the ocean his soul merged with the universal consciousness in October 1986.

A.P.Ranjithabalan

Batch Mate and a Friend

1970 to 1975 Faculty of Engineering

University of Peradeniya

Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எஸ்.வி.ராஜதுரை**

## தோழர் 'விஸ்வா' நினைவாக...

'**விஸ்வா**' என்று நெருக்கமான நண்பர்கள், உறவினர்கள், தோழர்கள் ஆகியோரால் அன்புடன் அழைக்கப்பட்டு வந்த தோழர் விசுவானந்ததேவன் எனக்கு 1983இல் அறிமுகமானார். முதல் சந்திப்பு சென்னையில் ச.சீ.கண்ணன், நான், பி.என்.ஆர். என்று அழைக்கப்பட்டு வந்தவரும் பத்தாண்டுகளுக்கு முன் காலமாகிவிட்டவருமான ஒரு 'நண்பர்' ஆகியோரால் தொடங்கப்பட்ட 'கார்ல் மார்க்ஸ் நூலகத்தில்' நடைபெற்றது. தொடக்கத்தில் அந்த நூலகமும் எனது குடும்பத்தின் வசிப்பிடமும் ஒன்றாகவே இருந்தன. 'பி.என்.ஆரின்' சம்பந்தி அம்மா, தமது மகளுடன் வசிப்பதற்காக கனடாவுக்குச் சென்றுவிட்டதால், காலியாக இருந்த அவரது வீட்டின் கீழ்ப்பகுதி வாடகைக்கு விடப்பட்டிருந்தது. மாடியில் இரண்டு படுக்கை அறைகள், ஒரு பெரிய ஹால், ஒரு சமையலறை, சாமான்களை வைக்க ஒரு சிறிய அறை. அந்த சம்பந்தி அம்மாவின் பொருட்கள் அனைத்தும் வைத்துப் பூட்டப்பட்டிருந்தது ஒரு படுக்கை அறை. மற்ற படுக்கை அறையும் பிற இடங்களும் காலியாக இருந்தன. அங்கிருந்த பெரிய ஹாலில்தான் 'கார்ல் மார்க்ஸ்' நூலகம் செயல்பட்டுக் கொண்டிருந்தது. 1980இல் தொடங்கப்பட்ட அந்த நூலகத்திற்கு, இடதுசாரி இயக்கத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் வருவார்கள். அவர்களது எண்ணிக்கை குறைவு. மார்க்ஸியத்தின் அடிப்படைகளைப் பற்றிய வகுப்புகளை நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம். அவற்றுக்கு வந்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். ஆனால், அந்த நூலகத்திற்கு அடிக்கடி வருகை தந்தவர்கள் 'கியூ' பிரிவு போலீஸார்தாம்! சில வேளை, சாதாரண வாசகர்களைப் போல வருவார்கள். மாநகராட்சி அலுவலர்கள் என்று சொல்லிக் கொண்டு வருவார்கள். புத்திசாலித்தனம் சிறிதும் இல்லாத அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிதில் அடையாளம் கண்டுகொள்ளும் நாங்கள், அவர்களை நூலகத்திலிருந்து வெளியேறச் சொல்லிவிடுவோம்.

ஆனால் அதே பிரிவைச் சேர்ந்தவர்கள், சீருடையோடும் துப்பாக்கிகள் ஏந்தியும் அவர்களது வாகனங்களில் வந்து எங்கள் வசிப்பிடத்தை, அதாவது நூலகத்தை சோதனை போட வருவார்கள். அப்போது அவர்களது புத்திசாலித்தனமல்ல, அதிகாரம்தான் நம்மிடம் பேசும். காவல் நிலையங்கள், காவல் துறை ஆணையர் அலுவலகம் என்று 'விசாரணைக்காக' நானும் அழைத்துச் செல்லப்படுவது வழக்கமாக இருந்தது. இதற்கெல்லாம் காரணம், அன்று தமிழகத்தின் பல பகுதிகளில் – குறிப்பாக சென்னை நகரிலும் வட மாவட்டங்களிலும் – நக்ஸலைட் இயக்கம் மீண்டும் வலுவாக வளர்ச்சியடையத் தொடங்கியிருந்ததுதான். அந்த இயக்கத்தின் தொடக்க காலத்தில் முக்கிய பங்கேற்றிருந்த நான், 1972ஆம் ஆண்டிலிருந்து அது ஒன்றுக்கொன்று பகை கொண்ட பல்வேறு குழுக்களாக உடைந்து, வலுக்குன்றியிருந்ததால் மிகவும் குழம்பிப் போயிருந்தேன். ஆனால், இந்திரா காந்தியால் அறிவிக்கப்பட்டிருந்த 'நெருக்கடி கால நிலைமை' இரத்து செய்யப்பட்ட பிறகு, நக்ஸலைட் இயக்கத்தில் புதிய அணிச்சேர்க்கைகளும் புதிய நடைமுறைத் தந்திர உத்திகளும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த காலகட்டத்தில், 'மக்கள் யுத்தம்' குழுவைச் சேர்ந்த முன்னணிச் செயல் வீரர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவர்களோடு நெருக்கமான தொடர்பு கொள்ளவும் அவர்கள் என்னிடமிருந்து எதிர்பார்த்த வேலைகளைச் செய்யவும் தொடங்கினேன்.

எனினும், கட்சி அரசியலையும் பல்வேறு கட்சிகள் மார்க்ஸியத்துக்குத் தந்து வந்த விளக்கங்களையும் தாண்டி, மார்க்ஸியத்தின் பல்வேறு பரிமாணங்களை, அதற்குத் தரப்பட்டு வந்த பல்வேறு விளக்கங்களை, பல்வேறு வகையான மார்க்ஸிய, சோசலிச இயக்கங்களின் வரலாறுகளைக் கற்றுக் கொள்வதற்கான மையமாக 'கார்ல் மார்க்ஸ்' நூலகம் இயங்க வேண்டும் என்பதிலும் நான் உறுதியாக இருந்தேன். ஆனால், எனது வசிப்படத்தில் அந்த நூலகம் இயங்கிய போதும் சரி, போலிஸ் ஒடுக்குமுறையின் காரணமாக அது ச.சீ.கண்ணனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு மாடியிலிருந்து இயங்கி வந்த காலத்திலும் சரி, அந்த நூலகத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டவர்கள், தமிழகத்திலுள்ள இடதுசாரி அறிவுஜீவிகள் அல்லர், ஈழ விடுதலைப் போராளிகளும் அவர்களது அறிவுஜீவிகளும்தான். ச.சீ.கண்ணனின் வீட்டு மாடியில் அந்த நூலகம் இயங்கத் தொடங்கியபோதுதான் 'விஸ்வா'வை முதன் முறையாகச் சந்தித்தேன். அந்த நூலகத்திலிருந்தோ, என்னைப் போன்ற நண்பர்களின் வீடுகளிலிருந்தோ புத்தகங்களை இரவல் வாங்கிச் செல்பவர்களில், அவற்றை ஒழுங்காகத் திருப்பிக் கொடுக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தவர்கள் ஈழப் போராளி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே. எத்தகைய சிக்கலில் மாட்டிக் கொண்டாலும், படிக்க எடுத்துக் கொண்டு போன புத்தகத்தை எப்படியேனும் உரியவர்களிடம் சேர்த்துவிடும் அற்புதமான மனிதர்களிலொருவர் தோழர் விஸ்வா.

நக்ஸலைட் இயக்கம் எனப் பரவலாக அறியப்படும் மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி பல்வேறு குழுக்களாகவும், 'குறுங்குழுவாதம்' பீடிக்கப்பட்டதாகவும் இருந்த போதிலும், 1970களின் கடைசி ஆண்டுகளிலிருந்து அந்தக் குழுக்களில் ஒரு சில போர்க்குணமிக்க மக்கள் இயக்கங்களைக் கட்டத் தொடங்கியிருந்ததால், தமிழகக் காவல் துறை கொடிய அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டது. கைது செய்யப்பட்ட முன்னணிச் செயல்வீரர்கள் பலர் 'என்கவுண்டர்' என்கின்ற பெயரால் படுகொலை செய்யப்பட்டு வந்தனர். நூற்றுக்கணக்கானோர் எவ்விதக் காரணமுமின்றி சிறையில் அடைக்கப்பட்டனர். அந்தச் சூழ்நிலையிலும், சில 'நக்ஸலைட்' குழுக்கள் – தங்கள் விரல்களை தீயில் சுட்டுக் கொள்ள அஞ்சிய குழுக்கள் – குறுங்குழுவாத தத்துவார்த்த போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தன. மக்கள் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் குழுக்களுக்கு ஆதரவாகவும், போலிஸ் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் செயற்படுவதற்குப் பதிலாக, அந்தக் குழுக்களைப் பலகீனப்படுத்தும் வகையில் தனிநபர்கள் மீதான அவதூறுகளைத் தொடுத்து வந்தன. அந்த அவதூறுகளுக்குப் பலியானவர்களில் ஒருவனாக நானும் இருந்த போதிலும், மனச்சோர்விலிருந்து விடுபட்டுத் தொடர்ந்து சமூகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றுவதற்கான வாய்ப்புகளை அன்றைய தமிழக, இந்திய அரசியல் சூழல் ஏற்படுத்தித் தந்தது. 'நக்ஸலைட் பிரச்சினை', 'என்கவுண்டர் மரணங்கள்' ஆகியன தவிர, பல்வேறு வகை மனித உரிமை மீறல்கள் தொடர்பான கள ஆய்வுகள், சட்டரீதியான நடவடிக்கைகள், குறிப்பிட்ட பிரச்சினைகளின் அடிப்படையில் பல்வேறு அரசியல், சமுதாய இயக்கங்களுடன் இணைந்து செயற்படுதல் என்பன போன்றவற்றில் எனது அக்கறையும் ஆற்றலும் செலுத்தப்படத் தொடங்கின. உண்மையில் அப்போதுதான், கட்சி வட்டாரங்களால் கருத்தில் கொள்ளப்படாத பரந்த உலகம் இருப்பதைப் புரிந்து கொள்ளத் தொடங்கினேன்.

ஏறத்தாழ அந்தக் காலகட்டத்தில்தான் 'ஈழப் பிரச்சினை'யும் தமிழகத்தைத் தொற்றிக் கொண்டது. 1977 - 78ஆம் ஆண்டிலேயே எனக்கு அருளர் (ஈரோஸ்) அறிமுகமாகியிருந்த போதிலும், ஈழப் பிரச்சினை மீது எனக்கு அக்கறை ஏற்பட்டது 1983இல் தான். இந்தியாவிலுள்ள தேசிய இனப் பிரச்சினைக்கு நக்ஸலைட் இயக்கம் முக்கியத்துவம் கொடுத்து வந்தந்தைப் போலவே, தமிழ் ஈழ மக்களின் தன்னுரிமைக் கோரிக்கையை மார்க்ஸிய - லெனினியக் கண்ணோட்டத்திலிருந்து ஆதரிக்க வேண்டும் என்று தொடக்கம் முதலே வலியுறுத்தி வந்த விரல் விட்டு எண்ணக் கூடிய நக்ஸலைட் ஆதரவாளர்களில் நானும் ஒருவன். ஈழ விடுதலையை ஆதரித்த முக்கிய நக்ஸலைட் தலைவர்கள் இருவர் அப்போது சிறையில் இருந்தனர். அவர்கள் பிணையில் வெளிவருவதற்கும் நான்தான் காரணம். ஆனால், அந்தத் தலைவர்கள் சார்ந்திருந்த கட்சியின் தலைமை, ஈழ மக்களின் தன்னுரிமைக் கோரிக்கை தொடர்பான தெளிவான, உறுதியான நிலைப்பாடு எதனையும் மேற்கொள்ளவில்லை. உண்மையில் சொல்லப்போனால், 2009ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிங்களப் பேரினவாத அரசு நடத்திய இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இனக்கொலை செய்யப்பட்டபோதுதான், பெரும்பாலான நக்ஸலைட் குழுக்கள் (மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சிகள்/குழுக்கள்) ஈழப்பிரச்சினை பற்றிப் பேசத் தொடங்கின. அதற்கு முன்பு மாவோயிஸ்ட் கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வந்ததாகவும், மாவோயிஸ்ட் கெரில்லாப் படைகளுக்கு விடுதலைப் புலிகள் ஆயுதப் பயிற்சி கொடுத்ததாகவும் செய்திகள் வெளிவந்து கொண்டிருந்த போதிலும், அவற்றை உறுதிப்படுத்த முடியவில்லை. இது ஒருபுறமிருக்கட்டும்.

1978ஆம் ஆண்டிலிருந்தே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிலர் எனக்கு நெருக்கமான நண்பர்களாக இருந்தனர். அவர்கள் மூலமாகவே, ஈழப் பிரச்சினை பற்றியும் தேசிய இனப் பிரச்சினை பற்றியும் அங்கிருந்த பல்வேறு இயக்கங்கள் வெளியிட்டு வந்த பிரசுரங்கள் எனக்குக் கிடைத்து வந்தன. 1983 இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட சிங்கள இனவெறித் தாக்குதலுக்கும் பிறகு, ஈழ விடுதலைப் போராட்டம் தமிழக அரசியலில் முக்கிய இடம் பெறத் தொடங்கியது. தமிழீழப் பிரச்சினை மீது பரவலான கவனத்தை ஈர்ப்பதற்காக நான் மேற்கொண்ட முயற்சிகளிலொன்று, சேரனின் 'இரண்டாவது சூரிய உதயம்' கவிதைத் தொகுப்பின் இரண்டாம் பதிப்பை எனது சொந்த செலவில் நான் நடத்தி வந்த 'பொதுமை வெளியீடு' சார்பாகக் கொண்டு வந்து, அதன் வெளியீட்டு விழாவை சென்னை அண்ணா சாலையிலுள்ள தேவேநேயப் பாவாணர் நூலகக் கட்டிடத்தில் ஒரு மாநாடு போல நடத்திக் காட்டியதாகும். மிக விரைவில் ஈழ விடுதலைப் போராட்டக் குழுக்கள் அனைத்தும் தமிழகத்தில் கிளைவிடத் தொடங்கின. ஒருபுறம் நாடாளுமன்ற இடதுசாரிகள், நாடாளுமன்ற அரசியலைப் புறக்கணிக்கும் இடதுசாரிக் குழுக்கள் ஆகியன ஈழப் பிரச்சினையைப் புரிந்து கொள்ளாமலோ, அதற்கு எதிர்ப்புக் காட்டுபவர்களாகவோ இருக்க, திமுக, அஇஅதிமுக ஆகிய இரு முக்கிய அரசியல் கட்சிகள் மட்டுமின்றி பெரியார் இயக்கங்கள், தமிழ்தேசியக் குழுக்கள் ஆகியன ஈழ விடுதலையின் ஆதரவாளர்களாக இருந்தன. ஏற்கெனவே எனக்கு இருந்து வந்த யாழ்ப்பாணத் தொடர்புகளின் காரணமாக, ஈழ விடுதலைப் போராட்டக் குழுக்கள் அனைத்தையும் சேர்ந்தவர்களுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. கிட்டத்தட்ட எல்லாக் குழுக்களையும் சேர்ந்தவர்கள் எனது வீட்டுக்கு வரத் தொடங்கினர். அப்போதுதான் அந்தக் குழுக்களிடையே இருந்த பகைமைகள், கருத்து வேறுபாடுகள் ஆகியனவற்றை ஆழமாக அறிந்து கொள்ளத் தொடங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலா, நித்தியானந்தன் ஆகியோருடன் எனக்கேற்பட்ட நட்பின் காரணமாக, விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சோசலிசக் கண்ணோட்டம் இருக்கும் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. அந்த எண்ணத்தை வலுப்படுத்துவதாக இருந்தன ஆண்டன் பாலசிங்கத்திடமிருந்து அவ்வப்போது வெளிவந்து கொண்டிருந்த 'சோசலிச சொல்லாடல்கள்'.

ஆனால், ஈழ விடுதலை இயக்கங்கள் அனைத்தும் இந்திய அரசின் உதவியுடனும் ஊக்கத்துடனும் செயற்பட்டு வந்தன, அவை அனைத்துக்கும் இந்திய உளவுத் துறையான 'ரா', இந்திய இராணுவம் ஆகியன உதவி செய்கின்றன என்பதை மிக விரைவில் உணர்ந்து கொண்டேன். தமிழகத்திலுள்ள மேட்டூருக்கு அருகிலுள்ள வனப் பகுதியிலிருந்து வட இந்தியாவிலுள்ள டேராடூன் வரை பல்வேறு இடங்களில் ஆயுதப் பயிற்சி கொடுக்கப்பட்டு வந்தது. இந்திய அரசின் புவிசார்-அரசியல் நலன்களுக்காகவே, ஈழ விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு தரப்பட்டு வந்ததை அறிந்து கொண்ட நான், என்னோடு நெருக்கமான உறவு கொண்டிருந்த ஈழப் போராளிகளிடம் அதைப் பற்றி விவாதிக்கத் தொடங்கினேன். இந்திய அரசின் உதவியுடன் மட்டுமே ஈழ விடுதலையைச் சாதிக்க முடியும் என்ற கருத்தை அவர்களது மனதிலிருந்து என்னால் அகற்ற முடியவில்லை. ஒரு முறை கோடம்பாக்கத்திலிருந்த 'ஈபிஆர்எல்.எ.ஃ.ப்' அலுவலகத்துக் சென்றேன். அங்கே ஒரு கண்கொள்ளாக் காட்சி. மார்க்ஸ்,எங்கெல்ஸ்,லெனின்,ஸ்டாலின் ஆகியோரின் புகைப்படத்துடன் சேர்ந்து இந்திரா காந்தியின் புகைப்படமும் வைக்கப்பட்டிருந்தது - மலர் மாலைகளுடன்!

இந்தியாவின், இந்திய இராணுவத்தின் 'நல்லெண்ணத்தின்' மீது ஈழ விடுதலைப் போராளிகள் பலருக்கு நம்பிக்கை இருந்தது. அவர்கள் எல்லோரும் இந்திய அரசாங்கத்தின் முகவர்களாகச் செயல்பட்டவர்கள் என்று சொல்ல மாட்டேன். தென்னாசிய வல்லரசான இந்தியாவின் அரசியல், இராணுவ, இராஜதந்திர பலம், சூழ்ச்சி ஆகியன பற்றிய புரியாமையால்தான் அவர்களிடம் அத்தகைய கருத்து இருந்தது. கோவை ஞானியும் நானும் நடத்தி வந்த 'பரிமாணம்' ஏட்டிற்காக, எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகர்ஜுனன், வ.ஐ.ச. ஜெயபாலனிடம் ஒரு நேர்காணல் செய்திருந்தார். அதில் அந்தக் கவிஞர், ஈழ விடுதலைக்கு இந்திய இராணுவத் தலையீடு தேவை என்ற கருத்தைக் கூறியிருந்தார். அந்த நேர்காணலை வெளியிட்ட நான், அவரது கருத்தை மறுதலிக்கும் வகையில் அதே இதழில் ஒரு கட்டுரையை எழுதினேன். ஜெயபாலனும் தமது தவறைப் பின்னர் ஒப்புக் கொண்டார். 'ஈரோஸ்' அமைப்பைச் சேர்ந்தவர்கள், பாலஸ்தீன விடுதலை இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்றாலும், அவர்களும் இந்திய அரசின் ஒத்துழைப்பை எதிர்நோக்கியிருந்தனர்.

அத்தகைய சூழலில்தான் தோழர் விஸ்வாவின் வருகை எனக்கு உற்சாகத்தைத் தந்தது. தமிழகத்திலுள்ள தமிழ் தேசிய, திராவிட இயக்க, தனித்தமிழ் இயக்க மனிதர்கள் எவரையும் சந்திக்க அவருக்கு விருப்பம் இருக்கவில்லை. நாடாளுமன்ற இடதுசாரிகள், இந்திய தேசியவாதிகளாக இருந்ததால், அவர்களையும் அவர் சந்திக்கவில்லை. இலங்கையில் மார்க்ஸிய-லெனினிய இயக்கத்தில் அவர் கற்றுக் கொண்ட ஆக்கபூர்வமான படிப்பினைகள், அவருக்கு ஏற்பட்ட எதிர்மறை அனுபவங்கள் ஆகியவற்றோடு தமிழகத்துக்கு வந்த அவர், இங்கிருந்த எல்லா மார்க்ஸிய - லெனினியக் குழுக்களிடமும் பேசினார். அந்தக் குழுக்களைச் சேர்ந்த அனைவரையும் பார்க்க, ஈழ விடுதலைக் கோரிக்கையை ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும் என 1981 முதல் வலியுறுத்திவந்தவனான என்னையும் சந்திக்க வந்தார்.

அவருடனான முதல் சந்திப்பில் எனக்குச் சிறிது எரிச்சல் ஏற்பட்டது. அவர் சந்தித்த மார்க்ஸிய-லெனினியக் குழுக்களைச் சேர்ந்த சிலர், விமர்சனம் என்ற பெயரால் என்னைப் பற்றிப் பரப்பி வந்த அவதூறுகளை என்னிடம் அவர் விவாதிக்கத் தொடங்கியதுதான் அதற்குக் காரணம். 'இங்குள்ளவர்களிடையே உள்ள கருத்து வேறுபாடுகளையோ, பரஸ்பரக் குற்றச்சாட்டுகளையோ அவதூறுகளையோ நீங்கள் ஏன் பொருட்படுத்துகிறீர்கள்? உங்களுக்கு என்ன தேவையோ, அதை மட்டும் பார்த்துக் கொண்டு போங்கள்' என்று கூறினேன். ஆனால், அதன் பிறகு அவருடன் அடுத்தடுத்து நடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதங்களின் போது ஒன்றை நான் தெரிந்து கொண்டேன் : தோழர் விஸ்வா, எந்த விடயத்தையும் தமது சொந்த நடைமுறை அனுபவங்களிலிருந்து தெரிந்து கொள்ளவும் அதை உறுதிப்படுத்தவும் செய்கின்ற நபரேயன்றி, 'இவர் சொன்னார், அவர் சொன்னார்' என்று எதையும் நம்புகிறவர் அல்லர் என்னும் உண்மையை.

எல்லோரையும் எளிதில் கவரக்கூடிய உடல் தோற்றம் அவருக்கு இருக்கவில்லை. குள்ளமான, ஒல்லியான உருவம் துருத்திக் கொண்டிருக்கும் பற்கள். ஆனால், உற்றுக் கவனித்தால் துருதுருவென்ற, தீட்சண்யம் மிக்க அவரது பார்வையால் நாம் ஈர்க்கப்படுவோம். மார்க்ஸிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையை ஆழமாகக் கற்றவர். தேசியப் போராட்டத்தை, சர்வதேசிய உள்ளடக்கத்தோடு, பாட்டாளிவர்க்க மார்க்ஸியத் தத்துவத் தலைமையின் கீழ்தான் நடத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர். ஆனால், ஈழ மக்களின் விடுதலை என்பதைத் திட்டவட்டமான வரலாற்றுச் சூழலில் வைத்தே பார்க்கவும் அதற்குத் தீர்வு காணவும் வேண்டுமே தவிர, மார்க்ஸியப் பாடப் புத்தகங்களில் அந்தத் தீர்வைத் தேட முடியாது என்பதை வலியுறுத்தியவர்.

இலங்கை தேசிய இனப் பிரச்சினையைப் பொறுத்தவரை, சண்முகதாசனின் தலைமையிலிருந்த கட்சியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் (அந்தப் பிரச்சினையைக் கையில் எடுக்காததற்காக சண்முகதாசன் பின்னாளில் சுயவிமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்), இன்னொரு மார்க்ஸிய - லெனினிய அமைப்பைத் தோற்றுவிக்கும் அவசியத்தை ஏற்படுத்தியதை விளக்கினார்.

மலையகத் தமிழர் பிரச்சினையை ஆழ்ந்து கற்ற, அதன் மீது தீவிரமான அக்கறை காட்டிய முதல் ஈழப் போராளி தோழர் விஸ்வாதான் என்பதை என்னால் தயக்கமின்றிச் சொல்ல முடியும். தமிழ் பேசும் முஸ்லிம்கள் 'சோனகர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள் என்பதை அவரிடமிருந்துதான் தெரிந்து கொண்டேன். அவர்களை 'ஒற்றை அடையாள'த்திற்குள் திணிக்கும் முயற்சியை அவர் கடுமையாக எதிர்த்து, அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தன்மையை அங்கீகரிக்க வேண்டும் என்று இடைவிடாது வற்புறுத்தி வந்திருக்கிறார். இதில் வ.ஐ.ச.ஜெயபாலனுக்கும் ஒத்த கருத்து இருந்தது (இருவரும் ஒருகாலத்தில் நெருக்கமான உறவினர்களாக இருந்தார்கள் என்பதைப் பின்னாளில் தெரிந்து கொண்டேன். தமது குடும்பம், இரத்த உறவுகள் என்று எதையும் சொல்ல மாட்டார் தோழர் விஸ்வா).

மாவோ மீதும் செஞ்சீனத்தின் மீதும் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்த அவர், கண்மூடித்தனமான உபாசகராக இருக்கவில்லை. இந்தியாவிலுள்ள மார்க்ஸிய - லெனினிய இயக்கங்கள் செ குவாரா, ஹோ சிமின், அமில்கார் கப்ரால் போன்ற மூன்றாம் உலக மார்க்ஸியப் புரட்சியாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மாவோ தலைமையில் நடந்த ஆயுதப் போராட்டம் மட்டுமே பேசப்பட்டு வந்தது. சன் யாட்சென் தலைமையில் கோமிண்டாங் இருந்த போது, அக் கட்சி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் நல்லுறவைப் பேணி வந்ததுடன், இரு கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒரே இராணுவக் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பும் இருந்தது. சன்யாட் சென்னின் மறைவுக்குப் பிறகு சியாங்காய் ஷேக் கோமிண்டாங் தலைமையைக் கைப்பற்றியதும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை ஒடுக்கத் தொடங்கினார் என்றாலும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வசம் இராணுவத்தின் ஒரு பகுதியும் ஆயுதங்களும் தொடக்கம் முதலே இருந்து வந்தன. ஆனால், அத்தகைய அனுகூலம் எதனையும் வியத்நாமியப் புரட்சியாளர்கள் பெற்றிருக்கவில்லை. ஆயுதச் சேகரிப்பு, இராணுவப் பயிற்சி ஆகியவற்றை அவர்கள் சுயமாகவே, ஆரம்பத்திலிருந்தே பெற்று விடுதலைப் படையை அமைக்க வேண்டியிருந்தது. எனவே, மாவோவின் இராணுவப் படைப்புகளிலிருந்து கற்றுக் கொள்வது எவ்வளவு அவசியமோ, அதேபோல் வியத்நாம் போராளிகளிடமிருந்தும், கியூப, ஆப்பிரிக்கப் போராளிகளிடமிருந்தும் கற்றுக் கொள்வது அவசியம் என்று கருதிய தோழர் விஸ்வா, மக்கள் யுத்தம், கெரில்லாப் போர், மக்கள் இராணுவம் போன்றவற்றைத் தமது இயக்கத்தினர் மட்டுமின்றி, பொதுவாக எல்லா ஈழப் போராளிகளும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பினார். அதன் பொருட்டுத்தான் அவர் ‘ஆய்வகம்’ என்னும் வெளியீட்டகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவி, பல நூல்களைத் தமிழாக்கம் செய்து வெளியிடும் திட்டத்தைத் தொடங்கினார். அவரது ஆலோசனைக்கு இணங்கி, நானும் காலஞ்சென்ற ப.சிங்கராயரும் (அவர் அப்போது எனது உதவியாளராக இருந்தார்) வியத்நாமின் வீரத் தளபதி ஜெனரல் கியாப்பின் நூலைத் தமிழாக்கம் ('புரட்சிகர மக்களை ஆயுதபாணியாக்கலும் மக்கள் படையும்') செய்து தந்தோம். மற்ற போராளி இயக்கங்களைச் சேர்ந்த நேர்மையான மனிதர்களை மதிக்கத் தெரிந்திருந்த தோழர் விஸ்வா, அந்தத் தமிழாக்க நூலை, 'ப்ளோட்' இயக்கத்திலிருந்த மார்க்ஸியப் போராளியும், அந்த இயக்கத்தைச் சேர்ந்த சிலரால் படுகொலை செய்யப்பட்டவருமான தோழர் சந்ததியாருக்கு சமர்ப்பணம் செய்யும்படி செய்தார். அந்த நூலை மொழியாக்கம் செய்தவர்களிலொருவனான எனது பெயர் அதில் விடுபட்டுப் போனதை அறிந்து மனம் வருந்திய தோழர் விஸ்வா, விநியோகிக்கப்படாமல் எஞ்சியிருந்த பிரதிகளில் என் பெயர் அச்சிடப்படுவதை உறுதி செய்தார். அது தேவையில்லை என்று நான் எவ்வளவோ மறுத்தும் அவர் கேட்பதாக இல்லை. என் மீது அவர் கொண்டிருந்த மதிப்பை நினைத்தால், எனது கண்கள் இப்போதும் கலங்குகின்றன. அந்த நூல் பின்னாளில் கோவை விடியல் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. மொழிபெயர்ப்பாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. அதன் ஆக்கத்திற்குக் காரணமான தோழர் விஸ்வாவின் பெயரும் காணப்படவில்லை.

தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சென்று, மீண்டும் தமிழகத்துக்கு வரும் ஒவ்வொரு முறையும் புதிய புதிய பிரச்சினைகளைக் கொண்டு வருவார். தந்திர உத்தி என்னும் வகையில் இந்திய அரசிடமிருந்து ஆயுதங்களைப் பெறுதல், ஈழ விடுதலைக்காக உறுதியுடன் போராடும் பிற இயக்கங்களுடன் 'ஐக்கியம் - விமர்சனம் - ஐக்கியம்' என்ற அடிப்படையில் ஒன்று சேர்ந்து போராடுதல் ஆகிய விடயங்களில் தமது அமைப்பில் (NLFT) ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாக, அந்த அமைப்பு இரண்டாக உடைந்துவிட்டது என்றும், தாமும் தம்மை ஆதரிக்கும் தோழர்களும் புதிய அமைப்பொன்றை (PLFT) நிறுவியுள்ளதாகவும் ஒரு முறை கூறினார். இந்தியாவிலுள்ள மார்க்ஸிய - லெனினிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தைப் பீடித்துள்ள நோய் இலங்கையையும் தொற்றிக் கொண்டதா என நான் கிண்டலாகக் கேட்டேன். எந்த ஒரு விடயத்திலும் அல்லது பொருளிலும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட இரு அம்சங்கள் இருக்கும் என்னும் மார்க்ஸிய இயங்கியல் விதியை, சீனாவில் (குறிப்பாக கலாசார புரட்சிக் காலத்தில்) 'ஒன்று இரண்டாகப் பிளக்கிறது' (One divides into Two) என்று சீன மொழிக்கே உரிய வகையில் கூறுவது வழக்கம். இதைத் தவறாகப் புரிந்து கொண்டதாலோ என்னவோ இங்குள்ள மார்க்ஸிய-லெனினியவாதிகள், ஒவ்வொரு கட்சியையும் குழுவையும் இரண்டாகப் பிளந்து கொண்டிருக்கிறார்கள், அதைத்தான் நீங்களும் இலங்கையில் செய்கிறீர்களா என்று ஒரு முறை அவரிடம் கோபத்துடன் கேட்டேன். எவ்வகையான ஆத்திரமூட்டல்களுக்கும் இரையாகாத முதிர்ச்சி நிறைந்த மனம் அவருடையது. தமது இயக்கத்தில் எழுந்த உண்மையான பிரச்சினைகளை மனந் திறந்து பேசினார். 'ஐக்கியம் - விமர்சனம் - ஐக்கியம்' என்னும் அடிப்படையில் மற்ற போராளிக் குழுக்களுடன் இணைந்து, ஈழ விடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடுவதைத் தாம் ஆதரிப்பதாகவும், ஆனால் ஒருபோதும் இந்திய அரசிடமிருந்து ஆயுதங்களைப் பெறப் போவதில்லை என்றும் உறுதிபடக் கூறினார். இப்போது, அரசியல் சொல்லாடல்களில் அடிக்கடி இடம் பெறும் 'பெரிய அண்ணன்' (Big Brother) என்பதை அவர் 1985இலேயே – இந்தியாவைக் குறிப்பதற்காக - பயன்படுத்தினார்.

இந்திய அரசிடமிருந்தோ, அதனுடைய தமிழக முகவர்களான எம்ஜிஆர் போன்றவர்களிடமிருந்தோ, தீய வழிமுறைகள் மூலம் வெளிநாடுகளில் ஏற்படுத்தப்பட்டு வந்த தொடரமைப்புகள் மூலமோ எவ்வித இராணுவ, நிதி உதவியும் பெறாத, தனது இருப்புக்கும் செயற்பாடுகளுக்கும் தனது சொந்த மண்ணிலிருந்த மக்களை மட்டுமே சார்ந்திருந்த, கருத்து வலிமை தவிர வேறு எந்த வலிமையும் பெற்றிராத தோழர் விஸ்வாவின் இயக்கம் நீட்டிய நேசக்கரத்தைத் தொட்டுப் பார்க்கக்கூட விரும்பவில்லை மற்ற போராளி இயக்கங்கள் – குறிப்பாக பின்னாளில் ஈழத்தின் 'பெரிய அண்ணனாக' விளங்கிய இயக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மரணம் இன்னும் விடுவிக்கப்படாத புதிராகவே உள்ளது. கடைசியாக அவரைச் சந்தித்தபோது, 'நாட்டுக்குப் போவதாகவும் இரு கிழமைகளுக்குப் பிறகு சென்னைக்குத் திரும்பி வருவதாகவும்' கூறினார். ஒரு நாள் மதியம் நண்பர் மு. நித்தியானந்தன், பதற்றத்தோடு என் வீட்டுக்கு வந்தார் (அப்போது அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இல்லை). "எஸ்.வி.ஆர்., விசுவானந்த தேவனைப் பற்றிய செய்தி தெரியுமா?" என்றார். "இந்த வாரமோ, அடுத்த வாரமோ அவர் சென்னைக்கு வரப் போகிறார்" என்றேன். "சென்னைக்கு வருகிறாரா, அவரைப் போட்டுத் தள்ளிவிட்டார்கள் எஸ்.வி.ஆர்." என்றார். நான் அதிர்ச்சியால் உறைந்து போனேன். சில நொடிகள் கழித்து, "இலங்கை இராணுவமா?" என்று கேட்டேன். "அப்படித்தான் கதைக்கிறார்கள். ஆனால், அது உண்மையாக இருக்காது" என்றார். அதன் அர்த்தம் எனக்குப் பிடிபடவில்லை. விஸ்வா இறந்தது ('காணாமல் போனது') சென்னையில் அப்போது இருந்த அவரது துணைவியாருக்கும்கூடத் தெரிந்திருக்கவில்லை என்று நித்யானந்தன் கூறினார். என்ன நடந்திருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள சென்னையில் விஸ்வா தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று, அவரது துணைவியாரிடம் பேச்சுக் கொடுத்ததாகவும், விஸ்வா பற்றிய அந்த துர்செய்தியை அதுவரை தெரிந்துகொள்ளாமல் இருந்த அந்தப் பெண்மணி 'அடுத்த கிழமை வருவார்' என்ற நம்பிக்கையில் இருந்ததாகவும், அது விஸ்வாவின் மரணச் செய்தியைவிடப் பன்மடங்கு நெஞ்சைக் கனக்கச் செய்ததாகவும் நித்யானந்தன் கூறினார்.

விஸ்வாவின் மரணத்துக்குப் பின்னரே, இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டு, இந்திய 'அமைதி'ப் படை அனுப்பப்பட்டது. அதன் பிறகு நடந்தவை சோக வரலாறாகிவிட்டன. விஸ்வா உயிரோடு இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் என்பதை யாரும் ஊகித்துச் சொல்ல முடியாது. ஆனால், நிச்சயம் இந்திய இராணுவத்திற்கு எதிராக, ஈழத் தமிழர்களை, சோனகர்களை, மலையகத் தமிழர்களை, ஏன் சிங்கள் மக்களையும்கூட அணி திரட்ட முயன்றிருப்பார் – வெற்றி தோல்வியைப் பொருட்படுத்தாமல். கடந்த முப்பதாண்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் தேசம், தேசியம், சுய நிர்ணய உரிமை, தேச - அரசு போன்ற விடயங்களில் எனது நிலைப்பாடுகளும் புரிதல்களும் கூட மாற்றம் கண்டுவிட்டன. ஈழ விடுதலைப் போராட்டம் பற்றி இப்போது எழுதப்படும் சோக வரலாற்று ஆவணங்களில் தோழர் விஸ்வாவின் பெயர் அடிக்குறிப்பாகக்கூட இடம் பெறாதது எத்தகைய பெரும் அவலம்.

எப்படி நிகழ்ந்தது விஸ்வாவின் மரணம்? அவரது மறைவுக்கு இரண்டாண்டுகள் கழித்து, அவரது இயக்கத் தோழர்கள் சிலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு கட்டுரை எழுதி அனுப்பியிருந்தேன். அதை அவர்கள் வெளியிட்டார்களா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால், அதில் குர்திஸ் கவிதையொன்றை மேற்கோளாகக் காட்டியிருந்தது மட்டும் என் நினைவில் இருக்கிறது, ஷெர்கோ பெகாஸ் என்ற கவிஞரின் வரிகள்:

*வான்வெளியில் கொல்லப்பட்டன*
*அந்தப் பறவைகள்*
*கொலைகாரருக்கு எதிராக*
*நட்சத்திரங்களும் மேகங்களும்*
*காற்றும் கதிரவனும்*
*சாட்சி கூறாவிட்டாலும்*
*அடிவானம் அதற்குச்*
*செவிமடுக்க விரும்பாவிடினும்*
*மலைகளும் அருவிகளும்*
*அவற்றை மறந்துவிட்டாலும்*
*ஏதேனுமொரு மரம் அக் கொடுஞ்செயலைப்*
*பார்த்துத்தானிருக்கும்*
*தன் வேர்களில்*
*அக்கொடியோரின் பெயர்களை*
*எழுதி வைக்கத்தான் செய்யும்.*

பாக் நீரிணையில் எந்த அலை, எந்தப் பாறையில் அந்தக் கொடியோரின் பெயர்களைச் செதுக்கியிருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரன்

# தோழர் விசுவானந்ததேவன் ஓர் அரசியல் உறவு பற்றிய மீள்சிந்திப்பு

1983 யூலை வன்செயல்கள் இலங்கைத்தீவை உலுக்கிய போது நான் ஜப்பானில் வாழ்ந்து வந்தேன். அந்த நாட்களில் ஒரு ஜப்பானிய கிராமத்தில் கள ஆய்வில் ஈடுபட்டிருந்தேன். தாய் நாட்டிலிருந்து வந்த செய்திகளினால் மிகவும் தாக்கப்பட்டிருந்தேன். என் கள ஆய்வினைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டு இலங்கையின் அரசியல் நிலை மற்றும் தேசிய இனப்பிரச்சனை பற்றி சிந்திக்க முற்பட்டேன். ஒரு நீண்ட கட்டுரை அதன் விளைவாகியது. அது சிங்களப் பெருந்தேசியவாதம் பற்றியது. கட்டுரையை எழுதிய பின்னர் சென்னைக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிட்டியது. அங்கே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தோழர் ஒருவரை சந்தித்தபோது அன்று அவரது கட்சியின் சார்பில் இலங்கைத் தமிழர்களுக்கெதிரான வன்முறைகளைக் கண்டிக்கும் பேரணி ஒன்று இடம் பெறுவதாகக் கூறி என்னையும் அதில் பங்குபற்றும் படி அழைத்தார். அதனை ஏற்றுக் கொண்டு நான் அவருடன் அந்த பேரணியில் பங்குபற்றினேன். கட்சியின் செங்கொடிகளுடனும் பதாகைகளுடனும் பேரணி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பெருந்திரளானோர் பங்கு பற்றினர்.

பேரணி முடிந்த பின்னர் பலர் சமீபத்தில் உள்ள பூந்தோட்டத்தில் ஓய்வெடுக்கச் சென்றனர். நானும் எனது இந்தியத் தோழருடன் அங்கு சென்றேன். அங்கே தான் நீண்ட காலத்திற்கு பின் விசுவாவுடன் எனது எதிர்பாராத சந்திப்பு நிகழ்ந்தது. நீண்டு வளர்ந்து விட்ட தலைமுடியும் தாடியுமாக அவர் காட்சி தந்தார். அந்தச் சந்திப்பு நம்மிருவருக்குமிடையிலான உறவை புதுப்பிக்கும் நிகழ்வாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சென்னையில் தங்கியிருந்த நாட்களில் நம்மிடையே நீண்ட உரையாடல்கள் இடம் பெற்றன. நான் எழுதிய கட்டுரையை வாசித்து அதுபற்றி அவரது அபிப்பிராயத்தைக் கூறும்படி கேட்டேன். அவர் சம்மதித்தார். மறுநாள் அவரை சந்தித்தபோது, கட்டுரையை தான் வாசித்ததாகவும் அது கூடியவிரைவில் பிரசுரிக்கப்படவேண்டும் எனவும் கூறினார். பிரசுரிப்பதற்கு வேண்டிய உதவிகளையும் செய்வதாகக் கூறினார். கட்டுரையை காவ்யா பதிப்பகத்தினர் நூல் வடிவில் வெளியிட்டனர். எனது நூல் பற்றி கிரிதர் எனும் புனைபெயரில் விசுவா "புதுசு" எனும் சஞ்சிகையில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார்.

ஆனால் விசுவாவுடன் ஏற்பட்ட தொடர்பு முக்கியமாக அவர் தலைமையில் உருவாகிக் கொண்டிருந்த N.L.F.T இயக்கம் பற்றியது என்பதைக் குறிப்பிட வேண்டும். இதுபற்றி நிறையக் கலந்துரையாடினோம். அவர் இலங்கையின் அரசியல் போக்குகள், தேசிய இனப்பிரச்சனையின் தன்மைகள் மற்றும் பிராந்திய அரசியல் நிலைமை, இந்தியாவில் அப்போது இடம்பெற்ற போராட்டங்கள் போன்ற விடயங்களை ஆழ ஆராய்ந்துள்ளார் என்பதை அறிந்தேன். நமது சம்பாசணைகளில் இந்த விடயங்கள் முக்கிய இடத்தைப் பெற்றன. ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் இலங்கைப் புரட்சிக்குமிடையிலான உறவு சிங்கள முற்போக்கு சக்திகளுடன் தொடர்புகளை வளர்ப்பது பற்றி, மற்றும் இந்திய அரசின் நேரடியான மறைமுகமான உதவிகளுடன் தமிழ்நாட்டில் முகாமிட்டிருக்கும் தமிழீழ விடுதலை இயக்கங்களின் அரசியல் பற்றி நிறையப் பேசினோம். அன்றைய சூழலில் "ஒரு மார்க்சிச - லெனினிச" அமைப்பினை இந்திய அரசும், ஆட்சியாளர்களும், தமிழ்நாட்டு ஆளும் மற்றும் பிரதான திராவிடக் கட்சிகளும் எப்படிப் பார்ப்பார்கள்? அத்தகைய ஒரு வெளிநாட்டு அமைப்பு இந்தியாவில் இயங்க முடியுமா? இந்தக் கேள்விகள் எழுந்தன. இவைபற்றி கொள்கை ரீதியில் விசுவா தெளிவாகவே இருந்தார். ஆனால் நடைமுறை ரீதியான பிரச்சனைகளைக் கையாளுவது பற்றி அவருக்கும் சந்தேகங்கள் குழப்பங்கள் இருந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவிடயங்கள் பற்றி வேறுபல இடதுசாரிக் குழுக்களுடனும் தனிநபர்களுடனும் அவர் கலந்துரையாடியிருப்பார் என்று நம்புகிறேன். அந்தச் சந்திப்பினைத் தொடர்ந்து நம்மிருவருக்குமிடையே கடிதப் போக்குவரத்து இருந்தது.

மேற்குறிப்பிட்ட கேள்விகளும் அவற்றுடன் தொடர்புடைய வேறு பல கேள்விகளும் அந்தக் காலகட்டத்தில் முக்கியத்துவம் மிக்கவையாக விளங்கின. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் ஒரு வரலாற்று ரீதியான சந்தியில் நின்றது. அது எந்தத் திசையில் நகரும்? இந்திய வல்லரசின் கொள்கைகளும் உபாயங்களும் இயக்கங்களையும் போராட்டத்தின் அரசியல் போக்கையும் எப்படிப் பாதிக்கும்? இப்படிப் பல கேள்விகள்.

ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தை அதுவரை மேலாட்சி நிலைபெற்றுள்ள குறுகிய தேசியவாதத்திலிருந்து விடுவித்து மக்கள் ஜனநாயகப்புரட்சியின் பாதையில் முழு இலங்கையின் சமூக மாற்றத்திற்கு உதவக் கூடிய வகையில் முன்னெடுக்கக் கூடிய அரசியல் கொள்கையுடைய இயக்கம் ஒன்று தேவைப்பட்டது. இந்தத் தேவையை விசுவா நன்கு கிரகித்திருந்தார் என நான் நம்பினேன், நம்புகிறேன்.

ஆயினும் பின்நோக்கிப் பார்க்கும் போது ஆரம்பக் கட்டத்திலிருக்கும் N.L.F.T போன்ற ஓர் இயக்கம், ஏற்கனவே மேலும் பலம் பெற்று வருகின்ற குறுந்தேசியவாத அலைக்கும் அதைத் தன்னாட்சிக்கு கீழ்ப்படுத்தி கருத்தியல் கருவியாக்கிக் கொண்ட சுத்த இராணுவ வாதத்திற்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலையில் இருந்தது. ஆனால் இந்த எதிர்நீச்சலில் N.L.F.T தன் உள்ளார்ந்த முரண்பாடுகளால் துன்பகரமாக உடைந்து போயிற்று. இயக்கத்தின் இலட்சியத்தைப் பாதுகாத்து முன்னெடுக்கும் நோக்கில் விசுவா P.L.F.T ஐ உருவாக்கினார். N.L.F.T விரைவில் செயலிழந்து தன்னைத்தானே அழித்துக் கொண்டது. P.L.F.T அளவு ரீதியல் ஒரு சிறிய அமைப்பாகவே இருந்தது. ஆனால் விசுவாவையும் அவருடன் பயணித்த தோழர்களையும் அழிக்க வேண்டுமென முடிவெடுத்து திட்டமிட்டு செயற்பட்ட சக்திகள், அவர் கொண்டிருந்த அரசியல் பார்வையையும் அதன் அடிப்படையில் அவர் கட்டியெழுப்ப எடுத்த செயற்பாடுகளையும் கண்டு பயந்தனர் என்பது தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாவின் அறிவாற்றலும் திட சித்தமும் அவர்களைக் கலங்க வைத்தன.

விசுவாவின் நிலைப்பாட்டினால் நானும் ஆகர்சிக்கப்பட்டேன். அவர் கேட்டுக்கொண்டபடி N.L.F.T இன் (பிளவிற்குமுன்) வேலைத்திட்டம் பற்றி ஒரு ஆக்கபூர்வமான விமர்சனத்தை முன்வைத்தேன். இதுபற்றி "புரட்சிகர அரசியல் முதன்மை பெற" எனும் ஒரு தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தேன். அதைத் தொடர்ந்து புதிய ஜனநாயகப் புரட்சி பற்றியும் எழுதினேன். இந்தக் கட்டுரைகள் ஏற்கனவே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆட்கொண்டிருந்த குறுந்தேசியவாதம் மற்றும் இராணுவ வாதம் ஆகியவற்றை எதிர்க்கும் அறிவுரீதியான பங்களிப்புகளாக வரையப்பட்டன. இவற்றில் நான் கூறிய கருத்துக்களையும் வாதங்களையும் விசுவா ஏற்றுக் கொண்டார்.

அப்போதைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றிய எனது பார்வையும், அது பின்னர் மாற்றம் அடைந்தது பற்றியும் ஒரு சிறு குறிப்பு அவசியமாகிறது. நீண்டகாலமாகவே நான் வடக்கு கிழக்கின் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற கருத்தினை நிராகரித்து வந்தேன். முழு இலங்கையும் சார்ந்த அடிப்படையான சமூக, அரசியல் மாற்றத்திலேயே அந்நாட்டில் வாழும் சகல இனங்களின் விமோசனமும் தங்கியுள்ளது என்ற நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தேன். 1977க்குப் பின்னர் தேசிய இனப்பிரச்சனை பற்றிய வாதங்கள் இடதுசாரிகள் மத்தியில் வலுப் பெற்றன. அதற்கு முக்கிய காரணமாக இருந்த வடக்கில் எழுந்து வரும் இளைஞர் குழுக்களின் போக்குகளை அவதானிக்கத் தொடங்கினேன். சில இளைஞர் குழுக்கள் இடதுசாரிக் கருத்துக்கள் பற்றியும் மற்றைய நாடுகளில் இடம் பெற்ற அல்லது இடம்பெற்று வரும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் பற்றியும் ஆர்வம் காட்டின. மார்க்சியத் தத்துவம் பற்றியும் தேசிய இனப்பிரச்சனை பற்றி மார்க்ஸின், லெனினின் கருத்துக்களையும் அறிய விரும்பின. இந்தக் குழுக்கள் பழைய தேசியவாதத் தலைமையை விமர்சித்தன, நிராகரித்தன. இந்தப் போக்குகள் பற்றி அப்போது ஆங்கிலத்தில் சில கட்டுரைகளை எழுதியிருந்தேன். வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை பற்றிய எனது நிலைப்பாட்டினை மீள் பரிசீலனைக்குள்ளாக்கினேன். அவர்கள் ஒடுக்கு முறைக்குள்ளாக்கப்பட்டுள்ள ஓர் இனம் என்பதை முன்பிருந்தே ஏற்றிருந்தேன். ஆனால் தமிழ் தேசியவாதிகளின் தேசிய இனக் கோட்பாட்டை நான் ஏற்கவில்லை. அவர்களின் "ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள நினைப்பதில் என்ன குறை" என்ற கோசம் மிகவும் பிற்போக்குத் தனமானது என்பதே அன்றும் இன்றும் எனது நிலைப்பாடு.

ஆனால் வடக்குக் கிழக்கில் தமிழரின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு லெனினிசப் பார்வையில் நியாயம் உண்டு என்ற நிலைப்பாட்டிற்கு படிப்படியாக வந்தேன். ஐரிஷ் பிரச்சனை பற்றி மார்க்ஸ் எழுதிய கட்டுரைகளும் எனது சிந்தனைக்கு உதவின. *1983* ல் வெளிவந்த Benedict Andersen எழுதிய Imagined Communities என்ற நூலும் என்னைக் கவர்ந்தது.

அன்றைய காலகட்டத்தில் தேசிய இனப்பிரச்சனை பற்றி நான் விசுவாவின் கருத்துகளுடன் பெருமளவில் ஒத்துப் போனதைப் புரிந்து கொள்ள இந்தப் பின்னனி உதவியாயிருக்கும் என நம்புகிறேன். ஆனால் இந்தக் கருத்து ரீதியான நிலைப்பாட்டிற்கும் மேலாதிக்க நிலை பெற்றுவரும் போராட்ட போக்கிற்குமிடையே ஒரு வெளி தொடர்ந்து வளர்ந்து கொண்டிருந்தது எனும் யதார்த்தத்தை மறந்துவிடலாகாது.

ஆரம்ப கட்டத்திலேயே பிளவுபட்ட ஒரு சிறிய அமைப்பின் ஒரு பகுதியை, அதாவது P.L.F.T ஐ வளர்த்தெடுக்க விசுவா தீவிரமாகச் செயற்பட்டார். மற்ற அமைப்புகளுக்கு பெருமளவில் பொருளாதார ரீதியான மற்றும் இராணுவ ரீதியான உதவிகள் கிடைத்தன. அளவு ரீதியிலும் இராணுவ பலத்திலும் அவை பெரிய நிறுவனங்களாகி விட்டன. அவை இந்திய அரசுடனும் தமிழ் நாட்டின் பிரதான கட்சிகளுடனும் தமது உறவுகளை வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தன. விசுவாவின் அணுகுமுறையோ முற்றிலும் வேறானது. அவர் இந்தியாவிலுள்ள புரட்சிகர அமைப்புகள் மற்றும் விடுதலை இயக்கங்கள் மீது அக்கறையும் ஆர்வமும் கொண்டிருந்தார். அவற்றுடன் உறவுகளைத் தேடுவது அவருடைய அரசியல் கொள்கைக்கு உகந்ததாக இருந்தது. இந்த வேறுபாடு மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையானது. இதே போன்று தென்னிலங்கையின் அரசியல் போக்குகள் பற்றியும் அவர் ஆழமாக அறிந்திருந்தது மட்டுமன்றி, அங்குள்ள முற்போக்கு சக்திகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது பற்றியும் ஆவலாயிருந்தார். மேலாட்சிச் செல்வாக்குப் பெற்றிருந்த தமிழ் தேசியவாதத்திற்கும் விசுவாவின் அரசியல் நிலைப்பாட்டிற்குமிடையே இணைத்து வைக்க முடியாத முரண்பாடு இருந்தது. இதுவே தேசியவிடுதலை பற்றிய அவருடைய நிலைப்பாட்டினை நெறிப்படுத்தியது என்பதே எனது கணிப்பு.

ஆகவே இலங்கை அரசு, இந்திய அரசு மட்டுமல்லாது, விடுதலைப்புலிகள் மற்றும் மற்றைய அமைப்புகளாலும் அவர் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டார் என்பதைப் புரிந்து கொள்வதில் பிரச்சனை எழ இடமில்லை. அவருக்கும் அவர் தலைமை தாங்கிய ஆரம்பகட்டத்திலிருந்த அமைப்புக்கும் பாரதூரமான தீங்கினை விளைவிப்பதில் பல்வேறு சக்திகள் ஈடுபட்டிருந்தன என நம்பலாம். 1986 இல் விசுவா கொலை செய்யப்பட்டதுடன், அவர் முன்னெடுத்த முயற்சிகள் எல்லாம் ஸ்தம்பிதமாயின. பின்நோக்கிப் பார்க்கும் போது விசுவாவின் அவருடைய P.L.F.T இன் சகல முயற்சிகளும் ஆரம்பக் கட்டங்களுக்கப்பால் தொடரமுடியாத ஒரு முடிவைப் பெற்றன எனலாம். விசுவாவின் அரசியல் வாழ்க்கை நீளமானது. அவர் மாணவப்பிராயத்திலிருந்தே இயக்க அரசியலில் ஈடுபட்டவர். ஆனால் அவரது கொலை ஒரு தேசிய விடுதலை இயக்கத்தை கட்டியெழுப்ப அவர் எடுத்த முயற்சிக்கு ஒரு சில வருடங்களுக்கு அப்பால் தொடரமுடியாது முற்றுப்புள்ளி வைத்தது. அவர் பயங்கர பிற்போக்கு அலைகளுக்கெதிராக நீச்சல் செய்யத் துணிந்தார். அவரின் முடிவு ஈழத்தமிழரின் போராட்டம் மீளமுடியாதபடி திசைமாறி விட்டது எனும் பயங்கரமான உண்மையின் குறியீடு போல் அமைந்தது.

இந்தக் குறுகிய வரலாற்றினைப் பலர் மறந்திருக்கலாம். இன்னும் பலருக்கு இது தெரியாமல் இருக்கலாம். ஆனால் தொடர்ந்த ஆயுதப் போராட்டத்தின் வரலாறு ஒரு திசைமாறிய போராட்டத்தின் வரலாறாகியதன் விளைவுகளை இலங்கை தமிழ் மக்கள் இன்னமும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த விளைவுகளின் தாக்கங்கள் பற்றி ஆழப்பார்த்தல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் அதை இந்தக் கட்டுரையில் செய்ய முடியாது. அதன் சில முக்கிய அம்சங்கள் பற்றி குறிப்பாக நிலப்பிரச்சனை, அரசியல் குடியேற்றத்திட்டங்கள், சர்வதேச மற்றும் உள்நாட்டு புலம்பெயர்வு, காசாதாரப் பொருளாதாரத்தின் விளைவுகள், இவையெல்லாம் "தாயகம்" என வடக்குக் கிழக்கு தமிழர்கள் கோரிய ஆள்பரப்பில் ஏற்படுத்தியுள்ள புவியியல் ரீதியலான மாற்றங்கள் போன்றவை பற்றி நான் வேறு விரிவான கட்டுரைகள் எழுதியுள்ளேன். இங்கே சில விடயங்களை மட்டும் சுருக்கிக் கூற விரும்புகிறேன்.

இலங்கையில் கடந்த பல தசாப்தங்களாக ஆட்சி செலுத்திய அரசாங்கங்களின் கொள்கைகளினால் மற்றும் நீண்ட காலப் போரினதும் விடுதலைப்புலிகளின் இராணுவ மயமாக்கப்பட்ட கொள்கைகளின், நடைமுறைகளின் விளைவுகளாலும் தேசிய இனப்பிரச்சனை தன்மை ரீதியான மாற்றங்களைக் கண்டுள்ளது. "தேசம்" "அடையாளம்" எனும் போர்வைகள் வடக்குக் கிழக்கு தமிழர்களை குறுந்தேசியவாத சிந்தனைக்குள் சிறை வைத்தன. இதனால் இலங்கையிலுள்ள மற்றும் இனங்களான முஸ்லீம்களை மற்றும் மலையகத் தமிழர்களை இந்த "விடுதலைப் போராட்டத்தினால்" ஆகர்சிக்க முடியவில்லை. சிங்கள மக்கள் மத்தியிலுள்ள இடதுசாரி மற்றும் முற்போக்கான சக்திகளுடன் ஆக்கபூர்வமான உறவுகளை வளர்க்க முடியவில்லை. ஆரம்பக் கட்டங்களில் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தின் நியாயப்பாட்டினை ஏற்றுக் கொண்ட இடதுசாரி சிங்களவர்களைக் கூட வென்றெடுக்க முடியாத அந்த ஆயுதப் போராட்டம் மறுபுறம் "தேசிய அடையாளம்" எனும் கருத்தியல் போர்வையினால் தமிழர் சமூகத்திற்குள்ளே இருக்கும் வர்க்க, சாதி, பால் ரீதியான வேறுபாடுகளை மறைப்பதில் அதிகார நிலை பெற்றுவிட்ட சக்திகள் கண்ணாயிருந்தன. சர்வதேசரீதியிலும் போராட்டம் தன்னைத் தானே தனிமைப் படுத்திக் கொண்டது.

ஆகவே மாற்றமடைந்து விட்ட உள்நாட்டு நிலைமைகளையும் சர்வதேச நிலைமைகளையும் நன்கு கிரகித்து, இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையையும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தையும் மீள் சட்டகப்படுத்தும் (reframe) தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது என வாதிட்டு வந்துள்ளேன். இன்றைய நிலைமைகளில் விசுவா 1986ல் கொண்டிருந்த கருத்துக்களும் மீள் பரிசீலனை செய்யப்படவேண்டும் என்பது கண்கூடு. அவர் கொலை செய்யப்படாதிருந்தால் தொடர்ந்து உயிர் வாழ்ந்திருந்தால் தனது பணியைத் தொடர்ந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த எதிர்நீச்சலில் அவரும் அவரது இயக்கமும் எவ்வளவு தூரம் முன்னேறியிருப்பார்கள் என்ற கேள்வி நியாயமானதே. எனது அபிப்பிராயத்தில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே இருந்தன. ஆனால் தனது நீண்டகாலப் பார்வையில் அவர் நம்பிக்கை வைத்திருந்த மக்கள் ஜனநாயகமும் சோசலிசமும் இன்னும் முக்கியமானவை என்பது உண்மை. அவையும் மீள்சட்டகமாக்கப்பட (reframe ) வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. "மார்க்சிசம் - லெனினிசம்" எனும் பெயரில் சர்வதேச ரீதியில் உருவாக்கப்பட்ட கருத்தியலின் உள்ளடக்கங்கள் பற்றி ஆழ விமர்சிக்கும் தேவையை வலியுறுத்த வேண்டும். மார்க்சிசத்தின் மற்றும் சோசலிச சிந்தனைகளின் சமகால செல்நெறிகள் மற்றும் அவை பற்றிய விவாதங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய உண்டு. இத்தகைய விடயங்களில் விசுவா ஆர்வம் காட்டியிருப்பார் எனவும் நம்புகிறேன். எனது இந்தக் கருத்துக்களையும் இலங்கைத் தேசிய இனப்பிரச்சனையின் இன்றைய நிலை பற்றிய எனது பார்வையையும் விசுவா ஏற்றுக் கொண்டிருப்பாரா என்ற கேள்விக்கு பதில் சொல்வது கடினமாயிருக்கலாம். ஆனால் இவை பற்றி விவாதிக்க முன்வந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

*07-05-2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரா.பாண்டியன்

# மேதமையும் ஆயுளும்

1970களின் நடுப்பகுதியில், பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா. சிவத்தம்பி போன்றவர்கள் உட்பட இலங்கையில் இருந்த முற்போக்கு இலக்கியவாதிகளுடன் எனக்கு நல்ல தொடர்பு இருந்தது. இலங்கையைச் சேர்ந்த முற்போக்கு ஆய்வாளர்கள் பலரின் நூல்களை சென்னை புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் மூலம் தமிழகத்தில் நான் வெளியிட்டேன். அதன் அடிப்படையில் ஓரிரு முறை இலங்கை செல்லும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. அங்கிருந்த முற்போக்கு இயக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் முடிந்தது. இத்தகையதொரு பின்னணியில்தான் எனக்கு தோழர். விஸ்வாவுடன் தொடர்பு ஏற்பட்டது. தோழர். விஸ்வா மிகவும் நேர்மையான, தத்துவத் தெளிவு பெற்றவராக இருந்தார்.

உலக வரலாற்றில் இரண்டாம் உலகப் போரும் அதன் முடிவும் உலகம் முழுவதிலும் பல தலைகீழ் மாற்றங்களை உருவாக்கின. மார்க்சிய கருத்துகளின் செல்வாக்கு அதிகரிக்கத் துவங்கிய அதே நேரத்தில், உலகின் பல நாடுகள் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றன. இதன் மீட்சியாக பல நாடுகளிலும் தேசிய இன சுயநிர்ணயப் பிரச்சனைகளும் மனித குலத்தின் உரிமையை நிலைநாட்டும் வகையில் தலைதூக்கின.

தோழர் விஸ்வா எனக்கு அறிமுகமான காலப்பகுதியில்தான் இலங்கை தமிழினப் பிரச்சனை அங்கு போராட்டமாக உருவெடுத்திருந்தது. தோழர் விஸ்வா அவர்கள் NLFT என்ற குழுவின் மூலம் மார்க்சிய கொள்கைகளின் அடிப்படையில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண உழைத்துக் கொண்டிருந்தார். அக்காலப்பகுதியில் அடிக்கடி சென்னை வந்து கொண்டிருந்த அவரிடம் இந்த விடயங்கள் பற்றி அளவளாவும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்திருக்கிறது. அவரது சிந்தனைத் தெளிவும் போராட்ட குணமும் என்னை வெகுவாகக் கவர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் ஒரு முறையாவது சந்திக்கும் தோழர். விஸ்வானந்த தேவனின் தொடர்பு திடீரென அறுபட்டது. அப்போது எனக்கு ஏன் இப்படி என்பது புரியாத புதிராகவே இருந்தது.

திடீரென அவர் மறைந்த செய்தியை அவருடன் உழைத்த தோழர்கள் மூலம் கேள்வியுற்ற போது மேதமையும் ஆயுளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்பது எனக்குப் புரிய வந்தது.

அவருடன் பழகிய அந்த நாட்கள் என்றும் பசுமையாக, நீங்காத நினைவுகளாக என் நெஞ்சில் நிரம்பியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம். ஏ. நு∴மான்**

# தோழர் விசுவானந்த தேவன்: ஒரு கனவின் சிதைவு

தோழர் விசுவானந்ததேவனை (1952 – 1986) ஓரிரு தடவைகள்தான் நேரில் சந்தித்திருக்கிறேன், இடதுசாரிகள் என்றவகையில் நாங்கள் ஒருவரை ஒருவர் அறிவோம், எனினும் நெருக்கமான பழக்கம் இல்லை. 1971ல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நான் சேர்ந்து பயின்ற அதே ஆண்டில்தான் விசுவானந்ததேவன் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தில் சேர்ந்தார். இடதுசாரி இயக்கம் முனைப்புப் பெற்றிருந்த காலம் அது. குறிப்பாக மாஓவின் சிந்தனைகளால் எம்போன்ற இளைஞர்கள் கவரப்பட்டிருந்த காலகட்டம் அது.

இக்காலப் பகுதியில் விசுவானந்ததேவன், சண்முகதாசன் தலைமை தாங்கிய சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து நெருக்கமாகச் செயற்பட்டார் என்று நினைக்கின்றேன். இக்கட்சியிலிருந்து விலகிய ரோகண விஜேவீர தலைமைதாங்கிய மக்கள் விடுதலை முன்னணியில் பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்கள் இணைந்து அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் குதித்ததும் அக்காலப்பகுதியில்தான். தோல்வியுற்ற இப்புரட்சி இடதுசாரி இயக்கங்களுக்குள் பலநெருக்கடிகளை ஏற்படுத்தியது. புரட்சிபற்றிப் பேசிய பல இடதுசாரித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். பிரதான இடதுசாரிக் கட்சிகள் வலதுசாரிச் சந்தர்ப்பவாத அரசியலுக்குத் திரும்பின. இடதுசாரிக் கட்சிகளுக்குள்ளும் இனவாதம் நுழைந்தது. புரட்சிகர இயக்கங்கள் படிப்படியாக மங்குதிசையடைந்தன.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக இடதுசாரிக் கட்சிகளுக்குள் கருத்துவேறுபாடுகள் வளர்ந்தன. இவ்வகையில் சண்முகதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைதாங்கிய சீன சார்புக் கம்யுனிஸ்ட் கட்சி பிளவுற்று, இலங்கை மார்க்சிய லெனினியக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்று 1972ல் தோன்றியது. முக்கிய தமிழ் இடதுசாரிகளான வி. ஏ. கந்தசாமி, மு. கார்த்திகேயன் ஆகியோர் இதில் அங்கம் வகித்தனர். தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்ட இக்கட்சியில் விசுவானந்ததேவன் இணைந்து மத்தியகுழு உறுப்பினராகச் செயற்பட்டார். இக்கட்சியின் அனுசரணையுடன் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி என்ற ஒரு புதிய இயக்கமும் 1975ல் உருவாக்கப்பட்டது.

விசுவானந்த தேவன் யாழ்ப்பாணம் வடமராட்சிப் பிரதேசத்தில் கரவெட்டியை அண்மித்த கல்லுவம் கிராமத்தில் பிறந்தவர். வடமாகாணத்தில் மார்க்சிய இயக்க வளர்ச்சியில் வடமராட்சிக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. 1956 தேர்தலில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் போட்டியிட்டு பொன் கந்தையா இங்குதான் வெற்றிபெற்றார். 1960களில் வடக்கில் தாழ்த்தப்பட்ட மக்களை அணிதிரட்டி, சாதி ஒழிப்பு, ஆலயப் பிரவேசப் போராட்டங்களை கம்யூனிஸ்ட் கட்சியே தலைமைதாங்கி நடத்தியது. இத்தகைய சூழலில் வளர்ந்த விசுவானந்ததேவன் இளமையிலேயே இடதுசாரி இயக்கத்தால் ஈர்க்கப்பட்டார். 1970களின் முற்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகச் சூழல் சித்தாந்த ரீதியில் அவரை மேலும் வளப்படுத்தியது. ஒரு பொறியியலாளராகத் தன் சொந்த வாழ்க்கையை வளப்படுத்தும் வாய்ப்பிருந்தும், புரட்சிகர விடுதலைக் கருத்தியலுக்கு அவர் தன்னை முற்றாக அர்ப்பணித்தார்.

1980கள் புரட்சிகர மார்க்சிய இடதுசாரிகளுக்கு ஒரு சோதனைக் காலம் எனல் வேண்டும். இலங்கையில் இனப்பிரச்சினை உக்கிரமடைந்த காலகட்டம் இது. ஆயுதம் தாங்கிய தமிழீழ விடுதலை இயக்கங்கள் பல எழுச்சியடைந்தன. அரசின் குரூரமான அடக்குமுறையினால் தமிழ்த் தேசிய உணர்வு தமிழர் மத்தியில் பொங்கிப் பிரவாகிக்கத் தொடங்கிய காலம் இது. இன ஐக்கியம், பாட்டாளிவர்க்கப் புரட்சி பற்றிய கனவில் இருந்த புரட்சிகர இடதுசாரிகள் இரண்டக நிலைக்கு ஆளாகினர். 1970களின் தொடக்கத்தில் அதிதீவிரப் புரட்சிகரப் புத்திசீவிகளாக, எழுத்தாளர்களாக, கவிஞர்களாக விளங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் 1980களில் தமிழ்த் தேசியவாத விடுதலை இயக்கங்களுடன் தங்களை இணைத்துக்கொண்டனர், அல்லது அவற்றின் அனுதாபிகளாயினர். வேறு சிலர் பாராளுமன்றப் பாதையைத் தேர்ந்துகொண்டு இனத்துவக் கட்சிகளுடன் இணைந்துகொண்டனர். வேறு சிலர் திரிசங்கு நிலையடைந்தனர்.

தீவிர மார்க்சிய, லெனினிய, மாஓ சித்தாந்தியாக இருந்த விசுவானந்ததேவன் இவர்களிலிருந்து வேறுபட்டு, தமிழ்த் தேசியத்தையும் புரட்சிகர மார்க்சியத்தையும் ஒன்றிணைக்க முயன்றார் என்று நினைக்கிறேன். இக்கண்ணோட்டத்திலேயே 1983ல் தமிழ் ஈழத் தேசிய விடுதலை முன்னணியை (NLFT) அவர் உருவாக்கினார். மிகச் சிலர் இவருடன் இணைந்து செயற்பட்டனர். மார்க்சிய நோக்கில் தமிழ் ஈழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது இவ்வியக்கத்தின் நோக்கம் எனலாம். பெரும்பாலான தமிழீழ விடுதலை இயக்கங்கள் ஆரம்ப காலத்தில் மார்க்சிய செல்வாக்குக்கு உட்பட்டிருந்தன எனினும், அவற்றின் நடைமுறைகள் மக்களைப் புறந்தள்ளிய இராணுவாதத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. மாஓ சிந்தனையைப் பூரணமாக நம்பிய விசுவானந்த தேவன் அவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டார். பிறிதொரு மார்க்சியரான மணியனின் கருத்துப்படி NLFT "தமிழீழத் தேசியத்தை ஒரு தந்திரோபாய அணுகுமுறையாகப் பயன்படுத்தி, வடக்குக் கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் பிரதேசங்களை நிறுவி, அதைப் பின்தளமாகக் கொண்டு. தென்னிலங்கை மக்களின் போராட்டத்துக்கு உதவி, முழு இலங்கையிலும் புதிய ஜனநாயக மக்கள் அரசாங்கம் ஒன்றை நிறுவுவதைக் குறிக்கோளாகக் கொண்டது" (thenee.com). இதுதான் அவருடைய கொள்கை எனின், யாழ்ப்பாணப் போராட்டச் சூழலில் இதை ஒரு கற்பனாவாதம் என்றே கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியமும் மார்க்சியமும் சகவாழ்வு நடத்த முடியாது என்பதை முப்பது ஆண்டுகாலத் தமிழீழ விடுதலைப் போராட்டம் நிரூபித்துள்ளது.

NLFT யின் அரசியல் தத்துவ இதழாக *இலக்கு* வெளிவந்தது. இதன் முதல் இதழ் 1984 பங்குனி – சித்திரையில் வெளியிடப்பட்டது. *இலக்கு* ஏழு இதழ்கள் வெளிவந்ததாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிகிறது. *இலக்கு* முதலாவது இதழில் அதன் நோக்கம் பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> "1984ம் ஆண்டின் பிறப்புடன் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் பலவிதத்திலும் சமரச, திரிபுவாத அல்லது அதிதீவிரப் போக்குகளுடன் அலைக்களிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஓர் இக்கட்டான நிலையைத் துடைத்தெறிந்து, விடுதலைப் போராட்டத்தில் எந்தவித திசைவழுக்களும் இன்றி தமிழ் மக்களின் இறுதி இலக்கை அடையும் ஒரே நோக்குடன் இலக்கு அயராது உழைக்கும் என்று உறுதி கூறுகின்றது."

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆயுதமேந்திய மக்கள் போராட்டமாக முன்னெடுப்பது, மக்கள் போராட்டமொன்றுக்கு மக்களைத் தயார்படுத்துவது என்பனவும் இலக்கின் நோக்கங்களாகக் கூறப்பட்டது. தேசிய விடுதலைப் போராட்டம், புதிய ஜனநாயகப் புரட்சி, மக்கள் யுத்தம், பாட்டாளிவர்க்கத் தலைமை, ஐக்கிய முன்னணியைக் கட்டுதல், ஐக்கியமும் போராட்டமும் போன்ற சீனப் புரட்சியின் போது பேசப்பட்ட கருத்துகளை இலக்கு சஞ்சிகை அடிக்கடி பேசியது. ஏனைய இயக்கங்களின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் அது விமர்சனத்துக்கு உள்ளாக்கியது. உதாரணமாக 'அராஜகவாதமா ஆயுதப் புரட்சியா' என்ற கட்டுரை புலிகளின் கொள்கைபற்றிய ஒரு தீவிர விமர்சனமாக அமைந்தது.

ஏனைய இயக்கங்கள் போலவே தங்களுடைய கொள்கையே சரியானது என்ற உறுதியான நம்பிக்கை NLFT யிடமும் காணப்பட்டது. எனினும் அது தன்னை ஒரு வலிமையான இயக்கமாகக் கட்டிவளர்க்க முடியவில்லை. தமிழீழத் தேசிய விடுதலை முன்னணிக்குள் புலிகளின் ஊடுருவல் இருந்தது என மணியன் குறிப்பிடுகிறார். இதனால் இயக்கத்துக்குள் கருத்து மோதல்கள் எழுந்தன. இதைச் சமாளிக்க முடியாத நிலையில் அதிலிருந்து விலகி தமிழீழ மக்கள் விடுதலை முன்னணியை (PLFT) 1986ல் விசு உருவாக்கினார். இதன் அரசியல் தத்துவார்த்த ஏடாக *பயணம்* வெளிவந்தது. இதில் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ்களே வெளிவந்தன. முதல் இதழ் 1986 வைகாசியிலும் இரண்டாவது இதழ் 1986 புரட்டாசியிலும் வெளிவந்தன. *இலக்கு* போல் *பயணமும்* மாஓ சிந்தனையையே அடித்தளமாகக் கொண்டிருந்தது. NLFT யிலிருந்து பிரிந்து PLFT தொடங்கப்பட்டதற்கான அரசியல் காரணங்களை *பயணம்* முதல் இதழ் கூறுகின்றது. அவை வலுவான காரணங்களாகத் தோன்றவில்லை. இரண்டு இயக்கங்களுமே ஆட்பலம், ஆயுத பலம், மக்கள் ஆதரவு என்பவற்றைப் பொறுத்தவரை சிறுபான்மை இயக்கங்களாகவே இருந்து அற்ப ஆயுளில் சிதைவடைந்தன.

புரட்சிகர மார்க்சியக் கோட்பாட்டில் பற்றுறுதி மிக்கவரான தோழர் விசு, தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தைத் தான் நினைக்கும் 'சரியான பாதையில்' நெறிப்படுத்தித் தமிழ் மக்களின் விடுதலையையும் முழுத் தேசத்தின் விடுதலையையும் அடையலாம் எனக் கனவுகண்டார். ஆனால் அவருடன் இணைந்து செயற்படவோ அல்லது அவரையும் உள்வாங்கிப் போராட்டத்தைப் புதிய பாதையில் கொண்டுசெல்லவோ வேறு எந்த இயக்கமும் தயாராக இருக்கவில்லை. அதற்குரிய கோட்பாட்டுத் தெளிவும், ஒன்றுபட்டுச் செயலாற்றும் தொலை நோக்கும் யாருக்கும் இருக்கவில்லை. எல்லா இயக்கங்களும் மக்களைப் பற்றிப் பேசினாலும், மக்களுக்குப் போராட்டத்தில் எவ்வித பங்கும் இருக்கவில்லை. மக்கள் ஆயுத முனையிலேயே வழிநடத்தப் பட்டார்கள். விசுவானந்ததேவனின் கனவு முளையிலேயே சிதைக்கப்பட்டது. 1986 ஒக்டோபர் 15ல் யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவு நோக்கிப் புறப்பட்டுச் சென்ற அவரது படகு, எவ்வித சுவடுமற்றுக் காணாமற் போயிற்று. அப்படகில் அவருடன் இரண்டு PLFT தோழர்களும் சுமார் 20 பொதுமக்களும் இருந்தார்கள் என்று சொல்லப்படுகின்றது. அவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை யாருக்கும் தெரியாது. சகோதர இயக்கங்களை வேட்டையாடிய புலிகளே அவர்களையும் கடத்திச் சென்று கொன்றிருக்கலாம் எனச் சிலர் கருதுகின்றனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நான்கு ஆண்டுகளே அவர் செயற்பட்டிருக்கிறார். தன் வாழ்க்கையைப் புரட்சிகர இலட்சியத்துக்காக அர்ப்பணித்தவர் அவர். தாங்கள் சரியெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட ஓர் இலட்சியத்துக்காகத் தங்களை அர்ப்பணித்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் தியாகம் பயனற்றுக் கழிந்ததுபோல், தோழர் விசுவின் அர்ப்பணிப்பும் பயனற்றுக் கழிந்தமை ஒரு வரலாற்றுத் துயரமே. முப்பது ஆண்டுகாலத் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு துர்க்கனவாயிற்று. இவ்வவளவு அழிவுக்குப் பிறகும் அதை மறு பரிசீலனை செய்ய யாரும் தயாரில்லை. குற்றத்தைப் பிறர் தலையில் சுமத்துவதிலேயே ஒவ்வொரு இயக்கத்தினரும் தமிழ்த் தேசியவாதிகளும் கவனமாய் உள்ளனர்.

ஏனைய இயக்கங்களைப் போலவே விசுவும் பிழையான பாதையில் சென்றார் எனச் சில புரட்சிகர மார்க்சியர்கள் குற்றஞ்சாட்டக் கூடும். அது மிக இலகுவானது. என்ன பிழை? அது ஏன் நடந்தது? அதை எவ்வாறு தவிர்த்திருக்கலாம்? இனிச் செய்ய வேண்டியது என்ன? என்பன முக்கியமான கேள்விகள். இவற்றுக்குரிய சரியான விடைகளைக் கண்டறிவதில்தான் நமது எதிர்காலம் தங்கியுள்ளது. விசுவை நினைவுகூரும் இச்சந்தர்ப்பத்தில் எல்லோரும் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.யேசுராசா

## விசுவானந்ததேவன்

நமது வாழ்வில் பலரைச் சந்திக்கிறோம் பிரிகிறோம். சில மனிதர்கள் தமது அர்ப்பணிப்பு மிக்க வாழ்வுப் பணிகளால், ஏனையோரிலும் மேன்மையானவராய் நிலைபெறுகின்றனர். எனது வாழ்வில் சந்தித்துப் பழகிய அத்தன்மையானோரில், விசுவானந்ததேவனும் ஒருவர்!

பேராதனை அஞ்சலகத்தில் நான் பணியாற்றிய காலத்தில் – 1972 அளவில், முதலில் அவரை நான் சந்தித்தேன். அக்காலத்தில் ரஜவத்தையிலுள்ள சிற்றூழியர் விடுதியொன்றின் அறையில், இன்னும் இருவருடன் சேர்ந்து தங்கி வாழ்ந்தேன். ஒருநாள் மாலை, மருத்துவ பீடத்தில் பயிலும் எனக்குத் தெரிந்த இரு மாணவரும் இன்னும் சிலரும், எமது விடுதி அருகால் நடந்து வந்தனர். என்னைக் கண்டதும் சிறிது தரித்தனர். எனக்குத் தெரிந்த மாணவரில் ஒருவர், உயரத்தில் கட்டையான ஒருவரைச் சுட்டிக்காட்டி. "உங்களுக்கு இவரைப் பிடிக்கும். இவர்தான் குட்டி மாவோ. விசுவானந்ததேவன்.... எஞ்சினியரிங் ஸ்ருடென்ற்" என அறிமுகப் படுத்தினார். இடதுசாரி அரசியல் கருத்துகளில் எனக்கு நாட்டம் இருந்தமையாலேதான் அவர் அவ்வாறு குறிப்பிட்டார். ஆனால், கதைக்கும்போது விசுவானந்ததேவனுக்கும் எனக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. அக்காலத்தில் அவர் ஆதரித்த கட்சி, இலங்கைத் தமிழர் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர், தமிழ்ப் பாரம்பரியம், பழம் சிறப்புக்கள் என்பவற்றைப் பேசுவதைப் பிற்போக்கானவை என வெளியொதுக்கும் தன்மை, அக்கால இடதுசாரிகளிடம் பொதுவில் இருந்துவந்தது!

பிறகும் என்னை அவர் சந்தித்துள்ளார். அவரது தோளில் எப்போதும் ஒரு பையொன்று தொங்கும். என்னைக் கண்டதும் பையிலிருந்து ஒன்றோ இரண்டோ கல்லச்சுக் கட்டுரைகளை நீட்டுவார். ஒவ்வொன்றும் ஐந்து ரூபாவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். அவை கட்சி சார்பான அரசியல் கட்டுரைகள். அவற்றைப் பணங்கொடுத்து நான் வாங்குவேன். ஆனால், இலங்கை அரசியல் நிலைமைகளுக்கு சீன வரலாற்று உதாரணங்களே அவற்றில் பெருமளவுக்கு எடுத்தாளப்பட்டிருக்கும். எனக்கு அது, கிறீஸ்தவர்கள் அடிக்கடி பைபிளின் பழைய ஏற்பாட்டிலிருந்து வரிகளை எடுத்ததற்கெல்லாம் மேற்கோள் காட்டுவதை நினைவுபடுத்தும். எரிச்சலுடன் நான் அவற்றை அவரிடம் சுட்டிக்காட்டியுள்ளேன். எனது கருத்துக்களை ஆரம்ப நாட்களில் மறுத்துவந்தவர், பின்னாட்களில் யோசிக்க வேண்டியவை என்று நெகிழ்வுப் போக்கைக் காட்டினார். தேசிய இனப் பிரச்சினை, சிங்களப் பேரினவாதம் என்பவற்றிலும் அவரது நிலைப்பாட்டில் மாற்றங்கள் தெரிந்தன. அவர் சார்ந்த கட்சியிலும் பலரிடம் கருத்து மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின.

பேராதனையில் தாவரவியல் பூந்தோட்டத்தில், கண்டி கலாச்சாரக் குழு என்ற அமைப்பின் சந்திப்பு இடைக்கிடை நடைபெற்றது. அதில் மலையக இளைஞர்கள் சிலரும், பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்த சிவசேகரம் முதலியோரும் பங்குபற்றினர். அச்சந்திப்புகளுக்கு வருமாறு, விசுவானந்ததேவன் என்னையும் அழைத்தார். நான், எனக்கு அதிக கருத்துவேறுபாடுகள் இருக்குமென்று சொன்னபோது, “நீங்க வாருங்க.... உங்களிடமிருந்து நாங்கள் சிலவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். அதுபோல் எங்களிடமிருந்தும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். கலந்து பேசுவது நல்லதுதானே....” என்று வற்புறுத்தினார். நானும் உடன்பட்டு சில சந்திப்புகளில் பங்குபற்றியுள்ளேன். அக்காலங்களில் ‘நதி’ என்ற சிற்றிதழும் கண்டியிலிருந்து வெளிவந்ததாக நினைவு. அது சார்ந்தவர்களும் பூந்தோட்டச் சந்திப்புகளுக்கு வருவார்கள்.

*1973* ஆக இருக்கலாம். மாத்தளை பாக்கிய வித்தியாலயத்தில் இலக்கிய விழாவொன்று நடைபெற்றது. அதில் அபியுக்தனெனும் எச்.எம்.பி. மொஹிதீனும் கலந்துகொண்டார். இவ்விழாவுக்கு, பேராதனையிலிருந்து நானும் இன்னொரு நண்பரும் சென்றிருந்தோம். விசுவும் நண்பர்களுடன் வந்திருந்தார். எச்.எம்.பி. பற்றி விசுவுக்கு நல்லபிப்பிராயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அதுபற்றி என்னிடம் குறிப்பிட்டார். கவியரங்கில், மட்டக்களப்பிலிருந்து வந்து கவிஞர் சாருமதி கலந்துகொண்டார். அவர் கவிதை வாசித்து முடித்தபின்னர், படிகளில் இறங்கியபடி கவிதைப் பிரதியைக் கிழித்து, "இவற்றாலெல்லாம் பிரயோசனமில்லை" என்று கூறியபடி, கிழிக்கப்பட்ட துண்டுகளை நிலத்தில் வீசினார். பார்வையாளர் பலருக்கும் அதிர்ச்சி! நிகழ்வின் முடிவில் வெளிப்புறம் என்னைக் கண்ட விசு, "அதுபற்றி என்ன நினைக்கிறீங்க?" என்று கேட்டார். நான் என்னுடைய அதிருப்தியை எரிச்சலுடன் சொன்னேன். "சபையிலுள்ளோரை அவமதிக்கும் செயல்! பிரயோசனமில்லை என்றால் மினைக்கெட்டு மட்டக்களப்பிலிருந்து வரவேண்டியதில்லையே!" என்றும் சொன்ன நினைவு. விசுவுக்கும் கோபம். "தங்களை அதிதீவிரவாதியாகக் காட்டப் பாக்கிறாங்க.... இடதுசாரிகள் மக்களிடமிருந்து அந்நியப்படத்தான் இது உதவும்" என்ற மாதிரிச் சொன்னார்.

அவர் என்.எல்.எவ்.ரி. அமைப்பை உருவாக்கிச் செயற்பட்ட காலங்களில், யாழ்ப்பாணத்தில் பலதடவைகள் நாங்கள் சந்தித்துள்ளோம். எங்கு கண்டாலும் நின்று கதைப்பார். நாங்கள் சந்திக்கவேண்டும் கருத்துப் பரிமாற வேண்டுமென்பதை எப்போதும் குறிப்பிடுவார். அவர்மீது எனக்கு மதிப்பு இருந்தது. அதுபோல் என்மீது அவருக்கு அக்கறை இருந்ததையும் உணர்ந்திருந்தேன். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் அவர் வேலை செய்தபோது, அங்கு பணியாற்றிய ஒரு பெண்மீது அவருக்கு விருப்பம் இருந்தது. அதுபற்றி வெட்கப்பட்டபடி சொல்லி, நல்ல வாசிப்பு ஈடுபாட்டை அப்பெண்ணிடம் வளர்ப்பதற்கு உதவக்கூடிய புத்தகங்கள் எவையெவை என, ஒருமுறை என்னுடன் உரையாடியதும் நினைவிலுள்ளது.

கெட்டிக்கார மாணவர்கள்தான் பொறியியற்றுறைக்குத் தெரிவாகின்றனர். விசுவும் கெட்டிக்கார மாணவனே. ஆனாலும், தனது கற்கைநெறியை முடிப்பதற்கு அவருக்குக் கூடுதலான காலங்கள் எடுத்தன. அவரைவிடச் சாதாரணமான பலர் இலகுவில் சித்தியடைந்து வெளியேறியுள்ளனர்! தனது சமூக அரசியல் அக்கறையினால், அர்ப்பணிப்புடன் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பைப் பல்கலைக்கழகக் கல்வியைவிடவும் பொதுநலனுக்கே செலவிட்டார்! அதனால்தான் தனது கற்கைநெறியை முடிக்கக் கூடுதலான காலங்கள் அவருக்கு எடுத்தன.

எளிமை, நேர்மை, மற்றவர் கருத்துக்குக் காதுகொடுக்கும் பண்பு, உரையாடலுக்குத் தயாரான நிலை, தேர்ந்தெடுத்த கொள்கைக்கான அர்ப்பணிப்பு, தெளிவான ஆளுமைப் பண்பினால் உருவான தலைமைத்துவத் திறன் முதலியன, அவரின் சிறப்புப் பண்புகள். தேசிய இன விடுதலையும் சமவுடைமையும் நிறைந்த ஓர் எதிர்கால சமூக நிலையை அவாவி, சுயநலனைப் புறமொதுக்கி அயராது செயற்பட்ட ஒரு நல்ல மனிதனின் இழப்பு - துயர் தருவதே! அறிந்தோர் உள்ளங்களில் என்றென்றும் அவர் உயிர்த்திருப்பார்!

*06. 05. 2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் வி.விசுவானந்ததேவனின் 20 ஆண்டுகள் நினைவு நாள்

1960களின் பிற்பகுதிகளிலிருந்து மார்க்சிய லெனினிசத் தத்துவங்களின் வழிகாட்டலில் தோழர் விசுவானந்ததேவன் இலங்கை .இடதுசாரி இயக்கத்தின் இயங்கு சக்தியாகவும், அமைப்பாளனாகவும், செயற்பாட்டாளனாகவும், தலைமைத்துவப் பண்புகளுடனும் எம்முடன் வாழ்ந்து மறைந்து இன்றுடன் (15-10-2006) இருபது ஆண்டுகளாகின்றன. இவரது கட்சி அரசியலென்பது சண்முகதாசனை தலைமையாகக் கொண்டிருந்த இலங்கை சீனசார்பு கம்யூனிஸ்ட்கட்சியில் ஆரம்பித்தது. பின்னர் இலங்கை மார்க்சிய லெனிசக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினராகவும், இக்கட்சியினது தமிழ்மக்கள் ஜனநாயக முன்னணியில் முக்கிய நபராகவும் செயற்பட்டார். அதன்பின்னர் மூன்று வருடகால இடைவெளியில் 'தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி' (NLFT) 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி' (PLFT) என்ற இரு அமைப்புகள் உருவாகக் காரணமாகவிருந்து, அவ்விரு அமைப்புகளையும் வழிநடாத்தினார்.

29-11-1952 இல் கரவெட்டியைச்சேர்ந்த கல்லுவம் கிராமத்தில் விவசாயக் குடும்பமொன்றில் பிறந்த தோழர் விசுவானந்ததேவன் தனது ஆரம்ப, உயர்தர கல்வியினை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையில் கற்றார். இவர் உயர்தர வகுப்பு மாணவனாக இருக்கும் காலகட்டத்திலே முற்போக்கு கலை இலக்கியங்களிலும் இடதுசாரிக்கருத்துக்களிலும் மிகவும் ஈடுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார். இதற்கு வடமராட்சிப்பிரதேசம் நீண்ட காலமாகவே இடதுசாரிப் பாரம்பரியத்தைக் கொண்டிருந்தமை முக்கிய காரணம் எனலாம். 1956 ஆம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்ற தேர்தலில் பருத்தித்துறை தொகுதியில் கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் போட்டியிட்ட தோழர் பொன். கந்தையா அவர்களை வெற்றிகொள்ளவைக்குமளவிற்கு அக்காலத்தில் வடமராட்சியில் இடதுசாரிக்கருத்துக்களின் செல்வாக்கு வலுப்பெற்றிருந்தது.

தோழர் விசுவானந்ததேவன் 1970 ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியற்பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இப்பல்கலைக்கழகப் பிரவேசம் இவரிற்கு தென்னிலங்கை மக்களினதும் மலையக மக்களினதும் பரீட்சயம் கிடைக்க வழிவகுத்தது. பல்கலைக்கழக வாழ்வில் மார்க்சிய - லெனினிச மாவோயிசத் தத்துவங்களில் சிறந்த தேர்ச்சியுற்றவராக, இடதுசாரி மாணவர்களுடனும் தான் சார்ந்திருந்த கட்சி பிரதிநிதிகளுடனும் இலங்கையின் சோசலிசப்புரட்சி தொடர்பாக சளைக்காது விவாதங்கள் புரிந்தார். இக்காலகட்டத்தில் அரசியல், மக்கள் சார்ந்த வேலைகளில் ஓர் அமைப்பாளனாகவும் செயற்பாட்டாளனாகவும் பரிணமிக்கத் தொடங்கினார்.

இதனால், சண்முகதாசனை தலைமையாகக் கொண்டிருந்த இலங்கை சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியினுள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, அக்கட்சியிலேற்பட்ட பிளவின் பின்னர் உருவாக்கப்பட்ட இலங்கை மார்க்சிய - லெனினிசக் கட்சியில் தோழர் விசுவானந்ததேவன் மத்திய குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். சண்முகதாசனின் ஒருமுனைவாதப்போக்கு, தீவிர இடதுசாரிப்போக்கு, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனையில் தவறான நிலைப்பாடு போன்ற காரணங்களினால் 1972 ஆம் ஆண்டில் இலங்கை சீனசார்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ்ட்கட்சியினைச் சேர்ந்த வி.ஏ.கந்தசாமி, கார்த்திகேயன், வாட்சன் பெர்னாண்டோ, ஆரியவன்ச, குணசேகர, டி.ஏ.நந்துங்க, ஒ.ஏ.ராமையா, சாகுல் ஹமிது போன்றவர்கள் சேர்ந்து இலங்கை மார்க்சிய - லெனினிசக்கட்சியை உருவாக்கினார்கள்.

தோழர் விசுவானந்ததேவன் பேராதனைப் பல்கலைகழகத்தில் பயிலும் காலத்தில் கண்டி கலாச்சாரக்குழுவிலும் *நதி* சஞ்சிகைக்குழுவிலும் மலையக மக்கள் இயக்கத்திலும் அங்கம்வகித்து செயற்பட்டார்.

சிங்கள பௌத்த இனவாதமென்பது இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் நிறுவனமயப்பட்டு, தமிழ் மக்களை இனரீதியாக ஒடுக்குவதனை தமிழ்ப் பாராளுமன்ற தலைமைகள் தமது தேர்தல் பிரச்சாரங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தி வந்தனர். இவ்வாறான தமிழ் பாராளுமன்ற தலைமைகளின் கீழ் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமென்பது வென்றெடுக்கப்பட முடியாதது, எனவே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமென்பது முதன்மைப்படுத்த வேண்டுமென்பதை இலங்கை மார்க்சிய - லெனினிசக்கட்சியினர் தீர்மானித்தனர். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தினை முன்னெடுப்பதற்காகவே, 1975 ஆண்டில் இலங்கை மார்க்சிய - லெனினிசக்கட்சி 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி'யை உருவாக்கினர்.

இக்காலகட்டத்தில் பாராளுமன்றப் பாதையை நிராகரிப்பதாகக் கூறி, தமிழ் மக்களுக்கென தனிநாடொன்றினை நிறுவுவதற்கு ஆயுதமேந்திப் போராடுவதே ஒரேவழியென்ற தமிழ் இளைஞர்களின் குரல்கள் படிப்படியாக ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருந்தன. இந்த இளைஞர் குழுக்கள் ஆங்காங்கே இலங்கை பாதுகாப்புத்துறையினருக்கு எதிராக ஆயுதமேந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதல்களிலும் ஈடுபடத்தொடங்கியிருந்தனர். பின்னர் இந்த இளைஞர் குழுக்கள் தமக்கிடையேயுள்ள முரண்பாட்டினையும் ஆயுதங்களின் துணைகொண்டே தீர்க்க ஆரம்பித்தனர். 1982 ஆண்டு யாழ்ப்பாணம் சித்திரா அச்சகத்தினுள் வைத்து 'தமிழீழ மக்கள் விடுதலைக்கழக'த்தைச்சேர்ந்த சுந்தரம் புலிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் இதற்கு நல்ல உதாரணமாகும்.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனை அல்லது தமிழ் மக்களின் சுயநிர்ணய போராட்டம் ஒருபுறம் தமிழ் பாராளுமன்றவாதிகளின் கைகளிலும், மறுபுறம் தமிழ் மக்களைப்பற்றி கொஞ்சமேனும் அக்கறையில்லாத சுத்த இராணுவக் கண்ணோட்டங்கொண்ட இளைஞர்களிடம் சிக்கியிருப்பதனையும் தோழர் விசுவானந்ததேவன் தெளிவாக உணர்ந்தார். இதன் காரணமாகவே 1983 ஆண்டில் 'தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி' (NLFT) என்ற அமைப்பினை ஸ்தாபித்தார். இவ்வமைப்பில் இவருடன் ஏற்கனவே நீண்டகாலமாக சேர்ந்து வேலைசெய்த சில தோழர்களும், பல புதிய இளைஞர்களும் இணைந்துகொண்டனர். செயலூக்கம் கொண்ட அல்லது உற்சாகங்கொண்டு முன்னேவரும் புதிய இளந்தோழர்களை ஓர் அமைப்பின் முன்னணி நபர்களாக நிறுத்த வேண்டுமென்கின்ற தனது நீண்டகாலக் கருத்திற்கேற்ப, தோழர் விசுவானந்ததேவன் NLFT அமைப்பின் முன்னணியாளர்களாக புதிய இளந்தோழர்களை நிறுத்தினார்.

1983 யூலைமாதத்தின் பின்னர் பல மடங்குகளாக வீக்கமுற்ற ஏனைய தேசிய விடுதலை இயக்கங்கள் போலன்றி, NLFT மிகவும் சிறியதாகவே இருந்தது. இலங்கை அரச படைகளுக்கெதிரான சிறிய, நடுத்தர, பாரிய இராணுவத்தாக்குதல்களே தமிழீழத்திற்கான ஆயுதப்போராட்டமாகவும், தமிழீழத்தை நிறுவுவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய வேலைத்திட்டமாகவும் வர்ணிக்கப்படுகையில், மார்க்சிய - லெனினிசத் சித்தாந்தங்களின் வழிகாட்டலில் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டுமெனக் கூறிவந்த NLFT அமைப்பு, அக்காலகட்டத்திற்கேற்ப சரியான வேலைத்திட்டங்களை வகுப்பதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியது. தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்காகப்போராடும் எல்லாப்பிரிவுடனும் ஐக்கியப்பட்டு போராட வேண்டுமென்பதை NLFT கருத்து ரீதியாக ஏற்றுக்கொண்டாலும், தோழர் விசுவானந்ததேவன் போன்ற ஒரு சிலர் அக்கருத்தினை நடைமுறைப்படுத்துவதை NLFT எதிர்த்தது. பாட்டாளிவர்க்கத் தலைமையிலான கட்சியொன்றினை நிறுவிய பின்னர் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஈடுபடுவதா, அல்லது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஈடுபடுவதனூடாகப் பாட்டாளிவர்க்கத்தலைமையிலான கட்சியொன்றினை நிறுவுவதா போன்ற விவாதங்களும் NLFT அமைப்புக்குள் எழுந்தன.

ஏறத்தாழ *1985* ஆண்டின் முழுக்காலப்பகுதியும் NLFT அமைப்புக்குள் ஏற்பட்ட உட்கட்சிப் போராட்டத்திலே கழிந்து போயிற்று. NLFT உருவாகி *3* வருட காலத்தில் NLFT அமைப்புக்குள் உருவாகியிருந்த தீவிர இடதுசாரிப்போக்கினையும், தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்காகப் போராடும் ஏனைய சக்திகளை அரவணைத்து பரந்தளவில் போராடமறுக்கும் கருத்தினையும், தோழர் விசுவானந்ததேவனும் NLFT அமைப்பின் ஒரு பிரிவினரும் கடுமையாக எதிர்த்தனர். முரண்பாடுகள் முற்றி இறுதியில் *1986* ஜனவரியில் NLFT பிளவுற்று தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி (PLFT) என்ற புதிய அமைப்பினை தோழர் விசுவானந்ததேவன் தோற்றுவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக தோழர் விசுவானந்ததேவனின் வெளியேற்றத்தின் பின்னர் NLFT அமைப்புக்குள் மீண்டும் இன்னோரன்ன கருத்து மோதல்கள் ஏற்பட்டு மேலும் பல தோழர்கள் வெளியேறினார்கள். சில ஆண்டுகளின் பின்னர் NLFT செயலிழந்து போயிற்று. NLFT செயலிழந்து போவதைத்தவிர வேறுவழியில்லையென PLFT என்ற புதிய அமைப்பினை தோற்றுவிக்கும்போதே தோழர் விசுவானந்ததேவன் பலரிடம் கூறியிருந்தார்.

தோழர் விசுவானந்ததேவன் மறைந்த பின்னர், PLFT அமைப்பும் அதிமுக்கியமான இயங்குசக்தியின்றி கொஞ்சம் கொஞ்சமாக செயலிழந்தது. ஏற்கனவே சிறிய அமைப்பாக இருந்த NLFT, NLFT என்றும் PLFT என்றும் மிகச்சிறிய அமைப்புகளாகி, இரண்டுமே இறுதியில் சிதைவடைந்து, இன்று எதுவித அடையாளங்களுமற்றுப் போய்விட்டன.

1986 ஆண்டு செப்டம்பர் மாதமளவில் சென்னையில் தங்கியிருந்த தோழர் விசுவானந்ததேவன் ஒரு முக்கிய கருமமொன்றின் நிமித்தம் அவசர அவசரமாக யாழ்ப்பாணம் சென்றிருந்தார். அப்போது புலிகள் TELO இயக்கத்தை அழித்து 4 மாதங்களேயாகியிருந்தன. தனது கருமத்தை நிறைவேற்றிய பின்னர், தோழர் விசுவானந்ததேவன், PLFT தோழர்களான மன்னார் முருங்கன்பிட்டியைச் சேர்ந்த கண்ணன் என அழைக்கப்பட்ட தோழர் ரோய் ஜோன்சன் சந்தாம்பிள்ளை, விசு என்று அழைக்கப்பட்ட தோழர் நரேஸ் சர்மா (இவர் PLOTE அமைப்பின் முன்னாள் உறுப்பினர்) ஆகியோர் 1986 ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15ந் திகதி பொழுதுசாயும் நேரத்தில் ரோலர் வகைப் படகொன்றில் கரையூரிலிருந்து நெடுந்தீவு நோக்கிப் புறப்பட்டனர். நெடுந்தீவிலிருந்து பின்னர் தென்னிந்தியா நோக்கிப் புறப்படுவதே இவர்களது எண்ணமாக இருந்தது. 1986களில் புலிகள் TELO இயக்கத்தை அழித்த பின்னர் ஏனைய இயக்கங்களையும் கொன்று குவிப்பதில் கண்ணும் கருத்துமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததினால், யாழ்க்குடாநாட்டின் வடபகுதிக் கரையோரங்களிலிருந்து நேரடியாகத் தென்னிந்தியா செல்வதை இவர்கள் தவிர்த்துக்கொண்டனர். இவர்களுடன் நெடுந்தீவை நோக்கி பயணம் செய்யும் ஏறத்தாழ 20 சாதாரண பயணிகளும் அந்த ரோலரில் இருந்தனர்.

மக்களுடன் மக்களாக சாதாரண பயணிகள்போல் பயணித்து, நெடுந்தீவினுடாக தென்னிந்தியா செல்லும் PLFT தோழர்களின் பயணம் மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. எனினும் ஒரு சில மணி நேரத்தில் நெடுந்தீவிற்கு போய்ச்சேர வேண்டிய அந்த ரோலர் நெடுந்தீவை வந்தடையவேயில்லை. மப்பும் மந்தாரமுமான பொழுது சாய்ந்த அந்த மாலைப்பொழுதில் தோழர் விசுவானந்ததேவன் உட்பட, வேறு இரு PLFT தோழர்களுடனும், 20 சாதாரண பயணிகளுடனும் அந்த ரோலர் எங்கோ மறைந்து போயிற்று. மனிதர்களும் தொலைந்து போயினர். ரோலருக்கு விபத்து ஏதாவது நேர்ந்திருந்தால் அல்லது இலங்கை கடற்படை தாக்கியிருந்தால் உடனடியாகவே நிட்சயமாக ஒரு சில தடயங்கள் சிக்கியிருக்க வாய்ப்புண்டு. ஆனால் இவர்கள் யாரால், எப்படி, எங்கே மறைக்கப்பட்டார்களென்ற உறுதியான தகவல்களோ அல்லது தடயங்களோ இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. எனினும் இவர்களைக் கொன்றவர்களோ அல்லது இவர்களின் கொலைக்கு உடந்தையானவர்களோ அல்லது இவர்களின் கொலைபற்றிய உண்மை தெரிந்தவர்களோ இன்னமும் உயிர் வாழ்கின்றார்கள் என்பதனை நாங்கள் உறுதியாக நம்பலாம். இன்னமும் துப்புத்துலங்காத ஆயிரமாயிரம் இலங்கைத் தமிழ் மக்களின் கொலைகளுடன் தோழர் விசுவானந்ததேவன் உட்பட, இரு PLFT தோழர்களினதும் மற்றும் 20 சாதாரண பயணிகளினதும் கொலைகளும் பின்னிப்பிணைந்து கிடக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையிலிருந்து தனக்காக வாழாமல் மக்களுக்காகமட்டும் வாழ்ந்து, தனது முழு நேரத்தினையும் சொத்துக்களையும் மக்களுக்காகவே செலவிட்ட தோழர் விசுவானந்ததேவன் மறைந்த 20 ஆண்டில், தோழர் விசுவானந்ததேவனுக்கும் மற்றும் தோழர்கள் ரோய் ஜோன்சன் சந்தாம்பிள்ளை, நரேஸ் சர்மா ஆகியோருக்கும் புரட்சிகர அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

1977களிலே தோழர் விசுவானந்ததேவன் தென்னாசிய புரட்சிகர சக்திகளுடனும் இணைந்து இலங்கையில் அரசியல் வேலைகளை முன்னெடுக்க வேண்டுமென்பதை சுயமாக சிந்தித்து, பல தென்னாசிய புரட்சிகர சக்திகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டவர். சிறந்த சிந்தனையாளன், புரட்சியாளன் தோழர் விசுவானந்ததேவனை இருபதாண்டுகளென்ன இப்பூமியில் மனிதகுலம் நிலைகொண்டிருக்கும்வரை நினைவு கூரலாம்.

*15-10-2006*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவினைக்கும் தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிராக தமிழ் மக்களே ஒன்று சேர்வீர்

நீண்ட காலமாக பிரித்தாளும் தந்திரத்தின் மூலமாக எமது நாட்டை ஆண்டு வந்த அந்நியர்கள், இனங்களிற்கிடையில் பரஸ்பரம் நம்பிக்கையீனங்களை உருவாக்கி வந்ததன் விளைவுகள், அவர்கள் சுதந்திரம் என்ற ஒன்றை தந்து விட்டுச் சென்றதன் பின் வெளிப்பாடடையத் தொடங்கியது.

இந்தோ – பாகிஸ்தானிய சட்டத்தின் மூலம் பத்து இலட்சத்திற்கு மேற்பட்டவர்களின் வாக்குரிமை பறிபோயிற்று. சிங்கள மக்களின் தேசிய எழுச்சி என்று கூறப்பட்டாலும், தனிச்சிங்களச் சட்டம் தமிழ்மக்களிடையே அவநம்பிக்கையையும் வெறுப்பையும் ஏற்படுத்தியது. தொடர்ந்து, தொடர்ந்து வந்த இனவன்செயல்களும், குடியரசுச் சட்டமும், இனவாரியான தரப்படுத்தலும் தமிழ் மக்களிற்கு மேலும் நம்பிக்கையீனங்களையே ஏற்படுத்தியது.

தமிழ் தலைமைகளே அந்நியருக்கு விசுவாசிகளாகவும் யூஎன்பி சார்பு சக்திகளாகவும் இருந்தார்கள். பண்டாவுடன் செய்து கொள்ளப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தத்தை பாதுகாக்கவும் தவறினர். பண்டா – செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் நடத்தப்பட்ட கண்டி யாத்திரையை இம்பில் கொட சந்தியில் வைத்து துரத்தியடித்த எஸ்.டி. பண்டாரநாயக்காவின் நடவடிக்கையும், தமிழ் மக்களின் பால் அவர் கொண்டிருந்த கரிசனையுமே சிங்கள மக்கள் மத்தியிலிருந்து வந்த ஓர் ஒளி கீற்று.

இடதுசாரிசக்திகள் ஒற்றையாட்சி அமைப்பில் பிரதேச சுயாட்சி என்கின்ற கோட்பாட்டை வைத்திருந்த போதிலும் சிங்கள மக்கள் மத்தியில் அதனை ஒரு பேசு பொருளாக கூட எடுத்துச் செல்ல முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரான இனவாத நடவடிக்கைகள் தமிழ் மக்களின் பிரச்சனைகளிற்கு தீர்வு சொல்ல முடியாத கையறு நிலையிலே, 'தமிழ் ஈழம்' என்கின்ற பிரிவினைவாத கோஷம் முன்னெடுக்கப்பட்டது. வங்கதேச விடுதலையும், தமிழ் நாட்டிலிருந்த மிகையொலி வித்துவான்களின் வெற்று கோஷங்களும், தமிழ் இளைஞர்களை உசுப்பேத்தி திக்கு திக்காக இயக்கங்கள் உருவாகின. வட்டுக்கோட்டை தீர்மானம் உடையர்களின் திருவிழாவாகியது. எந்த இலக்கை நோக்கி வானம் விடுவது என்றில்லாமல், தங்கள் தங்களுக்குள்ளேயே வானம் விட்டார்கள். அடிப்படை அரசியல் அறிவு இல்லாமல் தொடங்கப்பட்ட இயக்கங்கள், இந்நோக்கங்களிற்காகவும் தமிழ் நாட்டு வெற்றுக் கோஷ வித்துவான்களின் தாளத்திற்கு ஏற்றபடி ஆடத்தொடங்கியது.

யாழ்ப்பாணத்தின் மூளை என்று வர்ணிக்கப்படுகின்ற வடமராட்சியின் ஒரு பின்தங்கிய கிராமத்தில் பிறந்த விசுவானந்ததேவன், **"பிரிவினைக்கும் தேசிய ஒடுக்கு முறைக்கும் எதிராக தமிழ் மக்களே ஒன்று சேர்வீர்"** என்ற கோஷத்துடன் தமிழ் மக்கள் மத்தியில் அறிமுகமானார்.

பாடசாலை நாட்களிலும் பல்கலைக்கழக காலங்களிலும், இடதுசாரி இயக்கங்களிலும், குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியிலும் அவர் தன்னை இணைத்து அரசியலில் வேலை செய்தார், விசுவானந்ததேவன் அவர்கள். கிளிநொச்சியிலும், மட்டக்களப்பு செங்கலடியிலுருந்து அம்பாறை திகனாப்பி சந்தி வரையான பகுதிகளில், மறைந்த தோழர் சண்முகநாதனுடன் சேர்ந்து **"பிரிவினைக்கும் தேசிய ஒடுக்கு முறைக்கும் எதிராக தமிழ் மக்களே ஒன்று சேர்வீர்"** என அவர் செய்த பிரச்சாரங்கள் அளப்பரியது.

ஓர் அவசரக்காரன் என்ற அவரைப்பற்றிய விமர்சனங்கள் இருந்த போதிலும், கூட மிகவும் எளிமையாக தன்னுடன் சேர்பவர்களை வசீகரிக்கின்ற தன்மையும் அவருடையது.

பலஸ்தீன மக்களுடைய விடுதலையை பற்றி ஆராயமல், இஸ்ரேலின் வீரங்களை பற்றி குசுகுசுத்துக் கொண்டிருந்த தமிழர் இயக்கங்களிலிருந்து வேறுபட்டு, அசாம், மணிப்பூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பகுதிகளிற்கு சென்றும் அங்குள்ள மக்களின் அனுபவங்களை தமிழ் நாட்டிலுள்ள சமூக விடுதலை இயக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தொடர்ந்தும் பேணி வந்தவர் விசுவானந்ததேவன் மட்டுமே.

எந்த இனவாத இராணுவ புலனாய்வு அமைப்புக்களிற்கு எதிராக இயக்கங்கள் உருவாகினவோ, அந்த இயக்கங்களை ஓமந்தைக்கு அப்பால் விரட்டி, அவர்களை இலங்கை இராணுவத்தின் சம்பளக்காசில் பிழைக்க வைத்த 'பெருமை' பிரபாகரனையே சாரும்.

விசுவானந்ததேவன் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற காலத்தில் 'கல்குலேட்டர்' உதவி இல்லாமல் கணக்கு செய்யக்கூடிய கெட்டிக்காரன் என்ற பெயர் அவருக்கிருந்தது. கணக்கில் மாத்திரமல்ல, அரசியலிலும் அவர் கெட்டிக்காரன் என்ற பெயர் இன்னமுமிருக்கும்.

**'அண்ணை** இருக்கிறார், அண்ணை இருக்கிறார் கெதியாய் வந்து விடுவார்' என்கின்ற உலகலாவிய பிரச்சாரமும், உலகத்திலே நாங்கள் ஒரு சிறுபான்மை இனம் இலங்கையில் மாத்திரம்தான் இருக்கின்றோம் என்கின்ற சிங்கள இனவாதிகளின் தாழ்வுச் சிக்கலும், மீண்டும் ஒருமுறை **பிரிவினைக்கும் தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிராக தமிழ் மக்களே ஒன்று சேர்வீர்** என்கின்ற கோஷத்தை வலுப்படுத்தி அரசியல் வேலை செய்ய வேண்டிய தேவையை தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கியது.

விசுவானந்ததேவனுடைய மறைவு தமிழ் மக்கள் இயக்கங்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியிருந்த போதிலும் கூட, அதற்கான விடை இன்னமும் கிடைக்கவில்லை.

சொந்த சகோதரர்களை படுகொலை செய்து, சகோதர இயக்கங்களை பலவீனப்படுத்தி, அவர்களை எதிரியின் இராணுவத்திற்குள் மண்டியிடச் செய்து, தாங்களும் இராணுவத்தின் முற்றுகைக்குள் அகப்பட்டு, அரசியல் தோல்வி ஒன்றை அடைந்த வரலாறு உலக விடுதலை இயக்கங்களிற்குள் எங்களிற்கு மாத்திரமே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.சி.கந்தையா

## வேட்டுகள் மட்டுமே விடுதலையாகுமா? விசுவானந்ததேவனுடன் சில காலம்

வீரம் செறிந்த வரலாற்றைப் பதிவுகளாக்கிய ஈழப்போர், அதன் மறுப்பக்கம் வேண்டத்தகாத கொடும் நிகழ்வுகளையும் பதிவு செய்துள்ளது. தேசிய இன விடுதலைக்கான திசை வழியைத் தெரிவு செய்யத் தவறியதால் தேசிய இனவிடுதலைக்களத்தில் அதன் பதிவுகள் தொடக்கம் முதலே தவறாக இடம் பெறத் தொடங்கியது. நேச உறவுகளையும் பகை உறவுகளின் முரண்பாடுகளைக் கையாள்வதற்கான அரசியல் தெளிவு இல்லாத விளைவே, இக்கொடும் நிகழ்வுகளுக்கான காரணிகளாகக் காணப்படுகிறது.

மண்ணையும் மக்களையும் நேசித்த பலர், தேசிய இன விடுதலையை சரியான திசையில் வழிநடத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு களம் புகுந்தார்கள். களம் புகுந்த நூற்றுக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானோர் தாயகத்தை விட்டே ஓடி ஒளிந்தார்கள். படுகொலைகளுக்கெதிராகவும், எதிரிப்படைகளுக்கெதிராகவும் ஐக்கியத்தை வேண்டி, களத்தில் நின்றவர்கள் பலரும் படுகொலையானார்கள். இப்படி படுகொலையானவர்களில் ஒருவர் விசுவானந்ததேவன்.

இலங்கையில் காலனிய ஆதிக்கம் வெளியேறிய பின்பு, கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளில் மூன்று பெரும் படுகொலைகளை அரசு நடத்தி உள்ளது. கடந்த 1971 ஆம் ஆண்டில் மக்கள் விடுதலை முன்னணியின் செயல்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது படுகொலையை மக்கள் சந்தித்தார்கள். 1989 களில் இரண்டாவது படுகொலையையும் இதே இயக்கத்தின் செயலால் சந்திக்க நேர்ந்தது. 2009 ஆம் ஆண்டு மூன்றாவது படுகொலையை அரசின் முப்படைகளாலும் தமிழினத்தின் மீது நிகழ்த்தப்பட்டது. இது ஒரு இனப்படுகொலையாகவும், "உலகப் படுகொலை" யாகவும் அடையாளப்படுத்தப்படுகிறது.

படுகொலைகளை நடத்தியவர்கள், நாட்டை ஆண்டவர்களும், ஆளுகின்ற அரசியல் கட்சிகளுமாகும், மூன்று பெரும் படுகொலைகள் நிகழும்போது ஆட்சியாளர்களுடன் இணக்கமான உறவோடு இருந்தவர்கள் இடதுசாரிக் கட்சிகளாகும். (சண்முகதாசன் தலைமை மற்றும் பத்தாவது தேசிய மாநாட்டை நடத்திய பிரிவைத் தவிர)

தேசிய இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணயத் தீர்வை வைத்தவர்கள் இடதுசாரிக்கட்சிகள். முதலாளித்துவ சமூகமைப்பைத் தூக்கி எறியப்பட வேண்டும் என்ற சித்தாந்தத்தை மக்களிடம் கொண்டு சென்றவர்களும், இவர்கள்தான். ஆயுதப்போராட்டம் என்ற புரட்சி முழக்கங்களை முழங்கியவர்களும் இந்த இடதுசாரிகள். சண்முகதாசன் தலைமையில்தான் புரட்சி முழக்கங்கள், இக்காலத்தில் நாடு முழுதும் முழங்கப்பட்டது. இத்தலைமையின் முழக்கம் வெற்று முழக்கங்கள் என்பதை அறிந்த இளைஞர்கள், மக்கள் விடுதலை முன்னணியின் தவறான பரப்புரைக்குப் பலியானார்கள். சமூக மாற்றத்தை உருவாக்க இந்த அமைப்பில் அணி திரண்டார்கள். நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்போடு செயற்படவேண்டிய இடதுசாரிகள், மார்க்ஸிய சித்தாந்தத்தை நடைமுறைச் சாத்தியப்படும் வகையில் அதன் செயற்பாடுகளை முன்னெடுக்காத விளைவுதான், தவறான அரசியல் திசையில் இளைஞர்களும் யுவதிகளும் பயணிக்க ஒரு காரணியாக அமைந்தது என்பதை மறுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாது. தென்பகுதியில் இடது அரசியலின் விளைவு இதுவென்றால், வடக்குக் கிழக்கில், இடது அரசியலின் செயற்பாட்டின் விளைவுகள் என்னவாக இருந்தது?.

1965 காலத்தில் வடக்கில் சாதியத்திற்கெதிராகவும் ஆதிக்கசாதிகளின் அடக்கு முறைக்கெதிரான போராட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சி (சீனசார்பு) தீவிரமாக முன்னெடுத்த நிலையில், தமிழர்களின் உரிமை பறிப்புக்கெதிரான போராட்டங்களை தமிழரசுக் கட்சி தொடர்ந்து நடத்தி வந்தது. சண்முகதாசன் தலைமையில் இயங்கிய கம்யூனிஸ்ட் கட்சி, மறுக்கப்பட்டு வரும் தமிழர் உரிமைகளை முதலாளித்துவ சமூகமைப்புத் தூக்கி எறியப்படுவதன் மூலமாக தீர்க்கப்படும் என்றவாதமே கட்சியின் உள்ளடக்கமாக இருந்தது. சமூக மாற்றத்தைக் கொண்டுவரும் புரட்சி என்ற முழக்கமும் வெற்று முழக்கமாகி இருந்தது. தேசிய இனத்தின் உரிமைகள் மறுக்கப்பட்டு வரும் நிலையில், அதைத் தீர்க்கும் வழிமுறைகளைப் பற்றி குரல் கொடுக்காமலும் அதைப் பெறுவதற்கான போராட்டங்களை முன்னெடுக்காமலும் போனதால், இனத்துவ அரசியலுக்குள் மட்டும் மக்கள் தள்ளப்படும் நிலை உருவானது. பிரிவினைவாத அரசியலுக்கு ஊட்டத்தை அளிக்கும் வகையில் பேரினவாதிகளின் செயல்கள் அமைந்தன. இன வன்முறைக்கெதிரான இயக்கம் என்ற சொல்லே இல்லாமல் போனதும், ஆயுதப்படைகளின் இனவாதப் போக்கும், அதன் செயற்பாடுகளும் வடக்குக் கிழக்கில் ஆயுதப் போராட்டத்திற்கான சூழலை உருவாக்கித் தந்தது.

இடதுசாரி இயக்கங்களின் ஒன்றின் செயற்பாட்டு விளைவுகள் மட்டுமல்ல, அனைத்து இடதுசாரி இயக்கங்களின் தவறான வழிகாட்டலின் விளைவே இவ்வாறான போக்கிற்குக் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் விடுதலைக்கூட்டணியின் இன உணர்ச்சிப் பரப்புரைகள் தேர்தல் களத்தில் தொடர்ச்சியாக பயன்படுத்தும் ஓர் உத்தியாகும். ஆயுதப் போராட்டத்தின் மூலமாக தனி ஈழம் பெறவேண்டும் என்ற நோக்கமும் இந்த அமைப்பிற்கில்லை என்பதை புரிந்து கொண்டவர்கள் தமிழ் இளைஞர் பேரவையைத் தொடங்கினார்கள். இதையும் தங்களது கட்டுப்பாட்டிலேயே வைத்துக்கொள்ள "ஆண்டபரம்பரை மீண்டும் ஆள்வதில் என்ன தவறு" என்ற முழக்கத்தை முழங்கினார்கள். இம்முழக்கத்தை நடைமுறையாக்க சபதமேற்ற இளைஞர்கள் சிலர் ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஈழத்தை உருவாக்க துப்பாக்கி தாங்கிய இயக்கத்தைக் கட்டத் தொடங்கினார்கள் .

தென்பகுதியில் வைக்கப்பட்ட புரட்சி முழக்கங்களால் கவரப்பட்ட இளைஞர் யுவதிகள், சமூகமாற்றத்தைக் கொண்டு வருவதற்காக ஆயுதம் ஏந்தினார்கள். வடக்கு கிழக்கில் தொடரும் உரிமை மறுப்புகளும் அடக்கு முறைகளாலும் தனி ஈழம் ஒன்றுதான் தீர்வு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

தென்பகுதியில் நடந்த ஆயுதப் போராட்டத்தையும் வடக்குக் கிழக்கில் நடந்த ஆயுதப் போராட்டத்தையும் சம நிலையில் பார்ப்பது தவறாகிவிடும். காரணம் இனவன்முறையை அரசு துணையுடன் நிகழ்த்துவதும், ஆயுதப் படைகளின் இனவாதப் பார்வை, உரிமை மறுப்பு, தேசியத்திலிருந்து அந்நியப்படுத்தும் போக்கு, மனித உரிமை மீறல் சட்டங்கள், ஆயுதப்படைகளின் அத்துமீறல்கள் என்பனவும் வடக்குக் கிழக்கில் பிரத்தியேக அம்சங்களாக இருந்தன. ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் நிகழ்த்திய மாபெரும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதால், இலங்கை அரசின் செயல்களையும் அது நடாத்திய இனப் படுகொலைகளையும், இன அழிப்பையும் குறைத்து மதிப்பிடுவதாகவோ அல்லது இரண்டு தவறுகளையும் சமமாகக் கணித்துவிடக்கூடாது. ஆயுதக் குழுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகுவதற்கு இலங்கை அரசே முழுக்காரணம். தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை தொடர்ந்து மறுத்தது, 77ஆம் ஆண்டு இனவன்முறை, ஆயுதக்குழுக்களை அடக்க 1979ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டம், முப்படைகளால் மேற் கொள்ளப்பட்ட படுகொலைகள், சித்திரவதைகள், 1981 ஆம் ஆண்டு யாழ் நூலக எரிப்பு, ஆட்கடத்தல், 1983 ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைகள், வெலிக்கடைச் சிறைப் படுகொலை போன்றவைகளே, தமிழ் இளைஞர்களும் யுவதிகளும், ஆயுதக்குழுக்களை நோக்கி செல்லக் காரணமானது.

ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் தங்களை பலப்படுத்திக் கொள்வதற்கு அரசின் இனவாதசெயல்களே அடிப்படைக் காரணமாக இருந்துள்ளது.

இதேவேளை ஆயுதம் தாங்கியவர்களின் அராஜகத்தையும் விமர்சித்தே ஆகவேண்டிய கட்டாயமும் உள்ளது. எந்த நோக்கத்திற்காக களம் புகுந்தார்களோ, அந்தக் களத்தில் இருந்தவர்களாளேயே படுகொலை செய்யப்பட்டதை வரலாறு மன்னிக்கப் போவதில்லை. ஒரு தனிநபரின் சர்வாதிகாரத்தை நிலை நிறுத்தவே இவ்வாறான படுகொலைகள் நிகழ்த்தப்பட்டுள்ளதோ என எண்ணத் தோன்றுகிறது.

அடக்கு முறைக் கெதிராக ஆயுதம் ஏந்திய குழுக்களுக்கு தேசிய இனப் போராட்டத்தைப் பற்றிய அரசியல் தெளிவு எதுவும் இருக்கவில்லை, உணர்ச்சி வசத்தால் உந்தப்பட்டு ஆயுதம் மூலமாக ஈழத்தைப் பெறலாம் என்ற எண்ணங்கள் மட்டுமே தொடக்கத்தில் மூலதனமாகி இருந்தது. இந்தப் போக்கு தவறான நிலைக்கு மக்களை கொண்டு செல்லும் என்று தொலைநோக்கோடு சிந்தித்து முன்வந்தவர்களின் வரிசையில் விசுவானந்ததேவனும் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி - கொழும்பு வீதியில் இருக்கும் தங்கும் விடுதியின் 170ஆம் இலக்க அறைக்கு பதினைந்து ஆண்டு கால வரலாறு உண்டு. இந்த அறையில்தான் முதல் முறையாக விசுவானந்ததேவன் என்னைச் சந்தித்தார். இங்குதான் கவிஞர் வண்ணச்சிறகு (அரு.சிவானந்தன்) சில ஆண்டுகள் என்னோடு தங்கி இருந்த அறையுமாகும். எங்களின் அரசியல் பிரவேசமும் இங்கிருந்துதான் தொடங்கியது. அரசியல் விவாதங்களும், கலை இலக்கியம் பற்றிய கருத்தாடலும் இரவு நடுச்சாமம் வரையும் கூட சில இரவுகள் தொடரும். வாரத்தில் மூன்று நான்கு நாட்கள் இந்த அறைக்கு வந்து செல்வதை வழக்கமாக்கி இருந்தார் விசுவானந்ததேவன். இந்த அறைக்குப் பக்கத்து அறைகளில் இருந்த தங்கவேல், ராஜகோபால், கணேஸ், செல்வராஜி, இலராசு, ராஜாங்கம் என இந்த அறைக்குவந்து செல்லும் பலருடன் நெருக்கமான நட்புறவைக் கொண்டிருந்தார் விசுவானந்ததேவன். இவரை சிலர் விசுவென்று, செல்லமாக அழைப்பது வழக்கம். "கண்டிக் கலாச்சாரக்குழு" "நதி" "மலையக மக்கள் இயக்கம்" ஆகியவைகள் உருவானது, கம்யூனிஸ்ட்டு கட்சியின் குரலாக வரும் "தொழிலாளி," "கம்கருவா" ஆகிய இரண்டு பத்திரிகைகளையும் ஞாயிற்றுக் கிழமைகளில் விசுவானந்ததேவனுடன் பேரூந்து நிலையங்களுக்கு எடுத்துச் சென்று மக்களிடம் விற்பனை செய்வது போன்ற செயற்பாடுகள் அனைத்தும், இந்த அறையில் இருந்தே தொடங்கியது. விசுவானந்ததேவனின் அரசியல் வரலாறும் 170ஆம் இலக்க அறையோடும் சம்பத்தப்பட்டுள்ளது.

கரவெட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட விசுவானந்ததேவன் தனது பள்ளி வாழ்க்கையின் போதே அரசியல் களத்தில் பிரவேசிக்கத் தொடங்கினார். 1970 காலத்தில் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் முதலாம் ஆண்டு தொடக்கம் முதலே என்னுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகமானார். யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த தோழர், இயக்கச்சி மணியம், இவரைப் பற்றிய மதிப்பீட்டை பல்கலைக்கழகத்திற்கு வருவதற்கு முன்பே என்னிடம் கூறி இருந்தார். கண்டியில் இருக்கும்வரை கம்யூனிஸ்ட் கட்சியின் கண்டிக் கிளையுடன் இணைந்து செயற்பட்டார். 1971 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஏப்ரல் கிளர்ச்சிக்குப் பின்பு, கம்யூனிஸ்ட் கட்சித் (சண்முகதாசன் தலைமை) தலைமையும், தலைமை உறுப்பினர்கள் பலரும் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார்கள்.

இந்த நிலையில் கட்சியை செயலுக்கு கொண்டு வருவதற்காக கண்டிக் கிளையால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை, தமிழ் பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதில் முன் நின்றதில், விசுவாவும் அடக்கம். கட்சி பணியில் அதிகம் ஈடுபட்டதால் கல்விப் பாடங்களை முடிக்கும் கால எல்லையும் நீண்டு சென்றதுதைப் பற்றி அவர் கவலையடைந்ததாகத் தெரியவில்லை. தான் ஏற்கும் கட்சி பணிகளையோ, அல்லது பொதுவேலைகளையோ செவ்வனே செய்வதில் முன்மாதிரியாக இருக்கும் அதே வேளை, உணர்ச்சிவசப்படுவதிலும் அவசரங்காட்டுவதிலும் அவர் முன்மாதிரி என்றே கூறலாம்.

1974ஆம் ஆண்டு காலமென்று நினைக்கின்றேன். பேராதெனிய பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாணவர்கள் போராட்டத்தின்போது, ரோகன வீரசூரிய என்ற மாணவன் காவல்துறையால் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த நிகழ்வைத் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில், நடைபெற்ற மாணவர்களின் கண்டனப் போராட்டத்தைப் பற்றிய கருத்துக் கூறலில் விசுவாவிற்கும் தோழர் சிவசேகரத்திற்குமிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை தீர்க்க இருவரையும் கட்சி கிளையால் அழைத்து உரையாடிக் கொண்டிருந்தோம். அந்த வேளையில், தோழர் சிவசேகரம் கூறிய கருத்துக்கு எதிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிவசப்பட்டு எழுந்து நின்ற விசுவானந்ததேவன், மிக ஆவேசத்துடன் பேசத் தொடங்கினார். (தோழர் சிவசேகரமும் உணர்ச்சி வசப்பட்டிருந்தார்)

அன்று தான் முதல் முதல் அவரது உணர்ச்சி மயத்தின் முழு உருவத்தையும் பார்க்க முடிந்தது. அதே வேளை தான் செய்வது தவறு என்று உணர்ந்தால், அல்லது தவறை சுட்டிக்காட்டினால், அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும் அவரிடம் இருந்தது.

"பல்கலைக்கழக அரசியல்" என்ற ஓர் அடையாளம் இருந்தது. இங்கு படிக்கும் பொழுது அரசியல் இயக்கங்களில் இணைந்து மாணவ அமைப்புகளில் செயற்படுகின்றவர்கள், கல்வியை கற்று முடிந்து வெளியேறிய பின்பு தங்கள் தொழிலோடு மட்டும் முடங்கிக் போய் விடுவதால், இங்கு அரசியல் பேசுகின்றவர்களுக்கு இப்படி ஒரு பெயர் போடப்பட்டிருந்தது. ஆனால் விசுவோ இதில் வேறுபட்டிருந்தார்.

1971 ஆம் ஆண்டுக்குப் பின்பு இலங்கை கம்யூனிஸ்ட் (சண்முகதாசன் தலைமை) கட்சியில் ஏற்பட்ட பிளவில் நான் முரண்பட்டிருந்தேன். காரணம், பிளவு தவிர்க்கப் படவேண்டும் என்பதும், கட்சிக் கிளை அமைப்புகளில் இருந்து கட்சியின் கடந்தகால செயற்பாடுகளைப் பற்றிய விமர்சனங்களை உயர் மட்டம் வரையும் நடத்தப்பட்டு, அதன் அடிப்படையில் முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் எனது வாதமாகும். ஆனால் இது நடைபெறவில்லை. கொழும்பு துறைமுகம் தொழிலாளர்களைக் கொண்ட கட்சிக் கிளையில் இருந்த தோழர் பெனடிக்ட் அவர்களுடன், தோழர் விசுவானந்ததேவனும் என்னை வந்து சந்தித்து உரையாடினார்கள். கம்யூனிஸ்ட் (மார்க்சிய - லெனினிய) கட்சியின் பத்தாவது தேசிய மாநாட்டை கூட்டி கட்சிக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய தலைமையை தெரிவு செய்வோம் என்ற கருத்தை என்னிடம் வலியுறுத்தியதில் விசுவின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்த் தேசிய இனங்கள் எதிர் கொள்ளும் உரிமை மறுப்பு பிரச்சினைகளை தனித்துக் கையாள வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியதில் விசுவாவின் பங்கை மறுப்பதற்கில்லை. வடக்குக் கிழக்கில் "தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி" உருவாக்கத்துடன் மலையகத் தமிழர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளின் தனித்துவத்தைக் கருதி மலையக மக்களுக்கான வெகுஜன இயக்கத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியவர் விசுவானந்ததேவன் தான். "மலையக மக்கள் இயக்கம்" உருவாக்கத்துக்கான கருத்துருவாக்கம் கண்டியில் உருவானதும் இந்த சூழலில்தான்.

தோட்டங்கள் தேசிய மயத்தோடு கம்பளை சங்கு வாரித் தோட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்காக, உணவு முதல், ஆடைகள் வரை சேகரித்து வழங்குவதிலும், இந்நிகழ்விற்கு மலையக மக்கள் இயக்கத்தால் கண்டன ஊர்வலத்தையும் கண்டனக் கூட்டத்தையும் நடத்துவதில், பேராதெனிய பல்கலைக்கழகத்தில் செயற்பட்ட 'மக்கள் விடுதலை முன்னணி'யைச் சேர்ந்த மாணவர் அமைப்பின் பொறுப்பாளராக இருந்த சாந்த பண்டார மற்றும் பல அமைப்புகளை ஒருங்கிணைக்கும் பணியிலும் விசுவின் பங்களிப்பு நினைவு கூரத்தக்கதாகும்.

கண்டி கலாச்சாரக்குழு கண்டியில் உருவாக்கப்பட்டதிலும் இந்த அமைப்பால், நடத்தப்பட்ட "நதி" சஞ்சிகை வெளிவருவதிலும் விசுவின் பங்களிப்பு மறக்க முடியாதது. "இறந்த காலம் பெற்ற நிகழ்காலம்" என்ற எனது கவிதையை படித்ததும் உடன் இக்கவிதையை குமரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகைக்கு விசுவே அனுப்பிவைத்தார். இது ஒரு நீண்ட கவிதை. இதில் சில பகுதிகள் நீக்கப்பட்டு கவிதை வெளிவந்திருந்ததைக் கண்டதும் கொதிப்படைந்த இவர், "முழுக்கவிதையும் பிரசுரிக்கவேண்டும்" என்று கடிதம் எழுதிப் பிரசுரிக்கச் செய்தார். இக்கவிதை மலையகத்தின் யதார்த்த நிலையை வெளிப்படுத்துவதாக இருந்ததே, இக்கவிதை முழுமையாக வெளிவரவேண்டும் என விசுவானந்ததேவன் விரும்பியதற்கான காரணமாகும். மலையகத் தமிழர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை புரிந்தவராக இருந்தார். அதே வேளை அரசியல் சுதந்திரமுள்ள மனிதர்களாக இவர்கள் இருக்க வேண்டும் எனவும் விசுவானந்ததேவன் விரும்பினார்.

*1983*ஆம் ஆண்டு "புதுசு" இதழில் மலையகத் தமிழர்களைப் பற்றிய கட்டுரையை விசுவா எழுதி இருந்தார். இக்கட்டுரையில் பல மாவட்டங்களில் சிதறுண்டு இருக்கும் மக்களின் பாதுகாப்புக்கருதி செறிவாக இருக்கும் சூழலை உருவாக்க வேண்டியது அவசியம் என்பதை அதில் வலியுறுத்தி இருந்தார்.

அரசியல் செயற்பாடுகளுடன் சில ஆண்டுகள் நெருக்கமாக இருந்த காலத்தில் அவரது பலத்தையும் பலவீனத்தையும் அறிய முடிந்தது. அரசியல் ரீதியான விமர்சனத்தை ஒளிவுமறைவின்றி தனது கருத்துக்களை வெளிப்படையாக முன்வைக்கத் தவறியதில்லை. பல்கலைக்கழகத்தில் அவர் தங்கி இருக்கும் விடுதியில் சக மாணவர்களுடன் அரசியல் கலந்துரையாடலை நடத்துவதற்கு என்னை பல முறை அழைத்து சென்றிருக்கிறார். இப்படி செல்லும் ஒவ்வொரு தடவையும் விடுதியில் இருக்கும் சிங்கள மாணவர்கள் இவரைக்கண்டதும் "பொடி மாவோ, பொடி மாவோ" என்று அழைப்பார்கள். இதைக் கண்டு கொள்ளாமலே விசு என்னோடு உரையாடியபடியே ஒருநாள் வந்தார். குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துகொண்டிருந்த பக்கம் திரும்பிப் பார்த்தேன். இவரை நோக்கியபடியே குரல்வந்தது. "இது என்ன விசு" என்றேன் சிரித்தபடியே, இது மட்டுமல்ல, என்னை "சுட்டா" என்றும் அழைப்பார்கள் என்றார். ஏனென்றால், நான் உருவத்தில் ஆக சிறியவனாக இருப்பதால் என்று சிரித்தபடியே கூறினார். இதுப்பற்றி அங்கிருந்த மாணவர்களிடம் விசாரணை செய்ததில் "மாசே துங்" சிந்தனையைப் பற்றி தொடர்ந்து மாணவர்களிடம் உரையாடுவதால், இதில் உடன்படாத சிலர் இப்படி அழைப்பது வழக்கம் என்றனர். அரசியல் கருத்தில் உடன்பாடு இல்லாதவர்களுடனும் நட்புறவை பேணிவருவதிலும் முன்மாதிரியாக இருந்தார் விசுவானந்த தேவன்.

தவறு என்று கருதும் விடையங்களில் விசுவானந்ததேவன், கடுமையாக தர்க்கம் செய்வார், அதே வேகத்தில் சமாதானமும் அடைவார். எதிலும் அவசரம் காட்டுவது அவரது பலவீனமாகவும், நியாயங்களை உள்வாங்கிக் கொள்வது அதற்காகப் போராடுவதும் அவரது பலமாகவும் இருந்தது.

கண்டியில் நான் இருக்கும் வரையும் என்னோடு தொடர்பில் இருந்தார். இதை நான் எழுதிக் கொண்டிருக்கும் பொழுது அவர் போட்ட சண்டையைப்பற்றி நினைவிற்கு வருகிறது. 1976 ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். மலையக மக்கள் இயக்கத்தின் கருத்தரங்கு கூட்டத்தைக் கண்டி புஸ்பதான மண்டபத்தில் நடத்திக் கொண்டிருந்தோம். இலங்கை தொழிலாளர் காங்கிரசை சேர்ந்த இருவர் இக்கருத்தரங்கை குழப்பும் நோக்கத்துடன் மேடையில் ஏற முயன்றதைக் கண்டதும், இவர்களுடன் முதல் சண்டை இட்டவர் விசுவானந்ததேவன். இவரது வாய்மட்டுமல்ல, இவரது முகமும், கைகளும், மட்டுமல்ல, முழு உடலும் இணைந்தே சண்டையிட்டுக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் நான் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தேன். இவரை சமாதானப்படுத்த பலர் முயன்றும் முடியாமற் போன நிலையில் இறுதியில் கூட்டத்தைப் பற்றி குறிப்பெடுக்க வந்திருந்த உளவுப் பிரிவில் இருந்து வள்ளிநாயகமும் சமாதானப்படுத்த முயன்றார். அது சாத்தியப்படவில்லை. இறுதியாக அந்த இருவரும் மண்டபத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பின்பே அவரது கோபம் அடங்கியது .

1976 அல்லது 1977ஆம் ஆண்டென நினைக்கின்றேன். அவருக்கு வேலை கிடைக்காமல் இருந்த காலம் என்று நினைக்கிறேன். யாழ்ப்பாணத்திலிருந்து என்னை சந்திக்க வந்திருந்தார். இரண்டு நாள் என்னோடு தங்கி இருந்த பொழுது "கடல்கடந்து எங்கையாவது சென்று வரவேண்டும் என்று தோன்றுகிறது, ஏற்பாடு செய்யுங்களேன்" என்றார். சில நேரங்களில் இனம் புரியாத உறவோடு விசுவை ஒருமையிலும் நான் அழைப்பது வழக்கம். "ஒனக்கென்ன இப்படி ஒரு ஆசை...? எங்க போகனுமென நினைக்கிற?" என்றதும் "சிங்கப்பூருக்கு" என்றார். "அடப்போனால் போகுது போயிட்டுவா" என்றேன். "டிக்கட்டை போட்டுத்தாங்க...?" என்றார். அரசியலைக் கடந்தும் ஒரு நட்புறவு நீடித்தது

1977ஆம் ஆண்டு நடைபெற்ற இனவன்முறைக்குப் பின்பு, கார்த்திகேசு மாஸ்டர் மரணத்தின் போது யாழ்ப்பாணத்தில் விசுவானந்ததேவனை சந்தித்தேன். நிகழ்ந்து முடிந்த வன்முறையை எண்ணி மாஸ்டர் மனம் நொந்து இருந்தார். இதுவே அவரது மரணத்திற்கு ஒரு காரணமாகவும் இருக்கும் என்றார் விசுவானந்ததேவன். இதற்குப்பின்பு, 1978 ஆம் ஆண்டில் ரஞ்சன் (பத்மநாபன்) என்பவரை அழைத்து வந்து என்னிடம் அறிமுகப்படுத்தி, மலையகத்தில் சிலரை இவருக்கு அறிமுகப்படுத்துமாறு விசுவானந்ததேவன் கேட்டுக் கொண்டார். வேறுபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கருத்து உள்ளவர்களுடனும் இணக்கமான உறவை கொண்டிருந்தார் விசுவானந்ததேவன்.

இதன்பின் நீண்டநாட்கள் தொடர்புகள் இல்லாமல் இருந்த நிலையில், 1983 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் விசுவானந்ததேவனிடமிருந்து கடிதம் வந்தது. இதே காலப்பகுதியில் அவரது அமைப்பு தொடர்பான துண்டறிக்கைகள் அவரிடமிருந்து கிடைத்தது. 1984 தொடக்கத்தில் NLFT என்ற அமைப்பு தொடங்கப்பட்டிருப்பதாக தகவலுடன் என்னை சந்தித்தார் வடக்கில் தோன்றிய ஆயுதக் குழுக்கள் அனைத்தும் 'தமிழீழ விடுதலை' என்ற சொல்லை உள்வாங்கி இருந்த நிலையில், சிறு வேறுபாட்டுடன் "தமிழீழ தேசிய விடுதலை முன்னணி" என்று பெயரிடப்பட்டிருந்தது. இது சூழலியல் அரசியலை வெளிப்படுத்துவதாகவே என்று நான் புரிந்து கொண்டேன்.

இதே காலப்பகுதியில் புளொட் (PLOTE) இயக்கத்தின் வதை முகாமில் இருந்து தப்பி வந்தவர்களை பாதுகாப்பளிக்கும் பணியை மேற்கொண்டார். இப்படி வந்தவர்களில் ஒருவராக நோபர்ட் என்பவரும் இருந்தார். இவர் ஒரு படைப்பாளி என்பதை நான் அறிவேன். இவர் சம்பந்தப்பட்ட இயக்கத்தின் உள் விவகாரங்களை மையமாகக் கொண்டு கோவிந்தன் என்ற பெயரில் "புதியதோர் உலகம்" என்ற நாவலை எழுதி இருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளை விமர்சித்த காரணத்தால் இவரும் கொல்லப்பட்டார் என்பதை பிற்காலத்தில் அறிந்தேன். பிற இயக்கத்தில் சேர்ந்தவர்களின் நலனிலும் விசுவானந்ததேவன் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டுள்ளார் என்பதும், இயக்கங்களுக்குள்ளும் ஜனநாயகம் பேணப்பட வேண்டும் என்பதை விரும்பினார் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதம் ஏந்தும் வரையும் மென்மையான போக்கை கடைபிடித்த பலரும், ஆயதம் ஏந்திய பின்பு அவர்களிடம் அதைக் காண முடியாமல் போனதும் யதார்த்தமாகும். ஒருவேளை ஆயுதப் போராட்டத்தை இவரது அமைப்பும் தொடர்ந்திருந்தால், ஈழப்போராட்ட களம் விசுவானந்ததேவனையும் அப்படி உருவாக்கி இருக்குமோ என எனக்குள் வினாக்கள் எழத்தான் செய்தது.

விசுவானந்ததேவன் மார்க்ஸிய சித்தாந்த அரசியலுடன், பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறை அரசியலுடன் அனுபவமுடையவராக இருந்தார். தேசிய இன விடுதலையை வர்க்கப்போராட்டத்துடன் இணைத்து வழி நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தை கொண்டிருந்தார் என்றே நான் புரிந்து கொண்டேன். ஆனால் தமிழீழம், தனிநாடு என்ற அரசியல் கருத்துக் களத்தில் பெரும் பகுதியானவர்கள் உள்வாங்கப் பட்டிருக்கும் நிலையில், இதை அடைவதற்காக ஆயுதம் ஏந்திய குழுக்கள் உருவாகி, போராட்டக்களத்தில் தாக்குதலை தொடுத்துவரும் நிலையில், மாற்று அரசியலுக்கான களத்தை உருவாக்குவது சாத்தியமாகுமா? என விசுவானந்ததேவனிடம் வினவினேன் "சற்றுக்கடினம்தான் ஆனால் சாத்தியப்படுத்தித்தான் ஆகனும்" என்றார்.

1986 காலப்பகுதியில் குடும்பத்தோடு எனது வீட்டுக்கு வந்திருந்தார். அப்பொழுது அவரது குழந்தைக்கு ஒருவயதாகி இருக்கவில்லை. அவருடன் சில தோழர்களையும் அழைத்து வந்திருந்தார். வந்தவர்களில் ரஞ்சித் என்ற மறக்கமுடியாத அது ஒரு பிஞ்சு முகம். ஏனைய ஆயுதக் குழுக்களைப் போலவே ஆயுதப் பயிற்சிக்கு ஆயத்தமாகி இருந்ததைக் காண முடிந்தது. மக்களை நேசிக்கும் விசுவானந்ததேவன் போன்ற தோழர்கள் எடுத்த முடிவுகள் சரி, தவறு என்பது, அரசியல் ரீதியான விவாதத்திற்கும், ஆய்வுக்கும் உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இவர் தலைமையேற்ற அமைப்பின் வெளியீடுகளில், ஆயுதக்குழுக்கள் நடத்தும் மரண தண்டனையை கண்டித்ததும், இது தவறான செயற்பாடு என்பதை மக்களிடம் எடுத்துச் சொல்லியும், அதேவேளை ஆயுதம் ஏந்தி இருக்கும் அனைத்துக் குழுக்களும் ஐக்கியப் படவேண்டும் என்றும் வலியுறுத்தியது. அனைத்துக் குழுக்களும் இணைந்து தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை சரியான திசைவழியில் இட்டுச் செல்லவேண்டும் என்று விசுவானந்ததேவன் விரும்பி இருந்தார் என்பதை அவர் செயற்படும் அமைப்பின் வெளியீடுகளும் வெளிப்படுத்தியதைக் காணமுடிந்தது.

பதினைந்து ஆண்டுகள் என்னோடு தொடர்பில் இருந்த காலமும், ஒரே அரசியல் களத்தில் பத்தாண்டுகள் செயற்பட்ட நாட்களில் பல சந்தர்ப்பங்களில் கட்சிக்குள் கருத்து முரண்பாடுகளும் வாத விவாதங்களும் நிகழ்ந்துள்ளன. இவைகளை பகை முரண்பாடுகளாக விசுவானந்ததேவன் எடுத்துக் கொண்டதில்லை. கண்டியில் இருந்த காலத்தில் கட்சித் தோழர்களுடன் விசு தோழமையுடன் இருந்துள்ளார்.

1986 தொடக்கத்தில் என்னை அவர் இறுதியாக சந்தித்ததாக ஞாபகம். ஈழப்போர்க்களம் இழந்தவைகள் அதிகம். அதிலும் எதிரிப்படைகளின் துப்பாக்கி வேட்டுகளில் வீழ்ந்தவர்கள் பல்லாயிரம் என்றால், சகோதர இயக்கங்களை சேர்ந்த போராளிகளை, கொன்று குவித்த எண்ணிக்கை எத்தனை ஆயிரம்? என்று கொன்று குவித்தவர்களுக்குக் கூட தெரிந்திருக்காது.

எந்த நோக்கத்திற்காக இக்களத்திற்கு வந்து, எந்தப் போராட்டக்களம் சரியான தடத்தில் பயணிக்கவேண்டும் என்று எண்ணிச் செயற்பட்ட விசுவானந்ததேவன், போராட்டக் களத்தில் நிகழ்ந்து வரும் நிகழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடூரத்தனத்தின் போக்கை அளவிட்டதில் தவறு நிகழ்ந்து விட்டதா? என்ற ஐயம் எழுகிறது. காரணம், களத்திலிருந்த ரெலோ இயக்கப்போராளிகள் படுகொலை செய்யப்பட்டு, அதன் தலைவர் சிறீசபாரட்ணம் சுட்டுக்கொல்லப்பட்டதும், ஏனைய இயக்கங்களுக்கு, புலிகளால் தடைவிதிப்புப் போன்ற நிகழ்வுகள் இக்காலப் பகுதியில் தான் அரங்கேறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

நட்புறவையும் பகை உறவையும் இனங்காணத் தெரியாதவர்கள் கையில்தான் ஆயுதங்கள் இருந்தன. துப்பாக்கி கிடைத்ததும், அதுவே அரசியல், வேட்டுகளே விடுதலை என எண்ணியவர்கள் முன், விசுவானந்ததேவனின் அரசியலுக்கும் துப்பாக்கி வேட்டுகள் தானே விடையாக இருக்கமுடியும்?

விசுவானந்ததேவன் கல்விக்காலம் முதல் இறுதிக்காலம் வரையும் பொதுவாழ்க்கையில் உணர்வு பூர்வமாக தன்னை ஈடுப்படுத்தியவராவர். விசுவானந்ததேவனைப் போன்றவர்களைக் கொன்று குவித்தவர்களும் சரி, கொலைகளுக்குக் காரணிகளாக செயற்பட்ட இயக்கங்களும் இன்று இல்லாமல் போனதும் மகிழ்சிக்குரியதுமல்ல.

1986ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் விசுவானந்ததேவன் இலங்கையில் இருந்து படகுமூலமாக தமிழகத்திற்கு வரும் வழியில் இலங்கை இராணுவத்தால் வழிமறித்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்ற செய்தியே எனக்குக் கிடைத்தது. அதனால் இந்நிகழ்வை மையமாகக் கொண்டே "விசுவானந்தன் நினைவில்..." என்ற தலைப்பில், 2009ஆம் ஆண்டில் வெளிவந்த "நிசங்களின் சத்தம்" என்ற எனது கவிதைத் தொகுப்பில் கவிதை இடம் பெற்றுள்ளது. ஆனால் அண்மையில் கிடைத்தத் தகவலின் படி, நெடுந்தீவில் இருந்து இருபது பொதுமக்களுடன், விசுவானந்ததேவன் மற்றும் அவர் இயக்கத்தை சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு தோழர்களோடு புறப்பட்ட மீன்பிடி ரோலர் காணாமல் போனது என்றும், அது மூழ்கிப் போகவில்லை என்றும், ஆயுதக்குழுக்கள் ஒன்றால் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் நம்பப்படுகிறது. கவிதையில் இடம் பெற்ற செய்தி தவறான தகவலால் இடம் பெற்றுள்ளதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

விசுவானந்ததேவன், திரிகோணமலையை சேர்ந்த நோபர்ட் போன்றவர்களின் மரணமும், தேவையற்று நடத்தப்பட்ட ஆயிரக்கணக்கான படுகொலைகளும் இனி எந்த ஒரு போராட்டக் களத்திலும் நடைபெறக்கூடாது. நடத்தப்பட்ட மிகக் கொடூரமான படுகொலைகளை வன்மையாகக் கண்டிக்க வேண்டும். இதைக் கண்டிக்காத, இதைத் தடுத்து நிறுத்த முன்வராத சமூகத்தை என்னவென்று அடையாளப் படுத்துவது? ஆயுதக் குழுக்களால் படுகொலை செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியலும், நினைவுபடுத்தும் பணிகளும் செய்யப்பட வேண்டும். விசுவானந்ததேவனின் நினைவு நூல் இதற்கோர் முன்மாதிரியாக அமையட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வ.அழகலிங்கம்

# விசுவானந்ததேவன்

விசுவானந்ததேவனும் நானும் 14 வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தோம். வாழ்ந்தோம் என்று சொல்வதிலும் பார்க்க, கொம்யூனிச விரோதத்திற்கு எதிராகக் களத்தில் நின்றோம் என்பதுதான் உண்மை. விசுவானந்ததேவன் இலங்கையிலே மார்க்சியப் பதாகையை உயர்த்திப் பிடித்த மனிதன். எங்கு பார்த்தாலும் கொம்யூனிச விரோத சூறாவளியும் சுனாமியும் காட்டாறும் கனமழையும் எரிமலைக் குழம்பும் எயிட்ஸ்சும் ஒருசெக்கன்கூட ஓயவிடாது மொய்த்துப் பிடித்த வேளையில், செங்குத்தாகத் தான் உயர்த்திப்பிடித்த அந்தப் பதாகையை ஒரு பாகை கூடச் சரியவிடாமல் போராடி அதற்காகவே கொலை செய்யப்பட்டவர். உலக சோசலிசம் என்ற சாசுவதசமுத்திரத்தில் கலக்கும் நதிகளின் சிற்றோடையொன்றில் சறுக்கிவிழும் அதியற்புதமான தற்செயல் வாய்ப்பதென்பது ஒருசில மனிதர்களுக்கே கிடைக்கும். தினமும் அந்தக் கொம்யூனிச சிற்றோடையில் குளித்து முழுகுவது பரவசம். பேரானந்தம். கொம்யூனிசம் எவ்வளவு பெரிய பொக்கிசம். அதற்கு உலக ஒட்டுமொத்த உற்பத்தியான 57 ட்றில்லியன் டாலர் ஈடாகுமோ? அதை தன்னகத்தே சேகரித்த விசுவானந்ததேவனின் பெறுமதி அது. ஈடு இணையற்றது. நிழலின் அருமை வெய்யிலிலே தெரியுமென்பார்கள். தொழிலாளர் தலைவர்களான அண்ணாமலை, விஜயானந்தன் போன்றவர்களைக் கொன்றதால் கந்தக பூமியாகிப் போன யாழ்ப்பாணத்தில் கொம்யூனிசக் குளிர்நிழலின் அருமை கோடையிலே வீசுகின்ற கொம்யூனிச மந்தமாருதத்தின் அருமை தெரியும் நாள் எந்நாளோ? எல்லாமே மாறும். கண்ணை மூடி முழிப்பதற்குள் காட்சி வேறாகிவிடும். இன்று இருப்பது என்றோ ஒரு நாள் நேர் எதிராகி விடும் என்பது நிஜம். நிராகரிக்க முடியாத நியதி. அந்த நம்பிக்கையே எம்மை எந்நாளும் சுதாகரிக்க உதவி புரிந்தும் நித்தியமும் நிரந்தரமாகவும் வரும் நித்திரையில்லாத இரவுகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலைக்கு அழைத்துச் செல்லாமல் தடுத்துவிடும். வாழ்வு பிறப்பில் வரும். வளங்கள் பிறகு வரும். தாழ்வு செயலில் வரும், தாண்டுவதற்குள் மரணம் வரும் என்பார்கள். அதீத தனிமைப்படுத்தலின் உக்கிரத்தில் இருந்து தப்புவதற்காகச் சந்தர்ப்பவாதிகளோடு ஏற்படுத்திய ஒவ்வொரு தற்காலிகக் கூட்டும் எண்ணிய இலக்கை அடையமுன்னரே வெடித்துச் சிதறிவிடும். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்' என்பார்கள். விசுவானந்ததேவனின் மனத்திண்ணம் கொஞ்ச நஞ்சமில்லை. வந்து போன சோதனைகள், அம்மிகளைப் பறக்க வைத்த ஆடிக்காற்றுக்கள். கழுகுகளின் சிறகொடித்த சூறாவளிகள். சின்னக் குடைகளின் கம்பிகளை ஒடித்த சீற்றப் புயல்கள். ஒல்லித் தேங்காயின் துணைகொண்டு சமுத்திரத்தைக் கடக்க முற்பட்டவர்கள். முன் வந்த சுனாமிகள், சுக்கான்கள் சுழல் மூழ்கும் சிக்கல்கள். அழவில்லை. சிரிக்கவில்லை. பரமசிவன் வரத்திற்குப் பிரார்த்திக்கவில்லை. விளங்க முயற்சிப்பதற்கு முற்றுப் புள்ளி வைக்கவில்லை. வேறு வழி இருக்கவில்லை. புரட்சிவாதிகள் பொறுமைசாலிகளாக இருப்பது முன்நிபந்தனையாகும். அராஜகவாதிகளிலிருந்து அவர்களை அது ஒன்றுதான் வேறுபடுத்திக் காட்டும்.

## முதற்சந்திப்பு

நான் *1965* இல் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியிலிருந்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு உயர்தர வகுப்புக்கு வந்து சேர்ந்தேன். அப்பொழுது விசுவானந்ததேவன் சாதாரண வகுப்பு. நான் இலக்கிய மன்றத்தில் பேசி அல்லது பட்டிமன்றத்தில் கலந்து கொண்டதன் பின்பு, அதை வழக்கமாக வெளியில் நின்று பார்க்கும் விசுவானந்ததேவன் வந்து என்னோடு கலந்துரையாடுவார். அப்பொழுது எனது தமிழ் ஆர்வமே விசுவானந்ததேவனோடு உறவை ஏற்படுத்தியது. அப்பொழுது எனது அவா பாரதி போன்றோ, சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை போன்றோ, அறிஞர் அண்ணாத்துரை போன்றோ அன்றேல் கிருபானந்தவாரியார் போன்றோ தமிழிற் புலமை பெறவேண்டும் என்பதே. திட்டிலும் தமிழ் திட்டு. அதுவே எனக்குத் தேவகானம். அது பேரின்பம் தரும் என்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாதர். எங்களூர் படிக்கும் வட்டங்கள் அண்ணாத்துரை வாதிகளாகவும் சேதுப்பிள்ளை வாதிகளாகவும் பிரிந்து வாதவிவாதங்களில் ஈடுபடுவது நாளாந்த நிகழ்ச்சிகள். விசுவானந்ததேவன் தமிழ்ப் பேச்சுப் போட்டிகளில் பங்குகொண்டு பரிசில்கள் எடுப்பார். விசுவானந்ததேவன் சிறுவகுப்பில் 'பச்சைக்கிளி' பற்றிப் பேசி முதற்பரிசு எடுத்ததால், அவரைப் 'பச்சைகிளி விசுவானந்ததேவன்' என்றே அழைப்பார்கள். இன்றைக்கும் அந்த அடைமொழியை அவரை அடையாளப் படுத்தப் பாவிப்பதைக் கேட்டிருக்கிறேன். நான் *1956* இல் இருந்தே என்னைக் கொம்யூனிஸ்டாக அடையாளப்படுத்தினேன். அது அக்காலத்தைய வடமராட்சியின் மோஸ்தர். *1956* தேர்தலிற் பொன்.கந்தையா கேட்டபொழுது பொன் கந்தையா சார்பு நோட்டீஸ் ஒட்டுபவர்களுக்கு பிறகால் நானும் அள்ளுப் படுவேன். அப்பொழுது கொம்யூனிசம் வெறும் கர்ண பரம்பரைக் கதையும் வாய்மொழிப் பாடமும்தான். ஒரு கொம்யூனிச செவ்விலக்கியப் புத்தகத்தையாவது கண்ணாற் கூடக் கண்டது கிடையாது. நான் கேள்விப்பட்ட அற்ப விடயங்களை விசுவானந்ததேவன் கதைக்க வரும்பொழுது மீட்டுருப் போடுவேன். அப்பொழுதெல்லாம் விசுவானந்ததேவன் கொம்யூனிசம் பற்றி எனக்கோ எம்முடன் சேரும் நண்பர்களுக்கோ ஏதும் கதைப்பது கிடையாது. ஏறத்தாள ஒரு வருடத்திற்கு மேலான பிறகு ஒரு குண்டு போட்டது போல, குருஷேவின் போலிக் கொம்யூனிசம் என்ற புத்தகத்தைத் தந்து வாசிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதுவரை ஊரே மொஸ்கோ கொம்யூனிசம், பீக்கிங் கொம்யூனிசம் என்று பிரிந்து கோடை இடிபோன்ற குதர்க்கங்களில் ஈடுபட்டதைப் பலமுறை நான் சந்தித்த போதும், அது எனக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. இதன் பின்பு விவாதங்களிலே சமர்ப்பிக்கப்படும் ஆதாரங்களையும் நியாங்களையும் கூர்ந்து கேட்க முயன்றேன்.

சில வருடங்களுக்குப் பிறகு கல்லூரியில் நாங்கள் கொம்யூனிஸ்டுகளாக அடையாளப்படுத்தப்பட்டு, விசுவானந்ததேவன் அடிக்கடி காரசார விவாதங்களில் ஈடுபட்டு அதிபரால் தண்டிக்கப்பட்ட பிறகு, விசுவின் தந்தையாருக்குச் செய்தியெட்டியது. நான்தான் விசுவைக் கெடுத்ததாகவும், என்னுடன் விசு கூடக் கூடாதென்று அவரால் கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிக்கப்பட்டது. எந்தவித உண்மையோ ஆதரமோ இல்லாத இந்தச் செய்தியைப் பற்றிச் சிறிது கூறுவது பொருத்தமாகும். ஒரு தனிமனிதனை இன்னொரு தனிமனிதன் கெடுக்கவோ மாற்றவோ முடியாது. அப்படிச் செய்யக் கூடியதாக இருந்தால் இலங்கையில் எப்பவோ சோசலிசப் புரட்சி வந்திருக்க வேண்டும். நாமெல்லாம் அந்தக் காலத்தினதும் சூழலினதும் நிர்ப்பந்தத்தின் விளைபொருட்கள். அப்பொழுது வடமராட்சி கொம்யூனிஸ்டுகளின் கைகளிலிருந்தது. உடுப்பிட்டிக் கிராமசபைத் தலைவர் ஆர்.ஆர். தர்மரத்தினம் என்ற சமசமாஜத் தலைவர். வல்வெட்டித்துறை நகரசபைத்தலைவர் திருப்பதி என்ற கொம்யூனிஸ்ட். பருத்தித்துறை மாநகரத் தலைவர் சேனாதிராசா என்ற இன்னுமொரு கொம்யூனிஸ்ட். நெல்லியடி நகரசபைத்தலைவர் சிவகுருநாதன் என்ற மற்றுமொரு கொம்யூனிஸ்ட். வடமராட்சியிலே தமிழிசவாதிகள் வேரூன்றுவதற்கு மிகக் கஷ்டப்பட்டதோடு, கனகாலம் எடுத்தது. 1977 ஆம் ஆண்டு சிறுபான்மைத் தமிழர் ஒருவரைத் தேர்தலிற் போட்டியிட வைக்க வேண்டுமென்ற பிரச்சனை மேலெழுந்தபொழுது சிறுபான்மைத் தமிழர் எண்ணிக்கை அதிகமான கோப்பாய் தொகுதியிற் போட்டியிட வைக்க வேண்டும் என்ற பல பிரேரணைகள் வந்த பொழுது, படுகொலை செய்யப்பட்ட தமிழர்விடுதலைக் கூட்டணித்தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் விவாதம் நாம் உடுப்பிட்டித் தொகுதியிற் கேட்டால் மாத்திரம்தான் வெல்வோம். அது கொம்யூனிஸ்ட் பொன். கந்தையா வென்ற தொகுதியாகும். அதன்பிரகாரமே ஒருகாலமும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கத்தவராக இருந்திராத இராசலிங்கம் தேர்தலில் நிறுத்தப்பட்டு வெற்றியீட்டப்பட்டார்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் நிறையக் கொம்யூனிஸ்டுகள் இருந்தார்கள். சமசமாஜக் கட்சியின் இளைஞர் அமைப்புச் செயலாளர் எமது வகுப்பு. கொம்யூனிஸ்ட் கட்சியின் வடமாகாணப் பேராளர் ஒருவர் மாணவராக இருந்தார். சீனக் கொம்யூனிசத்தை எமக்கு அறிமுகப்படுத்திய யோகேந்திரநாதன் எமக்குச் சீனியர். பேரதேனியா இடதுசாரி மாணவர் சங்கப் பிரதிநிதிகளில் ஒருவரான மார்க்கண்டு எமக்கு சீனியர். நூற்றுக் கணக்கான கொம்யூனிஸ்டுகள் கல்லூரியில் இருந்தனர். கொப்பி அட்டைகளின் பின்மட்டையில் அரிவாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தியல் சின்னத்தையும் நட்சத்திரச் சின்னத்தையும் விதம் விதமாகவும் வினோதமாகவும் மாணவர்கள் வரைவதிலே போட்டி போடுவார்கள். பிலிப் குணவர்த்தன தனக்கு நிரந்தரச் செயலாளராகத் தரவேண்டும் என்று பண்டாரநாயக்காவை நிர்ப்பந்தித்துப் பெற்ற நிரந்தரச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை, வடமராட்சியைச் சேர்ந்தவர். அன்றைய தேர்தற் கொமிசனராக இருந்தவர் வடமராட்சியைச் சேர்ந்த சமசமாஜிஸ்ட். வடமாகாணம் முழுவதும் சுருட்டுத்தொழிற்சங்கம் தொடக்கம் முழுத்தொழிற் சங்கங்கங்களையும் அமைத்த தர்மகுலசிங்கம், வடமராட்சி. பீட்டர் கெனமனது வீட்டுப்பணி அமைச்சின் கீழ் இயங்கிய வீட்டுப்பணிக் கூட்டுத்தாபனத்தொழிற் சங்கத்தலைவர், வடமராட்சி. 1964 இல் சமசமாஜக் கட்சி சிறிமா அரசாங்கத்தோடு கூட்டுக்குப் போவதை ஆதரித்த ஒரேயொரு தமிழர் தர்மரத்தினம், வடமராட்சி. என்.எம். பெரேரா நிதிமந்திரியாக இருந்த பொழுது வடமாகாண கிறீன்லேஸ் பாங்க் முகாமையாளர் வடமாராட்சியைச் சேர்ந்த சமசமாஜிஸ்ட். 'விசுவானந்ததேவன்' என்ற நின்ற வெள்ளத்தை, வந்த வெள்ளம் அள்ளிக்கொண்டு போனதேயொழிய, ஏதும் வசியமந்திரம் போடவில்லை. உண்மையிலே இது பல்கலைக்கழக சமூகவிஞ்ஞான ஆய்வுக் கட்டுரைக்கான ஒரு விடயமாகும். வுடமாகாணத் தொழிலாளர்வர்க்க வரலாறும் பொருளாதார வரலாறும் இன்னும் ஆய்வு செய்யப்படாத ஒன்றாகும்.

தமிழ் தொழிலாளர் பிரதிநிதிகளான தர்மகுலசிங்கம், பொான் கந்தையா, காராளசிங்கம், ஏ.வைத்திலிங்கம், பாலா தம்பு, வி.பொன்னம்பலம், சண்முகதாசன் போன்றவர்களில் தத்துவரீதியில் பலம்வாய்ந்தவர் காராளசிங்கமாகும். தர்மகுலசிங்கமும் பொன். கந்தையாவும் உதாரண நடைமுறைக் கொம்யூனிசத் தலைவர்களாகும். பொன் கந்தையா ஸ்டாலின்வாதி என்ற கறை உள்ளவர். ஆனால் தர்மகுலசிங்கம் அப்பழுக்கற்ற தொழிலாளர் தலைவர். அவரது வரலாற்றைத் தமிழிசவாதிகள் மண்போட்டு மூடி அவரைப் பற்றி அறிய விடாது செய்து விட்டார்கள். பல வருடங்களுக்கு முன்னர் பெர்ளின் தமிழரசன் அவரைப் பற்றிய அகழ்வாராச்சியில் ஈடுபட்டுச் சிறிது வெற்றியையும் பெற்றிருந்தார். டென்மார்க் கரவைதாசன் அவரைப்பற்றி அந்நாள் பிரதேச வாதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையோடு இயற்றிப் பாடிய பாடலொன்றை வைத்திருந்தார். அவரோடு வாழ்ந்த பரம்பரையில் கடைசியாக தமிழ் ரைம்ஸ் இராசநாயகம் இலண்டனில் வாழ்கிறார். கால தாமதமின்றி எதையும் அறிய முற்பட வேண்டும். தர்மகுலசிங்கம் சமசமாஜக் கட்சி சிறிமாவோடு கூட்டுச் சேருமளவுக்கு உருக்குலைய முன்னர் மரணித்துவிட்டார். அவர் அரசியல் ரீதியிற் தவறு செய்வதற்கு வாய்ப்பேதும் இருக்கவில்லை.

இந்தப் பிரதேசத்தின் இன்னொரு சிறப்பு, முதன்முதல் விண்வெளிக்குச் சென்ற வானியல் விஞ்ஞானி யூரி ககாரின் இப்பிரதேசத்திற்கு வந்திருந்தார். கொம்யூனிசத் தலைவர்களான என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர் டி.சில்வா லெஸ்லி குணவர்த்தனா, விவியன் குணவர்த்தனா, டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, பீற்றர் கெனமன், பி.வை.துடாவை என்று ஒரு கொள்ளைப்பேர் இப்பிரதேசத்திற்குப் பலதடவை வந்து உரை நிகழ்த்திய அடிச்சுவடு ஆழப் பதிந்த பிரதேசம். யூரி ககாரின் கம்பர்மலைக்கு வந்த நேரத்தில், கம்பர்மலைக்கு மின் இணைப்புக் கிடையாது. தொலைபேசித் தொடர்பு கிடையாது. தபாற் கந்தோர் கிடையாது, சந்தை கிடையாது பாடசாலை கிடையாது. கார் கிடையாது, றேடியோ கிடையாது. மேசைக்காரர் கிடையாது. 'மேசைக்காரர்' என்ற பதம் எமது பரம்பரைக்கே தெரியாது. மேசையில் இருந்து சாப்பிடும் வசதி படைத்த வர்க்கத்தைக் குறிப்பிடும் சொல். அதிகமாகக் கிறீஸ்தவக் குடும்பங்களும் மலாயன் பென்சனியர் வீடுகளுமே மேசையில் இருந்தது சாப்பிடும் வர்க்கம். இவர்கள் குத்தகை வாங்க, வட்டிக்காசு வாங்க பட்ட கடனை இறுக்க, அறுவடை நெல்லின் வாரப்பங்கை இறுக்கவென்றுதான் செருப்போடும் குடையோடும் எழுந்தருளுவார்கள். விவசாயத்தில் விஞ்ஞானம், 1956 க்குப் பின்புதான் புகுந்தது. அதுவரை அத்தமுறைச் சமூக உற்பத்தி முறை. உபரி உற்பத்தியைப் பெரிதாக உணர முடியாது. உபரி உற்பத்தி இல்லையென்றால் பண்டம் இல்லை. பண்டம் இல்லையென்றால் முதலாளித்துவம் இல்லை. எழுபதுவரைக்கும் எந்தவொரு வங்கியும் இல்லாததால் மூலதனம் விவசாய உற்பத்தியில் புகவில்லை. முதலாளித்துவம் வட்டுக் கத்தரிக்காய் ஆய்வதற்குக் கொக்கத்தடி கட்டும் நிலையிலும்தான் இருந்தது. முதலாளித்துவம் அல்லாத வர்க்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்சிய வலிமை கொண்டதாக இருந்தது.

*பீலிபெய் சாகாடும் அச்சுஇறும்; அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெயின்*

மயில் இறகைக் கூட வண்டியில் அதிகமாக ஏற்றினால் வண்டியின் அச்சாணியை உடைத்து விடும்.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. பலவீன எதிரிகளும் எண்ணிக்கையில் அதிகரித்து விட்டால் எந்தப் பெரிய பலவானையும் தோற்கடித்து விடுவார்கள்.

தொழிற்துறைப் பாட்டாளிகள் இல்லாவிட்டாலும் *சமுதாயம்* துருவப்படுத்தப்பட்டே இருந்தது. விசுவானந்ததேவனோ அன்றி, மற்றைய தொழிலாளி வர்க்கப் பிரதிநிதிகளோ தற்செயலின் பிரசவமல்ல. கால வெளி *சமுதாயப்* புறநிலையின் வார்ப்படங்கள்.

All our lives we fought against exalting the individual, against the elevation of the single person, and long ago we were over and done with the business of a hero, and here it comes up again: the glorification of one personality. This is not good at all. I am just like everybody else.

- Vladimir Ilyich Lenin

அனைத்து நம் வாழ்வில் நாம் தனிப்பட்ட மனிதர்களை உயர்த்திக் கொள்வதற்கு எதிராகப் போராடினோம். வெறுமனே தனிப்பட்ட நபர் ஒருவரை உயர்த்துவதற்கு எதிராகப் போராடினோம். கனகாலங்களுக்கு முன்பே நாங்கள் ஒரு தனிமனிதரை ஹீரோ ஆக்கும் வணிகவேலைகளுக்கு எதிராக மிக அதிகமாகவே செய்தோம். மற்றும் ஒருவரின் ஆளுமையைப் பெருமைப்படுத்துவது மீண்டும் மீண்டும் வரும். இது நல்லதே அல்ல. நான் மற்ற எல்லோரையும் போன்ற ஒரு மனிதனே.

-விளாடிமீர் இலிச் லெனின்

**பெரதேனியா**

*1969* பிற்பகுதியில் நானும், *1970* இன் பிற்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவானந்ததேவனும் பெரதேனியா பல்கலைக்கழகத்தில் புகுமுகமானோம். அந்தப் பல்கலைக்கழகத்தின் புவியியலும் சமூகவியலும் அற்புதமானவை. அதன் சூழல் அழகும் அதற்குக் கிடைத்த அந்தஸ்தும் மெச்சத் தக்கவை. அது சுற்றிவரத் தோட்டத் தொழிலாளர் என்ற புரட்சிச் சமுத்திரத்தால் சுற்றிச் சூழப்பட்டு இலங்கையின் வடிகட்டின புத்திசாலிகள் செறிந்த ஒரு தீவு. ஏறத்தாள முப்பதினாயிரம் பேர் விடுதிகளில் வாழ்ந்து அது சதுர கிலோமீட்டருக்கு எவ்வளவு பேர் என்று கணக்குப் பார்த்தால் அது உலகின் அதிகூடிய சன அடர்த்திப் பிரதேசமாகி விடும். உலகின் மற்றைய சன அடர்த்திப் பிரதேசங்களோ வாழ்வின் அத்தனை வர்க்கத் தட்டுகளால் ஆனது. பேராதனையோ மாணவர் சமூகமும் பேராசிரியர் சமூகமும் மாத்திரம் செறிந்து வாழ்ந்த பிரதேசம். இன்னும் கறாராகச் சொன்னால் எதிர்கால நாட்டின் ஆளுனர்களும் தலைவர்களும் நிர்வாகிகளும் நீதவான்களும் படைத் தலைவர்களும் வங்கி முகாமையாளர்களும் விஞ்ஞானத்தின் அத்தனை பிரிவினரும் தாறுக்கும் மாறுக்கும் கலக்கும் வாழ்வு. போஸ்ற்காட்டிலே இரண்டு வரி எழுதினால் வீட்டிலிருந்து காசு கதறிக் கொண்டு வந்துவிடும். வரவில்லாமல் செலவுகள் செய்து மகிழும் கூட்டம். நடுத்தரவர்க்க வாழ்க்கையின் திமிர் அத்தனையும் மண்டிக் கிடக்கும். உருவிலிகள் எவருமே இல்லாத ஊர்வசிகளே குப்பை குப்பையாய்க் குவிந்த பூமி. பார்க்குமிடமெல்லாம் அழகு சிரிக்கும்.

1997 இல் விதானபத்திரான என்ற பல்கலைக் கழக சகமாணவரோடு தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்தது. அவர் சொன்னார் அந்தக் காலத்தில் எங்களோடு அரசியல் செய்த அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஐம்பத்தொருபேர் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள் என்று. இன்னும் ஒரு மிக எளிதானதும் திட்டவட்டமானதுமான ஓர் உதாரணத்தைச் சொன்னால் விளங்கிவிடும். 1976 இல் நான் இலங்கை கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிக்கச் சென்றிருந்தேன். சராசரி சாமுத்திரிகா லட்சணம் நிறைந்த ஓர் உருவம் திடீரென்று கை குலுக்கி, வா கன்ரினுக்கப் போவோமென்றார். அவர் எனக்கு ஒரு வருடம் சீனியராகப் படித்தவர். அபயகுணவர்த்தனா என்ற குருநாகலையைச் சேர்ந்தவர். தேநீர் அருந்திக் கொண்டிருக்கையில் அங்கு வந்த ஒருவரிடம் முனவீரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவரை வரச் சொன்னார். முனவீரா பதுளையைச் சேர்ந்த சகமாணவர். முனவீராவை என்னோடு கதைக்கும்படி சொல்லிவிட்டு, அபயகுணவர்த்தனா என்னுடைய ஆவணங்கள் காசு மற்றவை எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு சென்றார். எங்கள் இருவரது குசலம் விசாரிப்பு மற்றும் பழங்கதைகள் முடிய முன்னரே எனது பாஸ்போட்டோடு அவர் திரும்பி வந்தார். இதை ஏன் சொல்கிறேன். அந்தக்காலத்துப் பேராதனை வளாக மாணவ சமுதாய உறவு அவ்வளவு அன்னியோன்னியம் நிறைந்தது. வாழ்க்கையின் முழுமையையும் தந்தது. இனவாதம் முதலில் இந்த அன்னியோன்னியத்திற்குத்தான் ஆப்பு வைத்தது. அறிவரசர் எங்கே இருந்தாலும் அவர்களோடு நேசம் ஒன்றாயிருக்கும் என்ற குமரேச சதகப் பாடல்தான் ஞாபகத்திற்கு வருகிறது. பேராதனைப் பல்கலைக்கழகம் அறிவரசர் வாழ்ந்த இடம். ஒத்துப்போக, கூடி வாழப் பழக்கப்படுத்திய, பண்படுத்திய விடுதி வாழ்க்கையைத் தந்தது.

பேராதனைப் பல்கலைக்கழகத்து முதலாவது உபவேந்தர் டொறிக் டி சொய்சா. இவர் *1557* இல் கோவாவைப் போர்த்துகேயர் பிடித்தபொழுது மதம்மாறிய பரம்பரையைச் சேர்ந்தவர். ஒக்ஸ்போர்ட்டில் ஆங்கில இலக்கியத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். சமசமாஜக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர். இவர் உபவேந்தராக இருந்த காலத்தில் ஜப்பான் இலங்கையில் யுத்தகாலத்தில் குண்டு போட்டதற்கான நட்டஈடு கட்ட பிரித்தானியாவால் நிர்ப்பந்திக்கப்பட்டது. யுத்தத்தை அடுத்த ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் இலங்கைப் பிரதிநிதி ஜப்பானை பழிவாங்கக் கூடாது என்பதை வற்புறுத்திப் பேசினார். அந்த நன்றிக் கடனுக்காக, ஜப்பான் நட்டஈட்டை வெறும் காசாகத்தராமல் பேராதனைப் பல்கலைக்கழகத்தை ஒரு முழுநிறை பல்கலைக் கழகமாகக் கட்டித்தருவதைத் தானே பிரேரித்துக் கட்டியும் தந்தது. உலக அங்கீகாரம்பெற்ற பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரான டொறிக் டி சொய்சா சமசமாஜக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர். டொறிக் டி சொய்சா அன்றைய நூலகப்பொறுப்பாளர் தம்பையாவுடனும் தமிழ்துறையுடனும் சேர்ந்து அந்தக் காலத்தில் கிடைக்கக் கூடிய எல்லாத் தமிழ் புத்தகத்தையும் பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்திற்குப் பெற்றுத் தந்தார். அங்கே குவிந்து கிடந்த தமிழ் இலக்கியங்களைப் படித்து முடிப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிறவி போதாது. ஆங்கில இலக்கியங்களைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. நூலகத்துள் நுழைய முற்படும் பொழுதே ஐந்தடி உயரமான ரவிந்திரநாத் தாகூரின் ஓவியமொன்று கைகூப்பி வரவேற்கும். மகான்களின் போதனைகளால் போதையூட்டாமல், கலைக்குள் இலக்கியத்துள் முக்குழிக்க விடாமல், எதிர்கால சமுதாயத்தைப் பண்படுத்தவே முடியாது என்பதை டொறிக் டி சொய்சா நன்றாகவே அறிந்திருந்தார். நல்ல நினைப்புகளால் நிறைத்து நாட்களிலே ஆருயிர்களை நன்றாக அரவணைக்க ஆதரிக்க அது மன்றாடியது.

நூலகத்தைச் சுற்றி மகாவலி ஜீவநதி அரைவட்டமாக வளைந்தோடும். அதிலே நீண்டு நெடிதாக இருக்கும் மூங்கில்களிலே இராட்சத வௌவால்கள் தலைகீழாகத் தூங்கித் தவம் செய்யும். அதன் பாரம் தாங்காமல் வளைந்த மூங்கில் மன்மதன், தனது ஆயிரம் விரல்களால் மகாவலி மங்கையின் அலைக்கேசத்தைக் கோதும். 'நதியில் விளையாடிக் கொடியில் தலை சீவி நடந்த இளந்தென்றலே' என்ற சிலப்திகார அடிகளை கண்ணதாசன் எளிமையாக உருவாக்கியது ஞாபகத்திற்கு வந்து 'கொம்பு தழுவாக்கொடிகள் ஏதுமுண்டோ கூடிவாழ உயிர்கள் தானுமுண்டோ' என்று சொல்லி கீதம்பாடும்.

நூலகத்திற்கும் மகாவலிக்கும் இடையேயுள்ள 'லவ்வேர்ஸ் கோணரி'ல் மானிட மன்மதர்களின் கைவிரல்கள் கொள்ளை அழகுக் குமரிகளில் ஸ்பரிசப் பரிசோதனைகள் அத்தனையையும் செய்து, உணர்வுசார் நுண்ணறிவை உருவாக்கி, நுண்மாண் நுழைபுலம் மிக்கோர் ஆக்குவர். நூலகத்திற்கு முன்னுக்கு ஆட்ஸ் தியேட்டர். அதிலிருந்து நூறு மீட்டர் தூரத்தில் திறந்தவெளி அரங்கு. அது கிரேக்கக் கட்டிடக் கலையின் உச்சப்படைப்பான அம்பி தியேட்டரின் (amphitheater) நகல். இருக்கைகள் ஆரநீளம் மாறுபடும் பொது மையத்தையுடைய அரைவட்ட வடிவில் அமைந்து, ஆரநீளத்திற்கு விகிதாசாரத்தில் உயர்ந்து கொண்டே போய் பார்வையாளர்களின் நோக்கைப் பறப்புப் புள்ளியில் (flight point இல்) குவிய வைக்கும் அற்புதக் கலைப் படைப்பு. ஆசியாவிலேயே அதுதான் முதன்முதலாகப் படைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகச் சு.வித்தியானந்தன் 1979 ஜனவரியில் வந்தார். ஆர் இந்த சு.வித்தியானந்தன்? இவர் 1965 இல் பேராதனை விஜயவர்த்தனா விடுதியின் வார்டனாக இருந்தார். இவர் விடுதியின் அரிசி மூட்டையைக் களவாகக் காரில் கடத்திச் சென்றார். கடத்திச் சென்ற அரிசி மூட்டை ஒன்றில் ஓட்டை இருந்ததால், அரிசி வழிக்கு வழி கொட்டுப் பட்டுக் கிடக்கவே, விடுதி மாணவர்கள் 'ரோச்லைற்றை'ப் பிடித்துக் கொண்டு அரிசியைத் தொடர்ந்தனர். அது வார்டனான வித்தியானந்தன் வீட்டிற்குச் சென்றது. இரவோடு இரவாக மாணவர் சங்கத்தைக் கூட்டி, அரிசிக் கள்ளன் வித்தியானந்தனை 'வார்டன்' பதவியிலிருந்து விலக்கினார்கள். இந்தச் செய்தி அக்காலத்தில் படித்ததும் மற்றும் பிந்திப் படித்தவர்களுக்கும் தெரியும். அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி. இது பேராதனைப் பல்கலைக்கழகத்தையும் யாழ் பல்கலைக்கழகத்தையும் ஒப்பு நோக்குவதற்காக மாத்திரமே எழுதப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விசுவானந்ததேவன் காலடியெடுத்து வைத்த முதற்கணத்திலேயே அவர் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார். பதிவின் பிரகாரம் அவருக்கு 'அக்பர் நெல்' விடுதி மண்டபம் கிடைத்தது. அவர் நிர்வாகச் சம்பிரதாயங்களை முடித்துக் கொண்டு அறைத்திறப்பை வாங்கிக் கொண்டு அறை எண் 15 வந்து அறையைத் திறக்க எத்தனிக்கும் பொழுதே அறைக் கதவில் திரிசூலம் கீறப்பட்டிருந்ததைக் கண்டார். சீனியர்கள் றாக்கிங் சம்பிரதாயத்தை (பகிடி வதை) சாட்டாக வைத்துக்கொண்டு சூலத்தை விழுந்து கும்பிடும் படியும், காது இரண்டையும் கையாற் பிடித்துத் தோப்புக் கரணம் போடும்படியும் எல்லாப் பக்கத்தாலும் அவரை மிரட்டத் தொடங்கினார்கள். விசுவானந்ததேவன் உருவத்தால் சிறிய மனிதர். உள்ளமோ அதற்கு நேர்மாறு விகிதாசாரத்தில் அமைந்திருந்தது. விசு சிரிப்பதும் அழுவதுமாக நீண்ட நேரம் அமைதிகாத்துவிட்டுக் கதைக்கத் தொடங்கினார். "இலங்கைக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லையோ. கிறீஸ்தவப் பாதிரிகள் ஒரு கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைபிளும் மறுகையில் துவக்கும் வைத்துக்கொண்டு சுவிஷேசம் சொன்ன வரலாற்றிலிருந்து இப்போதான் நாம் தப்பிப் பிழைத்தோம். மறுசமயம் மாளப் போதகம் பாடித் தமிழர்களை எரித்த திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் உங்களின் பூட்டனாரோ. நான் மார்க்சியவாதி. அப்படி நான் என்னை எண்ணும்பொழுதே, மரணசாசனத்தை எழுதிப்போட்டுத்தான் எண்ணினேன். நான் சாகலாம். எனக்கு பிறகாலும் முடநாற்றம் வீசும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் போராட ஆட்கள் இருக்கிறார்கள். நல்ல நினைப்பகன்ற நாட்களிலே ஆருயிரைக் கொல்லக் கனாக் காணும் பக்தர்கட்குப் பஞ்சமேயில்லை. கடவுளை ஏமாற்றி முடிஞ்சுது. ஏமாற்றுவதற்கு ஆட்கள் அருகிப் போய்விட்டதோ... எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல எல்லாம் அறிந்த பெர்பெக் கடவுளுக்கு நான் கடவுளை ஏமாற்றவில்லையென்று கட்டாயம் தெரிந்திருக்கும்....''

பிற்காலத்தில் ஏழாம் மாடியிலும் வன்னி பங்கரிலும் நித்திரை கொள்ள விடாமல் சித்திரவதை செய்தது போல விசுவின் முதலிரவு கழிந்து கொண்டிருந்தது. நாலு மணிக்கே கதவு தட்டப்பட்டது. விசு எழும்பிக் கதவைத் திறக்கும்பொழுது, குளிர் தண்ணீர் வாளியிலிருந்து அவரின் மூஞ்சைக்குப் பறந்தது. றாக்கிங் காலத்தில் அது வழமையாக நடக்கும் ஒன்று. உடனே போய் குளித்திட்டு வாவென்று கட்டளை பிறந்தது. விசு குளித்திட்டு வரவே, ஒரு வேட்டியைக் கொடுத்து 'உடனே உடு, கோயிலுக்கு போக வேணும்' பல தடவை மிரட்டியும் விசு அசையவில்லை. திடீரென்று 'நாத்திகம் பேசி நாத்தழும்பேறிய நாயே வேட்டியை உடு என்று சொல்லுவது விளங்கவில்லையா? பூசை நேரம் முடியப் போகுது. கோயிலுக்குப் போக வேணும் வெளிக்கிடு' என்று கத்தினான் ஒருவன். 'இயமகிங்கிரரும் சித்திரபுத்திரனும் சூழ எருமைமாட்டிலே இயமன் பாசக் கயிறோடு வந்தமாதிரி நாடகத்தை ஆடுகிறீர்கள். ஏன் என் பாதத்துளிபட்டுக் கோயிலின் பாவம் தீரவேணுமோ?' என்று கேட்டுக் கொண்டே அழத்தொடங்கினார் விசு....

யாழ்ப்பாணியள் ஒரு நாளும் உண்மையைச் சொல்லிக் கொம்யூனிஸ்டுகளைத் தோற்கடித்தது கிடையாது. இவைகள் நடந்து ஏறத்தாள நாற்பது வருடங்களுக்குப் பின்பு, போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடம் கூட ஸ்ருட்காட் ஜேர்மனியில் கிருஷ்ணா என்று பிற்போக்குவாதிகளின் ஏஜண்டு, பேராதனைக் குறிஞ்சிக் குமரன் கோயில் ஐயரின் குடும்பியைக் கொம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் அறுத்தோம் என்று பொய் பரப்பிக் கொண்டு திரியிறார். கொம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிரான 'விட்டசனி தொட்டசனி' தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

சம்பவங்களுக்கு மத்தியிலே, நீர் கொழும்பைச் சேர்ந்த பீரிஸ் என்ற சீனியர் மாணவர் அதன் வழியே போகும் பொழுது விசு அழுவதையும் கதவிலே திரிசூலம் கீறப்பட்டுள்ளதையும் கண்டு விட்டார். அவர் ஒரு கத்தோலிக்கர். தமிழும் சிங்களமும் ஆங்கிலமும் சரளமாகப் பேச வல்லவர். அவரது மூளையில் இந்தக் காட்சி கிறீஸ்தவனொருவனை இந்துவாக கட்டாய ஞானஸ்னானம் செய்வது போலத்தோன்றியது. ஆங்கிலத்தில் 'இந்துவாக ஞானஸ்னானம் செய்கிறீர்களோ?' என்று அவர் கேட்டார். அவர் அங்கு நின்ற சிறிது நேரத்தில், விசு நாத்திகன் மாத்திரமல்ல, ஒரு மாவோவாதி என்பதையும் அறிந்து விட்டார். இந்தப் பகைப்புலத்திலே நாடகத்தின் திருப்புமுனை வந்து விட்டது. அவர் விசு ஒரு மாவோவாதி என்பதை மாவோவாதிகளுக்குச் சொல்லி விட்டார். எப்படி மைல் கணக்கான அலைநீளமுள்ள சுனாமி நீர் தொடர்ந்து வந்து கொண்டே இருக்குமோ அதேபோல விசுவின் அறையை நோக்கி தமிழ், சிங்கள மாவோவாதிகள், விரிவுரையாளர்கள் உட்பட வந்து கொண்டே இருந்தார்கள். இனவாதமில்லாத யாழ்ப்பாண மாணவர் ஒருவரைக் கண்ட புளகாங்கிதம். வனவாசம் நீங்கி நிடத நாட்டுக்கு நளன் திரும்பிய காட்சி.

*கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ*
*நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ - பார்பெற்று*
*மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்கு*
*ஏதோ உரைப்பன் எதிர்*

கருமேகத்தைக் கண்ட மயில்கள் எப்படிச் சந்தோசப்படும். வாடின பயிர் மழையைக் கண்டால் எவ்வளவு சந்தோசப்படும். பிறவியிலே கண்பார்வையோடு பிறந்த ஒருவன் இடையிலே குருடனாகிவிட்டு மீண்டும் பார்வையைப் பெற்றால் எவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பம். இனவாதம் சற்றேனும் மறந்தும் நாதடுமாறிக் கூட வருவது கிடையாது விசுவானந்ததேவனுக்கு. அப்படியான ஒரு தமிழ் மாணவனை இனவாதமில்லாத சிங்கள மார்க்சியவாதிக்கு தேசத்தை மீட்பதற்குக் கிடைத்த நம்பிக்கை நட்சத்திரம். விசுவின் கொலைத் துன்பமும் அப்படித்தான். புகழேந்தியின் மறுதலையாகக் கம்பன். பிறவியிலே குருடனாகப் பிறந்த ஒருவன், இடையிலே கண்பார்வை வரப்பெற்று, மீண்டும் குருடனாகி விட்டால் எவ்வளவு துன்பம். அந்தத் துன்பத்திற்கு எல்லை இருக்கிறதா? விசுவானந்ததேவனுக்கு உயிர்வாழ உரிமை இல்லாத தமிழ் ஈழம் கிடைத்து என்ன பயன்? 'செய்தவர் மனம் நோகச் செய்வினைப் பயன் குன்றும்' என்பார்கள். விசுவானந்ததேவனின் கொலை தமிழ் ஈழத்தின் சாவு மணியைக் கட்டியம் கூறியது. இதனை விளங்குவது மிக இலகுவானது. சோசலிசம் பலப்படாவிட்டால் ஜனநாயகம் பலப்பட மாட்டாது. 1977 இல் சோசலிசவாதிகள் ஒருவருமே பாராளுமன்றம் செல்லவில்லை. ஏகாதிபத்தியங்கள் உசார் அடைந்தன. தேசிய விடுதலை என்பது ஜனநாயகப் புரட்சியின் கடமைகளில் ஒன்று. இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தை மேற்கு ஏகாதிபத்தியங்கள் ஊக்குவித்ததற்கான முதற்காரணம், இந்தச் சந்தர்ப்பம் காலதாமதமாகி விட்டால் தனிச்சொத்துடமையை மீண்டும் கொண்டுவருவதற்கான வாய்ப்பு தப்பிப் போய்விடும். இலங்கை அரசியலில் பாராளுமன்றத்தில் சோசலிசத்தின் பிரதிநிதித்துவம் முற்றாகத் துடைத்தெறியப்பட்டதோடு, உலக பொருளாதாரத்தில் அரச தலையீட்டைக் கோரும் கெயின்வாதம் தோற்கடிக்கப்பட்டு, எல்லாம் தனிச்சொத்துடமை மயமாக வேண்டும் என்ற மில்டன் பீறிட்மன்னின் நிதியில்வாதம் பிரயோகத்திற்கு வந்தது. முதலிற் சிலியிலும் இரண்டாவது இலங்கையிலும் பரிசோதனை தொடங்கப்பட்டது. அரசாங்கம் எதிலுமே தலையிடக் கூடாது. எல்லாமே தனியார் மயமாக வேண்டும். சுதந்திர வர்த்தக வலயம் தொடங்கப்பட்டது. வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் அத்தனை பேரும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். றேகனும் தாட்சரும் ஆட்சிக்கு வந்து தராளமயமாக்கல் பற்றிப் புழுகித்திரிந்த காலம். 2007 செப்டம்பரில் வோல்ஸ்றீற் பொறியும் வரை தமிழ் சோசலிச விரோதிகளின் அட்டகாசம் சகிக்கவொண்ணாதது. அரச உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறாத மக்களை, அரசாங்கத்தில் தங்கியிராத மக்களை, அரசாங்கம் கட்டுப்படுத்துவது இயலாதது என்பதன் வெளிப்பாடே இலங்கை உள்நாட்டு யுத்தம்.

மீண்டும் விசுவானந்ததேவனுக்குத் திரும்புவோம். விசுவானந்ததேவனது இரண்டு நாள் உணர்ச்சி நரம்புகளை அரிவது நிறுத்தப்பட்டது. நரகம்போய் சொர்க்கம் பிறந்து. பல்கலைக்கழகம் முழுவதும் விசுவானந்ததேவனை 'மாவோ' என்றே அழைக்கத் தொடங்கினர். பாரதி என்றால் சுப்பிரமணிய பாரதியாரையே அர்த்தப் படுத்தும். அதேபோல் 'மாவோ' என்றால் விசுவானந்ததேவனையே அர்த்தப்படுத்தும். எல்லா அரசியற் கட்சிக்காரர்களும் அவரோடு கலந்துரையாடத் தொடங்கினர். தமிழரசுக் கட்சிக்காரர்களைத் தவிர. அப்பொழுதுதான் ஜே.வி.பி வளரத் தொடங்கியது. அப்பொழுது அவர்கள் 'சேக்குவேரா' என்றே அழைக்கப் பட்டார்கள்.

எங்களோடு பல்கலைக் கழகத்திற்குப் புகுந்த நீல் என்ற மாணவர் எனது விடுதி அறைக்குப் பக்கத்து அறையில் இருந்தவர். வேதியலையும் கணிதத்தையும் பாடமாக எடுத்தவர். அதிபர் இரத்தினசபாபதி மாத்தளை மத்தியகல்லூரியில் இருந்த காலத்தில் அவரிடம் படித்தவர். யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பற்றி அக்கு வேறு ஆணி வேறாகக் கற்றிருந்தார். வடமராட்சியின் மனிதப் பண்பியல் தொடக்கம், அங்குள்ள முக்கிய அரசியல்வாதிகள் அத்தனைபேரினதும் சுயசரிதையைத் தெரிந்து வைத்திருந்தார். யாழ்ப்பாண மக்களினப் புள்ளிவிபரங்களை நுனிநாக்கில் வைத்திருந்தார். கேட்பதற்கே எங்களுக்கு வெட்கமாக இருந்தது.

நீல் சேக்குவேரா அனுதாபியாக இருந்தார். விவாதம் இதுதான்: றோகண விஜயவீராவோ சண்முகதாசனோ உண்மையான மார்க்சியவாதி. சண்முகதாசன் தேர்தலில் போட்டியிட்டார். றோகண விஜயவீரா ஒருநாளும் தேர்தலில் நின்றதுமில்லை. தேர்தலைப் பகிஸ்கரிக்கும்படி சொல்வதில் ஓய்ந்ததுமில்லை. சண்முகதாசன் பாராளுமன்றவாதப் பிரமையிலிருந்து நீங்காதவர். அவர் மாவோவாதி அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது அவர் ஒரு 'சேக்குவேரா' பேப்பரிலிருந்து ஜோன் நீட் சொல்லியதை வாசித்துக் காட்டி, அதாவது அமெரிக்கக் கறுப்பு இன மக்கள் தங்களை நீக்ரோ அமைப்பென்று சொல்வதோ அல்லது தங்களைத் தொழிலாளர் என்று சொல்வதோ பலம். அமெரிக்காவின் தென்பகுதியில் ஒரு நீக்ரோ தேசத்தை அமைக்கும் கொள்கையையும் ஆபிரிக்காவுக்குத் திரும்பிப் போகும் கொள்கையையும் விட்டுவிட்டு, அவர்கள் தங்களைத் தொழிலாளிகள் என்று சொல்லி தொழிற்சங்கங்களிலும் தொழிலாளி வர்க்கக் கட்சிகளிலும் சேர்ந்து விட்டனர். அதுவே சரியான நிலைப்பாடு என்று மிலிற்றன் பத்திரிகையில் ஜோன் நீட் சொன்னது வந்திருந்தது. சண்முதாசனது சாதி விடுதலையை முன்னணியில் வைக்கும் போராட்டம் தவறானது. சாதியால் ஒடுக்கப்பட்ட தமிழர்கள் அமெரிக்கக் கறுப்பு இன மக்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தங்களைத் தொழிலாளர்கள் என்று சொன்னால், முழுத்தொழிலாளர்களின் ஆதரவும் அவர்களுக்குக் கிட்டும். ஆலயப் பிரதேசப் பேராட்டமும் தீண்டாமைக் கொள்கையும் யாழ்பாணத்துள் மட்டுப்பட்டுச் செல்லுபடியாகலாம். சிங்களப் பிரதேசங்களில் ஆயிரத்தி ஐநூறு இந்துக் தேவலாயங்கள் உள்ளன. அங்கு போக எவர்க்கும் தடையில்லை. திருகோணமலை மட்டக்களப்பில் எந்தக் கோயிலுக்குள்ளும் எவரும் போகலாம். இப்பிரதேசங்களில் தீண்டாமையுங் கிடையாது. புள்ளிவிபரப்படி திருகோணமலையிற்தான் அதிகூடிய கலப்புத் திருமணமும் அதிகூடிய போக வாழ்க்கையும் வாழ்பவர்கள். இலங்கையில் அதிகுறைந்த போக வாழ்க்கையை வாழ்பவர்கள் யாழ்பாணத்தவர். போகக் குறிகாட்டியின்படியும், வருவாய் விகிதாசார நுகர்வின்படியும், வாழ்க்கைத்தரக் குறியீட்டின்படியும், யாழ்ப்பாணமே குறைந்த போக வாழ்க்கையை அனுபவிப்பவர்களாகும். ஆதலால் சண்முகதாசன் யாழ்ப்பாணப் பிரதேசத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டதை, இலங்கை முழுவதும் பொதுமைப்படுத்துவது அரசியல் ரீதியிற் தவறானது. றோகண விஜயவீராவில் என்ன பிழை கண்டாய்? விசுவானந்ததேவன் உடுப்பிட்டியிற் கதைத்த குருஷேவின் போலிக் கொம்யூனிசமும் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் பற்றியதும் இரண்டு மாவோவாத கன்னைகளுக்குள் பொருத்தமற்றதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கிடையில் கினக்கல்லைத் தோட்டத்தில் இரண்டு தோட்டத் தொழிலாளர்களை வேலைநிறுத்தப் போராட்டத்தின் போது கொன்றுவிட்டு குப்பை லொறியில் ஏற்றிகொண்டுபோன சம்பவம் நடைபெற்றது. கினக்கெல்லைக்கு மற்றைய மாவோவாதிகளோடு சேர்ந்து இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தை விசுவானந்ததேவன் முன்னணியில் நின்று நடாத்தினார். உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியில் விட்ட கையெழுத்துப் பிரதிகள் போலப் பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்து வெளியிட்டார்.

மக்கள் சீனப் பிரசுரப் புத்தகசாலை கம்பளையில்தான் இருந்தது. ஒவ்வொரு சனி காலையிலும் காலைப்போசனம் முடிந்தபின், இருவரும் பேரூந்தில் போவோம். இரண்டு பேரும் 'பீக்கிங் றிவியூ'வின் சந்தாதாரானோம். மாவோவின் மேற்கோள்கள் கலண்டருக்குள் அக்குப்பன்சர் புத்தகங்கள், லின்பியாவோன் படங்கள், கவிதைப் புத்தகங்கள் என்று ஒரு கொள்ளை வாங்கி வருவோம். நான் மார்க்ஸ், ஏங்கல், லெனின் மற்றும் புரட்சி வரலாறு பற்றிய புத்தகங்களையே வாங்குவேன்.

அடுத்து ஜென்னிங்ஸ் என்ற ஒரு வருடம் மூத்த மாணவரோடு விசுவானந்ததேவனுக்கு நடந்த விவாதம். அவர் ஹற்றனைச் சேர்ந்தவர். அவரது நண்பர்களும் உறவினர்களும் செங்கொடிச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர் அழகாக ஆங்கிலம் பேசுவார். மிகுந்த பொறுமைசாலி. எவ்வளவு நேரமானாலும் மிகப் பொறுமையோடு கிரகிப்பார். எந்தத் தமிழரும் அவரோடு தர்க்கித்து வென்றதை நான் காணவில்லை. அவ்வளவு பெரிய தர்க்கத் திறமை வாய்ந்தவர். விவாதம்: வரலாற்றுப் பொருள் முதல் வாதம். மார்க்ஸ் ஏங்கல்ஸ் லெனினுடனான வரலாற்றுத் தொடர்ச்சியைப் பேணுவதும், முதலாம் இரண்டாம் மூன்றாமகிலத்தின் லெனின் கலந்துகொண்ட காங்கிரஸ் சம்பிரதாயத்தின் கீழ் உட்கட்சிப் பிரச்சனைகளைத் தீர்ப்பதும். கேள்வி: நீங்கள் மூன்றாமகிலத்தை ஏற்கிறீர்களா? மூன்றாமகிலத்தை ஏற்காதவர்களுக்கு எவ்வாறு லெனினோடு வரலாற்றுத் தொடர்ச்சியிருக்கும்? லெனினோடு வரலாற்றுத் தொடர்ச்சி அற்றவர்களுக்கு, எவ்வாறு மார்க்ஸ்சோடும் ஏங்கல்ஸ்சோடும் வரலாற்றுத் தொடர்ச்சியிருக்கும்? மே 15, 1943



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் ஸ்டாலின் மூன்றாமகிலத்தைக் கலைத்துவிட்டார். கவுட்ஸ்கி இரண்டாமகிலத்தைக் காட்டிக் கொடுத்த பொழுது, லெனின் மூன்றாமகிலத்தைக் கட்டினார். ஏன் மூன்றாமகிலம் நீடு வாழ்கவென்றா? அல்லது மாக்ஸ்சோடும் ஏங்கல்ஸ்சோடும் உள்ள வரலாற்றுத் தொடர்ச்சியைப் பேணுவதற்காகவா. அப்பொழுது மூன்றாமகிலத்திற்கு வெளியில் எந்த மார்க்ஸ்சிய இயக்கமும் இருக்கவில்லை. ஆம்ஸ்ரடாமில் கூடிய இரண்டரையாம் அகிலத்தை லெனின் ஏற்கவில்லை. அதிலிருந்த எவரையும் மார்க்சியவாதியாகக் கூட ஏற்கவில்லை. ஏன் ஸ்ராலின் மூன்றாமகிலத்தைக் கலைக்கும்பொழுது மாவோ தடுக்கவில்லை? உலகம் முழுவதும் மாவோவாதக் கட்சிகள் இருக்கின்றன, ஏன் உலக காங்கிரசைக் கூட்டவில்லை? றோகண விஜயவீராபோல போறவன், வாறவன் எல்லாம் தங்களை மார்க்சியவாதிகள் என்றால், மார்க்சியத்தின் பாரம்பரிய உரிமை யாருக்கு? லெனின் எழுதிய மூன்றாமகிலத்தின் சட்டதிட்டப்படி ஒரு நாட்டில் ஒரேயொரு கட்சியைத்தான் மூன்றாமகிலம் அங்கீகரிக்கும். மற்றவையெல்லாம் மார்க்சியக் கட்சிகள் இல்லை. இலங்கையிலே வானவில்லின் வர்ண ஜாலத்தில் மார்க்சியக் கட்சிகள் இருக்கின்றன. அதில் ஒரேயொரு கட்சிக்குத்தான் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனினின் பாரம்பரிய உரிமை உண்டு. இதை ஏற்காதவர்கள் எல்லாம் தொழிலாளர்களை வியாகூலப் படுத்துபவர்கள். மார்க்சியம் ஒரு நுட்பமான விஞ்ஞானம்.

சில நாட்கள் கழிய விஞ்ஞான பீட முன்றலால் நான் நடந்துகொண்டு வந்தேன். ஜென்னிங்ஸ் எதிர்ப்பட்டு 'எங்கே போகிறாய்?' என்று கேட்டார். நான், 'ஒஸ்மன் ஜெயரத்தினாவின் கூட்டத்திற்குப் போகிறேன்' என்றேன். ஒஸ்மன் ஜெயரத்தின எனது பௌதிக விரிவுரையாளர். சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர். ஜென்னிங்ஸ் சொன்னார்: 'ஒஸ்மன் ஜெயரத்தினாவுக்கு மார்க்சியத்தின் ஏ.பி.சி தெரியாது' என்.எம்.பெரேராவும் கொல்வின் ஆர் டி.சில்வாவும் சொல்லிறதெல்லாம் மார்க்சியமல்ல. என்ன மார்க்ஸ் சொன்னாரோ, அதுதான் மார்க்சியம். என்ன லெனின் சொன்னாரோ. அதுதான் லெனினிசம். 'Behave like a peradeniya undergraduate. Drink the water in the Fountin' என்று கூறி என்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனை நூல் நிலையத்திலே படிக்கும்படி கூறினான். பேராதனை நூல் நிலயத்தின் மூன்றாமாடியில் மார்க்சியப் பகுதி இருந்தது. மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் போன்றவர்களின் மொத்தப் படைப்புகளும் ரொட்ஸ்கி, மாவோ போன்றோரின் அனேக பாகங்களும், இன்னும் எண்ணுக்கணக்கற்ற அரசியல் இலக்கியங்களும் இருந்தன. அதிலே சில முக்கிய பாகங்களை முதலிற்படிக்கும் படி காட்டிவிட்டு, சஞ்சிகைப் பகுதிக்குக் கூட்டிச்சென்று சமகால மார்க்சிய சஞ்சிகைகளைக் காட்டினார். No news is better than bad news. சமுதாயத்திற்கு உண்மையைத்தான் சொல்ல வேண்டும். உண்மையை மாத்திரம்தான் சொல்ல வேண்டும். உண்மையைத் தவிர வேறொன்றையும் சொல்லக்கூடாது. வர்க்க எதிரிக்கு என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். எங்களை விசுவாசிப்பவர்களுக்கு விசுவாசமாக நடப்பது கட்டாய கடமையாகும். மாவோ சொல்கின்ற 'நூறு பூ மலரட்டும்' என்பது றபிஸ். அதிலே தொண்ணூற்றொன்பது பூ கருத்துவாதமாக இருக்கும். இயங்கியற் சடவாதத்திற்கும் கருத்துவாதத்திற்கும் ஒரு மயிரிடையே வித்தியாசம். மார்க்சியம் ஒரு நுட்பமான விஞ்ஞானம். அதைக் கஷ்டப்பட்டுக் கற்று வரலாறு சாதகமாக வருமளவும் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். ஒட்டுமொத்த சமுதாயத்தின் கடமையை என்னையோ உன்னையோ பிரதியிடுவது சாகஸவாதம். வரலாற்றுக்குக் குறுக்கு வழி கிடையாது. சிக்காலன பிரச்சனைக்கு இலகுவான தீர்வு இருக்குமென்றால், நாம் ஏன் சர்வகலாசாலைக்கு வரவேண்டும்?

ஜே.வி.பி அதீத வேகத்தில் வளர்ந்துகொண்டிருந்தது. அவர்களது சுவரொட்டிக்கலை பிரமிப்பு நிறைந்தது. றோகண விஜயவீரா பேராதனை வளாகத் திறந்தவெளியரங்கில் உரைநிகழ்த்த வரவிருந்தார். அதற்குவரும்படி நீல் விசுவானந்ததேவனிடம் சொல்லி என்னையும் அழைத்துவரும்படி கூறியிருந்தார். அப்பொழுது பேராதனையில் மழைக்காலமாக இருந்தது ஞாபகம். விசுவானந்ததேவனும் நானும் போனோம். விசுவானந்ததேவன் எந்தச் சிங்கள, ஆங்கில அரசியற் கலந்துரையாடலுக்கும் போவார். மொழிப்பலம் இல்லாத அந்தக்காலத்திலும் அங்குபோய், மிக அடக்கமாகச் செதுக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த சிலைபோல நின்று விடயங்களைக் கிரகிக்க முயற்சிப்பார். ஒருநாளும் இடைநடுவில் எழும்பி வரமாட்டார். அதுவே அவரது மாபெரும் பலத்தில் ஒன்று. ஒருநாளும் ஜே.வி.பி காரர்களைத் தொழிலாளர் பிரநிதிகள் ஸ்தானத்திலிருந்து இறக்கி வைத்தது கிடையாது. அவர்களுக்கு உலகத்தொழிலாளரின் பிரதிநிதிகள் என்ற மாபெரும் கௌரவத்தையும் அந்தஸ்தையும் கொடுத்துத்தான் கலந்துரையாடல்கள் நடைபெறும். பிற்காலத்தைய புலம்பெயர் 'தமிழ் ஐரோப்பிய இலக்கியச் சந்திப்பு'க்காரர்கள்போல, எடுத்தெறிந்தும் ஏளனம் செய்தும் ஏனோதானோ என்றும் காட்டுக் கூச்சல் போட்டுக் கதைக்க மாட்டார். நாம் இருவரும் நீலைத் தேடிப் பார்த்தோம். கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரே சனக் கூட்டம். அரங்குக்கு போக முற்பட்டோம். ஒருவர் தடுத்து, அது அங்கத்தவர்களுக்கு மாத்திரமான கூட்டம், வெளியாருக்கு அனுமதி கிடையாது என்றார். சிறிது நேரம் நீல் வரக் கூடும் என்று காத்திருந்தோம். வேறொருவர் வந்து அது சிங்களத்தில் நடக்கும் கூட்டம். உங்களுக்கு விளங்குவதற்குக் கஷ்டமாகும் என்றார். நாம் இங்கு வந்ததாக நீலுக்குத் தயவுசெய்து சொல்லும்படி கூறிவிட்டு, அடிக்கடி எமக்காகக் காத்திருக்கும் ஏமாற்றத்தோடு திரும்பிவிட்டோம்.

ஜே.வி.பியின் பேராதனை வளாகத்தலைவர் கீரவெல்லை. பிற்காலத்தில் அரசதரப்பு சாட்சியாக மாறி ஜே.வி.பியைக் காட்டிக் கொடுத்தவர். மாவோ வாதத்தின் இந்தியத் தேச விஸ்தரிப்புக் கொள்கைக்கு எதிரான போராட்டம்: அவரது விவாதம், தோட்டத்தொழிலாளர்கள் இந்தியத் தேச விஸ்தரிப்புக்காகவே இங்கு வந்தவர்கள். அவர்களது லய வீடுகளில் காந்தி, நேரு மற்றும் இந்தியத் தேசவிடுதலைத் தலைவர்களின் படங்களே தூங்குகின்றன. அவர்கள் தேசபக்தி இல்லாதவர்கள். இலங்கை அரசியற் தலைவர்களின் ஒரு படத்தைக் கூடக் காண முடியாது. அதற்கெதிராக விசு ஏதும் பெரிய விவாதத்தை வைத்தது என் நினைவில் இல்லை. நான் சொன்னேன், அவர்கள் மக்கள் சீனம் பிறக்க முந்தியே ஒல்லாந்தர்களால் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக இங்கு கொண்டு வரப்பட்டவர்கள். அப்பொழுது இந்தியா என்ற சொல்லும் பிறக்கவில்லை, சுதந்திரமென்ற என்ற சொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கவில்லை. இந்திய உபகண்டம் 94 குறுநில மன்னர்களின் ஆட்சியாக இருந்தது. அப்பொழுது ஒல்லாந்து பெரிய பணக்காரத்தேசம். இங்கிலாந்தையும் பிரான்சையும் விடப் பத்துமடங்கு பணக்கார நாடு. மேர்க்கண்டைலிசம் என்ற கொள்ளை இலாப வர்த்தகத்தைக் கண்டுபிடித்தவர்களே ஒல்லாந்து யூதர்கள். மத்தியதரைக் கடல் வர்த்தகம், ஆட்டிறியக் கடலூடன வேனிஸ் வர்த்தகம், பால்டிக் கடலூடான 'செயிண்ட் பீட்டஸ்பேர்க்' வர்த்தகம், கிழக்கிந்தியத் தீவு வர்த்தகம், அட்லாண்டிக் வர்த்தகம், எல்லாமே ஒல்லாந்தரின் கையிலிருந்தது. அந்த வர்த்தக நடவடிக்கையின் ஒரு பாகமாக இங்கு கொண்டு வரப்பட்டார்கள். முதலாவது அடிமை வியாபாரமான ஜாவா அடிமைகளை ஜாவா மன்னனோடு சேர்ந்து செய்யும்பொழுது, அவர்களைச் சிலேவ் ஐலண்டில் கொண்டு வந்து வைத்திருந்துவிட்டுத்தான், அமெரிக்காவுக்குக் கொண்டு போனார்கள். தோட்டத் தொழிலாளர்களை கங்காணி கூலிமுறை ஒப்பந்தத்தில்தால்தான் கொண்டு வந்தார்கள். அப்பொழுது அமெரிக்கப் புரட்சியோ மாபெரும் பிரெஞ்சப் புரட்சியோ நடக்கவில்லை. சுதந்திரம், சகோதரத்துவம், ஜனநாயகம் என்ற சொல்லே பிறக்கவில்லை. ஏன், தேசங்களே பிறக்கவில்லை. தேசங்கள் முதலாளித்துவ வளர்ச்சியின் பின்பே உருவானவை. தேசிய அரசமைப்பு முறை, முதலாளித்துவத்தின் கீழேயே வந்தது. தோட்டத் தொழிலாளர்கள் மேர்க்கண்டைலிசத்தின் கீழ் கொள்ளை இலாபக் கொம்பனி வர்த்தகத்தின் கீழ் குடியேற்றப் பட்டவர்கள். அப்பொழுது அவர்களது வாழ்க்கைத் தரமும், சராசரி இந்திய உபகண்டப் பிரஜைகளை விடப் பெரியது. அல்லாவிடில் அவர்கள் இங்கே நின்று பிடித்திருக்கமாட்டார்கள். தேசவிஸ்தரிப்புக் கலைச்சொல், விஞ்ஞான விரோதக் கலைச்சொல். இந்தியா என்ற சொல்லோ, மக்கள் சீனம் என்ற சொல்லோ இலக்கியத்திற்கு வராதகாலம்.

முதலாளித்துவமும் தேசங்களும் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்த பின்னர்தான் உருவாக்கம் பெற்றது. முதலாளித்துவம், தொழிற்புரட்சிக்குப் பிறகே உருவானது. தொழிற்புரட்சியின் முதலாவது கண்டுபிடிப்பே, விசை மூலம் இயங்கும் கைத்தறியாகும். முதலில் அது நீருளைகள் மூலமே இயக்கப்பட்டன. நீராவி இயந்திரமும் தானியங்கித் தொழில்நுட்பமும் பின்பே புகுத்தப்பட்டன. விசைக்கைத்தறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவில் உபரியாகப் பருத்தி உற்பத்தி செய்ததன் பின்னரே கண்டு பிடிக்கப்பட்டது. அதுவும் அமெரிக்காவிற்காத்தான் கண்டுபிடிக்கப்பட்டது. பருத்தி உற்பத்தி நீக்ரோ அடிமை வர்த்தகத்தின் உச்சக் கட்டத்தில்தான் ஏற்பட்டது. பருத்தி உற்பத்தியை ஒல்லாந்தர் அமெரிக்காவுக்கு முன்னரும், பெருந்தோட்டக் கோப்பி பயிர்ச் செய்கைக்கு முன்னரும், இலங்கையில் பரிசோதித்தனர். பருத்தித்துறைத் துறைமுகம் என்ற பெயர் அந்நாளிலேயே உருவானது. மற்றைய எஃகு உற்பத்தி நீராவிப் பேரூந்து, இரும்புப்பாதை, பெருந்தூரப் போக்குவரத்து, மோர்ஸ் கோட் தந்தி, மின்விசை, மின் வேதியல், உழவு இயந்திரம் கோதுமைச் செய்கை எல்லாமே பின்பு வந்தவை. முதலாளித்துவம் என்பது எடிசன், டன்லப் அடம் சிமித் காலம்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின் எவரும் வரவில்லை. இலங்கை சுதந்திரம் அடையும் பொழுதே, பிரஜா உரிமைச்சட்டமும் கள்ளத்தோணிச் சட்டமும் வந்தன. இந்திய - சீன யுத்தம் பிரித்தானியச் சதியால் ஆத்திரமூட்டப்பட்டது. இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்த மக்கள் சீனத்தில் எவரும் இருக்கவில்லை. மக்கள் சீன நலனைக் காக்க, சீ.பி.ஐ மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவில் இருந்தது. ஏன் மக்கள் சீனம் இந்தியத் தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடவில்லை? ரஸ்சியப் புரட்சியின் பின்பு, 14 நாடுகள் சோவியத் யூனியனை ஆக்கிரமித்தன. ஆயுதத் தளபாடங்களை நகர்த்த விடாமல் காபர் றெயில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து தடுத்தார்கள். ஒரு தொழிலாளி வர்க்க அரசு தொழிலாளி வர்க்கப் போராட்டமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஏன் மார்க்சிஸ்ட் கட்சி, மார்க்சிய சம்பிரதாயத்தைக் கடைப் பிடிக்கவில்லை? பிஸ்மார்க் பிரான்சை ஆக்கிரமித்த பொழுது, பெபெல் ஒரு மனிதனையோ ஒரு செப்புக் காசையோ ஜேர்மன் அரசுக்குக் கொடுக்க வேண்டாமென்று அறை கூவிச் சிறை சென்றார். முதலாம் உலக யுத்தத்தின்போதும் கார்ல்ஸ் லீப்னெக்ட் அதே கோசத்தையே வைத்தார். (அண்மையில் ரஸ்சியப் போர் விமானத்தை துருக்கி சுட்டு வீழ்த்திய பொழுது புட்டின் உடனடியாகப் போர்ப் பிரகடனம் செய்யவில்லை.) ஆத்திரமூட்டலைத் தோற்கடிப்பது மார்க்சியத்தின் பணியாகும். ஏன் ஒவ்வொரு மேதினத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ வாதத்திற்கு எதிரான சுலோகங்களைத் தொழிலாளர் வைக்க வேண்டும் என்று லெனின் பிரகடனப்படுத்தினார்? சோவியத் யூனியன் ஜேர்மன் ஏகாதிபத்தியத்தோடு 1918 இல் சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் போன பொழுது, றோசா லக்ஸ்சம் பேர்க் மனக்கிலேசமடைந்தார். ஒன்று, உலக போல்சவிசத்தில் ஜேர்மன் தொழிலாளர்கள் சந்தேகப்படுவர். அடுத்தது, ஜேர்மன் தொழிலாளி வர்க்கப் பலத்தில் லெனின் நம்பிக்கை இழந்து போனாரோ என்ற சந்தேகம். இந்திய முதலாளித்துவம் எவ்வளவு கொடூரமாக மக்கள் சீனத்தை அழித்தாலும், இந்தியத்தொழிலாளி வர்க்கத்தில் நம்பிக்கை இழந்தால் அவர்கள் மார்க்சியவாதிகள் இல்லை. நடுத்தர வர்க்க றடிக்கல் வாதிகள். சிங்களப் பிற்போக்குவாதிகள் எவ்வளவு தமிழ் அழிவைச் செய்தாலும், சிங்கள தொழிலாளிவர்க்கத்தின் வர்க்கப் பாரம்பரியத்தைச் சந்தேகிப்போமானால் நாம் மார்க்சியவாதிகளாக ஒரு நாளும் ஆக மாட்டோம். இதுதான் லெனினிசம். கீரவல்லை சமூக விஞ்ஞான இளம்கலை மாணவன். விசுவானந்ததேவன் பொறியியல் மாணவன். நானோ கணித, பௌதிக மாணவன். கீரவல்லைக்குத் தொழிற்துறை வரலாறோ, பொருளாதார வரலாறோ வர்க்கப் போராட்ட வரலாறோ, பெரிதாகத் தெரிந்திருக்கவில்லை. சமூக விஞ்ஞானத் துறையும் புள்ளிவிபரத்துறையும் அப்பொழுதுதான் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் இருக்கவில்லை. விரிவான பாடவிதானமும் இருக்கவில்லை. தமிழ்த்துறையில், சிவராசா என்ற 'வெற்றுக் கோம்பை'யே விரிவுரையாளர். அவர் முறமெடுத்துப் புலி அடித்த பழங்கதை பேசும் செக்கு மாடு. துன்பம் என்னவென்றால், இந்தியத் தேச விஸ்தரிப்புக் கொள்கையை விசுவானந்ததேவன் நிராகரிக்கவில்லை. நானோ அதை அங்கீகரிக்கவில்லை மாத்திரமல்ல, முற்றாக நிராகரித்தேன். இதுவே இருவருக்குமிடையே தோன்றிய முதலாவது விரிசல். அன்றிருந்தே நான் மாவோவாதத்தை லெனினின் கண்ணால் மீளாய்வு செய்யத் தொடங்கினேன்.

*1971* ஆம் ஆண்டு ஏப்பிரல் 4 ந் தேதி பேராதனைப் பல்கலைக்கழக மார்ஸ் ஹோலில் குண்டு வெடித்தது. எஸ்.பி சண்முகன் தலைமையில் பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டைக் காடாக்கப்பட்டது. அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு விடுதி அறையும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன. விசுவை, எமது பாடசாலையில் இருந்து வந்தவர்களே கிட்ட அணுக விடவில்லை. விசுவின் அறை நிறைய மார்க்சிய இலக்கியங்கள். கையெழுத்துப் பிரதிகள். மார்க்சியவாதிகளின் விலாசங்கள். என்னுடைய புத்தகங்கள் கால்வாசிதான் இருக்கும். விசு விடுதியில் வேலை செய்யும் ஒரு தோழரின் உதவியை நாடினார். நான் பேராதனைச் சந்தியில் ஒரு முஸ்லீம் பேக்கரியில் வேலை செய்யும் வீரன் என்ற தோழரின் உதவியை நாடினேன். எமக்குத் தெரிந்த தோழர்கள் அனேகர் கைது செய்யப்பட்டு விட்டனர். கட்சியின் பாதுகாப்பு எமக்குக் கிடையாதென்பது உசிதமானது. இருவரின் புத்தகங்களும் கிடங்கு கிண்டி விடுதிக்கு வெளியில் உள்ள இடத்தில் வீரன் தாட்டு விட்டார். பேராதனை வளாக மாணவர் முழுப்பேரும் பஸ்களில் கொழும்புக்குக் கொண்டு சென்று சிராபஸ்தியில் அடைக்கப்பட்டோம். இரண்டு நாட்கள் சாப்பாடு கிடையாது. ரி.பி.இலங்கரத்தினா சிராபஸ்திக்கு வந்து பயங்கரவாதிகள் அத்தனை பேரையும் சுட்டு நாற விடுவோம் என்று சூளுரைத்தார். கொழும்பிலிருந்து யாழ்பாணத்திற்குப் பேரூந்து இல்லை. இரத்மலானையிலிருந்து விமான மூலம் பலாலிக்கு வந்து விட்டோம். கொழும்பில் இருந்த உறவினர் ஒருவரிடம் காசு கடன் வாங்கினோம். நாங்கள் இருவரும் தோட்டக்காரரின் பிள்ளைகள். ஆதலால் வீட்டில் உள்ள புத்தகங்களை அப்புறப் படுத்துவது கடினமாக இருக்கவில்லை. பெற்றோருக்கு எமக்கு இருக்கும் அபாயம் அவ்வளவு தெரியவில்லை. இரண்டு மாதமாக இருவருக்கும் தொடர்பில்லை. இரண்டு மாதத்திற்குப் பிறகு விசு எனது சேமம் விசாரிக்க ஒரு சிறுவனை அனுப்பினார். தமிழர்கள் ஜே.வி.பியில் இராததால், வடமராட்சியில் ஊரடங்குச் சட்டமேயொழியத் தொல்லைகள் இல்லை. ஒரேயொரு சம்பவம்: எம் இருவரின் நண்பரான சின்னச்சோதி, தொண்டமனாற்றுப் பள்ளிக்கூடத்தில் கைக்குண்டு செய்யும்பொழுது, குண்டு வெடித்து யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பின்னாளில் சின்னச்சோதி பாண்டிபஜார் துப்பாக்கிச் சூட்டை அடுத்துப் பிரபாகரனோடு சிறை வைக்கப்பட்டவர். அவரே துரையப்பா சூட்டுக்குப் பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவுக்குத் தப்பியோடிய தமிழ் இளைஞர்களைத் தமிழ் நாட்டில் ஆதரித்தவர். தமிழீழப் போராட்டத்தின் தொடக்க நபர் சின்னச்சோதியென்றால் கூட, அது மிகையாகாது.

நிலமை சிறிது மாமூலாகவே, இருவரும் ஆண்டுக்கு ஒருக்கால் ஆவணியில் ஒருக்கால் என்று சந்தித்தோம். ஒரு தடவை எம்மூரில் சந்திரன் என்பவரோடு தற்செயலாகச் சந்திக்கவும், சிறிதளவு பேசவும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர் பொருளியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். நான் அவரோடு அதிகம் கதைக்க விரும்பவில்லை. வயதுக்கு மூத்தவர்களோடு சரிக்குச்சரி இருந்தால், 'கைம்பெண்டாடிச்சி வளர்த்த பிள்ளை' என்று சொல்லுவார்கள் என்ற அம்மாவின் சுப்பிரபாதம் மனப்பலத்தைக் குறைத்திருந்தது (traumatic effect). விசுவானந்ததேவனுக்கு அரசியல் விவாதமென்றால் செக்கென்ன சிவலிங்கமென்ன. சிறிது அளவளாவலின் பின்னரே சந்திரன் விசுவுக்குச் சொன்னார், கொம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே சாதிவெறிக்கு எதிராகப் போராடாதவன், வெளியில் என்னென்று போராடப் போகிறான்? சண்முகதாசன் உட்கட்சிப் போராட்டம் நடாத்திய பின்னரா பிரிந்து போனார்? 1903 இல் போல்ஸ்விக் மென்சவிக் பிரிந்த மாதிரியா நீங்கள் பிரிந்தீர்கள்? அப்படியொரு மாநாடு நடந்ததா? அந்த மாநாட்டின் அனுபவத்தை லெனின், ஓரடி முன்னால் ஈரடி பின்னால் என்று வெளியிட்டது போல, சண்முகதாசன் வெளியிட்டாரா? கொம்யூனிஸ்ட் கட்சியைப் பிளவுபடுத்தியது ஒரு சீனச் சதி. 1964 சமசமாஜக் கட்சி மகாநாடு நடாத்திப் பிரிந்து போனமாதிரியா நீங்கள் பிரிந்து போனீர்கள்?

சரி, கேள்வி: மாற்றம், சாதியொழிப்பு சீர்திருத்தத்தால் வருமா? புரட்சியால் வருமா? விடை, புரட்சியால். அப்படியென்றால் புரட்சியை யார் செய்வது? தொழிலாளி வர்க்கம். தொழிலாளி வர்க்கம் இப்பொழுது புரட்சி செய்யக் கூடிய பலமான வர்க்கமாக இருக்கிறதா? இல்லைப் பலவீனமாக இருக்கிறது. இந்தப் பலவீனமான தொழிலாளி வர்க்கத்தின் உணர்மையடைந்த பகுதிதானே கொம்யூனிஸ்ட் கட்சி. கட்சியின் உயர்ந்த பகுதிதானே தலைமைத்துவம். வர்க்கம், கட்சி, தலைமைத்துவம் பற்றிய பரஸ்பர உறவுகளை சமுதாயத் தாக்கத்தால் ஏற்படும் பரிணாம வளர்ச்சியை உற்பத்திச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திகளின் வளர்ச்சியும் அதனால் ஏற்படும் பொருளாதார அழுத்தங்களை உலகப்பொருளாதார அழுத்தங்களை உலக அரசியல் அழுத்தங்களை காலனித்துவம் விட்டுப்போன சுமைகளை கலாச்சாரத்தின் சித்திரவதைகளைத் தொகையிட்டுப் பார்த்தா, கட்சியைப் பிளக்கும் முடிவுக்கு வந்தீர்கள்? இந்திய உபகண்டம் ஜனநாயகத்திற்குப் பக்குவப்பட்டு விட்டதா? இங்கே, 1512 இல் மக்னகாட்டாவில் வந்தது போல் தனிச் சொத்துரிமைச் சட்டம் வந்ததா? சேர, சோழ, பாண்டியன்கள் ஆண்டாண்டு காலமாக தனிச்சொத்துரிமையையே விடவில்லை. ஓட்டொமானும் விடவில்லை. சுல்த்தான்களும் விடவில்லை. சொத்துரிமையெல்லாம் அரசனுக்கும் சத்திரியனுக்கும் திருப்பதிக்கும் சிதம்பரத்திற்கும்தான் இருந்தது. எகிப்திலே யூதமும், கிறிஸ்தவமும், இஸ்லாமும் மாறி மாறிச் சாதியை ஒழித்தனர். ஜனநாயகம் வந்ததா? ஏன் வரவில்லை? தனிச்சொத்துரிமை அங்கிருக்கவில்லை. தொழிற் புரட்சியோ முதலாளித்துவமோ வளரவில்லை. புத்தமும் ஜைனமும் மாபெரும் வெகுசன இயக்கமாகிச் சாதியை ஒழித்தார்கள். ஏன் சாதி மீண்டும் முளைத்தது? சாதி அறவே அகலக்கூடிய புறநிலைக் காரணிகள் கருப்பையில் பரிணமிக்கவில்லை. புத்தமும் ஜைனமும் குறைப் பிரசவங்கள். மாவிட்டபுரமும் குறைப் பிரசவம். யாழ்பாணத்துத் தொழிலாளி வர்க்கம் தொழிற்சங்க ரீதியில் திரண்டு பெரிய தொழிலாளிவர்க்கப் போராட்ட அனுபவங்களைப் பெற்றுவிட்டார்களா? இங்கே நவீன சமுதாயத்திற்கேற்ப ஏதாவது தொழிற்துறை ஏற்பட்டு விட்டதா? நாம் உலகச் சந்தைக்கு இங்கிருந்து ஏதாவதை ஏற்றுமதி செய்கிறோமா? இலங்கை அரசாங்கமும் உலக முதலாளித்துவமிடமிருந்து இறக்குமதி செய்வதை, தொழிற்துறைப் பொருட்களை ஏற்றுமதி செய்து ஈடுகட்டுகிறதா? இறக்குமதி செய்த பண்டங்களை விற்றுக் காசை எடுத்து கவர்ண்மென்ற் நடத்துகிறார்கள்.. முதலிற் கட்டுக் குளத்திலே நீந்திப் பழகினாற்தான் பாக்குத்தொடுவாயை நீந்திக் கடக்கலாம். கனவு காணுவதற்கு எல்லாருக்கும் உரிமை இருக்கிறது. வரலாறு என்பது ஒட்டுமொத்த வெகுசனங்களின் சிந்தனையைக் கூட்டிக்கழித்துப் பிரித்த சராசரிப் பாதையிற்தான் போகும். எந்த விண்ணன்ரை பங்களிப்பும் 'நதிங்'! சண்முகதாசன் ஒரு பன்னிரெண்டு 'வோல்ற் பல்ப்'. வரலாறு முன்னுரையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதினாற்தான், கட்சி முடிவுரையை எழுத முடியும். எவரையும் குறை சொல்லாதையுங்கோ. பேராதனையைப் போலல்லாமல், தோழமை குறைந்த உணர்ச்சி வெளிப்பாடாக அது இருந்தபோதும், அது நாம் கற்றுக்குட்டிகள் என்பதை நிறுவிக் காட்டியது. நாம் போக வேண்டிய பாதை மிக நீளமானதும், இலக்குக்கு அப்பாலுக்கு அப்பால் இருப்பதும் தெரிய வந்தது.

சில நாட்களுக்குப் பிறகு டொமினிக் ஜீவாவும் ஊருக்கு வந்தார். விசுவானந்ததேவனுக்குச் செய்தி அனுப்பினேன். அவர் வரவில்லை. ஊரில் இரவு நேரங்களில் அவர் வருவது குறைவு. டொமிக் ஜீவாவின் பேச்சின் சாரம் இதுதான்: 'சாதிச் சங்கம் அமைக்காதையுங்கோ, கொம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தவராக இருப்பதுதான் எமக்குப் பலம், நாம் ஒக்டோபர் புரட்சியைச் செய்தவர்களின் வழிதோன்றல் என்றே காட்ட வேண்டும்'

1971 ஆண்டு உலக வரலாற்றில் முக்கியமான வருடம். அதிலும் இந்திய உபகண்டத்திற்கு அதி முக்கிய வருடமாகும். 1971 ஆகஸ்ட் 15, அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் தங்கத்துக்கும் டொலருக்குமான மாற்று உறவை உடைத்த வருடம். அமெரிக்க டொலரை உலக நாணயமாக ஏற்றதன் படிக்கு, ஒவ்வொரு 15 டொலருக்கும் ஓர் அவுன்ஸ் தங்கம் அமெரிக்க அரசு தரும் என்று கையெழுத்திட்டே, அமெரிக்க டொலரை உலகம் சர்வதேச செலவாணி நாணயமாக ஏற்றது. இன்றைக்கு ஓர் அவுன்ஸ் தங்கம் என்ன விலையென்று பார்த்தால், அமெரிக்கா ஒவ்வொரு செக்கனும் எவ்வளவைக் கொள்ளையடிக்கிறது என்பதை மேலெழுந்தவாரியாகத் தீர்மானிக்கலாம். இதுவே இலங்கையில் சேக்குவேரா யுத்தம் வெடித்ததற்கும், பங்காளதேஸ் போராட்டம் வெடித்ததற்குமான காரணமாகும். ஓர் அரசியல் ஆய்வைப் பொருளாதார ஆய்விலிருந்து அணுகினாற்தான் சரியாக விளங்கிக் கொள்ளலாம் என்பதே, மார்க்சியத்தின் முடிந்த முடிபான கருத்தாகும்.

பங்காளதேஸ் விடுதலைப் போராட்டம் வெடித்த பொழுது, பேராதனைப் பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டதால் நாம் ஊரிலேயே இருந்தோம். அது இந்திய - பாகிஸ்தான் யுத்தமாக அபிவிருத்தியடைந்தது. இந்திய - பாகிஸ்தான் யுத்தத்தை எதிர்க்காமல், ஒருவர் மார்க்சியவாதியாக இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. முதலில் அது ஏகாதிபத்திய நாடு பிடிக்கும் யுத்தமல்ல என்பதை இனங்காண வேண்டும். இந்தியா ஓர் ஏகாதிபத்திய நாடாக இருந்து, பாகிஸ்தானைக் கூறு போட்டு நாடுபிடிக்கும் யுத்தமென்றால், மார்க்சியத்தின் படிக்குப் பிரச்சனை சுலபம். புரட்சிகரத் தோற்கடிப்பு வாதம்தான் நிலைப்பாடு. நிபந்தனை இல்லாமற் பாகிஸ்தானுக்கு ஆதரவு. இந்தியா தோற்க வேண்டும். பாகிஸ்தான் வெல்ல வேண்டும். இந்தியத் தொழிலாளிவர்கமும் உலகத்தொழிலாளர் முழுப்பேரும் பாகிஸ்தான் வெல்ல வேண்டும் என்றே நிலைப்பாடு எடுக்க வேண்டும். அப்படியென்றால் பங்காளதேஸ் தோன்றுவது ஒரு பிற்போக்கானது. பிரச்சனையை வரலாறு அவ்வளவு இலகுவாகவும் வெளிப்படையாகவும் எழுதவில்லை.

பாகிஸ்தானின் தோற்றத்தின் போது பஞ்சாப் என்ற ஆண்டாண்டு காலம் ஒன்றாயிருந்த தேசம் கூறு போடப் பட்டது. ஆண்டாண்டு காலமாக ஒன்றாயிருந்த வங்காளம் என்ற தேசமும் செயற்கையாகக் கூறு போடப்பட்டது. என்ன மாதிரி தமிழீழத்திற்கும் சிங்கள சிறிலங்காவுக்குமிடையே மலைகளோ பள்ளத்தாக்குகளோ ஆறுகளோ குறுக்கே இருந்து புவியில் ரீதியிற் கூறுபோடவில்லையோ, அப்படித்தான் பஞ்சாப்பும் வங்காளமும். தமிழீழத்திற்கும் சிங்கள சிறீலங்காவுக்குமிடையே மொழி வேறுபாடு கலாச்சார வேறுபாடாவது இருக்கிறது. ஆனால் பிளக்கப்பட்ட பஞ்சாப்புக்கு அப்படியல்ல. பிளக்கப்பட்ட வங்களாத்திற்கும் அந்த வேறுபாடு இல்லை.

சிறிது கற்பனை செய்துபாருங்கள்: ஒரு ஐம்பது வருடம் ஜேர்மனியும் பிரான்சும் ஒற்றுமையாய் இருப்பது போல, பாகிஸ்தானும் இந்தியாவும் சமரசமாக இருக்குமானால் நிலமை என்னவாகும்? பாதுகாப்புக்குச் செலவழிக்கும் காசு முழுவதும் அபிவிருத்திகளிலே முதலிடப்படும். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே சிறந்த வர்த்தகம் உருவாகும். இந்தியாவிலுள்ள மிகச் சிறந்த கலைஞர்கள் எல்லாம் முஸ்லீம்கள். ஈரும் அருளாமல், இலைக் கொப்பும் சாயாமல், இந்திய உபகண்டம் இரண்டறக் கலந்து விடும். இரண்டாமுலக யுத்த உச்சக் கட்டத்திலே வின்சன் சேர்ச்சில் சொல்கிறார், யுத்தம் தோற்றாலும் பரவாயில்லை, இந்தியா பிரித்தானியாவை விட்டுப் போகக் கூடாது. பிரித்தானிய சாம்ராச்சியத்தின் கிரீடமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாதான். அவ்வளவு செல்வத்தைப் பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்தியாவில் கொள்ளையடித்துக் கொண்டிருந்தது.

இங்கே இன்னுமொரு விடயத்தைச் சொல்வது பொருத்தம். மூன்றாமகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் லெனினுக்கும் எம்.என்.றோயுக்கும் இடையே நடந்த விவாதம். காலனித்துவ நாடுகள் சுரண்டப்படுவதை காலனித்துவத் தொழிலாளி வர்க்கம் நிறுத்தும் வரை, ஐரோப்பிய முதலாளித்துவத்தைத் தோற்கடிக்க முடியாது. காலனிகளைச் சுரண்டிக்கொண்டு, அந்தச் சுரண்டலின் அற்ப பொருக்குகளைத் தொழிலாளர்களின் உச்சியிலுள்ள தட்டினருக் கொடுத்து, தொழிலாளர் பிரபுக்களை உருவாக்கித் தொழிலாளர்களைத் திருப்திப்படுத்தியே, ஐரோப்பிய ஜனநாயக ஆட்சி நடாத்துகிறார்கள். காலனிகளைச் சுரண்டவில்லை என்றால் ஐரோப்பிய ஜனநாயகம் செத்துவிடும். இரண்டாமுலக யுத்தத்திற்குப் பிறகு சுமார் 70 வருடமாக நேட்டோ நாடுகளிலே ஒரு யுத்தங்கூட வரவில்லை. எல்லாமே நேட்டோ நாடுகளுக்கு வெளியில். நேட்டோ நாடுகளுக்கு வெளியில் யுத்தமில்லாத காலங்களே கிடையாது. யுத்தத்தில் ஈடுபடுத்தப்படும் ஆயுதங்களும் நேட்டோ நாடுகள் உற்பத்தி செய்து விற்ற ஆயுதங்கள்தான். இந்தக் கூட்டுக் கொள்ளையை எவ்வளவு இரகசியமாக நடாத்துகிறார்கள் என்பதை விளங்கி விட்டால், உலகமோ சொர்க்கமாகிவிடும். கம்பன் சொன்னமாதிரி போரொடுங்கும், புகழ் ஒடுங்காது. இதற்காகவே அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையை, சர்வதேச நாணய சபையை, உலக வங்கி அதனோடு தொடர்புபடுத்தப்பட்ட ஆயிரக்கான காளான் அமைப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள். அமெரிக்காவில் ஒரு புதிய ஜனாதிபதி வந்தால், இரண்டாயிரம் பேரைச் சர்வதேச இராஜதந்திரிகளாக நியமிக்கலாம். அமெரிக்கா பாகிஸ்தானுக்கும் ஆயுதங்களை விற்றது. அது இந்தியாவுக்கும் ஆயுதங்களை விற்றது. அமெரிக்கப் பொருளாதாரமென்பது நிரந்தர ஆயுதவிற்பனைப் பொருளாதாரம். அதற்கு எங்காவது யுத்தம்வேண்டும்.

முக்கிய விடயம் என்னவென்றால், மாவோ ஜெனரல் ஜாயகானுக்கு ஆயுதங்களைக் கொடுத்தார். மூர்க்கத்தனமாகப் பாகிஸ்தானைப் பாதுகாத்தார். பாகிஸ்தான் என்ன தொழிலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்க அரசா? ஒரு ஜனநாயக அரசா? அதனால் பாகிஸ்தான் தொழிலாளி வர்க்கத்திற்கு என்ன இலாபம்? சீனத்தொழிலாளர்களுக்கு என்னலாபம்? விசுவானந்ததேவன் உட்பட முழு மாவோவாதிகளும் முக்திபாகினியை இந்தியப் படை நசுக்கியதைப் பற்றியே முழக்கமிட்டார்கள். 'வங்கம் தந்த பாடம்' எழுதினார்கள். பாகிஸ்தான் என்ற தேச உருவாக்கத்தை வரலாற்று ரீதியாகப் பார்க்காதவர்களுக்கு இது விளங்கப்போவதில்லை. பாகிஸ்தான் முதலாளித்துவ அரசு விழும் அன்றைக்கு, இந்திய முதலாளித்துவமும் வீழ்ந்துவிடும். இரண்டுமே ஒன்றுக்கொன்று அனுகூலச் சத்துருக்கள்.

யுத்தம் முடிந்தபின்பு நடந்த விடயங்கள் இதைத் துலாம்பரமாக்கும். ஜாயகான், ஹென்றி கிஸ்சிங்கரை சூஎன்லாயிடம் விமானத்தில் ஏற்றிக் கொண்டு போனார். பின்பு நிக்ஸனை ஏற்றிக் கொண்டு போனார். மாவோ - நிக்ஸன் ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதுவும் வியட்னாம் போராட்டம் உக்கிரமாக நடக்கும்பொழுது. பிறகு வியட்னாம் - சீன யுத்தம் நடந்தது. இயங்கியலிலே காரண காரிய சங்கிலித்தொடர் என்ற வகையினம் உண்டு. அதைப் புறக்கணிப்பவர் இயங்கியலைக் கையாளத் தெரியாதவர்கள். அல்லாவிடில் வியட்னாமிலிருந்து அமெரிக்க ஏகாதிபத்தியம் இலகுவில் வெளியேறியிருக்க முடியாது. குருஷேவ், கென்னடியைச் சந்தித்ததைத் தூக்கிப் பிடித்தவர்கள், போலிக் கொம்யூனிசம் எழுதியவர்கள், சமூக ஏகாதிபத்தியம் எழுதியவர்கள், மாவோ - நிக்ஸன் ஒப்பந்தம்பற்றி மூச்சுமில்லைப் பேச்சுமில்லை. பாகிஸ்தான், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆளுகைக்குக் கீழ்ப்பட்ட நாடு. கடந்த வருடங்களில் பிரேசில், ரஸ்சியா, இந்தியா, சீனா, தென்ஆபிரிக்கக் கூட்டும், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஏற்பட்டும் கூட, சீனத்தலைமை, பாகிஸ்தான் - இந்திய முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டுவர எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இந்தியா, அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு சேர்ந்து ஆசிய மையவாதத்தில் இணைந்து, மூன்றாம் அணுகுண்டு யுத்தத்திற்குத் தயாராகி விட்டது. மூன்றாமுலக யுத்தம் என்பது சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையேயான அணுகுண்டு யுத்தமாகத் திடீரென்று மாறும். ஒரு நாளும் அமெரிக்க - சீன யுத்தமாக வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலிலே கொள்கைப் பற்றுதியும் மூலதர்மத்தோடும் இறுக்கமாகவும் இருந்தால், எல்லாமே வெடித்துச் சிதறும். இளக்காரமும் வளைந்துங் கொடுத்து நடந்தால், சந்தர்ப்பவாதச் சேற்றில் மீண்டெழ முடியாதபடி அமிழ்ந்து, ஈற்றில் தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக்கொடுத்து, முழுமானிடத்தையும் அழிக்கத் துணை போகவேண்டி வந்துவிடும். உச்சிக்கு வந்த அரசியல்வாதி, அந்தத் ஸ்தானத்திலே செத்தால், அவமானமில்லாமல் செத்துவிடுவர். அன்றேல் அவர்கள் கீழே தூக்கியெறியப்பட்டு பிரதிநிதித்துவப்பட்ட சமூகத்தாலேயே காலால் சாறாக மிதிக்கப்படுவர்.

**மனிதாபிமானம்**

*1973, 1974* களில் இலங்கையில் பெரிய பஞ்சம். பாணுக்கு விடியப்பறம் எழும்பி கியூ வரிசையில் நின்று வாங்க வேண்டும். அந்தப் பரிமாணத்தை விளங்க வேண்டுமானால், 65 சதம்விற்ற ஓர் இறாத்தல் சீனி விலை, ரூபா 7 ஆக உயர்ந்தது. பேராதனைப் பல்கலைக்கழக விடுதிகளில் மாணவர் போடும் எச்சில் மிச்சச் சோற்றை எடுத்துக் கொண்டு போக, வறிய தோட்டத் தொலாளர்களின் பிள்ளைகள் வருவார்கள். விடுதிச் சாப்பாட்டு விநியோகத்தைக் குத்தகைக் கெடுத்தவர், பன்றி வளர்க்கும் பண்ணைக்கு மிச்சச் சாப்பாடுகளை விநியோகிக்கும் ஒப்பந்தத்தைச் செய்திருந்தார். விடுதி வேலையாட்களுக்கு மிச்சச் சாப்பாட்டை எடுக்க விடக்கூடாது என்று, ஒப்பந்த முதலாளி கடுமையான கட்டளை. மிச்சச்சாப்பாடு எடுக்க வரும் பிள்ளைகளை மிரட்டித் துரத்துவார்கள். ஒரு நாள் அக்பர் நெல் விடுதியில் மிரட்டித் துரத்தும் கடமையில் இருந்தவர், ஓர் இரும்பு உலக்கையால் எறிந்து பசியால்வாடிய அந்தப் பிள்ளைகளைத் துரத்தினார். இரும்பு உலக்கை ஒரு சிறுவனின் மண்டையிற்பட்டு, மண்டை பிளந்து இரத்தம் கொப்பளித்து சிறுவனும் மயங்கி விழுந்து விட்டான். விழுந்த சிறுவனை விசுவானந்ததேவனும் மற்றும் மாணவர்களும் தூக்கிக் கொண்டுபோய் டைனிங் மேசையில் வைத்தனர். காயத்தைக் கட்ட துணியெடுக்க சிலர் ஓடினார்கள். தோட்டக்காட்டானைச் சாப்பாட்டு மேசையில் வளர்த்தாதையுங்கோ என்று வேறு சிலர் கத்தினார்கள். பின்னர் அக்காயப்பட்ட சிறுவனைத் தூக்கி நிலத்திலே வைத்து, மண்டையிலுள்ள காயத்தைக் கட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயக்கம் தெளிய விசு ஒரு கோப்பியும் வாங்கிக் கொடுத்து, இரண்டு பேரிடம் சாப்பாட்டு ரிக்கற் கடன் வாங்கி சாப்பாடும் கட்டிக் கொடுக்கவே, அந்தச் சிறுவனும் சாப்பாட்டை வாங்கிக்கொண்டு மெல்ல, மெல்ல நடந்து போய்விட்டான்.

அன்று பின்னேரம், யாழ்பாணப் பொறியியல் மாணவன் ஒருத்தனுக்கு காற்பந்து விளையாடிச் சப்பாத்து ஆணி கீறி விட்டது. பார்த்தவர்கள் கறலாணியா கீறி விட்டது, ஏற்பு வரப்போகுது என்று கூறி, 'ஹெல்த் சென்டரு'க்கு ரெலிபோன் அடித்தார்கள். உடனே அம்புலன்ஸ் வந்து விட்டது. அதன் பின்னர் அவனுக்கு 'ஹெல்த் சென்ரறி'ல் சிகிச்சை. சில மணித்தியாலங்களில் நடந்த இரு சம்பவங்கள். நாளை பொறுப்பான பதவிகளில் கட்டளையிடுமளவுக்கு அதிகாரம் பெறப் போபவர்களின் சமுதாயச் செயற்பாடு. இரக்கத்திற்குக் கூட வர்க்கமிருக்கிறது, என்று முனகிக் கொண்டு சொன்னார் விசுவானந்ததேவன்.

ஒரு நாள் கண்டி மாநகர நகரசுத்தித் தொழிலாளர் வதியும் மகிய்யாவை வீடுகளுக்குச் சென்று பேப்பர்கள் விற்றுவிட்டு நான் திரும்பினேன். விசுவானந்ததேவன் அங்கு முத்துலிங்கம் என்ற தோழரைச் சந்தித்துவிட்டுத் திரும்பினார். இருவரும் நடந்து வரும்பொழுது கண்டிச் சந்தைக்கு அருகாமையில் ஒரு சிறுபிள்ளை வந்து கை நீட்டிக் காசு கேட்டது. உடனே பொக்கட்டில் இருந்த முழுச் சில்லறையையும் அள்ளி அந்தப் பிள்ளையிடம் கொடுத்துவிட்டார் விசு. சிறிது தூரம் போக அதே அளவுள்ள இன்னொரு பிள்ளை வந்து கை நீட்டிக் கேட்டது. 'ச்சீ.. எல்லாக் காசையும் கொடுத்துவிட்டேன்... நான் அந்தப் பிள்ளைக்கு கிடந்ததெல்லாவற்றையும் கொடுத்துவிட்டேன். இன்றைக்கு இல்லை. அடுத்தமுறை உன்னைக்கண்டால் தாறன்' என்றார் விசு. அந்தப் பிள்ளை மீண்டும் கெஞ்சியது. 'உன்னட்டை இருக்கோ' என்னைக் கேட்டார். நான் என்னட்டை இருந்தவைகளை எடுத்துக் கொடுத்தேன். அதை அவர் அந்தப் பிள்ளைக்குக் கொடுத்துவிட்டு, அந்தச் சம்பவத்தைப் பற்றிச் சிந்தியாமல் பழையபடி நாம் கதைத்துக்கொண்டு வந்த விடயங்களைத் தொடர்ந்து கதைத்தக் கொண்டு வந்தார். விசுவின் மனிதாபிமானப் பக்கம் அப்பழுக்கற்றது. பதினைந்து வருடங்கள், வாலிபக் காலம் முழுவதும், எங்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் மிகப் பெறுமதி வாய்ந்ததாகக் கழித்த அந்த நாட்களில் வந்து போன இப்படியான சம்பவங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இலங்கையின் அரசியல் நடைமுறையைச் சிறிது விளங்குவதற்கு ஒரு சிறு விடயத்தைச் சொல்கிறேன். 1976 அளவில் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் மத்திய கிழக்குப் பிரச்சனை பற்றி ஒரு சொற்பொழிவு ஆற்றினார். அன்றெல்லாம் எங்களுக்கு மத்தியகிழக்கு மற்றும் வியட்நாம் பிரச்சனைகள் தேதி வாரியாகத் தெரியும். அதைபற்றிக் குறைந்தது நூறுதரமாவது விவாதித்து இருப்போம். சிங்களத் தோழர்களுக்கும் அதிகமாகப் பரிட்சயம். அவர் பேசிக் கொண்டிருந்த சில நிமிடங்களிலேயே விசுவானந்ததேவன், உனக்கு மத்தியகிழக்கு அரசியலைப் பற்றி ஒன்றும் தெரியாது, இறங்கிப் போவென்று அவரைப் பார்த்து சிங்களத்தில் சொன்னார். அவருக்கு ஒத்தாசையாகச் சிங்கள மாணவத் தோழர்களும் இறங்கென்று கத்தினார்கள். கூட்டம் நின்று விட்டது. இதற்கொரு சமாந்தரத்தைச் சொல்ல வேண்டும். 1905 இல் ரஸ்சியாவில் 23 வயதுடைய யூத மார்க்ஸ்சியவாதியொருவர் ரஸ்சிய மொழியில் சார் முடிமன்னனை வீழ்த்தென்று கட்டளையிட, ரஸ்சியர்கள் எல்லோரும் அவரது கட்டளையைக் கேட்டு, அவர் சொன்னபடி செய்தார்கள். விசுவானந்ததேவன் மத்தியமாகாணத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களோடு அரசியல் ரீதியில் வாழ்ந்தவர். அதனால் ஆளுமையைப் பெற்றவர். 1977 இனக்கலவரத்தோடு அப்படியான வாழ்க்கை தொடரமுடியாமற் போய்விட்டது. இலங்கையின் தேவை இப்படியான ஒரு நடைமுறை அரசியல் வாழ்க்கையாகும். தமிழ் மார்க்சியவாதி ஒருவர் சிங்களத்தில் சிறீசேனாவைத் தூக்கியெறியென்று கட்டளையிட, சிங்களத் தொழிலாளர்கள் அவர் கட்டளையை நிறைவேற்ற வேண்டும். சிங்கள மார்க்சியவாதி ஒருவர் தமிழ் மொழியில் விக்னேஸ்வரனைத் தூக்கியெறியென்று கட்டளையிட, தமிழ்த் தொழிலாளர்கள் அதைச் செவிமடுக்க வேண்டும். இந்த ஆளுமையைப்பெற எத்தனை அமிலப் பரிசோதனைகளில் தேறவேண்டும். ரஸ்சியப் புரட்சி அப்படித்தான் தயாரிக்கப்பட்டது. ஏங்கல்ஸ் இருபத்தொரு மொழியில் கடிதத் தொடர்புகளை மேற்கொண்டவர். மார்க்ஸ் பத்துமொழிகள் பேசத் தெரிந்தவர். விசுவானந்ததேவன் பல்கலைக்கழகத்திற்குப் புகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட் தொடக்கம் சிங்களத்தை சிங்களத் தொழிலாளர் மத்தியில் அரசியல் செய்யவேண்டும் என்பதற்காக, மிகச் சிரத்தையாகத் தானே கற்றவர். இதெல்லாம் புத்திக்கூர்மையின் வெளிப்பாடல்ல. நாம் அந்தப் பிரச்சனைக்குள் நிற்பவர்கள். பலஸ்தீனப் பிரச்சனையோ வங்காளப் பிரச்சனையோ வேறொரு நாட்டுப் பிரச்சனையல்ல. மார்க்சியவாதிகளுக்கு அது அவர்களின் சொந்தப் பிரச்சனை. மார்க்சியம் சொல்லித்தந்த பாடமிது. மார்க்சியம் பண்படுத்திய கலாச்சாரம் அது. அது மொழி கடந்த இனங்கடந்த தேசங்கடந்த பொதுச்செல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை நித்தியானந்தன்

# "திருவிழா" - விசுவுக்கு எங்கள் காணிக்கை

நண்பர் விசுவானந்ததேவனை முதலில் எங்கே, எப்படிச் சந்தித்தேன் என்பது இப்பொழுது ஞாபகத்தில் இல்லை. அதிகரித்துப் போன மறதிக்குள் அதுவும் கலந்துவிட்டது. ஆனால் அவருடன் அளவளாவிய அனுபவங்களும், அவர் மாவிட்டபுரத்தில் எனது வீட்டுக்கு வந்து சென்ற இனிய நினைவுகளும் பசுமையாகவே உள்ளன.

அவர் இறந்திருக்கலாம் என்ற சந்தேகம் கலந்த செய்தி எப்படி வந்தடைந்தது என்பதும் எனக்கு ஞாபகமில்லை. ஆயினும் அதை என் மனம் நம்ப மறுத்தது என்பது நினைவிருக்கிறது. விசு வருவார் என்றே நம்பினேன். அவர் தந்துவிட்டுச் சென்ற சிறு நூலும் என் கையிலேயே இருந்தது.

நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் வேறு, யதார்த்தம் வேறு என்பது நிரூபணமாகி, இன்று அவரது மறைவின் முப்பதாண்டு நினைவையும் கொண்டாடும் நிலையில் உள்ளோம். நேற்றுப் போல உள்ளது... அவரது மலர்ந்த முகமும், சிரிப்பும், மென்மையான, ஆனால் வலிமையான வார்த்தைகளும்....

விசுவுடன் உரையாடுவதில் அளவற்ற மகிழ்ச்சியை அனுபவித்தேன். ஆழமும், நேர்மையும், மற்றவர் கருத்தை மதிக்கும் பண்பும் அவருடன் என்னைப் பிணைத்தன. அரசியல் கொள்கை, நம்பிக்கை, அணுகுமுறை ஆகியவற்றில் விசுவுக்கும் எனக்குமிடையே சில வேறுபாடுகள் இருந்த போதிலும், அரசியலிலோ, சமூக விவகாரங்களிலோ, போராட்டத்திலோ ஈடுபடுபவர்களுக்கு இருக்க வேண்டிய நேர்மை, பொறுப்புணர்வு, தூரப் பார்வை முதலான குணாம்சங்கள் பற்றி எமக்கிடையே இம்மியளவு கருத்து வித்தியாசமும் இருக்கவில்லை. அரசியலில் கோலோச்சிய நேர்மையின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி அவருக்கு மிகுந்த மனக் கொதிப்பு இருந்தது. அதே வேளை, மக்களிடையே ஏற்படவேண்டிய பரந்த சமூக மாற்றம் பற்றிய தெளிவும் இருந்தது. பொய்மையும், உணர்ச்சிப் பேச்சுக்களும் மக்களைத் திசை திருப்புவதோடு, சிந்தனையையும் மழுங்கடிப்பதாக அவர் நம்பியது மட்டுமன்றி, இந்நிலையை மாற்ற ஏதாவது செய்ய வேண்டுமென்ற துடிப்புடன் இருந்தார். நாடகத்தை இதற்காகப் பயன்படுத்தினால் என்ன என்று என்னை அடிக்கடி கேட்டு வந்தார்.

என்னைக் காணும் நேரமெல்லாம் "ஒரு நாடகம் எழுதுங்கோ" என்று வற்புறுத்தவும் தவறுவதில்லை. இதற்கு ஒரு காரணம் எனது "ஐயா லெக்சன் கேட்கிறார்" என்ற நாடகம் ஏற்கனவே அவருக்குப் பரிச்சயமாக இருந்தமை ஆகும். "யார் தயாரிப்பது, நடிப்பது?" என்று கேட்டதற்கு, "அதெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுவேன்" என்றார். இறங்கத்தான் வேண்டுமென்றால், கேள்விக்கு இடமில்லை என்று சொல்வது போல இருந்தது எனக்கு.

நாடகத்தை எழுதி, "திருவிழா" என்று பெயரிட்டு அவரிடம் ஒப்படைத்தேன். தேர்தல் திருவிழாவை அது குறித்தது. அளவெட்டிக் கிராமத்தை ஏற்கனவே மனதில் வைத்திருந்தாரோ அல்லது பின்னர் எடுத்த முடிவோ தெரியாது. அளவெட்டியைச் சுற்றி, தமது ஆளுமையையும், ஆற்றலையும் வெளிக்காட்டத் தொடங்கியிருந்த ஒரு இளைஞர் குழுவிடம் நாடகத்தை வெளிக்கொணரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. நெறியாள்கை நண்பர் ஆதவனின் கையில்.

அளவெட்டியில் நடந்த சில ஒத்திகைகளுக்கு நானும் போனேன். உற்சாகம் மேலோங்கியிருந்தது. துரித கதியில் நாடகம் வெளியுலகைத் தரிசித்தது. முதலாவது ஆற்றுகை 1981 நடுப்பகுதியில் ஞாயிறு படைப்பாளிகள் வட்டத்தின் ஆதரவில் அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலையில் நடந்தது.

இதன் பின், தொடர்ச்சியான ஆற்றுகைகள்... நகரங்கள், கிராமங்கள், வன்னிப் பிரதேசம் என எங்கும் நாடகம் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மினி பஸ் சக சாப்பாடு சமன் நாடகம்' என்பது தான் வாய்பாடு என்று ஒரு நண்பர் சுவைபட விளக்கினார். அதாவது மினி பஸ் ஒழுங்கு செய்து போய், நாடகம் நடித்து, வயிறார உண்டு திரும்புதல்.... மினி பஸ் இல்லாதபோது, சைக்கிளும் நடையும் என்பது மறை பொருள். இதில் இணைந்து திரிய எனக்கும் மிக விருப்பமாக இருந்த போதிலும், தென்னிலங்கையில் அரச சேவையில் இருந்ததால் அது சாத்தியமாகவில்லை. சில ஆற்றுகைகளில் மட்டும் கலந்து கொண்டு பெரு மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். நாடகக் குழுவினரோ அழைக்குமிடம் எல்லாம் சென்றார்கள். மேடைகள், வீதிகள், மைதானங்கள்... பத்து, இருபது, முப்பது என ஆற்றுகைகளின் எண்ணிக்கையை அவ்வப்போது நண்பர்கள் உற்சாகமாகச் சொன்னார்கள். இறுதியில் எழுபத்தைந்தைத் தொட்டதாக நினைக்கிறேன். நாடகத்துக்குக் கல்லெறி விழுந்ததைப் பற்றியும், விவாதங்கள் ஏற்பட்டமை பற்றியும் நண்பர்கள் சுவாரசியமாகப் பேசிக்கொண்டார்கள். இவ்வாறு எமது சமூகத்தில் ஒரு பலமான அரசியல் செய்தியுடன் ஊர் ஊராகச் சென்று, மக்களைச் சந்தித்த முதல் வீதி நாடகம் என்ற பெயரைத் திருவிழா பெற்றது. இதற்கெல்லாம் காரணகர்த்தாவாக இருந்தவர் விசு. இவ்வாறு ஒரு எண்ணக் கரு தீப்பிழம்பாகி, நாடக இயக்கமாகப் பரிணமித்தமை, விசுவின் இயங்கும் சக்திக்கும் ஊக்குவிப்புக்கும் கூட்டுச் செயற்பாட்டுக்கும் ஒரு சிறு உதாரணமாகும்.

விசு மரணிக்காமல் இருந்திருந்தால்.... என்று எண்ணாமல் விட முடியவில்லை. இவ்வாறு நினைக்கும்போது பல வித உணர்வுகள் மனதில் கிளர்கின்றன. அவரது சிறந்த பண்புகள் மனதை நிறைக்கின்றன. கூர்மையான சிந்தனை ஆற்றலும், மற்றவர்களோடு சேர்ந்து செயற்படக்கூடிய திறனும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும், எவரையும் வசீகரிக்கக்கூடிய தன்மையும், எடுத்த கருமத்தில் வெற்றி காணும் உறுதியும், தலைமைத்துவப் பண்புகளும் விசுவை எமது சமூகத்தில் எழுந்த ஓர் அரிய ஒளிச் சுடராகப் பிரகாசிக்க வைக்கின்றன. இச் சுடர் விரைவிலேயே அணைந்து போகுமென யார் நினைத்தார்? இது எமது சமூகத்தின் பேரிழப்பே. அதே வேளை, தொடர்ந்து வந்த, மாற்றுக் கருத்துக்களை மதிக்காத, மூர்க்கத்தனமான, ஆயுத பலமொன்றே பலம் என வீசியடித்த பயங்கரமான சூறாவளிக்குள் அகப்பட்டுக் கொள்ள முன்பே, நேர்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இனிய நண்பன் பிரிந்து சென்றான் என்ற எண்ணம் அரை நிம்மதி கலந்த ஆறுதலொன்றை மனதில் தோற்றுவிக்கவும் தவறவில்லை.

எவ்வாறாயினும், விசுவின் குறுகிய ஆனால் நிறைவான வாழ்க்கையைக் கொண்டாட நாம் அருகதை உடையவர்கள். விசுவைப் பற்றிய எண்ணங்கள் எங்களுக்கு எழுச்சியையும், புத்துணர்ச்சியையும் தருகின்றன. ஒரு மக்கள் நாடக இயக்கமாகப் பரிணமித்த "திருவிழா", அவரது பாதங்களில் நாங்கள் சமர்ப்பித்து நிறைவு பெறுவதற்கு ஏற்றதொரு காணிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.மார்க்ஸ்

# விசுவானந்ததேவனுடன் அந்த இரண்டு நாட்கள்

தோழர் விசுவானந்ததேவன் என்னை விட மூன்றாண்டுகள் இளைஞர். எனினும் அவரை ஒரு மூத்த தோழராகத்தான் கருதித் தோழமை கொண்டிருந்தேன். அப்படி ஒன்றும் அவருடன் எனக்கு நெருக்கமான பழக்கம் இருந்ததில்லை என்பதையும் சொல்லிவிடுகிறேன். கொண்டிருந்த குறைந்த காலப் பழக்கத்தில் அந்த உறவு அப்படித்தான் இருந்தது. ஒரே ஒருமுறைதான் அவரை நான் சந்தித்தேன். அது 1986 ஜூலை அல்லது ஆகஸ்ட். துல்லியமாக நினைவில்லை. முதல் நாள் காலையும் அடுத்த நாள் மாலையும் தஞ்சையிலிருந்த என் "12/28, அம்மாலயம் சந்து" வீட்டில் அமர்ந்து நெடு நேரம் அவர் பேச நான் கேட்டுக் கொண்டிருந்தேன். இரவு அவரைக் கொண்டு சென்று பேரூந்தில் ஏற்றிவிட்டு வரும் வரை இடையிடையே சிறு கேள்விகளைத் தவிர நான் வேறொன்றும் பேசவில்லை.

நேரில் கண்டதில்லை ஆனாலும் அவரது எழுத்துக்களை நான் தொடர்ந்து வாசித்து வந்தேன். 1984 கோடையில் வெளிவந்த "இலக்கு" முதல் இதழிலிருந்து புரட்டாதி 86 இல் வெளி வந்த "பயணம்" இரண்டாவது இதழ் வரை தவறாமல் எனக்குக் கிடைத்து வந்தது. ஓரளவுக்கு அப்போது நான் ஈழத்தில் உள்ள இடதுசாரித் தோழர்களுக்கு, குறிப்பாக சண்முகதாசன் வழி வந்தோருக்கு நான் பரிச்சயமாகி இருந்தேன். தோழர் கே. டானியல் அவர்களுக்கும் எனக்குமான நட்பு, அவரது நூல்களை நாங்கள் வெளியிட்டு வந்தது என்பதன் ஊடாக அது சாத்தியமாகியிருந்தது. 1983 ஜூலைக்குப் பின் ஒரு முறை சண்முகதாசன் அவர்கள் இங்கு வந்தபோது சென்னயில் ஒரு சிறு சந்திப்பை நான்தான் ஏற்பாடு செய்திருந்தேன். உலகறிந்த ஒரு கம்யூனிஸ்ட் தலைவராக இருந்தபோதும், அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிருந்த இடதுசாரி அரசியல் சூழலில் இரண்டு பெரிய கம்யூனிஸ்ட் கட்சிகளும் (சீனச் சார்பு மற்றும் ரஷ்யச் சார்பு) அவருடன் பேசத் தயாராக இல்லை.

நான் அப்போது "மார்க்சிஸ்ட் கட்சி" எனப்பட்ட சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து "டிஸ்மிஸ்" செய்யப்பட்டிருந்தேன். ஈழப் போராட்டத்தை ஆதரித்துக் கட்சி நிலைப்பாட்டிற்கு எதிராகக் கூட்டங்கள் பேசினேன் என்பது, என் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டு. அதன்பின் நான் இங்கிருந்த நக்சல்பாரி இயக்கங்கள் என அழைக்கப்படும் ஆயுதப் போராட்டங்களை ஆதரிக்கும் இயக்கங்களுடன் தொடர்பில் இருந்தேன். இவற்றுள் "மக்கள் யுத்தம்" என்றழைக்கப்பட்ட குழுவுடன் பின் ஐக்கியமானேன். ஆனால் அன்று இந்தக் குழுக்களும் சண்முகதாசன் அவர்களின் கூட்டத்திற்கு வரவில்லை. சண்முகதாசன் அவர்களின் கட்சி தனி ஈழத்திற்கான ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை என்பதுதான் காரணம். நக்சல்பாரி இயக்கங்கள் அனைத்தும் மிகத் தீவிரமாகவும் உண்மையாகவும் ஈழ ஆயுதப் போராட்டங்களை ஆதரித்துக் கொண்டிருந்தன. எந்த ஒரு குறிப்பிட்ட ஈழ ஆயுதக் குழுவையும் முழுமையாக ஆதரிக்காத போதுங் கூட, தனி ஈழம் மற்றும் ஆயுதப் போராட்டத்தின் தேவை ஆகியவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

மார்க்சிஸ்ட் கட்சியிலிருந்து வெளியில் வந்த பின் என் நிலைப்பாடு அத்தனை தெளிவுடன் இருந்தது எனச் சொல்ல இயலாது. "கைலாசபதி இலக்கிய வட்டம்" என நாங்கள் ஓர் இலக்கிய அமைப்பு வைத்திருந்தோம். அதன் சார்பாக அப்போது நாங்கள் "தேசிய இனப் பிரச்சினை: கேள்விகளை நாங்கள் கேட்கிறோம். பதில்களை மார்க்சீய ஆசான்கள் சொல்கின்றனர்" என்றொரு எட்டு பக்க பிரசுரத்தை வெளியிட்டோம். அதில் தேசிய சுய நிர்ணயப் போராட்டத்தை மார்க்சிஸ்டுகள் ஆதரித்தே ஆக வேண்டும் என்பதாக அந்த மேற்கோள்கள் தொகுக்கப்பட்டிருந்தன.

அந்த வெளியீடு டானியல் அவர்கள் வழியாக சண்முகதாசன் அவர்களைச் சென்றடைந்தது. அவர் அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொண்டு அழகான ஆங்கிலத்தில் மிக விரிவாக ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் எழுதினார். இப்படி மேற்கோள்களைப் பிய்த்துப் போட்டு ஆதரிப்பது அல்லது எதிர்ப்பதன் மூலம் எதையும் நியாயப்படுத்தி விடலாம். ஆனால் அது தவறு. இன்றைய சூழலில் அப்படியான ஓர் ஆயுதப் போராட்டம் சாத்தியமில்லை என அந்தக் கடிதத்தில் அவர் விளக்கி இருந்தார்.

விசுவானந்ததேவன் மற்றும் தோழர்களின் NLFT உருப்பெற்ற காலத்தில் இங்கு சூழல் எப்படி இருந்தது என்பதை விளக்கத்தான் இவ்வளவையும் சொல்ல வேண்டியதாகி விட்டது.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். நாங்கள் ஒன்றும் பெரிய சக்திகள் இல்லை. ஒரு மிகச் சிறிய குழு அவ்வளவுதான். எனினும் இடது சார்புள்ள ஈழப் போராளிகள் பலரும் தஞ்சையில் என் அம்மாலயம் சந்து வீட்டுக்கு வந்து போவர். ஒரு இருபது கி.மீ தொலைவில் ஒரத்தநாடு என்னும் இடத்தில் 'புளொட்' அமைப்பின் முகாம் ஒன்று செயற்பட்டு வந்தது. அவர்களின் ஒலிபரப்பு நிலையம் தஞ்சையிலிருந்து இயங்கியது. இப்போது பிரான்சில் உள்ள தோழர் சிவாவின் தலைமையில் அது இயங்கியது. அவரும் அவரது தோழர்களும் வீட்டுக்கு வருவார்கள். ஒரு கட்டத்தில் 'புளொட்' அமைப்பின் பின் தள மாநாடு தமிழகத்தில் நடந்தபோது, சில தோழர்கள் என் வீட்டில் தங்கிப் பல நாட்கள் அவர்களின் ஆவணத் தயாரிப்பில் ஈடுபட்டதும் உண்டு. இதற்கிடையில் தோழர் டானியலும் இங்கு வந்து போவார். என் வீட்டில்தான் தங்குவார். சுருக்கமாகச் சொல்வதானால் விடுதலைப் புலிகள் தவிர்த்த பிற அமைப்பில் உள்ள சற்றே இடதுசாரிச் சார்புடைய பலரும் எங்களுடன் நட்பாக இருந்தனர்.

அந்தப் பின்னணியில்தான் இங்கிருந்த NLFT தோழர்களும் எங்களுடன் தொடர்பில் இருந்தனர். *இலக்கு* இதழ்கள் தொடர்ந்து எனக்கு வந்தன. இங்குள்ள மற்ற நண்பர்களுக்கும் அவை என் வழி சென்றடையும். *இலக்கு* இதழில் வெளி வரும் கட்டுரைகளை முழுமையாக வாசித்து நண்பர்களுடன் விவாதிப்போம்.

இந்தப் பின்னணியில்தான் ஆயுதப் போராட்டக் குழுக்களிடையே மோதல்கள், விடுதலைப் புலிகள் அமைப்பு மற்ற குழுக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிப்பது, கருத்து மாறுபாடுகள் கொண்டவர்கள் கடுஞ் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவது என்பதெல்லாம் நடந்தேறின. டானியல் அவர்கள் இதைச் சுட்டிக்காட்டிப் "பாருங்கள் இதெல்லாம் எதிர்பார்த்ததுதான்" என்று எங்களிடம் வாதிடுவார். இந்த நிலையில்தான் நான் "எரிதழல்" எனும் அப்போதைய எனது புனை பெயரில் "ஈழப் போராளிகளின் சிந்தனைக்கு" எனும் சிறு பிரசுரம் ஒன்றை வெளியிட்டேன் (நூலகம் எனும் தளத்தில் அது கிடைக்கும்). இந்தப் போக்குகளை நான் அதில் கடுமையாகச் சாடி இருந்தேன். ஒரத்தநாட்டில் இருந்த 'புளொட்' அமைப்பில் சிலர் ஒரு நாள் ஆயுதங்களுடன் வந்து அந்த வெளியீட்டிற்காக என்னை எச்சரித்துச் சென்றதும் நடந்தது.

இதற்கிடையில் இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது. 'புளாட்' அமைப்பு பலவீனமாகி அதிலிருந்து பிரிந்த ஓர் குழுவினர் தஞ்சைக்கு அருகில் ஒரு கிராமத்தில் தங்கி இருந்தனர். அவர்களைச் சந்திக்க விசுவானந்ததேவன் வருகிறார் என்கிற தகவல் எனக்கு வந்தது. விசுவானந்ததேவன் குறித்து அறிந்திருந்த நான் மிக்க ஆவலுடன் அவரை எதிர்பார்த்திருந்தேன். இந்த நேரத்தில் வெளி வந்து கொண்டிருந்த *இலக்கு* இதழ்களில், இயக்கங்களுக்கு இடையே நடைபெறும் இந்தக் கொலைகள், அழித்தொழிப்புகள் ஆகியவற்றைக் கண்டிக்கும் கட்டுரைகளும் வந்திருந்தது எனது எதிர்பார்ப்பை அதிகரித்திருந்தது.

# # #

அன்று காலை நான் தஞ்சைப் பேருந்து நிலையத்தில் தேவாவுக்காகக் காத்திருந்தேன். புகைப்படத்திலும் கூட அவரை நான் பார்த்ததில்லை. *இலக்கு* இதழில் படங்கள் மட்டுமல்ல, கட்டுரைகளில் ஆசிரியர் பெயரும் இருந்ததில்லை. எல்லாக் கட்டுரைகளையும் நாங்கள் தேவாவை வைத்தே அடையாளப் படுத்தியிருந்தோம். எனக்கு அவர் முகம் பரிட்சயமில்லை என்ற போதிலும், பத்திரிகைகளில் வெளி வந்த புகைப்படங்களின் ஊடாக தேவாவுக்கு என் முகம் ஓரளவு பரிட்சயமாயிருந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர் என விளித்தாரா, மார்க்ஸ் என விளித்தாரா என எனக்கு நினைவில்லை. என் எதிரே ஒரு கைலி (சாரம்), மேலே ஒரு அரைக் கை சட்டை, கையில் ஒரு துணிப் பை சகிதம் அவர் நின்றிருந்தார்.

என் சைக்கிளில் அவரைப் பின்னால் அமர்த்தி, வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். அவர் சந்திக்க வந்தவர்கள் அருகில் ஒரு கிராமத்தில் தங்கியிருந்தனர். அந்த முகவரியை விசாரித்து மதியம் வந்து அழைத்துச் செல்வதாக நண்பர் வேல்சாமி சொல்லியிருந்தார். மதியம் இரண்டு மணி வாக்கில்தான் தேவாவை அழைத்துச் செல்ல ஒரு மோட்டார் சைக்கிளில் வேல்சாமி அனுப்பிய அவரது பணியாளர் வந்தார். அதுவரை என் கேள்விகளுக்கெல்லாம் மிக்க பொறுமையாகவும், எளிமையாகவும் தேவா பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

அடுத்த நாள் இரவு நான் அவருக்குச் சென்னைக்கு டிக்கட் ரிசர்வ் செய்திருந்தேன். அன்று மாலை அந்தக் கிராமத்திற்குச் சென்று அவரை அழைத்து வர வேண்டும். மாலை நான்கு மணி வாக்கில் வேல்சாமி வந்தார். அப்போது அவரிடம் ஒரு "பஜாஜ் எம் 80" என்றொரு சிறிய மொபெட் இருந்தது. அதில் அந்தக் கிராமத்திற்குச் சென்றோம். அதற்குள் அங்கிருந்தவர்களோடு தேவா பேசி முடித்திருந்தார். என்ன என்பது குறித்து நாங்களும் கேட்கவில்லை, அவரும் சொல்லவில்லை.

திரும்பி வரும்போது அந்தச் சின்ன வண்டியில் மூவரும் வந்தோம். வெண்ணாற்றங்கரைப் பாலத்தைத் தாண்டி வரும்போது ஓர் அதிர்ச்சி. அங்கு காவல்துறையினர் நின்று போகிற, வருகிற வாகனங்களைச் சோதித்துக் கொண்டிருந்தனர். ஒரே வண்டியில் மூவர் வருவதைக் கண்டதும் நாங்கள் நிறுத்தப்பட்டோம். வண்டியைச் சற்றுத் தள்ளி நிறுத்திய வேல்சாமி, எங்கள் இருவரையும் அங்கேயே நிற்கச் சொல்லிவிட்டு சோதனை செய்து கொண்டிருந்தவர்களிடம் சென்றார். வண்டியில் செல்வது யார் என்பதை அவர்கள் குடையவில்லை. மூன்று பேர் வந்தத்தைத்தான் அவர்கள் பெரிய குற்றமாகச் சொன்னார்கள். வேல்சாமி ஏதோ கொஞ்சம் பணம் தந்து அவர்களைச் சரி செய்தார். வேல்சாமியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாவையும் அதே வண்டியில் அனுப்பி விட்டு, நான் பஸ்சில் பின் தொடர்ந்தேன்.

அன்றிரவு பத்து மணி அளவில் தேவாவுக்கு பஸ். பேசிக்கொண்டே இருந்தோம். இன்னொரு நாள் இருந்து மேலும் சிலரைச் சந்தித்துச் செல்லலாமே என்றேன். உடனடியாகச் சென்னையிலிருந்து வெளியூர் செல்ல வேண்டும் எனவும், தங்குவது சாத்தியமில்லை எனவும் கூறி, இரவே புறப்பட்டார். முழுக்க முழுக்க அவரது அன்றைய உரையாடல் போராட்டம் மற்றும் அரசியல் பற்றித்தான் இருந்தது. தனிப்பட்ட முறையில் அவர் யாரைப் பற்றியும் பெரிதாக ஏதும் பேசவில்லை.

செல் போன்கள் இல்லாத காலம் அது. சுமார் நான்கு மாதங்களுக்குப் பின் துயரமும் அதிர்ச்சியும் மிக்க அந்தச் செய்தி எனக்குக் கிட்டியது. சென்னையிலிருந்து இலங்கைக்குச் சென்று கொண்டிருந்த போது நடுக்கடலில் விசுவானந்ததேவன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றுதான் முதலில் கேள்விப்பட்டோம். பின்னர் கிடைத்த செய்திகள், அவர் சென்னையிலிருந்து இலங்கை சென்று மீண்டும் சென்னை வரும்போது கொல்லப்பட்டார் எனத் தெரிவித்தன. அவர் கொல்லப்பட்டதற்கும் கூட ஆதாரம் இல்லை எனவும் இப்போதைக்கு அவர் மறைந்து போனார் என்றே கொள்ள வேண்டும் எனவும் பின்னர் கூறப்பட்டது. இலங்கைப் படையா, இல்லை இயக்கங்களுக்குள்ளான மோதலா, எது இந்த மறைவின் பின் உள்ள காரணம் எனவும் யாருக்கும் தெரியவில்லை. டெலோ, EPRLF முதலான இயக்கங்கள் அழிக்கப்பட்ட காலம் அது.

1986 ஏப்ரலில்தான் டானியலும் இறந்து போனார். என் வீட்டில் தங்கி அவர் சிகிச்சை மேற்கொண்டிருந்த போதுதான் அது நடந்தது.

ஈழத்து இடதுசாரி நண்பர்களுடனான எனது தொடர்புகள் அறுந்தன.

# # #



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இரண்டு நாட்கள் நான் விசுவானந்ததேவனுடன் என்ன பேசினேன் என இப்போது நினைவில்லை.

இன்று விசுவானந்ததேவனும் தோழர்களும் மட்டுமல்ல, அவர்களின் NLFT, PLFT, *இலக்கு*, *பயணம்* எல்லோரும், எல்லாமும் பழைய வரலாறாகி விட்டதற்குச் சாட்சிகளாக நாம் நிற்கிறோம். எஞ்சியுள்ள நாம் இந்த எல்லாத் தியாகங்களையும் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விட விட்டுவிடக் கூடாது. முடிந்தவரை நமது அறிவுக்கும் அனுபவங்களுக்கும் எட்டியவரை நம்முடைய இந்த வரலாற்றைப் பதிவு செய்வதும் மதிப்பிடுவதும் அவசியம். வருகிற தலைமுறைகளுக்குப் பயன்படுமாறு விருப்பு வெறுப்பின்றி நாம் அதைச் செய்தல் வேண்டும். விசுவானந்ததேவனும் தோழர்களும் மறைந்த இந்த முப்பதாம் ஆண்டு நினைவு அதற்குக் கால்கோள் இட வேண்டும். அந்த வகையில் சில:

தோழர்களின் மறைவுக்குப் பின் இடதுசாரி இயக்கங்கள் வெகு விரைவாகப் பல பின்னடைவுகளைச் சந்திக்க நேர்ந்தன. இலங்கையில் மட்டுமல்ல, உலகளவிலும் இதுதான் நிலை என்பது கவனத்துக்குரியது. பெருகிவந்த இனவாதத்தின் முன் இலங்கையில் இடதுசாரி இயக்கங்கள் நிற்க இயலவில்லை. இடதுசாரி அடையாளத்துடன் உருப்பெற்ற NLFT எந்நாளும் பெரிய அளவில் வளர இயலவில்லை. இந்தத் தேக்கம் பல உட்கட்சி விவாதங்களுக்கும் கருத்து வேறுபாடுகளுக்குமே இட்டுச் சென்றது. இறுதியில் எல்லா இடதுசாரி இயக்கங்களைப் போலவும் அது பிளவில் முடிந்தது. பிளவிற்குப் பின் NLFT யிலிருந்து PLFT உருப்பெற்றபோதும், அது பெரிதாக வளரவில்லை. மிக விரைவில் அதன் தத்துவார்த்த வழிகாட்டியாக இருந்த விசுவானந்ததேவன் கொல்லப்பட்டார் (1986, அக் 15). அதன் பின் NLFT மட்டுமல்ல PLFT யும் சிதைந்து சிறுத்தது. விசுவானந்ததேவனுடன் வெளிவந்து PLFT ஐ உருவாக்கிய அன்ரன், ரமணன் போன்றோர் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுக் கடுஞ் சித்திரவதைக்குப் பின் கொல்லப்பட்டனர். எஞ்சியிருந்தோர் ஒன்று வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்தனர், அல்லது அரசியல் வாழ்விலிருந்து ஒதுங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அளவிலும் இடதுசாரி இயக்கங்கள் பெரும் பின்னடைவுகளைச் சந்தித்தன. சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் கம்யூனிஸ்ட் ஆட்சிகள் வீழ்ந்தன. கட்சிகளும் இல்லாமற் போயின. லத்தீன் அமெரிக்கா, சீனம் போன்ற நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் தம் அடிப்படை அடையாளங்களை இழந்தன.

கம்யூனிஸ்ட் கட்சிகள் மட்டுமின்றி உலகெங்கிலும் ஆயுதப் போராட்டங்களும் படிபடியாக ஒடுங்கின. இலங்கையில் எல்லா இயக்கங்களையும் அழித்தொழித்த விடுதலைப் புலிகள் அமைப்பும் அழித்தொழிப்புக்கு ஆளானது.

# # #

பாரம்பரிய இடதுசாரி இயக்கங்களிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டு வெளிவந்த விசுவானந்ததேவனும் தோழர்களும், அங்கிருந்து விலகி, "தமிழீழப் போராளிகளுடன் தன்னையொரு புதிய தோழனாக" அடையாளம் கண்டு "பெருமிதம்" கொண்டனர். உருவாகியிருந்த ஈழ ஆயுதப் போராட்டங்களை அவர்கள் "சொந்த ஜனநாயக அரசை அமைத்துக் கொள்வதற்காகத் தமிழ் இனம் நடாத்திவரும் புரட்சிகரப் போராட்டம்" என வகைப்படுத்தி, "அதில் தனது பங்களிப்பைச் செய்கின்ற நோக்கில்" தம்மையும் இணைத்துக் கொள்வதாக அறிவித்து, அவர்களின் "இலக்கு" தன் பயணத்தைத் தொடங்கியது. அது மாத்திரமல்ல இப்படி முன்வைக்கப்படும் தனது பங்களிப்பு நடந்து கொண்டிருந்த "தமிழீழ தேசியப் போராட்டத்தை சரியான திசைவழியில் முன்னெடுத்துச்" செல்ல உதவும் எனவும் அது நம்பியது.

இன்னும் கூட "சிங்கள - தமிழ் இன தொழிலாளி வர்க்க இணைவு சாத்தியம்" என நம்பியவர்களை *இலக்கு* வரட்டுச் சூத்திரவாதம் எனக் கேலி செய்தது. "ஒடுக்கப்படும் தேசிய இனம் ஒற்றுமைக் குரல் எழுப்பும் என எதிர்பார்ப்பது கயமைத்தனம்" எனச் சாடியது. இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் இடதுசாரி அடையாளங்களை இழக்கத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் விளைவாக அது இன அடையாளத்தைத் தவிர பிற அடையாளங்களை மறுதலிக்கவும் தொடங்கியது. தமிழ் மக்களிடையே உள்ள சாதிய ஏற்றத் தாழ்வுகளைக் கணக்கில் கொண்டாலும் அது குறித்த தெளிவான திட்டம் எதையும் NLFT, PLFT முதலியன முன்வைக்கவில்லை.

முஸ்லிம் மக்களைப் பொறுத்த மட்டில் அவர்களைத் "தனித் தேசியப் பண்புகளைக் கொண்டிருப்பதாக" அங்கீகரித்த போதும் அவர்கள் "தனி இனமாகக் கூடுவதை" அங்கீகரிக்கவில்லை. அது மட்டுமல்ல "முஸ்லிம் மக்களுக்குத் தனியான அமைப்பு (என்பது) தவறான போக்கு" என அழுத்தம் திருத்தமாகவும் அவை முன்வைத்தன.

NLFT யிலிருந்து பிரிந்து PLFT ஐத் தொடங்கிய போது, இரண்டும் வேறுபடும் புள்ளி குறித்து விசுவானந்ததேவனின் PLFT முன்வைத்த ஓரம்சம் இங்கே குறிப்பிடத்தக்கது:

"பாட்டாளி வர்க்கத் தலைமையை உத்தரவாதம் செய்த பின்னால்தான் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடமுடியும் என NLFT அமைப்பினால் முன்வைக்கப்பட்ட கருத்து தவறானதென நாம் கருதுகிறோம். போராட்டம் முனைப்படைந்து ஏனைய வர்க்கங்களால் போராட்டம் முன்னெடுக்கப்படும் இவ்வேளையில், தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து பாட்டாளி வர்க்கத்தை அணி திரட்டுவது என்பது சாத்தியமற்றது"

என்பதுதான் அது. இப்படி அப்பட்டமாக வர்க்க அரசியலிலிருந்து இன அரசியலுக்குச் செல்வதை PLFT முன்மொழிந்துக் களம் இறங்கியபோதும், அந்த "ஏனைய வர்க்கங்கள்" இந்த மனம் திருந்தி வந்த "பாட்டாளி வர்க்கத்தை" அனுமதிக்கவில்லை என்பதுதான் வரலாறாக அமைந்தது.

எனினும் இந்தப் பிற வர்க்கங்களால் தலைமை தாங்கப்பட்ட ஆயுதப் போராட்டம் சீரழிந்து வருவதை விசுவானந்ததேவனும் தோழர்களும் காணத் தவறவில்லை. "கருத்து மாறுபடுகிறவர்கள் கடும் தண்டனைக்கு உள்ளாவதையும்", "ஆயுதப் போராட்டங்கள் சித்திரவதை முகாம்களாக மாறுவதையும்", "இயக்கங்கள் பொது எதிரிக்கு எதிராக ஐக்கியப்படுவதற்குப் பதிலாக ஒருவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் அழித்துக் கொள்வதையும்" தோழர்கள் தங்களின் புதிய "பயணம்" ஊடாக அவர்கள் அடையாளப்படுத்தியபோதும், அந்த விஷச் சுழலிலிருந்து அவர்களால் தப்பிக்க இயலவில்லை.

இதுதான் நம் வரலாறு. இங்கே நான் நம் வரலாற்றை மட்டுந்தான் சுட்டிக்காட்டியுள்ளேன். இதிலிருந்து என்னென்ன பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நாம் எல்லோரும் சேர்ந்துதான் சிந்திக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதவன்

# விசு, என் நண்பன், என் தோழன்

அப்போது 1976 ல் பேராதனையில் என்னை ராக்கிங்கில்
இருந்து மீட்டெடுத்தார்.
தன்னுடன் பேசும்படி அழைத்தார்.
சிவசேகரம் உட்பட அவர் ஒரு ரெபெலியனாகவே தென்பட்டார்.
எப்பொழுதுமே என்னை மதித்தார்.

அவர் மேல் எனக்கொரு பிரியம் இருந்தது....

பூர்ஷ்வா இலக்கியம் பிடிக்காதோர்
எப்படி - ஆதவனின் காகித மலர்கள் வாசிக்க முடியும்...?
'வூஸ் கன்ரீனி'ல் முதன் முதலில் விசு
– காகித மலர்கள் – வாசிச்சுக் கொண்டிருந்தார்.

பிறகு நாங்கள் நண்பரானோம்.
சசி கிருஷ்ணமூர்த்தியும் சேர்ந்து கொண்டார்.
திருமலை நவம் எனக்கு சீனியர்.

என் வீட்டிற்கு அடிக்கடி வருவார்.
அம்மா கேட்பாள்...
– ஆரடா இந்தாள்? –
– ஒரு நல்ல மனிதன் – இதுவே என் பதில்.
எதுவுமே வேண்டார்.
என் அறையில் பெரிய அரசியல் எதுவுமே நாங்கள்
பேசியதில்லை.
ஆனால் மெலிந்த அந்த உருவத்தின் மேம்பாடுகள் சொல்ல
முடியாதவை.

தீர்த்தக்கரை
சாந்திகுமாருக்கும் ஜோதிக்குமாருக்கும் எனக்கும்
இவர் ஓர் அவசரக்குடுக்கை என்ற பார்வை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை நித்தியானந்தனின் ஸ்கிறிப்ற் – திருவிழா – கொண்டு வந்தார்.
ஆதவன் இதை நாடகமாக்கினால் என்ன..?
ஓம் செய்வோம் என்றேன்.

சீமெந்துத் தொழிற்சாலையில் இவர் ஒரு பொறியியலாளராய் இருந்த பொழுதும் எனக்குப் 'பிளேன் ரீ' வாங்கித் தருவார். அது போலவே யாழ் பல்கலையில் 'சீனியர் கொமென்ற் றூமி'ல் விசுவிற்காக என் கணக்கில் என்றுமே பிளேன் ரீயும் வடையும் காத்திருக்கும்.

விசு.
ஐ மிஸ் யு. என்றுமகலா நினைவிது.
எழுதிக் கொண்டே போகலாம்.
– ஆதவன் இதை எழுதுங்கோ – என்று ஆக்கினை கொடுக்கும் நண்பன் நீ.
உன்னாற்றான் முடிந்தது விசு பல காரியங்கள்.
நீ இறந்ததும் தெரியாதெனக்கு.
யாருனைக் கொன்றார்கள் என்பதுவும் தெரியாதெனக்கு.
நீ
வாழ்ந்திருக்க வேண்டும் என்பதில் எந்தச் சந்தேகமும்
எனக்கில்லை.
விசு
என் நண்பன்
என் தோழன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லோகநாதன்**

---

# தலைமைப் பண்பிற்கான ஆளுமை

1973 களில் ஒரு நாள் எனது விடுதியில் பக்கத்துப் படுக்கையில் இருக்கும் "நம்புகேவா" என்ற மாணவன் "அடேய் உன்னைத் தேடி யாரோ விசிட்டர் வந்திருக்கிறான். நீ வோர்டன் றூமுக்குப் போ" என்றான்.

உண்மையில் நம்பமுடியாத ஒரு செய்தி, என் சகவிடுதி மாணவர் 14 சிங்கள நண்பர்கள் தவிர, அதுவரை என்னைத்தேடி யாரும் வந்ததே கிடையாது. யாராக இருக்கும் என்ற கேள்வியோடு தயாராகிக்கொண்டேன்.

'வோர்டன்' அறைச் சோபாவின் ஓரப் பிடியில் கைவைத்தவாறு கால்மேல் கால்போட்டபடி ஓர் இளைஞர் உட்கார்ந்திருக்கிறார். 'ஹாஸ்டல் வோர்டன்' முகத்தில் வழமையான கடுப்பில்லை, இருவரும் வாகாக அமர்ந்து சரளமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த சிறிய இடைவெளிக்குள் நாம் கொடுமையாகவே பார்த்த 'ஹாஸ்டல் வோர்டனி'டம் முகத்தில் சிரிப்பு! இந்த மாற்றம் ஏற்படுத்திய அந்த ஆளுமை எழுந்தது, "நான் விசு, விசுவானந்ததேவன் நீங்கள் லோகநாதன் தானே" எனக் கைகுலுக்கிக் கொண்டோம்.

வெளியே ஓர் அரசமரத்தடி சீமெந்து இருக்கையில் எமது அறிமுக உரையாடல் ஆரம்பித்தது. தோழர் என்ற முத்தாய்ப்புடன் ஆரம்பித்த பேச்சுக்களில் என்னைப்பற்றியும், நான் கண்டியில் வந்திருப்பது பற்றியும், தோழர் மணியம் வாயிலாக அறிந்துகொண்டுள்ளார் என அறிந்து கொண்டேன்.

நாம் எங்கிருந்தாலும் தளராத செயற்பாட்டாளர்களாக இருக்கவேண்டும் என்ற உடன்பாட்டை சந்தித்த அன்றே மனதில் உறைய வைத்த அந்த உருவமும், அன்றே என் மனத் தடங்களில் உறைந்துபோனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அடிக்கடி என்னிடம் வருவதும் நானும் அவரிடம் போவதுமாக உறவாடிய நாட்களில், என்னால் பிரமிக்கத் தக்க பல சந்தர்ப்பங்களை அவர் தந்திருக்கிறார். பேராதெனிய பல்கலைகழகத்தின் பொறியியல் மாணவர் பெருமளவில் தங்கும் அக்பர் நெல் மண்டபம் அவரது விடுதி. அதிகமான நிகழ்ச்சிகள் நடைபெறும் ஈ.ஓ.ஈ.பெரேரா மண்டபமும், அதன் அருகே தான். ஒரு தடவை ராதாகிருஸ்ணனது வயலின் கச்சேரி அந்த மண்டப அரங்கில் நடந்தது. அதிக அளவில் சிங்கள மாணவர்களும் வந்திருந்தனர். அறிமுக உரைகள் அனைத்தும் தமிழைச் சிங்களத்திலும், சிங்களத்தைத் தமிழிலுமாக மொழிபெயர்த்தவர் தோழர் விசு தான். பிரமிக்க வைத்துவிட்டார்.

விசுவின் மொழிபெயர்ப்பில், அண்மையில் காலமான சிவா சுப்பிமனியத்துக்கு ஒப்பான அல்லது மேலான பாங்கியற் திறனிருக்கும். நல்ல வார்த்தைகளின் பிரவாகம், இலகுபடுத்தப்பட்ட வார்த்தைகள், புரிய வைக்குமாறு கொடுத்தல் பெருமைப்பட வைத்தது. மூன்று மொழியும் அவரிடம் கைகட்டிச் சேவகம் செய்தன. சில நிகழ்ச்சிகளில் சிங்கள மாணவர்கள் தம் பிரதியாகத் தோழர் விசுவையே சிங்களத்தில் பேசவிடும் அளவுக்கு சிங்கள மொழியிலும் திறன் வளர்த்திருந்தார்.

என்னுடைய விடுதியிலிருந்த சிங்கள சக மாணவர்கள் விசு வரவில்லையா எப்போ வருவார் என்று கேட்குமளவு அவர்களிடமும் ஈடுபாடு காட்டினார். அவர்களோடும் அவர் அரசியல் தான் பேசுவார். ஆனால் கசப்பற்றிருக்கும். அந்த ஈராண்டு காலப் பகுதியில் என் விடுதி மாணவர்களிற் சிலர் விசுவின் தோழரானார்கள். அவரையும் விசுத் தோழர் என்றே அழைக்க ஆரம்பித்தார்கள். அவரது காலப்பகுதியில் பேராதனையில் அதிக மாணவர்கள் மட்டுமல்ல, பல்கலைக்கழகத்துக்கு வெளியிலுள்ள மாவத்தகம, தெல்தெனிய, நத்தரம்பொத்த கிராமங்களில் உள்ள விவசாயிகள் தொழிலாளர்களும் சிலர் வென்றெடுக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால சக மாணவர்கள், வெளியார் மட்டுமல்ல விரிவுரையாளர்கள், சிவசேகரம், டாக்டர் நந்தி, டாக்டர் குணசேகர போன்றவர்களிடம் எற்பட்ட மார்க்ஸியக் கண்ணோட்டத்துக்கும் இவரது பங்களிப்பு துணைபோனது. அதேவேளை சில விரிவுரையாளர்களின் வெறுப்புக்கும் இவர் ஆளாக நேர்ந்தது. தான் ஒரு பொறியியலாளராகி, அதிக சீதனம் வாங்கி சொந்த வாழ்கையை மேம்படுத்த எண்ணும் சராசரித் தமிழ் மாணவனாக எண்ணாமல், படிப்பைவிட அதிகமாகவே பொது வாழ்வை நேசித்ததால் இடையிடையே பரீட்சைகளில் தடங்கல்களும் வந்து போயின.

கிடைக்கும் பெரு விடுமுறைகளுக்கு மலையகப் பகுதியில் சென்று தோழர்களோடு தங்கி வகுப்புகள் எடுப்பதும், செங்கொடிச் சங்க வேலைகளில் கலந்துகொள்வதும் எனப் பாட்டாளிவர்க்க உயர்வுக்காக தன்னை அர்ப்பணித்து, ஒவ்வொரு வினாடியும் ஓயாது உழைத்தவர்.

சராசரி ஆண்களைவிடச் சற்றுக் குறைவான உயரமாக இருப்பார், என்றபோதும் ஏனைய அனைத்துமே சராசரியைவிட உயர்வாகவே இருந்தன. சந்திக்கும் யாரும் விலகிப் போனதாக நான் அறியவில்லை. சந்திப்பவர்களுக்கு தைரியமூட்டல், உன்னால் முடியும்! உனக்குள்ளும் ஆற்றலுண்டு!! என அவரவர் திறமைகளைக் கண்டறிந்து வளர்த்தெடுத்தல், அழைப்புகளுக்குக் குறிப்பிட்ட நேரத்துக்கு முந்திய வருகை, சிந்தனைத் திறன், தன்கல்வி - தன்சாப்பாடு - தன்உடல்நலம் இவற்றில் அக்கறை எதுவும் காட்டாது, உரிய வேலைகளில் தவறாது ஈடுபாட்டுடன் பங்கெடுத்தல் போன்ற பண்புகளால் நாமெல்லாம் உயரத்தில் வைத்தே தோழரைப் பார்த்தோம். பொறுப்புகளை ஒப்படைக்கும் போதெல்லாம் தேர்வறிந்து பொருத்தமானவர்களிடம் ஒப்படைப்பதில் விசுவைத் தாண்ட யாருமில்லை. 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி'யை ஸ்தாபித்தபோது, அண்மையில் மறைந்த தோழர் சண்முகநாதனை உட்கார வைத்து "நீ தான் உபவிதி எழுதுகிறாய்!" என்று கட்டளை பிறப்பிப்பதுபோல பொறுப்பாகக் கட்டிப்போட்டதால் தான், அருமையான ஓர் அரசியல் யாப்பு சண்முகநாதனால் எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தின் வெளியே, கண்டி சார்ந்த மேற்சொன்ன கிராமங்கள் மற்றும் மலையகத்தின் ஓரிரு தோட்டப் பகுதிகளின் மார்க்ஸியக் கட்சி உறுப்பினர்கள், இடது நோக்குள்ளவர்களது ஒன்று கூடலுக்கும் செயற்பாடுகளுக்குமாக, கண்டி நகர் மத்தியில், பொதுச் சந்தைக்கு முன்னால், முஸ்லிம் ஹோட்டல் மேல் மாடியில் சிறு மண்டபம் போல ஒரு பெரிய அறை வாடகைக்கு எடுத்தார்கள். அதன் பன்முகப் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்ததிலும், உறுப்பினர் எண்ணிக்கை உயர்ந்ததிலும் இவரது அயராத உழைப்பும், கண்டிக் கந்தையா என அழைக்கப்பட்ட மலையகத்தை சேர்ந்த தோழர் கந்தையாவினது உயர்வான உழைப்பும் இன்றும் நினைவிலிருத்திப் பெருமைப்பட வைக்கின்றன. சிறுவியாபாரியான கண்டிக் கந்தையா, கட்சியின் முழுநேரப் பணியாளராகத் தன்னை மாற்றிக்கொண்டார்.

கந்தையாவின் அறையானது மாலைகளில் நாம் ஒன்று சேரவும், கலந்துரையாடவும், விமர்சனங்கள் வைக்கவும், புத்தக வெளியீடுகள், சிறிய வாசகசாலை... என இத்தியாதி பயன்களோடு மட்டுமல்ல, அதில் "கண்டிக் கலை - இலக்கிய வட்டம்" என்ற அமைப்பொன்றும் தோழர் விசுவின் ஆலோசனையுடன் 1973 ன் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வமைப்பினால் கலந்துரையாடல்கள், வாசனையும் - விமர்சனங்களும் என பல பயன்கள் நாம் பெற்றுக்கொண்டதோடு, "நதி" என்றொரு மாதாந்த கலை இலக்கிய சஞ்சிகையும் வெளியிட்டோம். இதன் ஆசிரிய குழுவில் தோழர் விசு, டாக்டர் நந்தி, கண்டிக் கந்தையா, டாக்டர் பாலா உட்பட ஐந்து பேர் செயற்பட்டோம். விசுவின் 'அர்ச்சனைக்கு'ப் பயந்து ஆக்கங்களை எழுதியதென்பதில், வயதான டாக்டர் நந்தி கூட விதிவிலக்கல்ல. "நதி"யில் தான், நான் முதலில் நடுக்கத்தோடு எழுத ஆரம்பித்தது. அந்த முன்வரவுக்கு தோழர் விசுவுக்கு நான் என்றும் நன்றியுடையவன்.

1975 இல் நானும், 1976 இல் என நினைக்கிறேன் விசுவும் யாழ்பாணம் வந்துவிட்டோம். யாழ்பாணத்தில் சில மாலைகளிலும், வார இறுதிகளிலும் ஸ்ரான்லிவீதி புத்தகக் கடையில் சந்திப்போம். சண்முகதாசன் தலைமையிருந்து வெளிவந்து, "இலங்கை கம்யூனிஸ் கட்சி (மா.லெ)" எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரோடு இயங்கத் தொடங்கியிருந்தது, நாம் சார்ந்த அணி. இதன் யாழ் பிரதேசக் கமிட்டியில் விசுவும் இருந்தார். கொமிட்டி கூடும் போதெல்லாம் பல விடயங்கள் பேசுவோம். ஓரிருவர் வெளிநடப்பு செய்யுமளவுக்கு அனல் பறக்கும் விவாதங்களும் நடக்கும். இருந்த போதும், இதயம் இடைவிடாது துடிப்பது போல, சிற்றெறும்பின் சுறுசுறுப்போடு அக்கறை அதிகம் காட்டிச் தொழிற்பட்ட, செயற்பட ஆவலிலுள்ள தோழர் விசுவானந்ததேவனுக்கு, எந்தவகையிலும் எங்களது அசைவுகள் திருப்தியாக இல்லை.

இலங்கை முழுவதையும் பிரதிநிதித்தவப்படுத்தும் கட்சி என்றபோதும், தமிழ் பிரதேசங்களின் தேவைகள் உரிமைகள் மீதான மறுப்பும் அச்சுறுத்தல்களும் பிரத்தியேகமாக நோக்கவேண்டும். அதன் மீட்சிக்கான வேறுபட்ட செயற்பாடுகளின் தேவை இருப்பதாக வலியுறுத்தி தோழர் விசுவால் வடபிரதேசக் கொமிட்டியில் முன்மொழியப்பட்ட கருத்து, பல விவாதங்களுக்கு உட்பட்டுத் "தமிழ் மக்கள் ஜனநாய முன்னணி" தோற்றம் பெற்றது. இதனை இனவாதமாக யாரும் பார்த்ததில்லை. இதன் தோற்றத்தில் கார்த்திகேசன் மாஸ்டர் உட்பட, அதிகமானவர்கள் விவாதத்தின் பின் உடன்பட்டிருந்தனர். உள்ளக ஜனநாயகத்தையும் பாட்டாளிவர்க்க ஜனநாயகத்தையும் மதிக்கும் பண்பு நிறைந்தவர்கள் மார்க்ஸிஸ்டுக்கள் என்பதும், அதே பண்பு விசுவிடமும் காணப்பட்டது என்பதாலும் விவாதித்து முடிவெடுத்தார்களே தவிர, உடைத்துக்கொண்டு விசு வெளியேறவில்லை.

இதற்கான அமைப்பைக் கட்டுதல், அணிதிரட்டல் வேலைகளில் பலரையும் ஈடுபடுத்தி செயற்பட்டதில், கணிசமான இளைஞர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் மத்தியில் இதன் தேவை அறியப்பட்டது.

இதற்கானகாலம் அதிகம் நகருமுன், தமிழ் மக்கள் மீதான அரசின் கண்மூடித்தனமான ஒடுக்குமுறையும், அதைத் தொடர்ந்து தோற்றம் பெற்ற வடபகுதி இயக்கங்களும் அவற்றின் போக்கிலும் அறவே நம்பிக்கை இழந்ததாலுமே NLFT எனும் ஆயுதப் போராட்ட இயக்கமொன்றை ஆரம்பிக்கும் தேவைக்கு விசுத் தோழர் உந்தப்பட்டார் என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல வாசனையும், மார்க்ஸிய அறிவும், மூவின மக்கள் மத்தியில் வேலை செய்த அனுபவமும், உலக அரசியலுடைய போக்கை நன்கு அறிந்திருந்ததாலும், பல விடையங்களின் முடிவை முன்கூட்டியே சரியாகச் சொல்லவும் செய்யவும் விசு வல்லமை பெற்றிருந்தார்.

- இன்றைய முள்ளிவாய்க்கால் முடிவை அன்றே எதேச்சையாகச் சொன்னவர்.

- இந்திய அரசு ஒரு போதும் எமக்கு உதவாது. தமிழ் நாட்டு அரசியல்வாதிகளும் உதவப்போவதில்லை. இந்தியா பின்புலமாக இருக்கவேண்டிய அமைவுகள் இருப்பதால், எமது போராட்டத்தின் அவசியம் பற்றிய பிரச்சாரம் இந்திய மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படவேண்டும். இந்திய அரசை இம்மியளவும் நம்பக்கூடாது என்ற கருத்தை ஆணித்தரமாக முன் வைத்தவர். இன்று நடந்த முடிந்த உண்மையும் அதுவானது.

- அசாம் போன்ற இந்திய மாநிலங்கள் ஒன்றிரண்டின் போராட்டக் குழுக்களின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும், இந்திய இராணுவம், உளவுத்துறைகளின் கோரமுகங்கள் எப்படி என்பதை அறியவும் இடையிடையே இந்தியா சென்றுவந்தார்.

NLFT இவரது வழிகாட்டலில் நேர்மையாகவும், போராட்டத் திறன் மிக்கதாகவும் வளர்ந்து, கணிசமான போராளிகளையும் கருவிகளையும் கொண்டு சில போர் செயற்பாடுகள், விடுவிப்புகளை வெற்றிகரமாக ஆற்றியிருந்தது.

தலைவர் விருப்பத்துக்கு மாறாகவோ, இவர் ஆணைக்கு மறுவார்த்தை சொன்னாலோ 'மரண தண்டனை' என்றிருந்த புலிகள் (நாசிகள்) இயக்கம், உட்கொலைகளில் பெயரெடுத்த புளொட் (மாபியாக்கள்) இயக்கம் போன்றில்லாமல் …

NLFT யிடம் இருந்த விமர்சன ஜனநாயம், PLFT யாகப் பிளவுபட காரணமாயமைந்தது. எனினும் பாரிய முரண்களையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரோத உணர்வுகளையோ கொண்டிருக்காத அளவுக்கு இவரால் வழி நடத்தப்பட்டதாக அறிந்தேன்.

NLFT யின் இயங்கு காலகட்டத்தில் நான் கொழும்பிற்கு மாற்றலாகி வந்ததால், அந்தக் காலப்பகுதியிலும் PLFT பிளவான காலப்பகுதியிலும் ஏற்பட்ட மாற்றங்கள் செயற்பாடுகளில் என்னை ஈடுபடுத்தவோ பூரணமாக அறியவோ முடியாது போனது துரதிஸ்டம். எனினும் தனியே கிழக்கு மாகாணத்துக்கும் கொழும்புக்குமான "இலக்கு" சஞ்சிகை விநியோகம் மட்டும் என்னால் செய்யமுடிந்தது. இந்த பிந்திய காலத்தில் அதிக ஈடுபாட்டோடிருந்த தோழர்கள், இந்த நூலில் அது பற்றிய தகவல்கள் தருவார்கள், அறிந்துகொள்வீர்கள்.

விசுவின் மரணத்திலும் எனது சந்தேகம் உண்மைக்கு அண்மையிலிருந்தாலும், என்னால் எதுவும் உறுதியாக எழுதமுடியவில்லை.

இவரது இழப்பு நாட்டின் பெறுமதிமிக்க ஓர் ஆளுமையின் இழப்பு என்பதை யாரும் மறுப்பதற்கில்லை!

மற்றும் தனிப்பட்ட வாழ்வு என்று ஒன்றை அவருக்காகச் சொல்லுமளவு அவர் அடையாளப்படுத்தவுமில்லை. நாங்கள் அப்படியொன்றைச் சந்தித்ததுமில்லை. ஓரிரு நாட்கள் வீட்டிற்கு சென்றிருக்கிறேன். அவரது இந்தப்பண்புக்கும் ஆளுமைத்திறனுக்கும் தோழமை உணர்வோடான அவரது அப்பா, அன்பான அம்மா, தங்கை இவர்களும் பங்களித்திருப்பதாக எண்ணத் தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லையா தயாபரன்**

## வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டிய விசுவானந்ததேவன்

பலராலும் நேசிக்கப்பட்ட, மிகவும் நேர்மையான, இனவாதமற்ற மானிட ஆராதிப்பு மிக்க, என் மதிப்புக்குரிய நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன், சென்னையிலிருந்து செப்டெம்பர் 1986ல் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வந்து, அக்டோபர் 15, 1986 திரும்பிச் செல்லும் வழியில் அநியாயமாகக் கொலையுண்டு, முப்பதுவருட காலங்கள் உருண்டோடிச் சென்றுவிட்டன. தமது அதிகாரத்துக்கும், பதவிக்கும், பிரசித்திக்கும், அரசியலை பயன்படுத்தி, மக்களை உரமாக்கியவர்கள் வாழ்ந்த காலத்தில், மக்களின் அரசியல் விடிவுக்காக நீதிக்கும், நியாயத்துக்குமாகப் போராடி, தன்னையே உரமாக்கியவர்தான் நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன்.

அராஜகவாதிகளும், சுயநலமிக்க கர்வம் கொண்ட வறட்டு வேதாந்திகளும், தம்மை முன்னேறிய பிரிவினர் என நாமம் பூசிக் கொண்டவர்களும், பணமே பலம் என்னும் கூற்றைத் தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்தவர்களும் மத்தியில், தீர்க்கம் நிறைந்த கண்களும், மெல்லிய உடல்வாகும், மிகவும் மென்மையான உள்ளமும், இனிய சுபாவமும் கொண்ட நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன், அவரது முப்பத்து நான்கு வருட வாழ்வில், உறுதியான கொள்கைப் பிடிப்புள்ள, மனித நேயமிக்க, சமூகப் பிரக்ஞை கொண்ட, எளிமையான, நேர்மையான மனிதராக வாழ்ந்திருந்தார்.

நவம்பர் 29, 1952ல் கரவெட்டியைச் சேர்ந்த கல்லுவம் என்ற கிராமத்தில், சேர நாட்டையும் தொண்டை நாட்டையும் பூர்வீகமாகக் கொண்ட, விவசாயக் குடும்பம் ஒன்றில் பிறந்த விசுவலிங்கம் விசுவானந்ததேவன், "வளரும் பயிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முளையிலே தெரியும்" என்பதற்கமைய, உடுப்பிட்டி அமெரிக்க மிசன் பாடசாலை மாணவனாக இருந்தபோதே, தெளிவும், தீட்சண்யமும் மிக்கவராக, சமூக உட்கொடுமைகளையும், சாதிய முறைமைகளைகளையும் எதிர்த்த பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை கார்த்திகேசனுடன் இணைந்து, புரையோடிக் கொண்டிருந்த சாதியத்தின் மோசமான பரிமாணங்களை, தன் பதின்பருவத்திலே இனங்கண்டு, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தார்.

1971 ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கு தெரிவாகி, அங்கு கல்வி பயிலும் காலத்தில், நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன், "நதி" சஞ்சிகைக்குழுவிலும், "மலையக மக்கள் முன்னணி"யிலும், "கண்டி கலாச்சாரக் குழு"விலும் இணைந்து பணிபுரிந்தார். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் சிறிதுகாலம் போதனாசிரியராக வேலையாற்றினார்.

எழுபதுகளில் இந்தியாவில் தலைமறைவாக இயங்கிய பல்வேறு சமூகவிடுதலை இயக்கங்களை இரகசியமாகச் சந்தித்து வந்த வேளையில், இலங்கையிலிருந்த தனது நண்பர்களை மாதக்கணக்காகத் தொடர்பு கொள்ளாததால், விசுவானந்ததேவன் இந்தியாவில் காலமாகிவிட்டார் என்று பரவிய வதந்தியை நம்பி, மலையக மக்கள் இயக்கத்தைச் சார்ந்த லக்ஸ்மன் சாந்திகுமார், துண்டுப்பிரசுரம் மூலம் அஞ்சலியும் தெரிவித்திருந்தார்.

பின்னர் இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பிய நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன், முருகுப்பிள்ளை கார்த்திகேசன் *(1919-1977)*, நெடுந்தீவு சின்னத்தம்பி சண்முகநாதன் *(1936-2016)*, கந்தசாமி யோகநாதன் (கவிஞர் சாருமதி *1926-1998*), பாண்டிருப்பு சண்முகம் சிவலிங்கம் (ஸ்டீவன் மாஸ்டர் *1936-2012*), இரத்தினகோபால் ஜெயபூரணபாலா போன்றவர்களுடன் இணைந்து, "தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி" என்ற அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவானந்ததேவன் "தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி"யின் பிரதான இயக்கசக்தியாகவும், தீவிர இயங்குசக்தியாகவும், உறுதியான தெளிவுமிக்க கொழுகொம்பாகவும் இருந்த அதேவேளை, "தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி"க்கு வெளியே, முற்போக்கு ஜனநாயக தேசபக்த சக்திகள் மத்தியில் ஏராளமான நண்பர்களைக் கொண்டிருந்ததோடு, முற்போக்கு ஜனநாயக தேசபக்த சக்திகள் அனைவருக்கும், உற்சாகம் அளித்து, அரவணைக்கும் பண்புடன் பணியாற்றினார்.

"தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி"யின் செலவுகளுக்காக பணமில்லாத நிலையில், விசுவானந்ததேவன் தனது பெற்றோரின் காணிகளை அடகு வைத்து, "தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி"யின் செயற்பாடுகளைத் தொடர்ந்தவர். எரிவதாகக் காட்டிக்கொண்டு, பலர் தமக்கு எண்ணெய் சேர்த்துக் கொண்டிருந்த காலங்களில், எண்ணெயே இல்லாது, தன்னையே எரித்து, தியாகச் சுடராக எரிந்தவர்தான் விசுவானந்ததேவன்.

நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன் 1980ல் காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவனத்தில், பொறியியலாளராக பணியாற்ற இணைந்தார். ஆனால் சிறிது காலத்தில், காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவன ஊழியரின் அடிப்படை உரிமைகளுக்காக குரல் கொடுத்ததால், விசுவானந்ததேவனும் அவரது மனைவி ஜெயலக்சுமியும், வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். வேலை பறிபோனதை பற்றி எதுவித கவலையுமின்றி, மக்களுக்காக தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்து, தன்னடக்கத்துடன் தன் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தி, பேரினவாதத்தை மறுதலிக்கின்ற அதேவேளை, குறுந்தேசிய உணர்வலையில் அள்ளுப்பட்டுப் போகாது, தீவிரமாக சேவை செய்த, ஒரு தன்னலமற்ற இளைஞர்தான் நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன்.

எண்பதுகளின் ஆரம்பத்தில், பொறியியலாளர் மாவை நித்தியானந்தன் எழுதி, அளவெட்டி "ஞாயிறு படைப்பாளிகள் வட்டம்" என்ற அமைப்பைச் சேர்ந்த கலைஞர்கள் நடித்த "திருவிழா" எனும் வீதி நாடகத்தை, பல்வேறு இடங்களில் அரங்கேற்றுவதில், உந்துசக்தியாக திகழ்ந்த நண்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவலிங்கம் விசுவானந்ததேவன், "பயணம்" என்ற பத்திரிகை மூலம், முற்போக்கு அரசியல் கருத்துக்களையும், ஆக்கங்களையும் வெளியிட்டார்.

அக்காலகட்டத்தில், பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அடர்ந்த முடி மற்றும் தாடியுடன், கூடவே தோளில் தொங்கும் ஒரு துணிப்பையுடனும், அடிக்கடி வருகை தந்த நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன், "அக்பர்-நெல் விடுதி"யில் என்னுடன் தங்கியிருந்து, கந்தசாமி பத்மநாபா, அழகையா துரைராஜா, சிவானந்தம் சிவசேகரம், எச்.என். பெனாண்டோ, ஜயரட்ண மல்லியகொட, நியூட்டன் குணசிங்க, பெரியசாமி முத்துலிங்கம், குருநாதன் பவானந்தன் உட்பட பலரைச் சந்தித்து, இலங்கை அரசியல் நிலவரங்கள் குறித்து அவர்களது எண்ணங்களையும், கருத்துக்களையும், தெளிவாகச் செவிமடுப்பார். இவ்வுரையாடல்களின்போதுதான் விசுவானந்ததேவன் எத்தகைய மனப்பக்குவமும், சமூதாய உணர்வும் கொண்டவர் என்பதைப் புரிய முடிந்தது.

விசுவானந்ததேவனிடம் இருந்த, கருத்து வேறுபாடுகளை முரண்பாடுகளாக்கி கொள்ளாது, முரண்பாடுகளைப் புரிந்துணர்வோடு ஏற்றுக் கொண்டு, மற்றவர்களின் அபிப்பிராயங்களைத் தெளிவாகச் செவிமடுக்கும் மனப்பக்குவம், பலரும் அவரைச் சிறந்ததொரு முன்மாதிரியாக கொள்வதற்கு வழி சமைத்தது. மற்றவர்களின் கருத்துக்களைச் சரியாக அறிந்து கொள்ளும் மனப்பக்குவம் உடையவர்தான், தமது சொந்தக் கருத்துக்களை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்கு அருகதையுடையவர் என்பது மனித நிலைப்பட்ட நாகரிகமாகும். இத்தகைய உயரிய நாகரிகத்தைக் விசுவானந்ததேவன் கடைப்பிடித்ததோடு, மற்றவர்களுடனான அத்தகைய கலந்துரையாடல்களில் பெற்ற அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டு, தனது எண்ணங்களையும், கருத்துக்களையும் விசுவானந்ததேவன் பட்டைத் தீட்டிக் கொள்வார். விசுவானந்ததேவன் தன் அமைப்புக்கு வெளியே, தனிநபர்களாகவும், வேறு அமைப்புக்களிலும், தேசிய ஜனநாயக முற்போக்கு சக்திகள் இருக்கின்றார்கள் என எண்ணி இயங்கியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைச் சாத்தியமான, கொள்கைகளையும், தந்திரோபாயங்களையும், முன்வைக்க முடியாத, பிற்போக்கான அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏமாற்று அரசியலை, அம்பலப்படுத்தி வெளிவந்த "புதிய பாதை" பத்திரிகையின் ஆசிரியர் சதாசிவம் சிவசண்முகமூர்த்தி (சுந்தரம்), ஜனவரி 02, 1982 சித்திரா அச்சகத்தில் "புதிய பாதை" பத்திரிகையை அச்சிட்டுக் கொண்டிருந்த வேளை, சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அப்போது, உடனடியாக அப்படுகொலையைக் கண்டித்து சுவரொட்டிகளையும் துண்டுப் பிரசுரங்களையும் விசுவானந்ததேவன் வெளியிட்டதோடு, "புலிப்படைத் தளபதி சுந்தரம் படுகொலை" என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரத்தை அச்சிட்டவர்கள், அதனை விநியோகிக்கப் பயந்தபோது, அத்துண்டுப் பிரசுரத்தையும் துணிவோடு யாழ்ப்பாணக் குடாநாட்டில் விசுவானந்ததேவன் விநியோகித்தார்.

அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கும், ஆயுத பலத்தில் நம்பியிருப்பவர்களுக்கும், எதிரான அரசியல் கருத்துடன் செயற்பட அதிக துணிச்சல் தேவை. நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன் அதிகார பீடத்தில் அமர்த்திருப்பவர்களினதும், ஆயுத பலத்தில் நம்பியிருப்பவர்களினதும், தவறுகளை தவறென்று விமர்சிக்கத் தயங்காத துணிவுமிக்கவர்.

மே 11, 1983 பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில், விசுவானந்ததேவனின் நண்பரான பொறியியல் பீட முதலாம் வருட மாணவன் பாலசூரியன், அருணாசலம் விடுதியைச் சேர்ந்த நான்காம் வருட விஞ்ஞானபீட மாணவர்கள் துளசி விக்ரமசிங்க, மற்றும் எக்கநாயக்க, பல் வைத்தியர் எஸ்.கமகே ஆகியோரின் தலைமையிலான கும்பல்களுடன் சேர்ந்து, பாலசூரியனுடன் ஒன்றாக கல்வி கற்ற பொறியியல் பீட முதலாம் வருட மாணவன் டபிள்யூ.என்.வீ.பெனாண்டோ உட்பட பலரால், மோசமாகத் தாக்கப்பட்டு, அதன் பின்னர் "பயங்கரவாதி" என்ற சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட சம்பவத்தைக் கேள்விப்பட்ட விசுவானந்ததேவன், பேராதனைப் பல்கலைக்கழகமும், விசாலமான பரந்துப்பட்ட பார்வையை இழந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்த இனவெறியினால், இனவாத சகதிக்குள் வீழ்ந்து மூழ்குவதாக விசனம் தெரிவித்தார்.

ஜூலை 1983ல் இடம்பெற்ற வெலிக்கடைச் சிறையில் தமிழ்க் கைதிகள் படுகொலை, நாடு தழுவிய இனக்கலவரங்கள், கொழும்பில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழர் அனைத்தையும் இழந்து அகதி முகாம்களில் அடைப்பு போன்றவற்றையடுத்து, ஒட்டுமொத்தமாக இலங்கையின் எதிர்காலமே இனவெறியர்களால் எரிக்கப்பட்டுள்ளது என, விசுவானந்ததேவன் மிகவும் கவலைப்பட்டார்.

"புதிய பாதை" ஆசிரியர் சதாசிவம் சிவசண்முகமூர்த்தியின் (சுந்தரம்) படுகொலைக்குப் பின்பு "புதிய பாதை" பத்திரிகையை, மீண்டும் யாழ்ப்பாணத்தில் அச்சிட்டு பல இதழ்களை வெளிக்கொணர, எனக்கு பல்வேறுபட்ட வழிகளிலும், விசுவானந்ததேவனும் கூடவே அவரது நண்பர் சாரங்கபாணி விவேகானந்தனும் கைகொடுத்துதவினர்.

முக்கியமாக அச்செழுத்து உருக்களை வைத்து, அச்சகத்தை அடையாளம் கண்டு கொள்ள முடியும் என்பதால், யாழ்ப்பாணத்திலுள்ள அச்சகங்களில் இல்லாத அச்செழுத்து உருக்களை, இந்தியாவிலுள்ள "சுதேசி டைப் பவுண்டரி"யில் இருந்து தருவித்து அச்சுக்கு கோர்த்து, "புதிய பாதை" பத்திரிகையை யாழ்ப்பாணத்தில் அச்சிட்டு பல இதழ்களை வெளியிடுவதற்கு, விசுவானந்ததேவன் எனக்கு உதவி புரிந்தார்.

இவர் சார்ந்த "தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி", 1983ல் "தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி" எனப் பெயர் மாற்றப்பட்டது. இக்கால கட்டத்தில் "இலக்கு" என்ற சஞ்சிகையும் "முன்னணிச் செய்தி" என்னும் பத்திரிகையையும், தமது அமைப்பினூடாக வெளியிடுவதில், விசுவானந்ததேவன் முன்னின்று பணியாற்றினார்.

ஜூலை 1983ல் இடம்பெற்ற இனக்கலவரங்களையடுத்து, தமிழ் தேசிய எழுச்சியில் மேலெழுந்து, புதியதோர் பரிணாமத்தை எட்டியிருந்த தமிழீழப் போராட்ட இயக்கங்களில், வடக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் கிழக்கில் இருந்து திரண்டெழுந்து இணைந்து கொண்ட பல இளைஞர்கள், தாம் இணைந்து கொண்ட இயக்கங்களை, அராஜகமிக்க வெறும் ஆயுதக்குழுக்களாக இனங்கண்டு, அவ்வாயுதக் குழுக்களிலிருந்து வெளியேற முற்பட்டனர். ஆனால், இந்த ஆயுதக்குழுக்களோ, தம்முடன் இணைந்த இளைஞர்களை வெளியேற அனுமதிக்காதது மட்டுமன்றி, தம்மைக் கேள்வி கேட்டவர்கள், தம்மிடமிருந்து தப்பியோடிப் பிடிபட்டவர்கள் போன்றவர்களை, தடுத்துவைத்து சித்திரவதை செய்தனர். தப்பியோடிப் பிடிபட்ட பல இளைஞர்களை இந்த ஆயுதக்குழுக்கள் கொலையும் செய்தனர். இவ்வாறு ஆயுதக்குழுக்களில் இருந்து விலகிய இளைஞர்களுக்கு, அடைக்கலம் கொடுத்தவர்களில் விசுவானந்ததேவன் மிகவும் முக்கியமானவர்.

ஆனால், அச்சமயம் அவர் சார்ந்த "தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி"யில் இருந்த பல வறட்டு வேதாந்திகள், அராஜக ஆயுதக்குழுக்களில் இணைந்த இளைஞர்கள் அனைவரும் "அராஜகவாதிகள்" என்றும், அராஜகவாதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பது தவறு என்றும் விமர்சித்தனர். எனக்கும்கூட அடைக்கலம் தந்து தஞ்சமளித்தவர் விசுவானந்ததேவன்தான். தன்மக்களையும், தன்நிலத்தின் அரசியலையும், சகமனிதர்களின் தன் முனைப்புகளையும், நய வஞ்சகங்களையும், விசுவானந்ததேவன் சரிவரப் புரிந்து கொண்டிருந்தார்.

அரசியல் வேறுபாடுகளைக் கடந்து, சகல முற்போக்குச் சக்திகளையும் ஒன்று திரட்டும் திறமை விசுவானந்ததேவனிடம் இருந்தது. விசுவானந்ததேவன் இல்லாதிருந்தால், "தீப்பொறி" என்ற அமைப்பு உருவாகியிருக்க முடியாது என்பது மட்டுமல்ல, நூற்றுக்கணக்கான இளைஞர்கள் அநியாயமாகப் பலியாகியிருப்பார்கள். "தீப்பொறி"க் குழுவினரை இந்தியாவில் பாதுகாத்து, இலங்கைக்கு கொண்டுபோய்ச் சேர்த்த விசுவானந்ததேவன், "தீப்பொறி" பத்திரிகையை அச்சிட்டு வெளிக்கொணர்வதில் முக்கிய பங்காற்றினார்.

"தீப்பொறி"க் குழுவைச் சேர்ந்த சூசைப்பிள்ளை நோபேட் எழுதிய "புதியதோர் உலகம்" என்ற நாவலை அச்சிடுவதற்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான பண உதவியை விசுவானந்ததேவன் தந்துதவியதோடு, சென்னையில் அச்சிட்ட "புதியதோர் உலகம்" நாவலின் பிரதிகளை, இலங்கைக்கு கொண்டு வந்து சேர்க்கவும் உதவினார். விசுவானந்ததேவனின் உதவியால்தான், இலங்கையிலும் "தீப்பொறி"க் குழுவினர் அனைவரும் உயிர்தப்பி வாழமுடிந்தது.

தனிநபர்களையும், அமைப்புக்களையும், வஞ்சித்து தமது நோக்கங்களை நிறைவேற்றும் போக்குள்ளவர்கள் மலிந்த உலகில், குழுவாதத்தை நிராகரித்து, ஒற்றுமையாக சகல முற்போக்குவாதிகளையும் நேசக்கரம் நீட்டி அணைத்து அணிதிரட்ட, விசுவானந்ததேவன் கடும்முயற்சி செய்தார். எத்தகைய பிரச்சனைகளையும் எதிர் கொள்ளும்போது, நடுநிலையுடன் புறவயமாகச் சிந்தித்து, நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன் செயலாற்றினார்.

சந்தர்ப்பவாதங்களே அரசியலாக அமைத்துவிட்ட நிலையில், மிகக்கேவலமான பின்னணியில் இனவாதமும், இனவெறியும், மோசமானதோர் நிலையை எட்டியபோது, குறுகிய தமிழ்த்தேசியவாத சிந்தனையில் மூழ்கிப் போகாது, விசுவானந்ததேவன் தனக்குக் கிடைத்த வாய்ப்பையெல்லாம், சமூக முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்திய, வரலாற்றில் தனித்துவமான பாதையை வரித்துச் சென்ற, சீரிய முற்போக்குச் சிந்தனையாளராவார்.

தூரத்திலிருந்து பார்க்கும்போது பளபளவென பகட்டாக மின்னும் பலர், நெருங்கிச் சென்று பார்க்கும்போது தம் சுயத்தைக் காட்டி சுருங்கி விடுவர். ஆனால் விசுவானந்ததேவனோ நெருங்கிப் பழகிய போது, பரந்து, விரிந்து, உயர்ந்து நின்றார். இது அனைவருக்கும் சாத்தியமானதொன்றல்ல. நேர்மையும், நேசமும், சுய சிந்தனையுமுள்ள ஒருவருக்கே இது இயல்பான, இயலுமானதொன்றாக அமையும். விசுவானந்ததேவனின் உயர்ந்த உள்ளத்தையும், பண்பட்ட நெஞ்சத்தையும், பலரால் எட்டித் தொடக்கூட முடியவில்லை. ஒரு ஞானிக்குரிய பற்றற்ற பரிபக்குவ நெஞ்சத்தால், நிறைந்து, நிமிர்ந்து நின்றவர் விசுவானந்ததேவன். அதனால் தன் அமைப்புக்கும் அப்பாற்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் அரவணைத்து, மானுடம் என்ற குன்றேறி நெடிது நின்றார்.

மானுடத்தை நேசித்த, மதித்த விசுவானந்ததேவன், மானுடத்தின் எதிரிகளையும் நன்கறிந்திருந்தார். இன்றைய சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார அதிர்வுகளை, எண்பதுகளிலேயே தெளிவாக விசுவானந்ததேவன் எதிர்வு கூறியிருந்தார். அன்று தமக்குச் சொந்தமான கிழக்கிந்தியக் கம்பனி மூலம், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளைக் கொள்ளையடித்த ரொத்ஸ்சைல்ட் (ROTHSCHILD) கும்பல், இன்று அமெரிக்க டாலரை அச்சிடும் தமக்குச் சொந்தமான பெடரல் ரிசெர்வ் (FEDERAL RESERVE) போன்ற தனியார் வங்கிகள் மூலம், எதுவித ஆதார சொத்துக்களும், மூலதனமும் இன்றி நூற்றுக் கணக்கான பில்லியன் கணக்கில் நாணயத்தாள்களை அச்சிட்டு உலகைக் கொள்ளையடிக்கிறார்கள் என நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன் சொல்லியிருந்தார்.

அன்று உழைப்பை சார்ந்து உழைப்பாளர்களாலும் தொழிலாளர்களாலும் உருவாக்கப்பட்ட விவசாயப்பொருட்கள், உற்பத்திப்பொருட்கள் போன்றன தங்கத்திற்கும் வெள்ளிக்கும் கைமாறின. ஆனால் இன்று தங்கம், வெள்ளிக்கு கைமாறியது போய் சர்வதேச செலாவணியான எதுவித ஆதார சொத்துக்களும், மூலதனமும் இன்றி ரொத்ஸ்சைல்ட் (ROTHSCHILD) கும்பலுக்குச் சொந்தமான பெடரல் ரிசெர்வ் (FEDERAL RESERVE) அச்சிட்ட அமெரிக்க டாலருக்கு மக்களின் உழைப்பும், நாடுகளின் இயற்கை வளங்களும், உற்பத்தி பொருட்களும் கைமாறுகின்றன என்றும், ரொத்ஸ்சைல்ட் (ROTHSCHILD) கும்பலுக்கும் அவர்களது ஏகபோகக் கூட்டுகளுக்கும் இல்லாமையிலிருந்தே உருவாக்கிய கடனட்டைகளை, வங்கிகளுக்கு விஸ்தரித்து, கடனட்டைகள் மூலம் சாதாரண மக்களை பில்லியன் கணக்கில் கொள்ளையடிக்கின்றார்கள் என்றும் விசுவானந்ததேவன் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக, அனைத்து பெருநிறுவனங்களுக்கும் தேவையான நீண்டகால மூலதனம், பங்கு (SHARES) நிதியாக்கம், கடன் பத்திரங்களின் (BOND)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனை, கடன் நிதியாக்கம், மற்றும் நீண்டகால கடன் ஆகியவற்றின் மூலம் பெறப்படுகின்றது. குறைந்தகால நிதியாதாரம் அல்லது செயற்பாட்டு மூலதனம் வங்கிக்கடன் மூலம் பெறப்படுகின்றது.

தனிநபர்களும், பெருநிறுவனங்களும், வங்கிகளிடமிருந்து நுகர்வு மற்றும் முதலீட்டுக் கடனை நம்பி இயங்க வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகிவிட்டதாகக் கூறிய விசுவானந்ததேவன், எதுவித ஆதார சொத்துக்களும், மூலதனமும் இன்றி, வெறுமையிலிருந்து உருவாக்கம் பெற்ற வங்கிக்கடன்களைப் பெற்றுக் கொண்ட பன்னாட்டு தொழில் நிறுவனங்களும், எதுவுமேயில்லாமல் வெறுமையிலிருந்து உருவாக்கம் பெற்ற வங்கிக் கடனட்டைகளைப் பெற்றுக் கொண்ட தொழிலாளர்களும், நிரந்தரமாகக் கடன்காரர்களாக மாற்றப்படுவதோடு இவ்வங்கிக்கடன்பழுக்கள் மேலும் உயருமே தவிர, முற்றாக திருப்பிச் செலுத்தப்பட இயலாது என்றார்.

வங்கிக் கடன்தான் 'மூலதனம்' என மாறிப்போயுள்ள, சேமிப்பே இல்லாத "கடன்" (CREDIT) மயமான உலகில், தொடர்ந்து துரத்தும் கடன் பழுவால் ஏற்படும் பணப் பாய்ச்சல் (CASH FLOW) குறைவினால், பன்னாட்டு தொழில் நிறுவனங்களும், தொழிலாளர்களும் ஒருவருக்கொருவர் எதிராகச் சண்டையிட்டுக் கொள்வார்களே தவிர, பன்னாட்டு தொழில் நிறுவனங்களும், தொழிலாளர்களும் ஒன்றுபட்டு எதுவுமேயில்லாமல் வெறுமையிலிருந்து உருவாக்கம் பெற்ற வங்கிக்கடன்கள் மற்றும் கடனட்டைகள் மூலமாக தம்மைத் தொடர்ச்சியாகக் கொள்ளையடித்துக் கொண்டே இருக்கின்ற ரொத்ஸ்சைல்ட் (ROTHSCHILD) கும்பலுக்கும் அவர்களது ஏகபோகக் கூட்டுகளுக்கும் எதிராகப் போராடமாட்டார்கள் என மக்களின் எதிரிகளை இனங்காட்டி, மக்களின் எதிரிகளுக்கெதிராகக் குரலெழுப்பியவர் நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன்.

நாட்டு மக்களின் ஆரோக்கியம், கல்வி போன்றவற்றை பேண, செலவிடப்பட வேண்டிய மக்களின் வரிப்பணம், அரசாங்கங்களின் வங்கிக் கடன் சுமைக்கு வட்டியாக செலவிடப்படுகின்றது. 20,000 பில்லியன் டாலர் வங்கிக் கடனில் மூழ்கி இருக்கும் அமெரிக்க அரசாங்கம் முதல், 500 பில்லியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாலர் வங்கிக் கடனில் ஆழ்ந்து போயுள்ள கிரேக்க அரசாங்கம் வரை அனைத்து அரசாங்கங்களும், பெருவர்த்தக நிறுவனங்களும், சாதாரண மக்களும் தீராத வங்கிக் கடன்களில் மூழ்கி, முன்னொருபோதும் முகம் கொடுத்திருக்காத புதிய "கடன்" சவால்களை எதிர் கொண்டு திண்டாடும், அனைத்தும் "கடன்" மயமான இன்றைய உலகில், அனைத்தும் வங்கிகளின் கைவசமான இன்றைய காலகட்டத்தில், "மூலதனம்" பற்றி நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட பல விடயங்களெல்லாம் இத்துப்போன கருத்துக்களினதும், காலாவதியான தகவல்களினதும், குவியல்களாக மாறிவிட்டன.

உலகம் பூராக, உலகவங்கி (WORLD BANK), சர்வதேச நாணய நிதியம் (INTERNATIONAL MONETARY FUND), பெடரல் ரிசெர்வ் (FEDERAL RESERVE), உள்ளிட்ட பல்வேறு வங்கிகளின் சொந்தக்காரர்களான ரொத்ஸ்சைல்ட் (ROTHSCHILD) கும்பலினதும், ரொக்கபெல்லர் (ROCKEFELLER), வாபேர்க் (WARBURG) மற்றும் மோகன் (MORGAN) உள்ளிட்ட ரொத்ஸ்சைல்ட் கும்பலினது ஏகபோகக் கூட்டுகளினதும் "பணநாயகம்" அனைத்து நாடுகளிலும் ஜனநாயகத்தை அழித்தொழித்துவிடுமென அன்றே ஆணித்தரமாக விசுவானந்ததேவன் தெரிவித்திருந்தார். இதனையே தத்துவஞானி அரிஸ்டோட்டல் 2,400 வருடங்களுக்கு முன் "Democracy is when the indigent, and not the men of property, are the rulers." எனக் கூறியிருந்ததாக பல ஆங்கில நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

எண்பதுகளில் ரொத்ஸ்சைல்ட் (ROTHSCHILD) கும்பலினதும், ரொக்கபெல்லர் (ROCKEFELLER), வாபேர்க் (WARBURG) மற்றும் மோகன் (MORGAN) உள்ளிட்ட ரொத்ஸ்சைல்ட் கும்பலினது ஏகபோகக் கூட்டுகளினதும் "பணநாயகம்" எம்மவரில் பலருக்கும் புரியவில்லை என்பதே உண்மை. ஆனால் இன்றைய தகவல் உலகில் இதனைச் சரிவர அறிந்து, புரிந்து கொள்வது, சற்று இலகு.

அமெரிக்கா முதல் ஆபிரிக்கா வரை உலகளாவிய ரீதியில், மக்களனைவரும் அச்சுறுத்தல்கள் மூலமும், பயத்தினூடாகவும், கட்டுப்படுத்தப்பட்டு, இலகுவில் ஆளப்படக் கூடியவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்படுகின்றார்கள் எனத் தெரிவித்திருந்த விசுவானந்ததேவன், 99 சதவீதமான மக்களின் சிந்தனை, அன்றாட வேலைச் சுமையுடனும், அடுத்தநேர உணவுடனுமே மட்டுப்படுத்தப்படுகின்ற சூழ்நிலை உருவாக்கப்படுகின்றது என்று பலதடவை சொல்லியிருந்தார்.

எண்பதுகளில் மேற்குலகமும், சோவியத் யூனியனும் பொருதிக் கொண்டிருந்த போது, சோவியத் யூனியனை வீழ்த்துவதற்காக, ஆப்கானிஸ்தானில் வேற்றுநாட்டு இஸ்லாமிய தீவிரவாத இளைஞர்களை ஆயுதபாணிகளாக்கி, சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தத்தை நடாத்தி வந்த அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, இதரநாடுகளுக்கும் எதிர்காலத்தில் அதே இஸ்லாமிய தீவிரவாத இளைஞர்களால், பலத்த பிரச்சனைகள் வருமெனை, விசுவானந்ததேவன் அன்றே எச்சரித்திருந்தார். அகன்ற மானிடத்தை நேசித்த விசுவானந்ததேவனுக்கு சர்வதேசப் பிரச்சனைகள் குறித்து விரிவான பரிமாணமும் செம்மையான கணிப்பும் இருந்தது என்பதில் இருநிலைப்பட்ட கருத்துகளுக்கு இடமேயில்லை.

உயர்ந்த ஆளுமை உள்ளீடுகளைக் கொண்டிருந்த விசுவானந்ததேவனுடனான நட்பு, எனது பாக்கியம் மற்றுமல்ல, எனது ஞானஸ்நானமும் கூட. மக்களுக்கு விடிவு காண விழைந்த ஓர் அரசியலுக்காக, தன்னை அர்ப்பணித்த விசுவானந்ததேவனுடன், சில ஆண்டுகள் நெருங்கிப் பழகியவன் என்ற வகையில், பாசமிக்க நண்பர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன் பதித்துவிட்டுச் சென்ற அழியாத சுவடுகளை, நினைவு மீட்டி, பகிர்ந்து கொள்ளும் இவ்வேளையில், "புதியதோர் உலகம்" நாவலில் சமூகம் குறித்தும், மனித குலத்தின் நாகரிகம் குறித்தும், ஒரு தந்தை மகனுக்கு எழுதிய கடிதத்தின், பின்வரும் பகுதி, நினைவில் நின்று நிலைக்கின்றது.

"மனிதவாழ்வு மகத்தானது. ஒரு மனிதன் தன் அனுபவத்திரட்சியை, ஆற்றலைத் தன் சமூகத்திற்கு கையளிக்கின்றானே அதுதான் மனிதவாழ்விலே உயர்வானது. வேறு எந்தஜீவனுக்கும் மனிதன் தான்வாழும் சமூகத்திற்காக எதையும் கொடுக்கமுடியாது. நாம் விரும்பியோ, விரும்பாமலோ எமது முதாதையர் தந்த அறிவையும், அனுபவத்திரட்சியையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஆகையால் இந்த பங்களிப்புக்களிலெல்லாம் எமக்கு ஈடுபாடு இல்லை என்று யாரும் சும்மா இருந்துவிடமுடியாது. நிட்சயம் நமது சமூகத்திற்கு எம் ஆற்றலையும் அறிவையும் வழங்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்."

ஒருவரின் வாழ்வே அவரது மிகச்சிறந்த உடமையாகும். மறைந்த விசுவலிங்கம் விசுவானந்ததேவனின் வாழ்வு, சமகாலச் சமூகப் பிரச்சனைகளோடு இயைபுடையதாகின்றதால், விசுவானந்ததேவன் குறித்த மதிப்பீடுகள், முக்கியத்துவம் உடையதாகின்றன. "எளிமையான வாழ்க்கை - கடுமையான போராட்டம்" என்ற வகையில், விசுவானந்ததேவனது வாழ்வும், மனிதகுல மேம்பாட்டுக்கான அவரது வழிகாட்டலும், எம்மனைவருக்கும் ஒரு செவ்விய முன்னுதாரணமாக அமைந்திருந்தது.

அனைத்தையும் சீரணித்தவாறு, காலம் முன்நகரும் வேளை, நாங்களோ சிந்திக்க மறுத்து, இத்துப்போன காலாவதியான எண்ணங்களை, இன்னமும் வைத்துக் கொண்டு, தம் சொந்த நலனுக்காக, பொய்யும் புரட்டும் கூறி, எம்மைக் கொள்ளை அடிப்பவர்களை, நம்பி வாழ்கின்ற நிலையில், காலத்தின் முரணியக்கத்தில் தடம்பதித்து, வரலாற்றில் நிலைபெற்ற ஆளுமைகளில் ஒருவரான, விசுவானந்ததேவன் பதித்துச் சென்ற தடங்கள் மிக ஆழமானவை.

இதயநேர்மையுள்ள, உண்மையான ஒரு தலைவரை நாம் இழந்தது மட்டுமல்ல, புத்தகவாதச் சிந்தனைக்கு அப்பால், நடைமுறைக்கான செயற் திறனை வலியுறுத்துகின்ற பண்பைக் கொண்டிருந்த, விசுவானந்ததேவனது இழப்பு அனைத்து முற்போக்கு சக்திகளுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

தனது அனுபவத்திலிருந்து தொடர்ந்து கற்றுக்கொண்டு, அர்ப்பணிப்போடு செயலாற்றி, நிதானமிக்கவராக, மக்களை நேசித்த பண்பு மிக்கவராக, இதய சுத்தியுடன் உளப்பூர்வமாக அயராது போராடிய விசுவானந்ததேவனது வாழ்வு, மரணத்தை வென்றுவிட்டது மட்டுமல்ல, "விசு" என்று அநேகரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியப்பட்ட விசுவானந்ததேவன், சரித்திரத்தில் ஒரு மறுதலிக்க முடியாத, பிரதிமையாக மிளிர்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறிதரன்**

# விஸ்வாவின் நினைவுகளை மீட்போம்!

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய தெளிவான நிலைப்பாட்டுடன் மரபார்ந்த இடதுசாரி இயக்கத்திலிருந்து தமிழ்தேசிய விடுதலை முன்னணியை உருவாக்கிய முன்னோடி.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இயந்திரவியல் பொறியியலாளரான அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அன்றைய கால கட்ட அகப்புறச் சூழலால் அவர் மெருகூட்டப்பட்டார்.

தமது சொந்த கிராம மற்றும் நாட்டின் அனுபவங்களுடன் பேராதனை அனுபவம் அவரைத் துலங்கச் செய்தன.

60 களின் பிற்பகுதி 70 களின் முற்பகுதி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முக்கிய காலகட்டம்.

மாணவர் எழுச்சிகள், கிளர்ச்சிகள் நிகழ்ந்த அந்த காலத்தில் சமூகப் பிரக்ஞை கொண்ட பல்கலைக்கழக ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் அது நிரம்பியிருந்தது.
ஆளுமைமிக்க பல போராட்டக்காரர்களை அக்காலம் உருவாக்கியது.

அதில் முக்கியமானவர் தோழர் விஸ்வானந்ததேவன்.

பொறியியல் அல்லது வைத்தியத்துறை படித்து விட்டால் அப்போதுதான் வானத்தில் இருந்து இறங்கி வந்த தேவர்களாக கருதும் பிரபுத்துவ மனோபாவம் கொண்டவர்கள் நிறைந்த சமூகத்தில் கலைந்த கேசமும் மளிக்காத முகமும் ஒளிரும் கண்களுமாக அந்த சிறிய உருவம் எம்மத்தியில் உலாவந்தது.

அந்தக் காலகட்டம் அத்தகைய உன்னத மனிதர்களைத் தந்தது. இது 1970களின் பின், 80களின் முன்னான காலப்பகுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் - சமூகம் - பொருளாதாரம் - இலக்கியம் என அந்த மிக எளிமையான மனிதன் கலந்துரையாடுவான், விவாதிப்பான்.

டெனிம் களிசானும் மடித்து விட்ட முழுக்கைச் சேட்டுமாக அந்த உருவம் அமைதியற்று அலைந்தது.

யாழ் பல்கலைக்கழக தேநீர் விடுதியிலிருந்து புழுதி பறக்கும் காங்கேசன்துறை கட்டுமானப்பகுதி வரை வீடுகளில் - வீதிகளில் எல்லாம் விவாதங்கள் புரிந்தோம்.

சாதாரண மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கான கனவு அவரின் கண்களில் சுடரும்.

ஓர் இளம் புரட்சியாளனாக சகல சமூகங்கள் தொடர்பிலும் அக்கறை நல்லியல்பை வெளிப்படுத்துபவராக ஒரு சர்வதேசியவாதியாக எமக்கு அவரைத் தெரியும்.

சகல மட்டத்திலும் உள்ள மனிதர்களுடன் தானும் ஒருவனாக சாமானியனாக கலந்துரையாடுவார்.

குதிரைமேலிருந்து மலர்களைப் பார்ப்பவர் அல்ல அவர். தமக்கு உடன்பாடானவற்றையும் அற்றவற்றையும் நட்பார்ந்த முறையில் வெளிப்படுத்தி விடுவார்.

மிண்டி விழுங்குவதில்லை. முகஸ்துதிக்காக நசிவதில்லை.

ஈழப்போராட்டத்தில் மிகப் பெரும் குறைபாடாக இருந்த மக்களின் பங்களிப்பு பற்றி இடையறாது வலியுறுத்துபவர்.

இடது முற்போக்கு சக்திகள் பல்வேறு குழுக்களாக இயங்கிய காலத்தில், அவர் போராளி குழுவில் அங்கத்துவம் வகித்தார்.

என்னைப் பொறுத்தவரையில் சாதாரண இளம் சமுதாயத்தினருக்கு நம்பிக்கையை அளிக்கும் ஆற்றல் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே மனதில் நிற்பதில்லை. தோழர் விஸ்வாவுடன் பழகியது குறுகியகாலம்.

ஆனால் இற்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முந்திய அந்த உருவம் என்மனதில் அழுத்தமாக நிற்கிறது.

பல ஆளுமையான தோழர்களை வாழ்வின் பல்வேறு கால கட்டங்களில் சந்தித்திருந்தாலும், தோழர் விஸ்வா போன்றவர்களின் மறைவு ஏற்படுத்திய வெற்றிடம் மனதில் பெருந்துயரமாகவும் நெருடலாகவும் இருக்கிறது.

"சே" சொன்னாரே நாம் தோழர்கள் என்பதற்கான வரை விலக்கணம் அது என்னைப் பொறுத்தவரை விஸ்வாவிற்குப் பொருந்தும். பல போராளிகள் ஆளுமைகள் தோழர்கள் இவர்களின் உயிர்கள் அகாலமாக பறிக்கப்படாதிருந்தால் இன்று இந்தச் சமூகம் எத்தகைய பன்முகத்தன்மை வாய்ந்த செழுமை மிகு அரசியல் தலைமைத்துவத்தைக் கொண்டிருக்கும்.

அந்த ஏக்கம் இன்னும் நிராசையாக என்னுள் எழுந்து கொண்டிருக்கிறது.

ஒரு பிரச்சனை என்றால் உடனடியாக காரியமாற்றுவதில் விஸ்வா தீவிர நடைமுறைவாதி.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்கக் கோரி நடத்திய போராட்டத்தில், தமிழ் மக்கள் ஜனநாயக விடுதலை முன்னணி - புதுசு மற்றும் ஈழமாணவர் பொதுமன்றத்தைச் சேர்ந்தவர்கள் 10 - 15 பேர் பதாகைகளைத் தாங்கி நின்றோம்.

தோழர் விஸ்வா அத்தனைக்கும் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் ஒரு தொழில் நுட்ப அதிகாரி.

இதனால் அவரது வேலைக்கும் பங்கம் ஏற்பட்டது. ஒரு வர்க்க உணர்வுள்ள போராளியாக அவர் இருந்தார்.

தோழர் நாபா - விஸ்வாவிற்கிடையே ஆழமான நட்பு வேரூன்றி இருந்தது. தெளிவான வேற்றுமைகளுடன் ஒற்றுமை நிலவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த ஜனநாயகவாதி, உன்னதமான மனித உரிமை வாதி. மனிதநேயம் அவரது கண்களில் பொங்கி பிரவாகித்தது. சமூகமாற்றம் புரட்சிக்கான கோலங்கள் அவரது சிறிய தோற்றத்திலேயே குடி கொண்டிருந்தன. அவரது அகத்தின் அழகு அவரது தோற்றத்தில் சுடர் விட்டது.

மாபெரும் மக்களியக்கம், மக்கள் யுத்தம் அவரது கனவாக இருந்தது.

சுவரொட்டிகள் எப்படியிருக்கவேண்டும், பிரசுரங்கள் எப்படியிருக்கவேண்டும், இலக்கிய படைப்புகள் எப்படி இருக்கவேண்டும், அன்றாட அரசியல் சமூகப் பொருளாதார விடயங்கள் பற்றி சலிப்பின்றி உரையாடுவார்.

தோழர் விஸ்வா உருவாக்கிய பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் சிறந்த கண்ணியமான சமூகப் பிரக்ஞை கொண்டவர்களாக ஆளுமை கொண்டவர்களாக இன்றளவில் சமூகத்தில் உலாவுகிறார்கள்.

தோழர் விஸ்வாவின் இலட்சியங்கள் வாழும்.

விஸ்வா போன்றவர்களை மறந்து விடுவதற்கான துரோகத்தை செய்து விடமுடியாது.

எமது சமூகத்தில் நிலவிய மனித நேய இதயம் கொண்ட விஸ்வாவவை என்றென்றும் நினைவில் வைத்திருப்போம்.
அவரது இதயம் 'சே'யின் இதயம் போல் வேலை செய்தது.

30 ஆண்டுகளின் பின்னர் விஸ்வாவின் நினைவுகள் யாழ் குடாநாட்டுக் கடலிலிருந்து மீட்டெடுக்கப்படுவது, பொலிவியாவின் காடுகளின் புதைகுழியிலிருந்து 'சே'யின் உடலின் எச்சங்களை கியூபா மீட்டெடுத்ததை நினைவுக்கு கொண்டு வருகிறது.

வங்க கடலில் விஸ்வா காணாமல் போனது மறைந்தது ஒரு காலத்துயராக எம் நெஞ்சங்களில் நீடிக்கிறது.
விஸ்வாவின் கனவுகள் அந்த மகாகவிஞன் கூறியது போல் மெய்ப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்திரபாலன்**

# தோழர் விசுவானந்ததேவனுடன் என் நினைவுகள்

தோழர் விசுவானந்ததேவனை முதலில் எனக்கு அறிமுகம் செய்து வைத்த தோழர் பாலசூரியன் அவர்கள், தற்போது அவரை நினைவு கூருவதற்கான சந்தர்ப்பம் தந்தமையை இட்டு முதலில் அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தோழர் விஸ்வாவை சந்திப்பதற்கான பின்னணி**

1985, 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சங்கர் என்ற பெயருடன், ரெலோவின் பத்திரிக்கைகளின் ஆசிரியர் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்தேன். *எழுச்சி, விடியல், தீச்சுடர்* மற்றும் ஓர் உட்கட்சிப் பத்திரிகை (பெயரை மறந்துவிட்டேன்) என்பவற்றை வெளியிட்டுக் கொண்டிருந்தோம்.

ஆனால் எமது அமைப்பில் சரியான ஜனநாயகக் கட்டமைப்புக்கள் இல்லை என்பதையும், தனிமனித சுதந்திரம், மனித நேயம் என்பவை மறுக்கப்படுவதையும், தனிமனித வழிபாட்டுடன் இராணுவ சர்வாதிகார கட்டமைப்பைக் கொண்ட ஒரு கும்பலாகவே, பத்திரிகைக் குழுவில் இருந்த பெரும்பாலானவர்களால் ரெலோவை புரிந்து கொள்ள முடிந்தது. இந்நிலையில் ரெலோவை ஒரு குறைந்தபட்ச ஜனநாயக கட்டமைப்புக்களைக் கொண்ட ஓர் அமைப்பாக உருவாக்கவும். எங்களால் முடியாமல் இருந்தது. ஏனெனில் மூத்த உறுப்பினர்கள் பலரும் இதைப்பற்றிய அக்கறை அற்றவர்களாகவும். சிலர் எதேச்சதிகாரம் உள்ளவர்களாகவுமே இருந்தார்கள். நாம் இதைப்பற்றி வலியுறுத்தும் போதெல்லாம் சிறி அண்ணாவில் நம்பிக்கை வையுங்கள், உரிய காலத்தில் எல்லாம் செய்வார் எனக் கூறப்பட்டது. ஆனால் இயக்கத்தில் கேள்வி கேட்டவர்கள் துரோகியாக சந்தேகிக்கப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தைவிட்டு விலகி ஓடியவர்கள், கைது செய்யபட்டு சித்திரவதைப்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். இச்சூழலில் இயக்கத்தை விட்டு வெளியேற முடியாமலும் அமைப்பை சீர் செய்ய முடியாமலும் அவதிப்பட்டோம். கருத்துக்கள் மக்களைப் பற்றிக் கொண்டால், அதுவே பெரும் சக்தியாக உருவெடுக்கும் என்ற மாவோ சேதுங்கின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து முடிந்தவரை ஜனநாயக, மனித உரிமை, மனித நேய கருத்துக்களை நாசூக்காக பத்திரிகைகளில் எழுதி வந்தோம். மறுபக்கம், ரெலோவிற்கு ஜனநாயக புரட்சிகர முகமூடியை போடுகின்றோம் என்ற குற்ற உணர்வும் எமக்கு இருந்தது.

பத்திரிகைக் குழுவில் நாம் இருந்த காரணத்தால் பல புத்திஜீவிகளையும், பல ஜனநாயக சிந்தனையாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடும் வாய்ப்பும் எமக்குக் கிடைத்தது. *எழுச்சி* பத்திரிகையின் தலைமை ஆசிரியரான தமிழ்ச்செல்வன் இத்தகைய சந்திப்புக்களில் ஆர்வம் காட்டவில்லை. *விடியல்* பத்திரிகையின் தலைமை ஆசிரியர் சண், *தீச்சுடரி*ன் தலைமை ஆசிரியர் ரகு மற்றும் தயா, மைக்கல், தேவா, அர்ச்சுனா, சீனு மற்றும் நானும், இந்தியாவில் இருந்த பல புத்திஜீவிகளைச் சந்தித்தோம். பெரும்பாலானோர் இந்திய அரசு, தமிழ் ஈழப் போராளிகளை தனது நலனுக்கு ஏற்ப பயன்படுத்துகின்றது என்பதையும், இதை தந்திரமாக கையாளுமாறும் எச்சரித்தார்கள்.

எமக்கு ஏனைய இயக்கங்களின் பத்திரிகைகளும் கிடைத்தன. அதில் NLFT இன் *இலக்கு* பத்திரிகையும் ஒன்று. அதில் இருந்த கோடம்பாக்கம் ஆண்டவர் நகர் முகவரிக்கு தோழர் சண் என்னையும் அழைத்துக் கொண்டு சென்றார். அங்கு தோழர் பாலசூரியாவை சந்தித்தோம். தோழர் சண்ணும் பாலசூரியாவும் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடமாணவர்களாய் இருந்தமையால், முன்பே அறிமுகம் இருந்தது. NLFT இன் முக்கிய உறுப்பினர்கள் அனைவரும் யாழ் சென்றுவிட்டதாகவும், வந்தவுடன் சந்திப்பதற்கு ஒழுங்கு செய்து தருவதாகவும் தோழர் பாலசூரியா குறிப்பிட்டார். தமிழ் நாட்டில் முக்கிய மார்க்சிய லெனினிய ஆய்வாளரான எஸ்.வி ராஜதுரையையும், சண் அடிக்கடி சந்தித்தார். எங்களையும் ஒருவர் இருவராக, அவரிடம் அவ்வப்போது அழைத்தும் செல்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இருக்கையில் ரெலோ இல் இருந்து பிரிந்து தனித்து இயங்கிய தாஸ் குழுவினரை, ரெலோ தலைமை பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்து, யாழ் மருத்துவமனையில் சுட்டுக் கொன்றார்கள். இந்நிலமை அச்சத்தையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியது. NLFT இற்குள் உட்கட்சி போராட்டம் தீவிரமாகி உடையும் நிலையை அடைந்து வருவதாக செய்திகள் கசிந்து வந்தன.

சண் போராட்டம் பற்றி ஒரு விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டார். ஒவ்வொருவரும் தனித்தனியாக முடிவெடுத்து உங்கள் உங்களை காப்பாற்றிக் கொள்ளுங்கள் என தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறினார். ஒரு நாள் திடீரென தனது சகோதரன் சீனுவையும் (இருவரும் மட்டக்களப்பைச் சேர்ந்த பேராதனை பல்கலைகழக பொறியியல் பீட மாணவர்களாக இருந்தவர்கள்) அழைத்துக் கொண்டு ஓடி விட்டார். அடுத்த சில நாட்களில் பத்திரிகை வடிவமைப்பாளராக இருந்த தேவாவும் (அவரும் மட்டக்களப்பைச் சேர்ந்த பொறியியல் பீட மாணவனாக இருந்தவர்) இயக்கத்தை விட்டு ஓடிவிட்டார்

அவர்கள் பின் கேரளாவிற்கு தப்பிச்சென்று ஒளித்து வாழ்ந்தார்கள். தேவா போதைப் பொருள் கடத்தல்காரர்களிடம் தஞ்சம் அடைந்து, கடத்தல்காரர்கள் இவரிடம் போதைப் பொருளை கொடுத்து ஸ்பெயினுக்கு அனுப்பி, அங்கு பிடிபட்டு சிறையில் இருந்ததாக பின்னர் அறிந்தேன்.

நானும் மைக்கல், அர்ச்சுனா, ரகு போன்றோர் பத்திரிகை செயற்பாடுகளில் இருந்து மெதுவாக ஒதுங்கிக் கொண்டோம். என்னை கோடம்பாக்கத்தில் நான்கு இயக்கங்களின் கூட்டு ENLF காரியாலயத்தில் தங்கி ரெலோவின் தொடர்பாளராக கடமையாற்றுமாறு, செல்வம் அடைக்கலநாதன் மற்றும் பிரச்சாரப்பிரிவு பொறுப்பாளர் மதி அவர்களால் அனுப்பப்பட்டேன். அங்கு EROS பிரதிநிதி நிரந்தரமாக தங்கி இருந்தார். EPRLF பிரதிநிதி இடைக்கிடை வந்து செல்வார். LTTE இல் இருந்து யாரும் வருவதில்லை. EROS பாலகுமார் அங்கு அடிக்கடி வந்து செல்வார். எனக்கு EROS ஐப் பற்றியும் நல்ல அபிப்பிராயம் இருந்தது. EROS இல் இருந்த தோழர் கபூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஸ்ரர் (இவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்) என்னுடன் நல்ல நட்புடன் பழகினார். அவரும் அடிக்கடி ENLF காரியாலத்திற்கு வந்து சென்று கொண்டிருந்தார். அவரிடம் எனது மனக்கிடக்கைகளை வெளிப்படுத்தினேன். அப்போது அவர் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரவேண்டாம். நீங்கள் EROS இல் சேரவிரும்பினாலும் உங்களை சேர்த்துக் கொள்ள மாட்டார்கள், நான்கு இயக்கங்களுக்குள்ளும் அவ்வாறான ஒப்பந்தம் உண்டு, PLOT இல் இருந்து உடைந்து சில ஜனநாயக சத்திகள் தனியாக இயங்க முயற்சிக்கிறார்கள், LTTE இல் ஏற்கனவே ஒரு குழுவினர் உடைந்து தனியாக இயங்க முயற்சிக்கிறார்கள், அதில் உள்ள சிலர் என்னுடைய மாணவர்கள் என்று கூறி, அவர்களை ஒரு முறை சந்திக்குமாறு வற்புறுத்தினார். LTTE இல் இருந்து விலகியவர்கள் என்றதும் சற்றுத் தயக்கமாக இருந்த போதும், அண்ணா நகர் பஸ்நிலையத்தில் அவர்களை முதல் முறையாக சந்தித்தேன். கணன், வெள்ளை என இருவர் வந்திருந்தனர். கணன்தான் பேசினார்: உங்களைப் பற்றி கபூர் மாஸ்ரர் ஏற்கானவே கூறிவிட்டார். நாங்களும் உங்களைப் போன்றே பல எதிர்பார்ப்புக்களுடன் இயக்கத்தில் சேர்ந்தோம். ஆனால் இங்கு ஜனநாயகமோ, பேச்சுத் சுகந்திரமோ இல்லை. தனிமனித வழிபாடுதான் மேலோங்கி இருக்கிறது மாறுபட்ட கருத்துடையோர் துரோகியாக கொல்லப்படுகிறார்கள். எமது தியாகங்கள் அர்த்த மற்றதாகி விடக்கூடாது. நாம் ஜனநாயக வழியில் சிந்திக்க வேண்டும். இந்திய அரசு தனது நலனுக்காக எங்களைப் பயன்படுத்துகின்றது.

அனுராதபுர சிங்கள மக்களின் படுகொலைக்கும், தாஸ் குழுவினர் மீதான ரெலோவின் படுகொலைக்கும், வெளிச்சக்திகளின் ஆலோசனையும் அழுத்தமுமே காரணம் என்றார். எனக்கும் அவ்வாறான பார்வையே இருக்கிறது என்றேன். NLFT பற்றியும் விசுவானந்ததேவன் பற்றியும் பேசினோம். தோழர் விஸ்வா விரைவில் இந்தியா வர இருப்பதையும், அவரை சந்திப்பதற்கு பாலசூரியா ஒழுங்கு செய்து தருவதாக கூறியதையும், நான் கூறினேன். தாங்களும் அவரை சந்திப்பதற்கு விரும்புவதாகவும் கணன் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர் கபூர் எங்களுக்குள் ஒரு தொடர்பாளராக இருந்தார். இக் காலகட்டத்தில் LTTE இற்கும் TELO விற்கும் இடையில் மோதல்கள் ஆரம்பித்தன. மோதல் ஆரம்பித்த நாளில் தோழர் கபூர் ENLF காரியாலயத்தில் பாலகுமாரை சந்திக்க வைத்தார். LTTE, TELO மோதல் பற்றியே பேச்சு ஆரம்பித்தது. தாஸ் குழுவினர் மீதான பாசிதத் தனமான TELO இன் அழித்தொழிப்பே, சந்தர்ப்பம் பார்த்திருந்த LTTE இற்கு களம் அமைத்து கொடுத்துள்ளது என்று நான் கூறினேன்.

TELO இல் இருந்து வெளியேற விரும்பும் முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்கு இது நல்ல சந்தர்ப்பம் என்றேன், நான். உடனே பாலகுமார் இடைமறித்து, "TELO இற்கும் LTTE இற்கும் இடையில் சில அடிப்படை வேறுபாடுகள் உண்டு. TELO ஒரு பாசிச அமைப்பல்ல. உங்களைப் போன்ற ஜனநாயக விரும்பிகள் பலர் TELO வில் இருக்கிறார்கள். பாசிசக் கூறுகள் TELO வில் பலம் பெற்றிருக்கலாம். இருப்பினும் உள்ளுக்குள் போராடி ஜனநாயக சக்திகள் வலுப்பெறவேண்டும். ஆனால் LTTE அவ்வாறு இல்லை அது ஒழுங்குபடுத்தப்பட்ட பாசிச கட்டமைப்பைக் கொண்ட ஓர் அமைப்பாகவே இருக்கிறது. TELO தான் LTTE இன் வளர்ச்சியை சமநிலைப்படுத்தக்கூடிய இயக்கம். PLOT ஏற்கனவே சிதைந்து இருக்கிறது. முற்போக்கு ஜனநாயக சக்திகள் வளரும் வரை இரு இயக்கங்களின் இருப்பும் அவசியம். இச்சண்டையில், ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பென்பதால் LTTE அழிய வாய்ப்பில்லை. TELO அழியுமாயின், அனைத்து இயக்கங்களையும் LTTE அழிக்கும். இறுதியில் LTTE யை இலங்கை அரசு அழிக்கும். அதற்கு முன் LTTE இனரால் முஸ்லீம்களுக்கு மிகப் பெரிய ஆபத்து ஏற்படும். முஸ்லீம்களுக்கு நல்ல பாடம் கற்பிப்பேன் என பிரபாகரன் என்னிடம் ஏற்கனவே கூறியுள்ளார்" என்றார் பாலகுமார். இவ்வாறு தீர்க்க தரிசனம் உள்ள பாலகுமார் எவ்வாறு தலைகீழாக மாறினார்? தனிமனிதர்கள் எப்படி வேண்டுமானாலும் மாறுவார்கள் என்ற பாடத்தை பிற்காலத்தில் எனக்கு கற்பித்தது.

இச்சண்டையில் பல நாட்கள் திட்டமிட்டு TELO வை முற்றாக அழித்தொழித்தல் என்ற திட்டத்துடன் சில நாட்களிலேயே பல நூற்றுக்கணக்கான போராளிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் உயிருடன் ரயர் போட்டு எரிக்கப்பட்டார்கள். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த போராளிகளுக்கு, யாழ்ப்பாணத்து இடங்கள் தெரியாத காரணத்தாலும் உறவினர்கள் இல்லாத காரணத்தாலும் இலகுவில் சிக்குண்டார்கள். சிறீசபாரத்தினமும் சுட்டுக்கொல்லப்பட்டார். இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பலரும் இயக்கத்தில் இருந்து ஓடிக்கொண்டிருந்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் நானும் வெளியேற நினைத்தேன். தோழர் பாலசூரியாவை சந்தித்து எனது நிலைப்பாட்டை கூறினேன். தோழர் விஸ்வாவை சந்திப்பதற்கு உடன் ஏற்பாடு செய்தார்.

## தோழர் விசுவானந்ததேவனுடனான சந்திப்பு

*23/05/1986* அன்று கோடம்பாக்கம் வீட்டில் மொட்டை மாடியில் பாலசூரியாவின் அறிமுகப்படுத்தலுடன் தோழர் விஸ்வாவை சந்தித்தேன். சிறிய உருவம், எளிமையான தோற்றம் கள்ளமற்ற சிரிப்புடன் என்னை வரவேற்றார். உங்களைப்பற்றி எல்லா விபரமும் பாலசூரியா ஏற்கனவே கூறியுள்ளார் என்றார். நான் போராட்டத்தில் தொடர்ந்து இருக்க விரும்புகின்றேன். உங்கள் அமைப்பை ஒரு ஜனநாயக சக்தியாக பார்க்கின்றேன். வெளியில் நான் சுதந்திரமாக இருக்கமுடியாது. அதானல் தான் உங்கள் உதவியை நாடியுள்ளேன். உங்களுடன் இணைந்து பணிபுரியலாம் என நம்புகின்றேன் என்றேன். நீங்கள் எந்தத் தயக்கமும் அச்சமும் இல்லாமல் வரலாம், சேர்ந்து செயற்பட முடியாவிட்டால், எந்த நேரமும் விலகலாம் என்றார். NLFT இன் உடைவு ஒரு பின்னடைவு என்றும் அது தவிர்க்கமுடியவில்லை என்றும் விளங்கினார். பின்பு நான் எனது சிறிய உடைமைகளை ENLF காரியாலயத்தில் இருந்து எடுத்துக் கொண்டு தோழர் விஸ்வாவை சந்தித்த வீட்டில் தஞ்சம் அடைந்தேன். பாதுகாப்புக்காக இரவு வரை அங்கேயே காத்திருந்துவிட்டு தோழர் பாலசூரியா, நான் தோழர் விஸ்வா மூவரும் புறப்பட்டோம்.

அவர்கள் குடும்பத்துடன் தங்கியிருந்த அண்ணாநகர் கிழக்கு ஐஸ்வர்யா அடுக்கு மாடிக்கு அழைத்துச் சென்றார்கள்.

அங்கு தோழர் பாலசூரியாவின் மனைவியும் தோழர் விஸ்வாவின் ஆறு மாதமான கைக்குழந்தையும் மனைவியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கி இருந்தமையால், எனக்கு அச்சமாக இருந்தது. என்னால் அவர்களது குடும்பத்துக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமோ என பயந்தேன். அண்ணாநகர் மேற்கில் பல வீடுகளில் ரெலோ போராளிகள் இருந்தனர். அதுவே எனது அச்சத்திற்கு காரணம். அதேவேளை என்னை இந்தளவிற்கு அக்கறையாக பார்க்கிறார்களே என பரவசமாகவும் இருந்தது.

ஒரு சில வாரங்கள் வெளியில் தலை காட்டாமல் இருந்தேன் பகலில் புத்தகங்கள் வாசிப்பதும், தோழரின் மகள், குழந்தை சிந்துவுடன் நேரத்தை கழித்தேன். இரவு ஒரு மணி இரண்டு மணி வரை தமிழ் ஈழ மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்தை எவ்வாறு நகர்த்துவது, மக்கள் இராணுவத்தை எப்படிக்கட்டுவது, LTTE இடம் இருந்து எப்படி தற்பாதுகாப்பது, உலகில் ஏனைய நாடுகளில் நடந்த போராட்ட அனுபவங்கள் என பல விடையங்களும் தோழர் விபரிப்பார் NLFT யின் உடைவு பற்றியும் PLFT அமைப்பை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் பற்றியும் இரவு இரவாக விளக்கம் அளித்தார். அவரது தலைமைத்துவ பண்பு எனக்கு வியக்க வைத்தது. என் பாதுகாப்பிற்காக 2.2mm பிஸ்ரலை தந்திருந்தார்.

"மக்களின் ஜனநாயக உரிமைகள் மதிக்கப்படும்போதே மக்கள் போராட்டத்தில் ஈர்க்கப்படுவார்கள். மக்கள் போராட்டத்தில் முழுமையாக ஈர்க்கப்படும் போது எந்த வல்லரசாலும் போராட்டத்தை தோற்கடிக்கமுடியாது. தற்போது உள்ள இயக்கங்கள் மக்களை போராட்டத்தில் இருந்து அந்நியப்படும் வேலையையே செய்து வருகிறார்கள்" என எனக்கு அடிக்கடி கூறுவார்.

வீட்டில் அடைந்து கிடந்து, தோழர் விஸ்வாவின் மனைவி ஜெயா அக்கா சமைத்து தர சாப்பிட்டுக்கொண்டு இருப்பது பெரும் சங்கடமாக இருந்தது.

TELO இல் இருந்து பலர் வெளியேறிக் கொண்டு இருந்தனர், ரகு, அர்ச்சுனா போன்ற பத்திரிகைக் குழுவில் இருந்தவர்களும் வெளியேறி, தெரிந்தவர்கள் வீட்டில் தங்கியிருந்தனர். இந் நிலையில் வெளியேறுபவர்களை கைது செய்ய முடியாத நிலைக்கு TELO தள்ளப்பட்டது. நானும் விஸ்வாவுடன் வெளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுவர ஆரம்பித்தேன். தோழர் கபூர் மாஸ்ரரின் உதவியுடன், LTTE இல் இருந்து பிரிந்து இருந்த கணன் மற்றும் குழுவினரை மூலக்கடையில் இருந்த இரகசிய வீட்டில் சந்தித்தோம். இவ்வாறு பல நாட்கள் கலந்துரையாடிய பின் இணைந்து வேலை செய்வது என்ற புரிந்துணர்வுக்கு எல்லோரும் வந்தோம்.

LTTE ஒவ்வொரு இயக்கமாக தடைசெய்து பலரை அழித்துதொழித்துக் கொண்டு இருந்தது. ஜனநாயக சக்திகளை காப்பதும் தற்பாதுகாப்புமே எம் முன்னால் உள்ள பிரச்சினையாக இருந்தது. தமிழ் நாட்டில் PLOT, TELO மற்றும் இயக்கங்களில் இருந்து தனியாகவும் குழுக்களாகவும் வெளியேறி, அடுத்த கட்டம் பற்றிய தெளிவின்றி பலர் அலைந்து திரிந்தார்கள். பலர் போதைவஸ்து கடத்தல்காரர்களின் வலையில் சிக்கினார்கள். உணவுத் தேவைக்காகவும். பணத்தேவைக்காகவும் சமூக விரோத செயல்களுக்குத் தூண்டப்பட்டார்கள்.

இவ்விடயத்தை தோழர் விஸ்வா கவனத்தில் எடுத்தார். இதற்கு என்ன செய்யலாம் என ஒரு கலைந்துரையாடலை ஒழுங்கு செய்தார். அதில் NLFT அமைப்புக்கும், PLOT இல் இருந்து விலகிய ராமதாஸ், சண்முகலிங்கம் போன்ற தனிநபர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு அவர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு தோழர் விஸ்வா, பல இயக்கங்களில் இருந்து பல நூற்றுக்கணக்கானோர் விலகி தமிழ் நாட்டில் பல கிராமங்களிலும் உணவு, தங்கும் இடம், பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளால் துன்பப்படுவதாகவும், அவர்கள் சமூக சீரழிவுக்கு உட்படுவதற்கு தள்ளப்படுகிறார்கள் என்பதையும் இவர்கள் மறுவாழ்வு பெறுமுகமாக ஒரு இடைத்தங்கல் முகாமை அமைத்து அங்கு அவர்களை தங்கவைத்து கோழி வளர்ப்பு, காளான் வளர்ப்பு போன்றவற்றை செய்வதன் மூலம் அவர்கள் தங்களை காப்பாற்ற முடியும் என்றும் கருத்தை முன் வைத்தார். இப்பண்ணையில் PLFT யோ NLFT யோ எந்த அழுத்தங்களும் கொடுக்காது என்றும் பண்ணை சுதந்திரமாக இயங்குமென்றும் உத்தரவாதம் வழங்கினார். இக்கருத்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கான ஆரம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியை PLFT, NLFT இரு இயக்கங்களும் தலா 15,000 ரூபா வீதம் வழங்கினர்.

மேலும் 15,000 ரூபா இலண்டனில் கலாநிதிப் பட்டப்படிப்பில் இருந்த தோழர் சிறீதரன் அனுப்பியிருந்தார். பண்ணைக்கான நிலம் தாம்பரத்துக்கண்மையில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில், ஆதரவாளர் ஒருவரால் வழங்கப்பட்டது. LTTE இன் ஆரம்பகாலத்தில் இருந்து, தமிழ் நாட்டைச் சேர்ந்த தங்கவேல் அண்ணா என்பவர் LTTE இன் முழுநேர ஆதரவாளராக இருந்தவர். பின்னர் ராகவன், அகிலன், கணன் போன்றோர் LTTE இலிருந்து வெளியேறும் போது தானும் வெளியேறினார். பின்னர் கணனும் மற்றும் சில தோழர்களும் போராட்டத்தில் ஈடுபடும் ஆர்வம் மிக்கவர்களாக இருந்த காரணத்தால் அவர்களுடன் தன்னை இணைத்துக் கொண்டார். அவரே இப்பண்ணைக்குரிய நிலத்தை பெற்றெடுப்பதில் பெரும் பங்காற்றினார். அவர்தான் PLFT பயிற்சி முகாங்களுக்கான இடங்களை பெற்றுக் கொடுப்பதிலும் பெரும் பங்களிப்பு செய்திருந்தார்.

பண்ணை நாற்பத்தையாயிரம் ரூபா முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டது. இயக்கங்களில் இருந்து விலகி தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் இருந்த போராளிகளை சந்திப்பதற்கு என்னை தோழர் விஸ்வா அனுப்பி வைத்தார். ஆனால் நாம் எதிர்பார்த்தது போல் இயக்கங்களில் இருந்து வெளியேறியோர் பலர் பண்ணையில் வந்து தங்குவதற்கு தயங்கினர். இது PLFT, NLFT இயக்கங்கள் தங்களை தங்கள் அமைப்புக்களில் சேர்த்துக் கொள்வதற்காகவே பண்ணை வேலைத்திட்டத்தை செய்கிறார்கள் என்றே அவர்கள் கருதினார்கள். அவர்களது கடந்தகால அனுபவங்கள் இயக்கங்களில் பொதுப்படையாக வெறுப்பிலேயே இருந்தனர். நீங்களாக இயக்கத்தில் சேர்ந்தாலன்றி உங்களை யாரும் வற்புறுத்தமாட்டார்கள் என்று உத்தரவாதம் கொடுக்கப்பட்ட போதும், பத்துப்பேருக்கு உட்பட்டவர்களே பண்ணையில் சேர்ந்தார்கள்.

பண்ணை ஆரம்பத்தில் நன்றாக இயங்கியது. பண்ணையில் காளான் வளர்ப்பும், கோழி வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமதாஸ் அவர்கள் இதற்கான அறிவூட்டல்களை வழங்கினார். பிற்காலத்தில் பண்ணையில் இருந்தவர்களிடம் சோம்போறித்தனம், பொறுப்பற்றதன்மை தலைதூக்கியது. உரிய காலத்தில் கோழிகளுக்கு போடவேண்டிய தடுப்பூசிகள் போடப்படாமையால் கோழிகள் தொகையாக இறந்தன. பண்ணை நட்டம் அடையத் தொடங்கியது. புதிய உறுப்பினர்களும் பண்ணையில் சேரவில்லை. இதனால் பண்ணை ஐந்து, ஆறு மாதங்களிலேயே மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. பண்ணையில் இருந்தவர்கள் பலரும் வெளிநாடு செல்லும் முயற்சியில் இறங்கினர். சிலர் PLFT இல் இணைந்து கொண்டனர்.

இலங்கையில் இருந்த PLFT தோழர்கள் பலருக்கும் LTTE இனால் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. எனவே அவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு ஆயுதங்கள் வழங்கப்பட்டு, தற்காப்பு நிலை எடுக்கப்படவேண்டும் என்ற தோழர் விஸ்வாவின் நிலைப்பாட்டை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். ரஞ்சித், ரமணன், கண்ணன் போன்ற தோழர்கள் ஆயுத சேகரிப்பிலும் உற்பத்தியிலும் ஈடுபட்டனர். பல இயக்கங்களில் இருந்து வெளியேறியோர் தரகர் மூலம் ஆயுதங்களை விற்றுவிட்டு வெளிநாடு தப்பிச் சென்றனர். இத்தகைய ஆயுதங்கள் PLFT இனால் வாங்கப்பட்டது. சிறியரக கைக்குண்டுகள், மோட்டார்கள் தயாரிக்கப்பட்டன.

பயிற்சி முகாம்கள் அமைக்கப்பட்டன. இலங்கையில் இருந்து வரவழைக்கப்பட்ட போராளிகளுக்கு, TELO இல் இருந்து வெளியேறி PLFT இல் இணைந்து கொண்ட தோழர் டேவிற் என்பவராலும், LTTE இல் இருந்து PLFT யில் இணைந்து கொண்ட கணன், வெள்ளை, பிறின்ரோ, அஜந் போன்ற தோழர்களாலும் பயிற்சிகள் மிகத் தீவிரமாக வழங்கப்பட்டன. இதற்கான ஒழுங்குகளை செய்வதில் இலங்கையில் இருந்த தோழர் அன்ரன் ஈடுபட்டார். இலங்கையில் கலாச்சார வேலைகளை வெளிப்படையாக செய்து வந்த மனோரஞ்சன், தமிழ் நாட்டுக்கு அழைக்கப்பட்டு தலைமறைவாக இருந்து தொழிற்படுமாறும் அதற்கான வேலைகளுக்கான தந்திரோபாயங்கள் தோழர் விஸ்வாவால் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சியின் போது வெளிச்சக்திகளின் கண்காணிப்புக்களும் நெருக்கடிகளும் ஏற்பட்டன. இதனால் அடிக்கடி பயிற்சி முகாங்களை இரகசியமாக இடம்மாற்ற வேண்டியும் ஏற்பட்டது. ஒருவாறு பயிற்சியை முடித்த தோழர்கள் இலங்கை சென்றிருந்தனர்.

தோழர் விஸ்வா என்னை தன்னுடைய உதவியாளராக தான் செல்லும் இடமெல்லாம் அழைத்துச் செல்வார். அவரது சிறிய தோற்றம் கொண்ட அவரால் சைக்கிள் ஓட்டுவது சிரமம் என்பதால், நானே அவரை தாம்பரம், மூலக்கடை, கோடம்பக்கம், அண்ணாநகர் போன்ற எல்லா இடங்களுக்கும் ஏற்றிச் செல்வேன். இனம்புரியாத பாசத்துடன் என்னுடன் பழகினார்.

பயிற்சி முடித்த போராளிகளில் பெரும்பாலனவர்கள் இலங்கை சென்றமையால், அங்கு அவர்கள் இரகசியமாக எவ்வாறு இயங்குவது என்பது பற்றிய நிர்வாக ஒழுங்குபடுத்தல்களை செய்யவேண்டும் எனக் கூறி இலங்கை புறப்பட தயாரானார். நானும் புறப்பட தயாரானேன். அதற்கு அவர் தான் திரும்ப வரவேண்டும் என்றும், மறுமுறை திரும்பும் போது அழைத்துச் செல்வதாகவும் கூறினார். மேலும் இலங்கையில் பல இயக்கங்களில் இருந்தும் வெளியேறிய ஜனநாயக சக்திகளை ஒன்றிணைக்க வேண்டும் என்றும், எனக்குத் தெரிந்த ஜனநாயக முற்போக்கு சக்திகளின் முகவரிகளைத் தருமாறும், அவர்களுடன் தொடர்புகளை பேணவேண்டும் என்றும் கேட்டுப் பெற்றுக்கொண்டார்.

நானும் தோழர் ரஞ்சித்தும் இராமேஸ்வரத்துக்கு அழைத்துச் சென்றோம். 9mm பிஸ்ரல் ஒன்றை தன் தற்பாதுகாப்புக்கு வைத்துக் கொண்டார். நான் இந்தியாவில் நான்கரை வருடங்கள் இருந்தபோதும் கோயில்களுக்கு அதிகம் சென்றதில்லை. தஞ்சாவூர், மதுரை, திருச்சி என பல இடங்களுக்கும் பலரை சந்திப்பதற்கு என்னை தோழர் விஸ்வா அனுப்பியுள்ளார். போன காரியத்தை முடித்துவிட்டு திரும்பியுள்ளேன். எந்தக் கோயிலுக்கும் போய்ப் பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லை. ஆனால் அன்று தோழர் விஸ்வா இராமேஸ்வரம் கோயிலுக்கு அழைத்துச் சென்று காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு தஞ்சாவூர் சென்று பேராசிரியர் தோழர் அ.மார்க்ஸ் அவர்களிடம் ஒரு புத்தகப் பொதியையும் கடிதத்தையும் கையளித்துவிட்டு, என்னை சென்னை செல்லுமாறும், தோழர் ரஞ்சித் தன்னை அனுப்பிவிட்டு வருவார் என்றும் கூறினார். நான் சிலவாரங்களில் வருவேன் எனக் கூறி கட்டி அணைத்து விடைபெற்றார். நிரந்தரமாக பிரியப் போகிறோம் என்பதுபற்றி அப்போது நான் சிறிதளவும் எண்ணிப்பார்க்கவில்லை.

நான் அவர் கூறியவாறு தஞ்சாவூர் சென்று சென்னை திரும்பினேன். தோழர் விஸ்வாவை படகில் ஏற்றிவிட்டு தோழர் ரஞ்சித்தும் சென்னை திரும்பினார். பின்பு ரஞ்சித்தும் நானும் தோழர் கூறிவிட்டுச் சென்ற வேலைகளை செய்து வந்தோம்.

சில நாட்களில் இருவருக்கும் தனித்தனியாக கடிதம் அனுப்பியிருந்தார். எனக்கு எழுதிய கடிதத்தில் தான் பல ஜனநாயக சக்திகளையும் சந்தித்ததாகவும், நாம் (PLFT) ஒரு வலுவான ஜனநாயக சக்தியாகவும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கக் கூடிய அமைப்பாகவும், LTTE இன் பாசிச சர்வாதிகாரத்திற்கு எதிரான வலுவான சக்தியாகவும் வளருவோம் என பலரும் எதிர்பார்க்கின்றார்கள் என்றும், அந்த வரலாற்றுக் கடமையை நாம் செய்து முடிப்போம் என்றும், நம்பிக்கையுடன் இருக்குமாறும், அடுத்த வாரம் சென்னை வந்து சேர்வதாகவும் எழுதியிருந்தார். தோழர் ரஞ்சித் PLFT இன் மூத்த உறுப்பினர் என்பதால், பல்வேறு வேலைகளையும் தான் வருவதற்குள் செய்து முடிக்குமாறு எழுதியிருந்ததாக ரஞ்சித் கூறினார். பின்னர் "இந்தாளின் வேகத்திற்கு எங்களால் ஓட இயலாது" என ரஞ்சித் கூறிச் சிரித்தார்.

அடுத்த வாரம் இலங்கையிலிருந்து தொலைபேசி அழைப்பிற்காக முன்னாள் PLOT உறுப்பினர் உசா அக்கா வீட்டில் நானும் தோழர் ரஞ்சித்தும் காத்து இருந்தோம். தொலைபேசி அழைப்பு வந்தது. தோழர் ரஞ்சித்தான் பேசினார். ரஞ்சித்தின் முகத்தில் ஏற்பட்ட மாற்றம் ஏதோ கெட்ட செய்தி என்பதை உணர்ந்தேன். ரஞ்சித் கண்கலங்கியவாறு தோழர் விஸ்வாவிற்கும், தோழருடன் வந்த வேறு இரு தோழர்களுக்கும் கடலுக்குள் வைத்து LTTE இனரால் ஆபத்து ஏற்பட்டு விட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார். யாருக்கு யார் ஆறுதல் கூறுவது எனத் தெரியாது தவித்தோம்.

உசா அக்காவும் அவரது அண்ணன் சண்முகலிங்கமும் அதிர்ச்சியில் இருந்தனர். பெரிய இயக்கங்களுக்கு பின்னால் சென்று, அதில் இருந்து விரக்தியில் வெளியேறிய பலருக்கும் தோழர் விஸ்வா ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகவே இருந்தார். அந்த நம்பிக்கையும் அவர்களுக்கு தகர்ந்தது.

தோழர் விஸ்வாவின் மனைவி ஜெயா அக்காவிற்கு இச் செய்தியை எப்படிக் கூறுவது என இருவரும் கலங்கினோம். முதல் தோழர் பாலசூரியாவிற்கும் அவரது மனைவி ஆனந்தி அக்காவிற்கும் கூறினோம். பின்பு படிப்படியாக ஜெயா அக்காவிற்கு கூறினோம். குழந்தை சிந்து ஒரு வயதை பூர்த்தி செய்வதற்கு நெருங்கி இருந்தார். ஜெயா அக்கா முற்றாக, நிலைகுலைந்து போனார். அவர் சாதாரண குடும்பப் பெண்ணாக தோழரை விரும்பித் திருமணம் செய்திருந்தார். இச்சூழலில் தோழர் பாலசூரியாவின் குடும்பமும் PLFT தோழர்களான நாங்களும்தான் அவருக்கு ஆறுதலாக இருந்தோம். பின்பு ஜெயா அக்காவும் சிந்துவும் இலண்டனுக்கு தோழர்களால் அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

NLFT, PLFT இயக்கங்களை ஒழித்துக்கட்டுவதில் LTTE மிகத் தீவிரமாக இருந்தது. NLFT தோழர்கள் பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றார்கள். நாட்டில் தரித்து நின்ற PLFT தோழர்களான தோழர் அன்ரன், தோழர் றமணன் உட்பட பல தோழர்கள் LTTE இனால் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். எஞ்சிய PLFT தோழர்கள் வெளிநாட்டில் தஞ்சம் அடைந்து இருக்கிறார்கள். ஜனநாயகம், தனிமனிதசுதந்திரம், மனித நேயம் இவற்றை நிலைநிறுத்தி தமிழ் மக்களின் சுயநிர்ணய போராட்டத்தை மக்கள் போராட்டமாக பரிணமிக்கச் செய்வதற்காகவே தோழர் விஸ்வா பெரும்பாடுபட்டார். அவரையும் அவரது நியாயமான கனவுகளும் LTTE இனரின் பாசிச சர்வாதிகாரத்துக்கு முன்னால் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. LTTE தோழர் விசுவானந்ததேவனையும் PLFT யையும் தோற்கடித்ததின் பேரில், தமிழ் மக்களையும் அவர்களது ஜனநாயக உரிமைகளுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்கடிக்கப்பட்டன. அது 2009ம் ஆண்டு மே 18 உடன் முழு உலகுக்கும் வெளிச்சத்துக்கு வந்தது.

வரலாறு எப்போதும் மானிட விடுதலையை நோக்கி மெதுவாக நகர்கிறது. இதை விரைவு படுத்த முயலும் போது சில தனி மனிதர்கள் தோற்கலாம். ஆனால் மானிட விடுதலையை நோக்கிய நகர்வு தோற்பதில்லை.

குறிப்பு:
PLFT அமைப்பு ஓர் இரகசிய அமைப்பு பாதுகாப்புக் காரணங்களுக்காக எல்லா விடயங்களும் எல்லோருக்கும் தெரிந்திருப்பதில்லை. எனக்குத் தெரிந்த பக்கங்களையே இங்கு விபரித்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலையாத நினைவுகள்

தொலைந்து விட்ட வாழ்க்கையின் எச்சங்களையும், மீதமுள்ள நினைவுகளையும் கூட, மீட்டுப்பார்க்க முடியாத அகதி வாழ்க்கையின் உச்ச விளிம்புகளைத் தொட்டு வாழும் என்போன்ற மனிதனால் விசுவா என்ற மாமனிதனின் கனவுகளை மட்டும் மறக்க முடியவில்லை.

கீரிமலைக்கு அருகில் உள்ள அழகான பாக்கு நீரிணையின் மணல் வெளியில் மார்க்ஸ், லெனின், மாக்சிம் கோர்க்கி, தஸ்தாயேவ்ஸ்கி போன்றோர் எனக்குள் எழுப்பிய எல்லாக் கேள்விகளுக்கும், சில மணி நேரங்களுக்குள் விளக்கம் அளித்த அற்புதமான அறிவாற்றல் விசுவானந்ததேவனுக்கு.

எனது அறிவுத் தேடலுக்கு வழமையான கல்வி கற்றல் முறைமை உதவாது என்று எண்ணி எனது அப்பாவின் அறிவுரையைத் தூக்கி எறிந்தவன், நான். ஆனால் விசுவானந்ததேவனைச் சந்தித்த மறுநாளே கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரியில் விண்ணப்பம் கொடுத்து மாணவனாகப் பதிவு செய்யும் மனநிலையை நான் பெற்றேன்.

படிப்பு, அரசியல், வேலை என்று தீவிரமான நாட்கள் அவை. அன்றிலிருந்து ஐந்து வருடங்கள் விசுவானந்ததேவனின் பாதுகாவலனாக அவர் சந்தித்த பத்மநாபா, வரதராஜப்பெருமாள், அமிர்தலிங்கம், சந்ததியார், ஜான் மாஸ்ரர், ராகவன், A.M.கோதண்டராமன் போன்ற இன்னும் பலருடன் நடந்த கலந்துரையாடல்களின்போது பார்வையாளனாக இருந்திருக்கிறேன்.

தனது கையில் தேநீர்க்குவளையைச் சுழற்றிச் சுழற்றிக் குடிப்பதைப் போலவே, தமிழ் மக்களின் வாழ்க்கையையும் ஒரு சுழற்சியுடனேயே மாற்றி இனிமையாக்க ஒரு கனவு கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுக் கொடுக்காத, சோர்வடையாத உழைப்பு விசுவானந்ததேவனின் பண்பு. அவரது உழைப்பு வேகத்திற்கு, தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி ஈடு கொடுக்கத் தவறியபோது, தமிழீழத் தேசிய விடுதலை முன்னணியை உருவாக்கினார். "தமிழீழ தேசிய விடுதலை முன்னணி"யும் ஆயுதப் போராட்டமா? மக்கள் போராட்டமா? என்று இந்திய நக்சலைட்டுக்களின் குழப்பகரமான அரசியல் பிரச்சினையில் ஆழமானபோது, தனது வலது கரமான விவேகானந்தனின் துணையோடு "தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி" என்ற அமைப்பை உருவாக்கினார்.

இது பற்றிய கருத்து முரண்பாடு வந்தபோது அவர் எனக்கு கடைசியாகக் கூறியது, "குமரன் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் அவர்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட போராட்டம். இப்போராட்டத்தில் யார் தலைமையேற்கப் போகிறார்களோ அவர்கள் மட்டும்தான் அடுத்த கட்டத்தை தீர்மானிப்பார்கள். அது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. தனிநபர் பயங்கரவாதம் முற்று முழுதாக அழிக்கப்படும். போராட்டத்தின் தலைமையை எடுப்பதற்கு ஆயுதப்போராட்ட தலைமையால் மட்டுமே இயலும். நீ என்னுடன் இணைவாய் என்பதில் எனக்கு எந்த வித சந்தேகமும் இல்லை" என்றார். ஆனால் இன்று நான் அகதியாய், அவர் நினைவுகளாய் வாழ்க்கை தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தி பாலசூரியன்

# சென்னையில் விசுவண்ணையின் கடைசிநாள்

**விசுவண்ண**னை எனது கணவர் மூலமாகவே நான் தெரிந்து கொண்டேன். தோளில் ஒரு நீண்ட பையுடன் அவரை ஒரு சில நாட்கள் என் கணவருடன் யாழ்ப்பாணத்தில் பார்த்ததாக ஞாபகம் உள்ளது. அப்போதெல்லாம் அவரை என் கணவருடன் பார்த்தால் எனது மனதில் மிகவும் ஒரு பீதி ஏற்படும். இவர் எனது கணவரை எங்காவது கண்காணாத இடத்திற்கு அழைத்து சென்று விடுவாரோ என்று தான் பயந்தேன். அவர் மிகவும் சிறிய தோற்றம் உடைய, ஒரு சாந்தமான முகம் கொண்டவர். அதிகம் பேசமாட்டார்.

நான் ஒருபோதும் அவரை தனித்துக் கண்டதில்லை. அவரைச் சுற்றி எப்போதுமே ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் இருப்பார்கள். எல்லோருமே அவர் சொல்வதைக் கிரகித்த வண்ணமிருப்பர். அவர் எவ்வளவு சிறந்த மனிதர் என்பதை பின்னர் என்னால் உணரமுடிந்தது. ஒரு நல்ல இதயம் உள்ள மனிதரை நாங்கள் இழந்து விட்டோம். அவரது சகோதர்கள் அனைவருடனும் பழகுவதற்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. கனடாவிலுள்ள அவரது கடைசித் தங்கையுடன் எங்களுக்கு இன்னமும் தொடர்பு உள்ளது. நாங்கள் இலங்கை சென்ற போது அவரது தம்பியை பார்க்க கல்லுவத்திற்கு சென்றோம். ஆனால் அப்போது அவரது தம்பி வீட்டில் இருக்கவில்லை.

நாங்கள் சென்னையில் இருந்தபோது அவருடனும் அவரது மனைவியுடனும் மிகவும் நெருக்கமாக பழகுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்து. அவரது மனைவி, ஜெயா அக்கா எனக்கு மிகவும் பிடித்தமான ஒரு சகோதரி. நாங்கள் இருவரும் மிகவும் அன்பாக பழகுவோம். நாங்கள் நான்கு பேரும் சேர்ந்து 'புதுமைப்பெண்' மற்றும் 'சிந்து பைரவி' போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படங்கள் பார்த்த ஞாபகங்கள் நன்றாகவே உள்ளன. அந்த 'சிந்து பைரவி' திரைப்படத்தின் தாக்கத்தினாலோ என்னவோ விசுவண்ணை தம்பதிகள் தங்கள் முதல் பெண் குழந்தைக்கு சிந்து எனப் பெயரிட்டனர். அவர்களுக்கு பிள்ளை பிறந்த பின்னர் அண்ணாநகரில் நாங்கள் ஒரே வீட்டில் இருப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த வீட்டில் நாங்கள் ஒன்றாக இருந்தபோது எத்தனையோ விடயங்களை எழுத முடியும். ஆனால் எனது மனதிற்குள் ஆழமாக பதிந்து போன ஒருசில விடயங்களை மட்டுமே இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அவரது மகள் மீது அவருக்கு கொள்ளைப் பிரியம். அவர் அந்த வீட்டில் இருக்கும் நேரமெல்லாம் தனது மகளை மிகவும் ஆசையாக தூக்கி வைத்திருப்பதை நான் கண்டிருக்கிறேன். அவர் தூக்கி வைத்திருக்கும் அந்தக்காட்சி 30 வருடம் ஆகியும் எனது மனதை விட்டு இன்னமும் அகலவில்லை.

சிந்துக்கு வயது ஒன்றாவதற்கு இன்னமும் இரண்டு மாதங்களே இருந்தன. 1986 ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு பின்னேரப் பொழுது, ஜெயா அக்கா அறையினுள் அழுது கொண்டிருந்தார். எனக்கு ஏனென்று விளங்கவில்லை. மகளையும் தனது கையில் தூக்கி வைத்திருந்தபடி விசுவண்ணை அறையிலிருந்து வெளியேறி என்னை நோக்கி நடந்து வந்தார். தான் இன்று வெளியே போகவுள்ளதாகவும், ஜெயா அக்காவையும் சிந்துவையும் தான் திரும்பி வரும் வரை கவனமாக பாருங்கள் என்று சற்றுத் தயங்கியபடி சொன்னார். இது தான் அவர் என்னிடம் கூறிய கடைசி வார்த்தைகள். அவரது கடமைகள் அவரது கண்களில் தெரிந்தன. அவர் எங்கே புறப்படப் போகிறார் என்பதும் எனக்குப் புரிந்தது. அவரது மகள் என்னுடன் நல்ல பழக்கப்பட்டவள் ஆகையால், அவள் என்னிடம் தாவிப்பாய்ந்து வந்தாள். அதன் பின்னர் அவர் அறைக்கு திரும்பிச் சென்று ஜெயா அக்காவிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

விசு அண்ணை புறப்பட்டுச் சென்று ஏறத்தாள பதினைந்து நிமிடங்களின் பின்னர் ஜெயா அக்கா அறையிலிருந்து அழுது வீங்கிய கன்னங்களுடன் வெளியே வந்து, தனது தாலிக்கொடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்திலிருந்து கழன்று விழுந்ததாக என்று தனது தாலியை தொட்டுக்காட்டியபடி, என்னிடம் அழுதபடி கூறினார். இதை அப்போது அவர் ஓர் அபசகுனமாகக் கருதி என் முன்னால் மறுபடியும் வீரிட்டு அழுதார். எனக்கு ஒருமாதிரியாக இருந்தது. எப்படி அவரைத் தேற்றுவதென்று தெரியாமலிருந்தது. எனினும் 'ஒன்றும் நடக்காது, பயப்பிடாதையுங்கோ' என ஜெயா அக்காவிற்கு நான் தைரியம் கூறினேன்.

நவம்பர் மாதம் 12ம் திகதி 1986ம் ஆண்டு அவரது மகள் சிந்துவின் முதலாவது பிறந்த தினத்தை, அவரின்றி நாங்கள் இருந்த வீட்டில் உறவினர்கள், சிநேகிதர்கள் சகிதம் கொண்டாடியது எனக்கு இன்னமும் ஞாபகத்தில் உள்ளது. அந்த நேரத்தில் விசுவண்ணை நிரந்தரமாகவே காணாமல் போய்விட்டார் என்பது மற்றவர்களுக்கு தெரியும். எனக்கும் ஜெயா அக்காவிற்கும் தெரியாது. காலங்கள் ஓடியது. அதன் பின்னர் அவர் நிரந்தரமாக வரமாட்டார் என்பது தெரிய வந்தது. ஜெயா அக்காவும் மகளும் இங்கிலாந்தை நோக்கி புறப்பட்டனர். அதன் பின்னர் ஜெயா அக்காவையும் அவரது மகளையும் நான் இதுவரையில் பார்க்கவில்லை. இந்த புத்தகத்தில் எனது இந்த விசுவண்ணையின் கடைசி நாள் நினைவினை பதிவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வசந்தன்**

# மார்க்சிசவாதியாய் வாழ்ந்து காட்டிய மானிடன்

எல்லோரும் மார்க்சிசம் படிக்கலாம், மார்க்சிசப் புத்தகங்களை புலிகளின் தலைமை எரிக்கும் வரை. எல்லோரும் வாசிக்கலாம், புத்தகங்களை பிடுங்கி எறியும் வரை (ராகவனிடமிருந்து பிரபாகரன் பிடுங்கி எறிந்தமை). எல்லோரும் மார்க்சிசம் பேசலாம், விவாதிக்கலாம் ஜனநாயகச் சூழல் நிலவும் வரை. எல்லோரும் உச்சரிக்கலாம், அதற்கே உரித்தான கலைச்சொற்கள் இருக்கும் வரை. எல்லோரும் Collar ஐ உயர்த்தலாம் நான் ஒரு மார்க்சிஸ்ட் என்று. ஆனால் மார்க்சிசவாதியாய் வாழ்ந்து காட்டுவதுதான் கடினம். மார்க்சிசவாதியாய் நடைமுறையில் வாழ்ந்து காட்டியவர்தான் விசுவானந்ததேவன்.

"நடைமுறையில்லாத தத்துவம் வறட்டுத் தத்துவம். தத்துவமில்லாத நடைமுறை குருட்டு நடைமுறை" என்றார் லெனின். தத்துவத்துடன் கூடிய நடைமுறையையும், நடைமுறையுடன் கூடிய தத்துவத்தையும் கடைப்பிடித்து நிஜத்தில் வாழ்ந்து காட்டிய மனிதன் தான் விசுவானந்ததேவன்.

மார்க்சிசவாதிக்கும் கம்யூனிசவாதிக்கும், கொள்கை யளவிலும், சாராம்சத்திலும் வேறுபாடில்லைத்தான். ஆனாலும் கம்யூனிசம் கொள்கையின் பாலும், மார்க்சிசம் நடைமுறையின் பாலும் இருக்கும். கம்யூனிசம் வர்க்க பேதமற்ற சமூக அமைப்பைக் கோரி நிற்க, மார்க்சிசம் அதனை அடைவதற்கான உரைகல்லாகச் செயற்படும். "அது ஒரு வறட்டுச் சூத்திரமல்ல. மாறாக அது புரட்சி நடைமுறைப் பணிக்கு ஒரு வழிகாட்டி". என்கிறார் லெனின்.

மார்க்சிசவாதிகள் யதார்த்த நிலைமைகளைக் கணக்கிலெடுப்பார்கள். முரண்பாடுகளைக் கவனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார்கள். முதன்மையான முரண்பாடுகளையும், இரண்டாம் பட்ச முரண்பாடுகளையும் இனங்காண்பார்கள். நேச முரண்பாடுகளையும், பகை முரண்பாடுகளையும் வகைப்படுத்துவார்கள். இலக்கையடையும் நோக்கில், நேச அணிகளுடன் கை கோர்த்தும் பயணித்திடுவார்கள்.

இந்த வகையில்தான் விசுவானந்ததேவன் தமிழ்த் தேசியவாதத்தைக் கையிலெடுக்கின்றார். விசுவானந்ததேவனின் தமிழ்த் தேசியமும், பிரபாகரனின் தமிழ்த் தேசியமும் முற்றிலும் வேறுபட்டது. அவை துருவநிலைப்பட்டவை. முன்னையது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும், பின்னையது குறுந்தேசியவாதத்தையும் அவாவி நிற்பது. பின்னையது ஒடுக்குமுறைக்கு எதிராக இருந்தபோதிலும், சாராம்சத்தில் பிற்போக்கானது. மற்றைய இனங்களை ஒடுக்குமுறைக்குள்ளாக்குவது. தேசப்பற்றுள்ள சகோதர இயக்க உறுப்பினர்கள் பலரை, உயிருடன் எரித்ததையும், சரணடைந்த தமது கிழக்கு மாகாண உறுப்பினர்களைச் சுட்டதையும், இராணுவத்தினரிடம் சரணடையச் சென்ற சொந்த மக்களைச் சுட்டதையும் கணக்கிலெடுப்பின், பாசிசத்திற்கு உரித்தானது. அதுமட்டுமல்ல, அது தனிநபர் வழிபாட்டிற்குரியது. மக்களைப் புறந்தள்ளி, பிரபாகரனை முதன்மைப்படுத்திய சத்தியப்பிரமாணத்தைக் கொண்டது. இளைஞர்களையும், யுவதிகளையும் இலக்கு வைத்த அரசியல் அது. அவர்களுக்கு அம்மாவும் அப்பாவும் பிரபாகரன்தான் (Demigod) என்றது. ஒரு சாரார் பிரபாகரனை, புறநானூற்றுக்குப் புதிய அத்தியாயம் வரைந்தாய். சொல்லுக்கு அப்பாற்பட்டாய், சோதிப்பிழம்பானாய், வீரா!, எம் தேசத்தலைவா!, மொழியாகி, எங்கள் மூச்சாகி, எங்கள் விழியாகி, வீரம் விளை நிலமாகி நின்றாய்!, முருகனுக்கு இணையானாய்! என்று உயர்வு நவிற்சியணியில் துதிபாட, விசுவானந்ததேவனோ எண்பதுகளின் தொடக்கத்திலேயே (35 வருடங்களுக்கு முன்னரேயே), தமிழில் ஏராளமான வார்த்தைகளிருந்தும், குறைந்தபட்சம் இரண்டே இரண்டு எழுத்தைக் கொண்டு எந்தவிதமான அலங்காரமுமில்லாமல், ஒரு சொல்லில், அவரைக் 'கோழை' என வர்ணித்தார். இங்கேதான் ஒரு இடதுசாரியின் தீர்க்க தரிசனமான பார்வைக்கும், வலது சந்தர்ப்பவாதிகளின் ஜால்ராப் போடும் பார்வைக்கும் இடையிலான பாரிய வேறுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளிச்சிடுகிறது. ஈற்றில், அவரது கணிப்பே ஊடகங்களின் வாயிலாக நிரூபணமுமாயிற்று.

இலங்கையின் யதார்த்த நிலைமைகளை இனங்கண்டு, இன முரண்பாடு முதன்மையானதும், வர்க்க முரண்பாடு இரண்டாம் பட்சம் என்ற கருத்தை முன்வைத்தார். பிரதான முரண்பாடான இன முரண்பாட்டைத் தீர்ப்பதனூடகவே வர்க்க முரண்பாட்டைத் தீர்க்கமுடியும் என்ற கருத்தை வைத்தார். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதனூடாகவே இலங்கை முழுவதற்குமான சோசலிஸத்தைப் பற்றி சிந்திக்க முடியும் என்றார். இதற்காக ஸ்தாபனத்தைக் கட்ட முனைந்தார்.

தட்டி எழுப்பி, நம் சக்தி தலை நிமிர கட்டியெழுப்புவோம் கடல்போன்ற மானுடத்தை என்ற அவரது கோஷம், இன்றுவரை என் காதில் ஒலிக்கிறது. அவர் சைக்கிள் மிதித்ததை நான் கண்டிலன். சைக்கிள் Bar இலிருந்த படியே போகப் போக போராட்டம் பற்றி எமக்குத் தெளிவுபடுத்தியவர். கேட்கும் கேள்விகள் அனைத்திற்கும் பதிலளித்தவர். மார்க்சிசப் பார்வையை எம்முள் விதைத்தவர். மக்கள் நலன் நின்று பார்க்கும் விதம் கற்றோம்; வர்க்க நலன்களை அடையாளங்காணும் விதம் கற்றோம்; ஏகாதிபத்தியங்களின் சூட்சுமங்கள் கற்றோம்; நாமும் தெளிவுற்றோம். விடயங்களை, இயங்கியல் ரீதியாகப் பார்க்கும் விதம் கற்றோம். தனது கருத்திற்காக ஸ்தாபனத்தைக் கட்டும் நோக்கில், பொறியியலாளர் என்ற யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்தின் உயரிய உத்தியோக அந்தஸ்தையும் துறந்தவர்; தனிமனிதனாக நின்று, கிராமம் கிராமமாக அலைந்து அமைப்புக் கட்டியவர்; தோழர்களின் திறமைகளை ஊக்குவித்து ஆற்றுப்படுத்தியவர்; தோழர்களைப் பொறுக்கியெடுத்து வலைப் பின்னல் போன்ற அமைப்பைக் கட்ட விழைந்தவர்.

மக்களை அரசியல் மயப்படுத்துவதற்கும், விழிப்புணர் ஊட்டுவதற்கும் கலை நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்தவர். அதற்காக கத்தாரின், (இந்தியாவின் புரட்சிகர குழுவைச் சேர்ந்த பாடகர்) பாணியைத் துணைக்கழைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அடிமைப்பட்ட மக்கள் இன்று*
*ஒன்றாய் நின்று பாடுவோம்.*
*அடிமை விலங்கை உடைத்தெறிய*
*ஒன்றாய்ப் போராடுவோம்.*
*விடுதலை விடுதலை விடுதலை*
*விடுதலைக்கு நாம் போராடுவோம்.*

என்று தோழர்கள் நாம் பாடினோம். ரஞ்சனின் பாடல் வரிகளையும், மெட்டையும் இசைத்தோம்.

*தியாகிகளே தியாகிகளே தியாகிகளே தியாகிகளே*
*தமிழீழ விடுதலைக்ககாய் தோழர்களே – நீங்கள் உயிர் கொடுத்தீர்*

*தமிழீழத் தெருக்களிலும் அலைகடலின் நடுவினிலும்*
*தமிழீழ விடுதலைக்காய் தோழர்களே – நீங்கள் உயிர் கொடுத்தீர்.*

*விவசாயிகள் தொழிலாளிகள் அறிவாளிகள் மாணவர்கள்*
*தமிழீழ விடுதலைக்காய் தோழர்களே – நீங்கள் அணிவகுப்பீர்.*

என்றெல்லாம் 'அறைகூவல்' என்ற நிகழ்ச்சி மூலம் அடிநிலை மக்களை ஈர்த்தோம். மின்சாரம் இல்லாதபோதும், 'பெற்றோமக்ஸி'ன் ஒளியில் நடாத்தினோம். ஓலை கொழுத்தி ரபானத்தின் (ஒரு வகை தோற்கருவி) சுருதியை மெருகேற்ற வைத்தோம். அதில் கலைஞன் முருகையாவின் விரல்கள் நர்த்தனமாடின. காலில் சலங்கையும், நெற்றியில் சிவப்புநாடாவும் கட்டியவண்ணம் ஆட்டத்துடன் பாடி அபிநயித்தோம். மக்களும் எம்முடன் மனம் இலயித்தனர். அவர்களைக் கவர்ந்த பாடல்கள், அவர்களின் கோரிக்கைக்கிணங்க மீண்டும் மீண்டும் பாடப்பட்டன. தோழர்கள் நாம் ஆலமரத்தின் கீழும், புளியமரத்தின் கீழும் நிகழ்த்திக் காட்டினோம். அவற்றையெல்லாம் நினைக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் எமது ஆத்மா சிலிர்க்கிறது, கலங்குகிறது. இது மட்டுமல்ல, இதற்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக வீதியில் நிகழ்த்திக் காட்டிய நாடகமான, திருவிழாவை அங்குரார்ப்பணம் செய்து வைத்தவர்.

*பொது மக்கள் வாழ்வோடு விளையாடினார்*
*போராட்டம் எனச்சொல்லி அறைகூவினார்.*
*போய் நின்று மேடைகளில் அனல் வீசினார்.*
*பாதியிலே கைவிட்டு அவர் ஓடினார்.*
*பாராளுமன்றத்தில் கண்ணாகினார்.*

எனக் கூட்டணியை அம்பலப்படுத்த மாவை நித்தியானந்தனின் உதவி நாடிச் சாதித்தவர்.

*எனக்குப் புள்ளடி போடுங்கோ! என்று*
*சந்திகளில் நின்று கத்தினார்.*
*எனக்குப் புள்ளடி போடுங்கோ.*
*எல்லோர் முன்னாலும் பல்லைக்காட்டினார்.*
*எனக்குப் புள்ளடி போடுங்கோ!.*
*பதவி வெறியில் மயங்கித் திரிந்தார்.*
*எனக்குப் புள்ளடி போடுங்கோ.*

என்று கூட்டணியை, அற்புதமாக மாவை நித்தி வர்ணித்திருந்தார்.

*வாறார் வாறார் புள்ளடியார்*
*ஆடி வாறார் புள்ளடியார்*
*தேடி வாறார் புள்ளடியார்*

*குட்டித் தேர்தல் வைக்கவும்*
*கெட்டித்தனத்தைக் காட்டவும்*
*பட்டம் பதவி கொடுக்கவும்*
*திட்டம் கொண்டு வருகிறார்.*

என எள்ளி நகையாடிய மாவை நித்தியின் வரிகளுக்கு பராபரன் மெட்டமைத்திருந்தார்.

அந்த நாடகம் இன்றளவும் கூட்டமைப்பிற்குப் பொருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் சந்தேகமில்லை. கூட்டமைப்பு உள்ள வரைக்கும் அதற்கும் உயிரிருக்கும். உருவம், உள்ளடக்கம் சரியாகக் கையாளப்பட்ட அப்பிரதிக்கு, அரங்காற்றுகை போதுமா என்ற கேள்வி இன்றும் என்னுள் உறைந்து கிடக்கின்றது. இந்தவகைக் கலை நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பாளரும், மூலகர்த்தாவும் விசுவானந்ததேவனே என்று பின்னாளில் அறிந்து ஆச்சரியப்பட்டேன். விருந்துபசாரத்தை ஒழுங்கு செய்து, வஞ்சகத்தனமாகப் போட்டுத்தள்ளும் ஆயுதக் கலாச்சாரத்தை விடுத்து, கருத்து ரீதியாகக் கூட்டணியை அம்பலப்படுத்திய ஜனநாயகவாதி. துப்பாக்கி முனையை விட பேனா முனையை நம்பிய மனிதன்.

பின்னாளில் புலித்தலைமையும் இப்பாணியைப் (கலை நிகழ்ச்சி) பின்பற்றியபோதிலும், மக்களுடனான அவர்களின் அணுகுமுறை முற்றிலும் வேறுபட்டது. மேய்ப்பாளர்களாகவும், அதிகாரத் தோரணை வாய்ந்ததுமாகவே காணப்பட்டது. உள்ளூர்ப் பாடசாலைகளில் மேசை, கதிரை போட்டு பவுண் அறவிட்டனர். மேற்தட்டு மக்களிலிருந்து கீழ்த்தட்டு மக்கள் வரை வரிசையில் நின்று, இரண்டு பவுணுக்கு ஒரு மஞ்சாடி தன்னும் குறையாமல் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஆடுகிற மாட்டை ஆடியும், பாடுகிற மாட்டைப் பாடியும் கறக்கத் தெரியும் என்று அகங்காரம் செய்தனர். அவ்வாறே செய்தனர். அயல் வீட்டாருடன் மக்களைச் சிண்டு முடிந்தனர். பச்சையாகச் சொன்னால் பகற் கொள்ளையடித்தனர். "கையென்ன கழுத்தென்ன காதினில் கிடந்த மஞ்சாடி நகை கூட மிஞ்சாது பிடுங்கினர்" என யாழ்.அசீம் ஆவேசமாகச் சாடினார். கொடுக்க இயலாதவர்களை வாகனத்தில் ஏற்றி அழைத்துச் சென்றனர். பிற்காலத்தில் கண்துடைப்பாக ஒரு சிலருக்குத் திருப்பிக் கையளிக்கப்பட்டாலும், இனி இழப்பதற்கு உடலுழைப்பைத் தவிர ஏதுமற்ற, நொந்து நூலாகிப் போன ஏழைக் குடும்பங்களிடமும் பலாத்காரமாகக் கறந்தனர். முழுக்க, முழுக்க உணவுப் பொருட்களுக்கும், எரிபொருட்களுக்கும் இலங்கை அரசிடமே கையேந்திக் கொண்டு, போர்ச் சுமைக்குள் தள்ளுப்பட்டு தாங்கொணாத் துயரத்திற்கு ஆட்பட்டிருக்கும் மக்களிடம் வரி அறவிட்டனர். அரசு அனுப்பும் நிவாரணப் பொருட்களிற் கூட மூக்கை நுழைத்து, தரமான பொருட்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமதாக்கி, வெறும் சப்பையை மக்களுக்குக் கொடுத்தனர். அரச வழங்கும் கொடுப்பனவுகளுக்கும், பொருட்களுக்கும், அரசுக்குள் அரசாக நின்று இவர்கள் வரி அறவிட்டனர். எல்லைப்படைகளுக்குச் செல்லாதவர்களை, கிராமசேவையாளர்களிடமிருந்து கிடைக்கும் நன்மைகள் கிடைக்காத வண்ணம் தண்டித்தனர். அது ஒரு கறைபடிந்த அத்தியாயம். இவையெல்லாம் புலித் தலைமைக்கும் மக்களுக்குமான உறவுக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்கள். கண்ணை இமை காத்தது போல், மக்களைக் காத்ததாகவும் கதையளந்தனர். தமிழினி தனது பட்டறிவில், "அப்பாவி முஸ்லீம் மக்களின் வாழ்வுரிமையை அடக்குமுறைக்குள்ளாக்கிய நியாயத்தை தனது இதயத்தால் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது" என்றார்.

தனிநபர் பயங்கரவாதம், சுத்த இராணுவக் கண்ணோட்டம், Foco Theory போன்ற வார்த்தைகள் விசுவானந்ததேவனால் அடிக்கடி உச்சாடனம் செய்யப்படுபவை. அப்பொழுது எமக்கு மார்க்சிசம் பற்றிய தேடல் அரும்பிய மாணவப் பருவம். அவரிடமே கேட்டேன். தனிநபர் பயங்கரவாதம் என்றால் என்ன?. கரகரத்த குரலில், டேய்! என்னடாப்பா, தனிப்பட்ட பெரும் அரசியல்வாதிகள், பெரும் பிரமுகர்கள், போன்றோரின் கருத்துக்களிற்கு எதிராக கருத்து ரீதியாகப் போராடாமல் அந்நபர்களைத் தீர்த்துக் கட்டுவதுதான் என்றார். முதலாம் அலெக்ஸ்சாண்டர் கொல்லப்பட்டால், இரண்டாம் அலெக்ஸ்சாண்டர் வருவாரென மிக எளிமையாக விளங்கப்படுத்தினார்.

புலித்தலைமையின் தனிநபர் பயங்கரவாதத்தின் பிரபல்யமான பலி, அல்பிரட் துரையப்பா என்பது வரலாற்றுப் பதிவு. உலகறிந்த பதிவு ராஜீவ் காந்தி. இந்தத் தனிநபர் பயங்கரவாதத்தை ஊக்குவித்த, கூட்டணியே அதற்குப் பலியாகியது தான் வரலாறு. 1972 தமிழரசுக் கட்சிக் கூட்டமொன்றில், இனவெறியைக் கக்கும் கவிஞரும், மேடைப் பேச்சாளருமான காசியானந்தன், திரு.அல்பிரட் துரையப்பா, திரு.சுப்பிரமணியம், திரு.அருளம்பலம், திரு.ஆனந்தசங்கரி போன்றோர் தமிழினத்தின் எதிரிகள். அவர்கள் இயற்கையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்திற்கோ அல்லது விபத்தான மரணத்திற்கோ தகுதியானவர்கள் அல்லர். தமிழ் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் அவர்கள் எப்படி மரணிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்று அடிக்கல் நாட்டி வைத்தார். அன்றைய கூட்டணியின் வினை விதைப்பு, 1989இல், அவர்களாலேயே அறுக்கப்பட்டதுதான் வரலாறு.

"குற்றங்களுக்காகத் தனிமனிதர்களைத் தண்டிக்கக் கூடாது. குற்றங்களுக்காக சமூகவிரோத மூல ஊற்றை அழித்தொழிக்க வேண்டும்". என்ற மார்க்ஸின் கூற்றை, இயக்கங்கள் உதாசீனப்படுத்தியதைச் சுட்டிக்காட்டினார். கசிப்பு விற்றல், சிறு சிறு களவுகளுக்கெல்லாம் மின்கம்பத் தண்டனை அளித்து, சகல பிரச்சினைகளுக்கும் இராணுவ ரீதியாகத் தீர்வு காண்பதை சுத்தராணுவக் கண்ணோட்டம் என விமர்சித்தார்.

மக்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடு ஏதும் செய்யாத, மக்களின் அழிவைப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தும் நோக்கிலான, திட்டமிட்டு மக்கள் செறிந்து வாழும் இடங்களையும், பாடசாலை, மருத்துவமனை, கோயில்கள் போன்ற இடங்களிலிருந்து நடாத்தப்படும் வலிந்த தாக்குதல்களையும் கடுமையாக விமர்சித்தவர். இது ஒடுக்குமுறையை செயற்கைத் தனமாக குவியப்படுத்தும் தந்திரமான Foco Theory என்றார். இது பாசிசத்திற்கு இட்டுச்செல்லும் என்றார். அவரின் தீர்க்க தரிசனத்தை முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் கண்ணுற்றோம். இராணுவத்திடம் சரணடையச் சென்ற சொந்த மக்கள் மத்தியிலான மனித வெடிகுண்டுத் தாக்குதல், அதற்குச் சான்று பகர்ந்தது. தமிழினியின் அனுபவத்தில், "நாங்கள் எமது மக்களைக் காப்பாற்றத் தவறிவிட்டோம். ஆயுதங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக அரசியல் இலட்சியத்தை தோற்கடித்துவிட்டோம்" என்றார்.

விசுவானந்ததேவன் மக்கள் சக்தியே மாபெரும் சக்தி, வெடிகுண்டையும் விஞ்சிய சக்தியென்ற கோஷத்தையும் முன் வைத்தவர். இதனால் படையேயில்லாது புரட்சியைச் சாதித்துவிடலாமென்று நம்பிய மூடரல்ல. படை கட்டல் வேண்டும். அப்படையைக் கட்சி, வழி நடாத்த வேண்டுமென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தில் உறுதியாக நின்றவர். அப்படை மக்கள் விடுதலைப்படையாக இருக்க வேண்டுமென்றவர். நகர்ப்புற கெரில்லாயுத்தத்தையும் ஆதரித்தவர். உலகிலேயே முதன்முதல் கெரில்லாயுத்தத்தை நிகழ்த்திக்காட்டிய ஸ்பாட்டகஸ் பற்றியும், பிலிப்பைன்ஸ் மக்கள் விடுதலைப்படை பற்றி துண்டுப்பிரசுரங்களையும், தோழர்கள் மத்தியில் விநியோகித்தார். தோழர்கள் குறைந்தது ஆறு மாதங்களாவது மக்கள் மத்தியில் வேலை செய்ததன் பின்னரே படையில் இணைக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் கொண்டிருந்தார்.

அமைப்பினுள்ளிருந்த வறட்டுவாதிகளும், புத்தகவாதிகளும் அமைப்பைச் சிதைத்தனர். காரியவாதியே புரட்சியையோ அல்லது செயலையோ செய்து முடிப்பவன் என்பதை மறுத்து, அவரையே, காரியவாதி என்றும் தேசிய பூர்ஷ்வா என்றும் வசை பாடினர். இன்னும் சிலரோ தமது சுய விம்பத்திற்காகவும், சுய விளம்பரத்திற்காகவும், மக்களின் சாவினையே மூலதனமாகக் கொண்ட, பிற்போக்குத் தேசியவாதக் கடலிற்குள் முத்துக் குளிக்க விரும்பி சந்தர்ப்பவாதிகளானார்கள்.

விசுவானந்ததேவனிடம் வறட்டுவாதமோ, புத்தகவாதமோ, தன்முனைப்புவாதமோ ஒருபோதும் தலைதூக்கியது கிடையாது. மாறாக அவரிடம், மக்கள் நலனும், புரட்சி நலனும், ஸ்தாபன நலனுமே மேலோங்கியிருந்தது. அவர் உட்கட்சி ஜனநாயகத்தைப் பேணிய மகான். அமைப்பின் பிளவைக் கூட உட்கட்சி ஜனநாயகத்தின் அடிப்படையில் அணுகினார். அமைப்பிடம் இருந்த சொத்தைக் கூட பிரிவின் விகிதாசாரத்திற்கமைய பகிர்ந்ததாக அறிந்தோம்.

அவரது மும்மொழி ஆற்றலும், அவரது அடர்ந்த கேசம், அடர்ந்த தாடி, நெஞ்சுரமிக்க ஒடுங்கிய உடல், சிறிய விரல்கள் எல்லாம் எம் கண்முன் நிழலாடுகிறது. ஓடும் நதியின் பாறையிடுக்குகளில் நின்று ஆடும் பழுத்த இலை போல், மனதின் இடுக்குகளிலிருந்து அவரது நினைவுகள் ஆடுகிறது. அந்நினைவுகளைச் சுமந்தபடி இன்றும் நாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சம்பந்தன் ரவீந்திரன்**

# விசுவானந்ததேவன்: நண்பன், தோழன், ஒரு போராளி

காங்கேசன்துறையில் அமைந்திருந்த லங்கா சீமெந்து கூட்டுத்தாபனத்தில் நான் தொழில் புரிந்தபோது, விசுவானந்ததேவனுடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. விசுவானந்ததேவன் அங்கு ஒரு பொறியிலாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். இப்படியாகத்தான் அவருடனான எனது உண்மையான நட்பு ஆரம்பமானது. அந்த நட்பின் தொடர்ச்சி பின்னர், அவருடனான அரசியல் உறவாக மாற்றம் பெற்றது.

விசுவானந்ததேவன் இடதுசாரி அரசியல் பாரம்பரியத்திலிருந்து வந்தவர் மட்டுமல்லாமல், நடைமுறை சார்ந்த அரசியலிலும் நீண்டகாலமாக ஈடுபட்ட ஒருவர். இதனால் சீமெந்து தொழிற்சாலையில் தொழில் புரிந்தவர்களில் பலரை தனது அரசியல் ஆளுமையால் தன்பக்கம் வென்றெடுத்தார். இதற்கூடாக அவர்களுக்கு அரசியல் வகுப்புகளை நடத்தினார். அவ்வகுப்புகளில் கலந்துகொண்டவர்களில் நானும் ஒருவன் என்பதை பெருமையாக நினைவுகூர விரும்புகிறேன். விசுவானந்ததேவனின் அரசியல் வகுப்புகளில் கலந்துகொண்டதன் மூலமே, எனது ஆரம்ப அரசியலைக் கற்றுக்கொண்டேன். விசுவானந்ததேவனே பிற்கால எனது அரசியல் வாழ்க்கைக்கான வழிகாட்டி என்று சொல்லலாம்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களிலேயே தோன்றி வளர்ந்து வந்த ஜனநாயக மறுப்பு, அராஜகம், சகோதரப்படுகொலைகள் குறித்து வன்மையாகக் கண்டித்து வந்த விசுவானந்ததேவன், இவற்றிற்கெதிராக துணிச்சலாக தொடர்ச்சியாக குரல் கொடுத்ததுடன், நடைமுறையில் போராடவும் செய்தார். 'தமிழீழ விடுதலைப்புலிகள்' ஆரம்பகால உறுப்பினரும் பின்னர் அதிலிருந்து வெளியேறி "புதியபாதை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையை வெளிக்கொண்டு வந்தவருமான சுந்தரம் (சிவசண்முகமூர்த்தி), 'தமிழீழ விடுதலைப்புலிக'ளால் சித்திரா அச்சகத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டபின், சுந்தரம் படுகொலையை கண்டித்து வெளியிடப்பட்ட பிரசுரத்தை விசுவானந்ததேவன் யாழ் மாவட்டம் எங்கும் விநியோகம் செய்தார். இதற்கு அப்போது எனது உதவியை நாடியபோது எனது மோட்டார் சைக்கிளிலேயே யாழ்ப்பாணம் எங்கும் கூட்டிச்சென்றேன். ஜனநாயக மறுப்பையும் சகோதரப் படுகொலைகளையும் கண்டித்ததோடு, ஈழவிடுதலைப்போராட்டம் வழிதவறிப் போய்க்கொண்டிருப்பதையும் தீர்க்கதரிசனத்தோடு அன்று சுட்டிக்காட்டியவர் விசுவானந்ததேவன்.

1983 ஜூலையில் இலங்கை அரசால் ஏவிவிடப்பட்ட தமிழினப் படுகொலையால் ஏற்பட்ட அரசியல் மாற்றம், அன்று இந்தியாவில் இருந்த என்னை 'தமிழீழ மக்கள் விடுதலைக் கழக'த்துடன் இணைத்துக் கொள்வதென முடிவெடுப்பதற்கு உந்தித் தள்ளியது. இதனால் விசுவானந்ததேவனுடனான உறவில் சிறு இடைவெளி ஏற்பட்டிருந்தது. ஆனால் அதுகூட ஒரு குறுகிய காலமே.

'தமிழீழ மக்கள் விடுதலைக்கழக'த்துக்குள் ஏற்பட்ட அரசியல் முரண்பாடுகள், உட்படுகொலைகள், ஜனநாயக மறுப்பு போன்ற காரணங்களால் நான் 'தமிழீழ மக்கள் விடுதலைக்கழக'த்திலிருந்து வெளியேறிய போது, மீண்டும் விசுவானந்ததேவனை சென்னையில் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. விசுவானந்ததேவனினதும் அவர் தலைமை தாங்கிய NLFT மற்றும் PLFT அமைப்புகளது உதவிகளினாலேயே பின்னர் எம்மால் தொடர்ச்சியாக அரசியலில் ஈடுபடவும், "தீப்பொறி" என்ற பெயரில் இயங்கவும் முடிந்தது. நாம் 'தமிழீழ மக்கள் விடுதலை கழக'த்திலிருந்து வெளியேறி முதலில் 'தமிழீழ விடுதலை இயக்க'த்தின் பாதுகாப்பில் இருந்தபோது விசுவானந்ததேவன் எம்மை வந்து சந்தித்தார். பின்னர் நாம் பாதுகாப்பாக தங்குவதற்கும் தொடர்ச்சியாக அரசியல் செய்வதற்கும் ஏற்றவாறு, நீலகிரி மாவட்டத்தில் பாதுகாப்பான இடங்களை எமக்கு எடுத்துத் தந்ததோடு மட்டுமல்லாமல், எமக்கு தேவையான பண உதவிகளையும் வழங்கியிருந்தார். எம்முடன் 'தமிழீழ மக்கள் விடுதலை கழக'த்திலிருந்து வெளியேறிய டொமினிக்கினால் (கோவிந்தன்) எழுதப்பட்ட "புதியதோர் உலகம்" நாவலை அச்சிடுவதற்கான பணமும் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவானந்ததேவன் அவர்களாலேயே வழங்கப்பட்டது. "தீப்பொறி" குழுவின் ஆரம்பகால பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் விசுவானந்ததேவனின் தோழமை மிக்க உதவி பெரிதும் காரணமாக அமைந்தது.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் முனைப்பாக ஈடுபட்டிருந்த சிறிய அமைப்புக்களுக்குள்ளாவது குறைந்த பட்ச கருத்தியல் ரீதியான உடன்பாடு காணப்படவேண்டும் என்பதில் தீவிரமாக ஆர்வம் காட்டிச் செயற்பட்டார் விசுவானந்ததேவன். அவர் ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்களின் சிதைவுகள் குறித்து கருத்து தெரிவிக்கையில் "நாங்கள் வரலாற்று ஆசிரியர்களாக இருக்கப் போகின்றோமே தவிர, வரலாற்றை மாற்றுபவர்களாக இருக்கமாட்டோம்" எனக் கூறினார். அவரை இறுதியாக நான் சென்னையில் சந்தித்துக் கொண்டிருந்த காலங்களில் அவர் கூறிய இந்தக் கூற்று என்றும் என் நினைவுகளில் பதிந்துள்ளது. மறைந்த விசுவானந்ததேவன் ஒரு நண்பன், ஒரு தோழன் மட்டுமல்ல ஓர் உண்மையான போராளியும் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.பாலசூரியன்

## விசுவாசம்

தோழர் விசுவானந்ததேவனை முதன்முதலில் சந்தித்து 36 வருடங்களின் பின்னர், அவர் காணாமற்போய் 30 வருடங்களின் பின்னர், அவரை நினைவுகூர்ந்து எழுதும் பாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளது. இதனை எனது வாழ்நாளில் நான் மிகவும் பெருமையாக நினைக்கிறேன். முதன்முதலாக அவரை காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் அலுவலகம் ஒன்றில் சந்திக்கும் போது, இவருடனான சந்திப்பு தொடர் கதையாகுமென நான் நினைக்கவில்லை. அப்போது நான் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியில் ஓர் உயர்தர வகுப்பு மாணவன். அந்த நாளையும், அதன்பிறகு அவருடன் சீமெந்து தொழிற்சாலையில் சிறிது காலம் வேலை செய்து, பல்கலைக்கழக படிப்பை இடைநிறுத்தி, இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் நெருக்கமாக அவருடன் இணைந்து வேலை செய்த பசுமையான ஆறு வருடங்களையும் ஒருபோதுமே எனது மனத்திரையிலிருந்து அழிக்க முடியாது. நானும் எனது சக கலை, இலக்கிய நண்பர்களும் அவரை ஒரு கலை, இலக்கிய வாசகராக சந்தித்த போதிலும், அவருக்கு எங்களுடன் அறிமுகம் ஏற்படுத்துவதில் பரந்த அரசியல் நோக்கமிருந்தது. ஆனால் எனக்கும் தோழர் விஸ்வாவிற்குமான உறவு ஒருபோதும் அரசியல் உறவு என்பதோடு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது கிடையாது. நான் சந்தித்த நாளிலிருந்து அவர் காணாமற் போகும் வரை, நான் சந்தித்த பல இன்னல்களின் போது அவர் எனக்கு பக்கபலமான, உறுதுணையான நண்பராகவும் இருந்திருக்கிறார்.

எமது நாட்டின் நாளாந்த நிலைமைகள் பற்றி தனிமையில் சிந்திக்கையிலோ அல்லது, மற்றவர்களுடன் உரையாடுகையிலோ எப்போதுமே எனக்கு விரக்திதான் மேலிடும். கடந்த 30 வருடங்களாக எங்களைப்போல ஒத்த கருத்துள்ள பலருடன் மணிக்கணக்காக நேரிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசியிலும் கதைத்து வருகிறோம். ஆனால் எல்லோருமே தனி மனிதர்களாகவே இருக்கின்றோம். தோழர் விஸ்வா இன்று நம்முடன் இருந்திருந்தால், நிட்சயமாக எம்மையெல்லாம் ஒரு கொடியில் இணைத்திருப்பார், கொஞ்சப்பேர்களாவது நாங்கள் அமைப்பு சார்ந்து இயங்கிய வண்ணம் இருந்திருப்போம். இப்படித்தான் எப்போதுமே நினைக்கத் தோன்றும். தோழர் விஸ்வா ஒருபோதுமே தனிமனிதனாக இயங்கியவரல்ல. எப்போதுமே அவர் ஓர் அமைப்பு சார்ந்து இயங்குபவர். அவரிடமிருந்து மார்க்சிய – லெனினிச அரசியல் தத்துவங்கள் கற்றுக்கொண்டது ஒருபுறமிருக்க, ஸ்தாபனமாக வேலைசெய்வது பற்றியும் அவரிடமிருந்து மாத்திரமே கற்றிருக்கிறேன். மூன்று தசாப்தங்களாக என்னைப் போன்றவர்களது ஆதரவினை தெரிவிக்கக் கூடிய ஸ்தாபனமேதுமில்லாத பெருங்குறைபாட்டினை உணரும் ஒவ்வொரு வேளையிலும், என்முன்னே அவர் மாத்திரமே தெரிவார்.

பொதுவாகவே எதைப்பற்றியாவது அசைபோட்டு புரட்டிப் பார்க்கும் போது நாங்கள் ஒவ்வொருவருமே ஏதோ ஓர் இனம்புரியாத உலகில் சஞ்சரிக்கிறோம். அசைபோடுதல் என்பது எப்போது, எந்தச் சந்தர்ப்பத்தில் வரும், பின்னர் எவ்வளவு நேரம் நீடித்தது என்பது யாருக்குமே தெரியாது. இவ்வளவு காலமும் அவரை மீளநினைந்து அசைபோட்டுப் பார்த்த மணி நேரங்கள் எவ்வளவாயிருக்கும் என்பது எனக்கே தெரியாது. அவ்வாறு தோழர் விஸ்வாவைப்பற்றி அசைபோடும் போதெல்லாம், நினைவுகளையெல்லாம் எழுத வேண்டுமென எப்போதுமே நினைப்பேன். அது இப்போதுதான் கைகூடியுள்ளது.

ஆனால் வருடங்கள் பல கடந்துவிட்டன. வரலாற்றில் பல அனுபவங்களை கடந்து வந்திருக்கிறோம். இந்த அனுபவங்கள் எங்களுக்கு பலவற்றைக் கற்றுத் தந்திருக்கிறது. எனவே கடந்தகாலத்தைப் பற்றி இப்போது எழுதும்போது, நாங்கள் வரலாற்றில் பல காலகட்டங்களைக் கடந்து வந்து, இப்போது வந்தடைந்திருக்கும் புள்ளியிலிருந்தே அதனைப் பார்க்கப்போகிறோம். எங்களிடம் ஏற்பட்டிருக்கும் முதிர்ச்சி மற்றும் கருத்து மாற்றங்கள் எங்களையறியாமல் எங்கள் மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமையைச் செலுத்தும். அந்தக் காலத்தைய நிகழ்வுகளை உடனுக்குடன் நாட்குறிப்பாக எழுதியிருந்தால், அந்த சூழலுக்கு ஏற்ப யதார்த்தம் சார்ந்த பதிவாக இருந்திருக்கும். அதனை படிப்பவர்களுக்கும் அது வேறொரு வகையான அனுபவத்தினைக் கொடுத்திருக்கும். ஆனால் அதனை இப்போது பதிவிடும் போது கலங்கலாக எமது ஞாபகத்திலிருக்கும் வெறும் சம்பவங்களின் தொகுப்பாகவே அமையும். அத்துடன் அந்தக் காலத்தில் நாங்கள் எப்படிப்பட்ட மனநிலைகளைக் கொண்டிருந்தோம் என்பதையும் முழுமையாக கொண்டுவர முடியாது. எனவே இதனை வாசிப்பவர்கள், இந்த எனது கட்டுரை விஸ்வாவின் அரசியல் பாதையில் நானும் மற்றவர்களும் இணைந்து பயணம் செய்த காலத்தினை முழுமையாக வெளிப்படுத்த முடியாத பலவீனமான அம்சங்களைக் கொண்டிருக்கின்றது என்பதைக் கருத்திற்கொண்டு வாசிக்கவும்.

ஒருவர் தனது நினைவுகளை பதிவிடும் போது 'தற்புகழ்ச்சி' மற்றும் 'தன்சார்ந்தவர்களை புகழ்தல்' என்பது எழுதுபவரிடம் முதன்மைப்பட்டு, அவரும் அவர் சார்ந்தவர்களும் எல்லோருக்கும் மேலானவர்களாக, பரிசுத்தவான்களாக காட்டப்படும் வழக்கம் இப்போது சாதாரணமாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அவ்வாறு விஸ்வாவின் நினைவு நூலில் என்னையோ அல்லது நான் சார்ந்திருக்கும் அரசியல் கருத்தையோ அதியுன்னதமாகக் காண்பிப்பது எனது நோக்கமல்ல என்பதை முதலில் தெட்டத் தெளிவாக சொல்லிவிட விரும்புகிறேன். ஆனால் அவருடன் நான் பயணிக்கையில், 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி'யிலிருந்து அவர் ஸ்தாபித்த அமைப்புகளின் கருத்துக்களை உறுதியாக ஆதரித்தவன் என்ற வகையில், அமைப்பினுள்ளும் அமைப்பிற்கு வெளியில் இனப்பிரச்சனை உச்சம் பெற்ற காலகட்டத்தில் நான் சந்தித்தவற்றை இந்தப் பதிவில் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்று நான் நினைக்கிறேன். எனினும் விஸ்வாவின் மொத்த வாழ்க்கையில் எனக்கு தெரிந்தது, மிகச் சொற்பமே என்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை முதன்முதலில் நான் தனித்துச் சந்திக்கவில்லை. அப்போது வேறு சிலரும் என்னோடு இருந்தனர். அதன் பின்னர் எங்களுடன் தொடர்பிலிருந்த மேலும் பலருடன், பல தடவைகள் அவருடனான எமது சந்திப்பு தொடர்ந்தது. அவர் எங்கள் கிராமமான அளவெட்டிக்கு தொடர்ச்சியாக வந்தார். சைக்கிளில் பல இடங்களுக்கு எங்களை அழைத்துச் சென்றார். அவருடனான எங்களது சைக்கிள் பயணமே பெரும்பாலான உரையாடலுக்கான களமாக இருந்தது. அவருக்கு எங்கள் மீது உயர்ந்த அபிமானம் இருந்தது என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். அவர் எங்களைக் கிரகித்தார். அவருடன் பரிமாறிக்கொள்ள எங்களிடம் இலக்கியப் புத்தக வாசிப்பால் பெற்றுக்கொண்ட கொஞ்ச அறிவு மாத்திரமே இருந்தது. அதைவிட அளவெட்டி, மகாஜனாக்கல்லூரி என்ற பின்புலமும் எங்களுக்கு இருந்தது. இவைகள் 'எங்களுக்கு எல்லாம் தெரியும்' என்ற தலைக்கனத்தை மாணவப்பருவத்தில் எங்களுக்கு ஏற்படுத்தியிருந்தது. எப்படியோ மாணவப்பருவத்து தீவிரத்தால், ஒடுக்கப்படும் மக்கள் பற்றியும் விடுதலை பற்றியும் கொஞ்சம் ஆழமாக சிந்தித்தும் இருந்தோம். அதனால் அவருடன் உரையாடவும் விவாதிக்கவும் முடிந்தது. விஸ்வாவின் இடதுசாரிக் கருத்துக்கள் ஆரம்பத்திலிருந்தே எங்களுக்கு ஏற்புடையனவாக இருந்தது. அல்லது எங்களிடம் ஒட்டுமொத்த மக்களின் விடுதலை தொடர்பாக முளைவிட்டிருந்த கருத்துக்களை அவர் அபிவிருத்தி செய்தார். நாங்கள் அமைப்பில் உள்வாங்கப்படக்கூடிய நம்பிக்கையானவர்களாக அவருக்கு தெரிந்தது.

அவரின் தனித்துவமான ஆளுமை வேறும் பல புதிய சக்திகளை உருவாக்கியது. அந்த சக்திகளையும் அவர் எங்களுக்கு அறிமுகப்படுத்தினார். அவர்கள் ஒவ்வொருவரது ஆரம்பப்புள்ளியும் எங்களோடு ஒத்ததல்ல. அவர்களுடனும் கதைத்தோம், விவாதித்தோம். அவர் தனியொருவனாக எல்லோருடனும் இடைவிடாத தொடர்பைப் பேணினார். எங்களை முதலில் சந்திக்கும் போது அவர் முதலில் 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற அமைப்பு சார்ந்தே பேசினார். பின்னர் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' என்ற அமைப்பை உருவாக்கினார். அந்த அமைப்பு சில நூறு பேர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட அமைப்பாக உருவெடுக்க அவர் கடுமையாக உழைத்திருந்தார். இறுதியாக 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி' என்ற அமைப்பை ஸ்தாபித்து இயங்குகையில் அவர், குருநகரிற்கும் நெடுந்தீவிற்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் காணாமற் போனார். நடைமுறையில் தலைமைத்துவ பண்புகள் கொண்ட செயற்பாட்டாளானாக இருந்த போதும், உட்கட்சி ஜனநாயகத்தை மதித்தே அவர் இந்த மூன்று அமைப்புகளிலும் செயற்பட்டார். அவர் 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி'யிலிருந்து 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யை உருவாக்கும் போதும், பின்னர் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யிலிருந்து 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி'யை உருவாக்கும் போதும், அவர் எல்லோருடனும் கைகுலுக்கியே விடை பெற்றார். அதனால் இந்த மூன்று அமைப்புகளை சேர்ந்தவர்களும் இன்றும் தங்களை, விசுவானந்ததேவன் தலைமையின் கீழ் இயங்கியவர்களாகவே அடையாளப்படுத்துகின்றனர். அவரது மறைவின் பிற்பாடு இந்த மூன்று அமைப்புகளுமே இனந்தெரியாத அமைப்புகளாக அழிந்தும் போயின. ஒவ்வொரு அமைப்பும் உருவாக்கப்பட்டதின் பின்னணியிலும், தாய் அமைப்புடனான அடிப்படை அரசியல் கருத்து முரண்பாடுகள் இருந்தன.

எங்களில் பலர் ஒருசேரவே 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி'யிலும், பின்னர் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யிலும், அதன்பின்னர் 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி'யிலும் இணைந்து பல நிலைகளில் வேலை செய்தார்கள். அப்படியெல்லாம் இளவயதில் எங்களோடு வேலை செய்த பலர், பல புலம்பெயர் நாடுகளிலும் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் சிதறிக் கிடக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் விஸ்வாவின் மறைவின் பின்னர் இன்னோரன்ன காரணங்களால் அரசியலிருந்து முற்றாக ஒதுங்கிவிட்டார்கள். கடந்த முப்பதாண்டுகால இலங்கைசார் நிகழ்வுகளை பார்க்கும்போது, அவ்வாறு அவர்கள் அரசியலில் தொடர்ந்தும் செயற்படாமலிருப்பதற்கான நியாயப்பாடுகளை எல்லோராலும் விளங்கிக்கொள்ளக் கூடியதாக உள்ளன. எனினும் இளம்பிராயத்து அரசியல் ஈடுபாட்டினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இளம்பிள்ளைக் கோளாறு' என்று கூறுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்போது மூன்று அமைப்புகளிலும் இருந்த நாங்கள் வெவ்வேறு திசைகளில் பயணிக்கின்றோம். விஸ்வாவின் முகாமில் வளர்ந்த எங்களில் பலர் பிற்போக்கு தமிழ் தேசியவாதத்திற்குள் முற்று முழுதாகக் கரைந்துவிட்டார்கள். தற்போதைய இலங்கை நிலவரங்களை எந்தக் கண்ணோட்டத்தோடு அணுகுவதென்பதிலும், எங்களிடையே இன்று கருத்தொற்றுமையும் கிடையாது. இந்த நிலைமைக்கு காரணமும் தோழர் விஸ்வா இன்று எம்மிடையே இல்லாததே.

தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களாயிருந்த நானும் மற்றும் மூவருமாகச் (நா.சபேசன், இளவாலை விஜயேந்திரன், அ.இரவி) சேர்ந்து 1980 ஆண்டு முற்பகுதியிலிருந்து *புதுசு* என்றொரு கலை, இலக்கிய சஞ்சிகையை வெளிக்கொணர ஆரம்பித்தோம். இந்த சஞ்சிகையை வெளியிடாவிட்டால் தோழர் விஸ்வாவை நாங்கள் நால்வரும் சந்தித்திருப்போமோ தெரியாது. உயர்தர வகுப்பு மாணவர்கள் ஒரு சஞ்சிகையை வெளியிடுவதென்பது ஒரு சாதாரண விடயமல்ல என்பது எனக்கு அப்போது தெரியாது. ஆனால் தோழர் விஸ்வாவிற்கு அது நன்கு தெரிந்திருந்தது. அந்த சஞ்சிகையின் காத்திரம் அவரை ஆட்கொண்டிருந்தது. தமிழில் எழுதத் தெரிந்ததைத் தவிர, ஒரு சஞ்சிகையை நடாத்துவதற்கு எனக்கு வேறு என்ன தகுதியிருந்தது என்றும் எனக்குத் தெரியாது. சஞ்சிகையை வடிவமைப்பது மற்றும் ஒப்புநோக்குவது தொடர்பாகவும் எனக்கோ மற்றவர்களுக்கோ முன் அனுபவம் எதுவும் கிடையாது. ஆனால் மாணவர்களை நம்பி 46 பக்கத்தில் சஞ்சிகை ஒன்றினை அச்சிட்டுத்தர உடன்பட்ட, எனது கிராமத்திலிருந்த *ஜெயா அச்சகத்துடன்* கொஞ்சம் அறிமுகமிருந்தது. அந்த அறிமுகம் நாங்கள் வெளியிட்ட துண்டுப்பிரசுரமொன்றால் ஏற்பட்டது. 1979 ஆண்டு கைதடியில் நிகழ்ந்த சாதிக்கலவரத்தினைக் கண்டித்து, நானும் எனது கிராமத்து மாணவர்கள் சிலருமாகச் சேர்ந்து ஒரு பக்க துண்டுப்பிரசுரம் ஒன்றினை வெளியிட்டோம். *சூத்தாடிகள்* என்ற அநாமதேயப் பெயரில் வெளியிடப்பட்ட அப்பிரசுரத்தினை அச்சிட்டுத் தருவதற்கு மாணவர்களாகிய எங்களுக்கு அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சகத்தினர் ஒப்புக் கொண்டனர். இந்த அறிமுகமே அந்த அச்சகத்தில் *புதுசுவை* மாத்திரமல்ல, பிற்பாடு வேறு பல அரசியற் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிடவும் எங்களுக்கு உதவியது.

படைப்பிலக்கியம் மற்றும் அச்சகப்பதிப்புத் துறையில் எனக்கிருந்த அனுபவத்தினால், தோழர் விஸ்வா முதலில் பதிப்பக வேலைகளிலேயே என்னை ஈடுபடுத்தினார். மாணவப் பருவத்திலிருந்தே பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் புத்தகங்களிலும் ஏதோ ஓரளவு கவிதைகள், சிறுகதைகள், நாவல்களென வாசித்திருந்ததினால் படைக்க வேண்டுமென்ற ஆர்வமிருந்தது. அப்படி என்னை வாசிக்கத் தூண்டியதற்கு எனது தந்தையாரே முக்கிய காரணமாக இருந்தார். எனது கிராமத்திலிருந்த சிறிய வாசிகசாலை ஒன்றினை நிர்வகிப்பதில் எனது தந்தையார் முக்கியமானவராக இருந்தார். அதனால் எனக்கு சிறுவயதிலிருந்தே அவருடன் அந்த வாசிகசாலைக்கு செல்லும் வழக்கம் இருந்தது. அந்த வாசிகசாலையில் தமிழ் பத்திரிகைகளையும் (*வீரகேசரி, தினகரன், ஈழநாடு, மித்திரன், தினபதி, சுதந்திரன்*) ஆங்கிலப் பத்திரிகைகளையும் (*டெயிலி நியூஸ், மெயிலி மிரர், சண், த ஐலண்ட்*) வாசிக்கலாம். மாலை வேளைகளில் அவற்றின் பக்கங்களை நடுவிலிருந்து பிரித்தெடுத்து துண்டுதுண்டாக ஆர்வத்தோடு படிப்பதற்கு இளைஞர்களிலிருந்து வயதானவர்கள் வரை எப்போதுமே பத்துக்கு மேற்பட்டவர்கள் கூடியிருப்பார்கள். (அந்த வாசிகசாலையில்தான் மஹாகவி உருத்திரமூர்த்தி, அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி, ஆதவன், சேரன் போன்றவர்களும் காலங்காலமாக பத்திரிகைகள் படித்தவர்கள்) அவர்களுக்கிடையில் எனது தந்தையார் புரட்டும் துண்டுப் பக்கங்களில் எனது கண்களை மேயவிட்ட வண்ணம் நானும் இருப்பேன். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக வாசிகசாலையில் அவர் முன்னேயிருந்தே தமிழ் தினசரிப் பத்திரிகைகளில் நகைச்சுவைத் துணுக்குகள் மற்றும் செய்திகள் மாத்திரமன்றி, வாரமலரில் கவிதைகள், சிறுகதைககள், தொடர் கதைகள் வாசிக்கும் பழக்கம் ஏற்பட்டது. இதுவே தீவிரமான இலக்கிய வாசிப்பிற்கு என்னை இட்டுச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது *அலை* கலை, இலக்கிய ஏட்டின் ஆசிரியர்களில் ஒருவராக இருந்த யேசுராசாவிற்கும் தோழர் விசுவானந்ததேவனிற்கும் நீண்டகால நட்பு இருந்தது. அவர்கள் தாங்கள் சந்திக்கும் போது, 'இதை வாசித்தீர்களா?' அல்லது 'இதை வாசித்துப் பாருங்கோ' என்று அண்மைக்காலத்து பதிப்புகளை ஒருவருக்கொருவர் நீட்டும் வழக்கம் இருந்தது. அதாவது தங்களுக்கிடையில் கலை, இலக்கியம், சமூக, அரசியல் சார்ந்த புதிய தமிழ் வெளியீடுகளை அறிமுகப்படுத்தும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். அவ்வகையில் முதலாவது *புதுசு* இதழினை யேசுராசாவிடமிருந்து பெற்றுக்கொண்ட தோழர் விஸ்வா, எம்மைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவலை, பிறிதொரு சந்திப்பின் போது அவரிடம் வெளிப்படுத்தியிருக்கிறார். 1980 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் (ஒக்ரோபர் மாதமாக இருக்கலாம்) எமது கிராமத்திற்கு வந்த யேசுராசா, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் எந்திரவியல் பொறியிலாளராக இருக்கும் ஒருவருக்கு *புதுசு* சஞ்சிகையைத் தான் அறிமுகப்படுத்தியதாகவும், அவர் எம்மைச் சந்திக்க ஆர்வமாக இருப்பதாகக் கூறினார். எமக்கு அந்தச் செய்தி மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. பின்னர் அவரே, தோழர் விஸ்வா வேலை புரியும் சீமெந்துத் தொழிற்சாலையின் எந்திரவியல் பிரிவு அலுவலகத்திற்கு உடனடியாக எங்களை அழைத்துச் சென்று, விஸ்வாவிடம் எங்களை அறிமுகப்படுத்தினார். இருகன்னங்களிலிருந்து நாடிவரை அடர்ந்து வளர்ந்திருந்த தாடியுடன், மெலிந்து, உருவத்தில் மிகச்சிறியவராக காட்சியளித்த அவர், எங்களை கௌவரமாக தனது அலுவலகத்தின் நாற்காலிகளில் உட்கார வைத்து பேசினார். முதற்சந்திப்பில் குறிப்பாக என்ன கதைத்தோம் என்று எனக்கு ஞாபகமில்லை. ஆனால் எங்களுடனான அடுத்த சந்திப்புக்கான நேரம், திகதியினைக் குறிக்க விஸ்வா தவறவில்லை.

முதல் சந்திப்பிலேயே எங்களது சமூகம் சார்ந்த அக்கறையினையும் விழிப்புணர்வினையும் அறிந்து கொண்ட தோழர் விஸ்வா, பின்னர் எங்களை அடிக்கடி சந்திக்கத் தொடங்கினார். அப்படிச் சந்தித்த போதும் எங்களை உடனடியாக தான் சார்ந்திருந்த அமைப்பில் உள்வாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்ற அவசரத்தை அவர் ஒருபோதும் காட்டவில்லை. தமிழில் ஆழ்ந்த வாசிப்பிலும் படைப்பிலக்கியத்திலும் ஈடுபட்டிருந்த எங்களுக்கு மிதவாதத் தமிழ் பாராளுமன்ற தலைமைகள் மீதிருந்த விமர்சனம் அவரை ஒன்றும் ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியிருக்கவில்லை. ஆனால் இளைஞர்களாயிருந்த எங்களுக்கு, அப்போதிருந்த ஆயுதப்போராட்ட தமிழ் குறுந்தேசியவாத விடுதலை இயக்கங்களின் பாலும் தீவிர மோகம் எதுவுமில்லாதிருந்தது அவருக்கு எங்களை வித்தியாசமாக பார்க்கத் தூண்டியது.

1977 ஆண்டு பதவிக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் கொடுங்கோல் ஆட்சிக்கு அப்போது தமிழ் பேசும் மக்கள் முகங்கொடுத்திருந்தனர். 1979 ஆண்டில் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது அதிகாரத்தைப் பிரயோகித்து கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத்தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் இளைஞர்கள் வேட்டையாடப்பட்ட வண்ணமிருந்தனர். அதனால் தமிழ் ஆயுதப்போராட்டக் குழுக்களின் நடவடிக்கைகள் தலைமறைவாகவும், மிகவும் நம்பிக்கையானவர்களோடும் மாத்திரமே இருந்தது. அப்போது தோழர் விஸ்வாவிற்கும் தமிழ் குறுந்தேசியவாதிகளின் கைகளில் சிக்குண்டிருக்கும் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை மீட்டெடுத்து, முற்போக்கு தேசிய விடுதலை இயக்கமொன்றினை கட்டியெழுப்ப வேண்டுமென்ற எண்ணம் துளிர் விட்டிருந்தது. அதனால் யேசுராசாவின் ஊடாக எங்களைச் சந்தித்தார். அதேநேரத்தில் எங்களைப்போல வேறு பலரையும் சந்தித்து தொடர்புகளை பேணினார். ஆனால் ஒவ்வொருவருடனான தொடர்புகளையும் சந்திப்புக்களையும் அப்போதிலிருந்தே மிகவும் இரகசியமாகப் பேணினார்.

*புதுசு* சஞ்சிகையில் வெளியிடப்பட்ட படைப்புகளில் தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலை விடுதலை உணர்வுகள் பிரதிபலித்ததால், எங்கள் மீதும் உள்ளூரிலிருந்த தமிழ் ஆயுதப்போராட்டக் குழுக்கள் சார்ந்தவர்கள் கவனத்தை செலுத்தினர். அவ்வாறு 'ஈழமாணவர் பொதுமன்றம்', 'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்' மற்றும் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' இயக்கத்தினர் சார்பில் பலர் எங்களைச் சந்தித்து தர்க்கங்கள் புரிந்து சென்றனர். இவற்றையும் நாங்கள் தோழர் விஸ்வாவிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியிருந்தோம். 'தமிழீழ விடுதலைப்புலிகள்' முற்றுமுழுதான சுத்த இராணுவாதக் கண்ணோட்டத்தை கொண்டவர்கள் என்பதில் அவருக்கும் எங்களுக்கும் ஒத்த கருத்து இருந்தது. அப்போது 'தமிழீழ விடுதலைப்புலிகளி'லிருந்து பிரிந்து 'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்' உருவாகி ஓரிரு வருடங்களே ஆகியிருந்தது. அரசியல் காரணங்களைவிட, பிரபாகரன் - உமாமகேஸ்வரன் சச்சரவே பிரிவிற்கு காரணம் என்று அப்போது வெளியில் கூறப்பட்டாலும், அவ்விரு இயக்கங்களிடையே கொள்கை வேறுபாடுகளும் இருந்தன. குறிப்பாக, 'தமிழீழ மக்கள் விடுதலைக் கழக'த்தினரிடம் குறுந்தேசியவாதம் அதிகம் மேலோங்கி நிற்காது, தென்னிலங்கை முற்போக்கு சக்திகளையும் இணைத்து தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென்ற கருத்து இருந்தது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் சார்பில் எங்களுடன் தொடர்பிலிருந்த தேவதாஸ் (மாறன்) என்பவர் மகாஜனாக்கல்லூரி மாணவராக இருந்ததினால் எங்களுடன் நல்ல நட்பாகவும் இருந்தார். அந்த நட்பின் காரணமாக அந்த அமைப்பு தொடர்பாக எங்கள் சிந்தனையிலிருந்த தளம்பல் நிலையை போக்க தோழர் விஸ்வா பெரிதும் உதவினார்.

எடுத்த எடுப்பிலேயே மார்க்சியக் கோட்பாட்டுத் தத்துவங்களின் சொற்பதங்களை வரிக்குவரி வரட்டுத்தனமாக பிரயோகித்து தீவிரமான இடதுசாரியாக காட்டிக்கொள்பவராக விஸ்வா எங்களுக்கு தெரியவில்லை. ஆனால் கலை, இலக்கியப் படைப்புகளின் நோக்கங்கள் சம்பந்தமாக மயிர் பிளக்கும் விவாதங்களை நாங்கள் அவருடன் நடாத்தியிருக்கின்றோம். 'குறிப்பிட்ட சில படைப்புகள் எல்லோருக்கும் விளங்குவதில்லை, அதனால் எல்லா மக்களிடமும் போய்ச் சேருவதில்லை. ஆனால் அவ்வாறான படைப்புகள் உயர்ந்த இலக்கியத்தரம் வாய்ந்தவையாக கருதப்படுகின்றன. எல்லா மக்களுக்கும் விளங்காத கலை, இலக்கியத்தை படைத்து என்ன பிரயோசனம்?' போன்ற கருத்துக்களை அவர் விவாதத்திற்காகவோ என்னவோ எங்களிடம் முன்வைப்பார். நாங்கள் 'தனது படைப்புகள் எல்லா மக்களிடமும் போய்ச்சேர வேண்டுமென்பதுதான் ஒவ்வொரு எழுத்தாளனின் நோக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் என்றும் மக்களின் கலை, இலக்கியத்தரம் உயர்ந்தால், எல்லாப் படைப்புகளையும் அவர்களால் விளங்கிக்கொள்ள முடியும்' என்று பதிலளிப்போம். 'எல்லா மக்களின் கலை, இலக்கியத்தரமும் ஒரேயளவினதாக இல்லை. எனவே அடித்தட்டு மக்களுக்கும் விளங்கக் கூடியதாக படைக்கப்பட்டால் தான், மக்களின் கலை, இலக்கியத்தரம் உயரும்' என்ற கருத்தினை எங்களிடம் எப்போதும் வலியுறுத்துபவராகவே அவர் இருந்தார். 'அப்படியென்றால் பத்திரிகைச் செய்திக்கும் படைப்பிலக்கியத்திற்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்' என நாங்கள் அதற்கும் எதிர்வாதம் புரிந்திருக்கிறோம்.

சந்திப்புகளோடு நிறுத்தி விடாமல், எங்களோடு தொடர்புள்ள எமது கிராமத்து இளைஞர்களையும் கூட்டி அரசியல் கருத்துக்களையும் வழங்கினார். மார்க்சிய – லெனினிச வெளியீடுகள், புத்தகங்கள், பிரசுரங்கள் என பலவற்றை படிப்பதற்கு தந்தார். அது வரைக்கும் இலக்கிய வாசிப்பில் மாத்திரம் திளைத்துப் போயிருந்த எங்களுக்கு, மார்க்சிய – லெனினிச தத்துவங்களை தோழர் விஸ்வா தான் பெருமளவில் அறிமுகப்படுத்தினார் என்று பெருமையோடு கூறவேண்டும். இடதுசாரிக் கருத்துக்களை எங்களுக்குள் புகுத்துவதோடு நின்றுவிடாது, அவர் கொஞ்சம் கொஞ்சமாக எங்களை அரசியல் வேலைகளிலும் கச்சிதமாக ஈடுபடுத்தினார். எமக்கு பதிப்பகத்துறையிலிருந்த அனுபவத்தை பயன்படுத்தி, நாங்கள் 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி'யின் முதலாவது தேசிய மகாநாட்டின் அரசியல் அறிக்கையை 1981 ஆண்டில் வடிமைத்து அச்சிட்டு வழங்கினோம். அதே ஆண்டில் 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி'யின் நிதித்தேவைக்காக துண்டுப் பிரசுரமொன்றினையும் வெளியிட்டோம். பின்னர் தெல்லிப்பழையை மையப்படுத்தி ஏனைய தோழர்களோடு சேர்ந்து சில தடவைகள் சுவரொட்டிகளை ஒட்டினோம்.

தோழர் விஸ்வாவின் குழந்தையுள்ளம் மற்றும் அகமொன்று வைத்து புறமொன்று பேசாத தன்மை, வயதில் சிறியவர்களான எங்களுக்கு அவருடனான நெருக்கத்தை மென்மேலும் அதிகரித்தது. எங்களது அப்போதைய வயதுக்கேற்ப நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தும் எங்கள் மனக்கிடக்கைகளையும் செவிமடுப்பார். கலை, இலக்கியம், சமூகம், அரசியல் சார்ந்து மாத்திரம் தோழர் விஸ்வாவுடனான உரையாடல் நின்று விடவில்லை. இறந்தகால, நிகழ்கால தனிப்பட்ட விவகாரங்களையும் பரிமாறிக் கொண்டோம். எங்களுடனான அறிமுகம் ஏற்பட்டு சில மாதங்களிலேயே அவரது அலுவலகத்தில் பணிபுரியும் ஜெயலக்ஷ்மி என்பவரை காதலித்து வருவதாக அவர் சிரிப்போடு கூடிய வெட்கத்துடன் கூறினார். அப்போது நானும் பதிலுக்கு, மகாஜனாக்கல்லூரியில் படிக்கும் ஆனந்தியைக் காதலிக்கும் தகவலைக் கூறினேன். பின்னர் எனது வீட்டிற்கும் அவர் பல தடவைகள் வந்தார். நானும் அவரது கல்லுவம் வீட்டிற்கு சென்றேன். அவர் முதல் தரம் எனது வீட்டிற்கு வந்து சென்ற பின்னர் எனது தந்தையார் பிரத்தியேகமாக 'யார் இந்த புது நண்பர்?' என்பதை விசாரிக்கத் தவறவில்லை. நான் 'அவர் கரவெட்டியைச் சேர்ந்தவர், சீமெந்து தொழிற்சாலையில் எந்திரவியலாளராக பணி புரிகிறார்' என்று சொல்லவும், அவர் அதற்கு மேலும் எதுவும் கேட்காமல் அமைதியடைந்து விட்டார்.

எம்மிடையே இருந்தவர்களின் படைப்புத்திறனை மாத்திரமல்ல, நடிப்புத்துறை ஆற்றலையும் உணர்ந்த தோழர் விஸ்வா, நாடகப்பிரதி ஒன்றிற்காக, அவரது நண்பர் மாவை நித்தியானந்தனை அணுகினார். அப்போதிருந்த தமிழ் பாராளுமன்ற அரசியல்வாதிகளை மையப்படுத்தி மாவை நித்தியால் எழுதப்பட்டிருந்த 'திருவிழா' என்ற நாடகத்தை ஆதவன் நெறிப்படுத்தியிருந்தார். இந்த நாடகம் மேடை நாடகமாக மாத்திரமின்றி, வீதி நாடகமாகவும் பல இடங்களில் நிகழ்த்தப்பட்டது. இலங்கையில் முதலாவது தமிழ் வீதி நாடகமென அப்போது கூறப்பட்டது. இந்த நாடகத்தின் உருவாக்கத்திற்கு முழுமுதல் காரணமாக இருந்த தோழர் விஸ்வா, எங்கள் கிராமத்து இளைஞர்களை ஒன்று சேர்த்து, எங்களை ஒரு சமூக, அரசியல் சார்ந்த கலாச்சாரக்குழுவாக மாற்றினார்.

நான் ஏறத்தாழ *10* மாதகாலம் *1981* இன் பிற்பகுதியிலிருந்து காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் மூன்றாம் நிலை கட்டடப்பகுதியில் அமைந்திருந்த அலுவலகமொன்றில் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தேன். தோழர் விஸ்வாவும் அங்கு எந்திரவியல் பொறியியலாளராக வேலை செய்தபடியால் நாங்கள் தொடர்ச்சியாக சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதனால் இளவயதிலேயே எனக்கு அவரிடமிருந்து பல விடயங்களை கற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. காங்கேசன்துறை சந்திக்கு மிக அண்மையாக அவர் தங்கியிருந்த பொறியிலாளர் விடுதிக்கும் என்னைக் கூட்டிச்சென்று கலந்துரையாடுவார். அவ்வாறு ஒருநாள் கலந்துரையாடுகையில், அங்கு தங்கியிருந்த எனது உறவினர் ஒருவர், தற்செயலாக அந்த விடுதியில் தோழர் விஸ்வாவுடன் என்னைக் கண்டுவிட்டார். பின்னர் அந்த உறவினர், அந்த விடுதியில் தங்கியிருந்த அனைவரும் கூடியிருக்கும் சந்தர்ப்பத்தில், விஸ்வா 'அட்வான்ஸ் லெவல்' படிக்கும் பெடியங்களை பொறியிலாளர் விடுதிக்கு அழைத்து வருவதாகக் கூறி, தோழர் விஸ்வாவிற்கு எதிராக பெரிய சச்சரவைக் கிளப்பிவிட்டார். அவர் இந்த மாதிரியான யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்தின் பொறியிலாளர் என்ற பொற்கிரீடத்தை எப்போதோ உதறித் தள்ளியவர். எனது உறவினர் அவருக்கெதிராக புரளி கிளப்பிய பின்னரும், அவர் மீண்டும், மீண்டும் என்னை அங்கு அழைத்துச் சென்றார்.

1982 ஆண்டு ஜனவரி மாதம் 2ம் திகதி 'தமிழீழ மக்கள் விடுதலைக்கழக'த்தின் தலைமைத்துவத்திலிருந்த *புதிய பாதை* ஆசிரியர் சுந்தரம் என்கின்ற சிவசண்முகமூர்த்தி யாழ்ப்பாணம் சித்திரா அச்சகத்தில் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' இயக்கத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முனைப்பாக ஈடுபட்டிருந்த எல்லா சக்திகளையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருந்தது. 'தமிழீழ மக்கள் விடுதலைக்கழக'த்தினர் சுந்தரத்தின் கொலையினை கண்டித்தும், சுந்தரத்திற்கு அஞ்சலி செலுத்தியும் ஒரு துண்டுப்பிரசுரத்தினை வெளியிட்டனர். அப்போது அக்கொலையினை நியாயப்படுத்தி தமிழீழ விடுதலைப்புலிகள் 'துரோகத்தின் பரிசு' என்று அதற்கு பதில் துண்டுப்பிரசுரமொன்று வெளியிட்டனர். இந்த இரு துண்டுப்பிரசுரங்களையும் தவிர, அக்காலகட்டத்தில் இவ்வாறான மாற்றுக் கருத்துக்கொண்ட ஒருவரின் கொலையின் பின் நிகழவிருக்கும் விபரீதத்தினை உணர்ந்து, அக்கொலையினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்மையாகக் கண்டித்து அநாமதேயமாக துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டவர்கள், இருவர். ஒருவர், நாகராஜா. இவர் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' இயக்கத்தின் ஆரம்பகாலத்தவர். அப்போது தமிழ் தேசியவாத இயக்க அரசியலிலிருந்து முற்றுமுழுதாக ஒதுங்கி சென்னையில் தலைமறைவாக வாழ்ந்து வந்தார். சுந்தரத்தின் கொலையைக் கண்டித்து துண்டுப்பிரசுரம் வெளியிட்டதற்காக 'தமிழீழ விடுதலைப்புலிகளா'ல் சென்னையில் வைத்து அவர் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். மற்றவர், தோழர் விஸ்வானந்ததேவன். அவர் தான் சார்ந்திருந்த 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' அமைப்பின் சார்பிலன்றி வெளியிட்ட அந்த பிரசுரத்தை அச்சிடுவதிலும் விநியோகிப்பதில் நாமும் அப்போது தீவிர பங்கெடுத்திருந்தோம். அதன்பின்னர் அதே ஆண்டில் அளவெட்டியில் உமைகுமாரன், இறைகுமாரன் 'தமிழீழ மக்கள் விடுதலைக்கழக'த்தால் சுட்டுக் கொல்லப்பட்ட போது தோழர் விஸ்வாவின் கணிப்பு சரிதான் என நிரூபணமாகியது.

மேலும் 1982 ஆண்டில் தோழர் விஸ்வாவின் தனிப்பட்ட வாழ்க்கையில் இரண்டு முக்கிய விடயங்கள் நிகழ்ந்தன. அவர் காதலித்து வந்த ஜெயலக்ஷ்மி என்ற பெண்ணை பெப்ரவரி மாதத்தில் பதிவுத்திருமணம் செய்து கொண்டார். காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு அமைச்சர் சிறில் மத்தியூ விஜயம் செய்தவேளை, சீமெந்துத் தொழிற்சாலையின் ஊழல்களை கண்டித்து துண்டுப்பிரசுரம் வெளியிட்டார்கள் என்ற குற்றச்சாட்டில், பதிவுத்திருமணம் செய்து நான்கு மாதங்களின் பின்னர் அவர்கள் இருவரையும் வேலையிலிருந்து நீக்கினார்கள். சட்டரீதியான திருமணம் என்ற மகிழ்ச்சியான காரியம் நிகழ்ந்து இரு பகுதி குடும்பத்தவரும் களித்திருக்கையில், வேலையிலிருந்து நீக்கப்பட்டது என்ற செய்தி இரு பகுதி குடும்பத்தவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. குறிப்பாக தோழர் விஸ்வாவுடன் கரடு முரடான பாதையில் பயணிக்க வேண்டிவருமென்பதை அவரது மனைவி தொடக்கத்திலேயே உணர ஆரம்பித்திருந்தார். அதன் பின்னர் தோழர் விஸ்வாவோ அல்லது அவரது மனைவியோ இலங்கையில் வேறு எந்த வேலைக்கும் விண்ணப்பிக்கவில்லை. அன்றைய ஐக்கிய தேசியக்கட்சியின் இனவாதப் பேச்சாளன் சிறில் மத்தியூ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர் விஸ்வாவை உத்தியோகபூர்வமாக முழுநேர அரசியல் ஊழியனாக மாற்றினார்.

1982 ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் நான் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு சென்றுவிட்டேன். அப்போதும் தோழர் விஸ்வா எனக்கு ஓரிரு கடிதங்கள் எழுதினார் என்று நினைக்கிறேன். அத்துடன் பேராதனைக்கு என்னைத்தேடி வந்து சந்தித்து பல்கலைக்கழக மட்டத்தில் எவ்வாறான அரசியல் வேலைகளை முன்னெடுக்கலாம் என்பதை சொல்லிவிட்டும் சென்றார். நான் முதலாமாண்டு மாணவனாக இருக்கையில் பேராதனை பல்கலைக்கழக தமிழ் சங்கத்தின் ஆதரவுடன் 'திருவிழா' நாடகத்தினை யாழ்ப்பாணத்திலிருந்து வரவழைத்து, ஈ.ஓ.ஈ.பெரேரா மண்டபத்தில் மேடையேற்றினேன். இந்த நாடகம் மேடையேற்றப்பட்டு இரண்டு அல்லது மூன்று வாரங்களின் பின்னரென்று நினைக்கிறேன், *1983* ஆண்டு மே மாதம் *11*ந் திகதி இரவு நான் எதிர்பாராத சம்பவமொன்று நிகழ்ந்தது. சிங்கள இனவாதக் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி சார்பு கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் மாணவர்கள் மீதான வன்செயலில் இறங்கினார்கள். தமிழ் மாணவர்கள் தங்கியிருந்த சில விடுதிகளுக்குள் புகுந்து தமிழ் மாணவர்களை இனவாதக் கோசங்களுடன் தாக்கினார்கள். *அக்பர் நெல்* விடுதி மாத்திரம் தாக்குதலிருந்து தப்பியது. அந்த விடுதியிலிருந்த ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) சார்பு மாணவர்கள் தமிழ் மாணவர்களை தாக்கவிடாது தடுத்தனர்.

அன்றிரவு நான் தங்கியிருந்த *ஹில்டா* விடுதிக்கு முன்பாகவுள்ள வீதியிலிருந்து சிங்கள ஆர்ப்பாட்டக்காரர்களின் குரல்கள் கேட்டு நான் அறையைவிட்டு வெளியே வந்தேன். அப்போது என்னைப் போலவே பலரும் அறையைவிட்டு வெளியேறி விடுதியின் பல்கணியில் நின்றவாறு என்ன நடக்கிறதென பார்த்தவாறு நின்றிருந்தோம். அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் எமது விடுதிக்குள் கூக்குரலிட்டுக் கொண்டு உள்ளே நுழைந்து, பல்கணி வழியாக நாங்கள் நின்றிருந்த பகுதியை நோக்கியே ஓடி வந்தனர். திடுதிடுவென பொல்லுகளுடன் எங்கள் அருகாக வந்த அந்த சிங்கள மாணவர் கூட்டம், எனது பெயரைக் கூவியவாறு எனது அறையை நோக்கிப் பாய்ந்தனர். அந்த மாணவர்களை ஒருபோதும் நான் முன்னர் பார்த்ததில்லை. எதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய பெயரை மாத்திரம் சொல்லிக்கொண்டு ஓடுகிறார்கள் என்பது அப்போது எனக்குப் புரியவில்லை. ஆனால் அவர்கள் என்னைக் கடந்து சென்ற வேகத்தைப் பார்த்துவிட்டு, அவர்களின் கண்களில் மண்ணைத் தூவியாறு எப்படியாவது நான் விடுதிக்குள் ஒளித்திருப்பதைத் தவிர வேறு எந்த முடிவையும் என்னால் எடுக்க முடியாமல் இருந்தது.

ஆர்ப்பாட்டத்துடன் வெளியிலிருந்து வந்த மாணவர்களும், எமது விடுதியிலிருந்த சிங்கள இனவாத மாணவர்களுமாகச் சேர்ந்து இரண்டரை மணி நேரமாக விடுதி முழுவதும் என்னைத் தேடி, எல்லா தமிழ் மாணவர்களையும் கடுமையாகத் தாக்கினார்கள். நான் எனது அறைக்குத் திரும்பி செல்ல முடியாததால், பராபரன் என்ற எனது பொறியியற்பீட சகமாணவனின் அறையில் நான் தஞ்சம் புகுந்திருந்தேன். எங்கள் அறைக்கும் சிங்கள இனவாத மாணவர்கள் வந்து எங்கள் இருவரையும் தாக்கி, எங்கள் பெயர்களைக் கேட்டார்கள். அவன் தனது சொந்தப் பெயரைக் கூறவும், நான் எனது பெயரை *மோகன்* என்று கூறினேன். பின்னர் எங்கள் அறையில் எப்போதோ, எவராலோ, சுவரில் ஒட்டப்பட்டிருந்த காந்தி படத்துடனான கலண்டரை உரித்து வாயினுளிட்டு சப்பி விழுங்குமாறு அடித்தார்கள்.

*ஹில்டா* விடுதியில் இனவாதக் கூச்சலையும் தமிழ் மாணவர்களின் ஓலங்களையும் மாத்திரமே அந்த இரவில் என்னால் கேட்க முடிந்தது. விடுதியின் வாயில்கள் வழியாக தமிழ் மாணவர்கள் யாரும் வெளியேற முடியாதவாறு வாயில்களில் பலர் நின்று கொண்டிருந்தனர். என்னைப் பிடிப்பதற்காக விடுதி முற்றுகையிடப்பட்டிருந்தது. அப்போது விடுதி உதவி மேற்பார்வையாளராக இருந்த கெ.என்.ஓ.தர்மதாச எங்கு போனாரென்றே தெரியாது. அவரின் அனுசரணையின்றி நிட்சயமாக *ஹில்டா* விடுதியில் தங்கியிருந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் மீதான இந்த இனவன்செயலை சிங்கள இனவாத மாணவர்களால் நிகழ்த்தியிருக்க முடியாது.

இறுதியில் விடுதியின் முதலாவது மாடியிலிருந்து குதித்து தப்பும் முயற்சியில் நான் ஈடுபடுகையில், அவர்களிடம் பிடிபட்டு, கடுமையாகத் தாக்கப்பட்டேன். என்னைத் தாக்கிய ஐம்பதுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்டவர்களைக் கொண்ட அந்தக் கும்பலில், எனது சக சிங்கள மாணவன் டபிள்யு.என்.பி.பெர்னாண்டோ என்பவன் முக்கியமானவனாக இருந்தான். என்மீது தாக்குதல் நடத்தி சித்திரவதை செய்து கொண்டிருந்தவேளையில், திடீரென்று அந்த தாக்குதல்காரர்களை விலத்திக் கொண்டு விடுதி உதவி மேற்பார்வையாளர் கெ.என்.ஓ.தர்மதாச அங்கு தோன்றினார். என்னைத் தாக்கிக் கொண்டிருந்தவர்களிடம் சிங்களத்தில் ஏதோ பேசினார். அவர்கள் என் மீதான தாக்குதலை நிறுத்தி அவரிடம் என்னைக் கையளித்தனர். பின்னர் தர்மதாச தனது அலுவலகத்திற்கு என்னைக் கூட்டிச் சென்றார். பேராசிரியர் சிவசேகரம் அவர்கள் எனக்கு அறிமுகமானவர் என்றும் அவருக்கு எனது நிலைபற்றி தெரிவிக்கும்படி தர்மதாசவிடம் கேட்டுக் கொண்டேன்.

சிவசேகரம் உடனடியாகவே தர்மதாசாவின் அலுவலகத்திற்கு வந்து, நடந்த முழுவிபரங்களையும் என்னிடம் கேட்ட பின்னர், உபவேந்தர் பி.எல்.பண்டிதரட்னவுடன் தொடர்பு கொண்டு பேசினார். நள்ளிரவைக் கடந்துவிட்ட அந்த இரவில், பேராதனை பல்கலைக்கழக நிர்வாகம் என்னை என்ன செய்வதெனக் கூடிக் கதைத்தனர். அவர்கள் என்னை விடுவிக்க முடியாதெனக் கூறி பேராதனைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப் போவதாக சிவசேகரம் வாயிலாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. மறுநாட்காலை என்னை பேராதனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். காலை ஆறு மணிவரை சிவசேகரம் என்கூட இருந்தார். பின்னர் கொழும்பிலிருந்து பேராதனைப் பொலிஸ் நிலையத்திற்கு வந்த சி.ஐ.டி. பிரிவினர் என்னை கொழும்பிலுள்ள நாலாம் மாடிக்கு அழைத்துச் சென்று விசாரித்தார்கள். நான்கு தினங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டேன். விடுவிக்கப்படும் போது நாலாம் மாடி சி.ஐ.டி பிரிவினரால் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு திரும்பச் செல்வதுபற்றி தீர யோசிக்குமாறு அறிவுறுத்தப்பட்டேன்.

1983 மே மாதத்தில் வெளியான *புதுசு* சஞ்சிகையின் 7வது இதழிலிருந்த அட்டைப்படமே நான் தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டதற்கு காரணமாக அமைந்தது என்பது பின்னர் எல்லோருக்கும் தெரிய வந்தது. எனது *ஹில்டா* விடுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவரிக்கு (எனது அறை எண் 145 இற்கு) தபாலில் (*புதுசு* சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலிருந்த சபேசன் யாழ்ப்பாணத்திலிருந்து அதனை அனுப்பினான்) வந்த நான்கு *புதுசு* இதழ்கள் கொண்ட பார்சல் எனக்குத் தெரியாமல் உடைத்துப் பார்க்கப்பட்டுள்ளது. பின்னர் சிங்கள இனவாத மாணவர்களின் கைகளில் அந்த இதழ்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. புறாவொன்றின் கால் சங்கிலியால் இரும்புக்குண்டோடு பிணைக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளதாக காட்சிப்படுத்தியிருந்தது அந்த அட்டைப்படம். அதில் அந்த 'இரும்புக்குண்டை' 'வெடிகுண்டாக' அர்த்தப்படுத்திக் கொண்ட தமிழ் மொழி புரியாதவர்கள், என்னை பயங்கரவாதியென கடுமையாகத் தாக்கி பொலிசாரிடம் ஒப்படைத்து விட்டனர்.

நான் கொழும்பில் விடுவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்தவுடன், தோழர் விஸ்வா அளவெட்டிக்கு வந்து என்னை வந்து சந்தித்தார். வழமைபோல் சைக்கிளை மிதித்தபடி இருவருமாக அந்த சம்பவம் பற்றி உரையாடினோம். எனக்கு இந்த சம்பவம் நேருமென்று அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அந்த இரவில் சில மணி நேரங்கள் மாணவர் விடுதிகள் இனவாத மாணவர்களால் முற்றுகையிடப்பட்டிருந்ததை அவர் நம்ப முடியாதவராக இருந்தார். மாணவர்கள் தாக்கப்படுகையில் விடுதிக்காப்பாளர்கள் மற்றும் உபவேந்தர் என்ன செய்து கொண்டிருந்தனர், சம்பவத்தின் பின்னர் தாக்குதலில் ஈடுபட்ட மாணவர்களை இனங்கண்டு அவர்கள் மீது நடவடிக்கைகள் இன்னமும் ஏன் எடுக்கவில்லை என்று பரபரத்தார். அவர் பேராதனையில் படித்த காலத்தில் பல்கலைக்கழகத்திலிருந்த சூழலையும் தனக்கிருந்த சிங்கள மாணவர்களின் நட்பினையும் எனக்கு எடுத்துரைத்தார். இலங்கையின் உயர் கல்விக்கூடமான பல்கலைக்கழகத்திலும் இனவாதம் பரவி விட்டதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாதென்று கூறினார். இன்றைய நிலையில் இலங்கையிலுள்ள பிரதானமான இரு இனங்களும் சேர்ந்து இலங்கையில் ஒட்டுமொத்தப் புரட்சியொன்றினை செய்வது சாத்தியமில்லையெனவும் உணர்ச்சிவசப்படாது என்னிடம் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கைது செய்யப்பட்ட மறுநாள் பேராதனை பல்கலைக்கழகத்தின் விடுதிகளில் தங்கியிருந்த சகல தமிழ் மாணவர்களும் வெளியேறினர். ஆனால் பல்கலைக்கழகம் மூடப்படவில்லை. பேராதனை பல்கலைக்கழக நிர்வாகத்தினர், தாக்குதலில் ஈடுபட்ட மாணவர்கள் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனினும் வேறு வழியின்றி ஒரு சில வாரங்களின் பின்னர் தமிழ் மாணவர்கள் அனைவரும் திரும்பியும் பேராதனைக்குச் சென்றார்கள். கைது செய்யப்பட்ட பின்னர், ஜூன் 6ஆம் திகதியே நான் விரிவுரைகளுக்கு சமூகமளித்திருந்தேன்.

1983 ஜூலை 12ஆம் திகதி, இனவன்செயல் ஆரம்பிப்பதற்கு ஏறத்தாழ இரு வாரங்களுக்கு முன்பாக, பல்கலைக்கழகம் ஜே.வி.பி. மாணவர் அமைப்புக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் முறுகல் நிலையொன்று ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டு, சகல மாணவர்களும் விடுதிகளை விட்டு வெளியேற உத்தரவிடப்பட்டனர். இலங்கை வரலாற்றின் மிகப்பெரிய இனவன்செயல் 1983 ஜூலை மாதத்தில் நடந்தேறியது. அப்போது பேராதனைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்ததினால் நானும் ஏனைய தமிழ் மாணவர்களும் தப்பிவிட்டோமென நிம்மதிப் பெருமூச்சு விட்டோம். இனவன்செயலின் போது நான் பேராதனையில் இருந்திருந்தால் எனது உயிருக்கு ஆபத்து நேர்ந்திருக்குமென பலரும் கூறினார்கள். அத்தோடு நான் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்படாது வெலிக்கடைச் சிறையில் தள்ளப்பட்டிருந்தால் கூட, 1983 ஜூலை வெலிக்கடை சிறைப் படுகொலையிலும் சிக்கியிருக்க வாய்ப்புகள் இருந்திருக்குமென்றும் பலர் கருதினார்கள்.

1983 ஜூலை இனவன்செயலினைத் தொடர்ந்து தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் புதிய உத்வேகத்தினைப் பெற்றது. எவ்வளவு விரைவாக தமிழீழத்தினை அமைக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக அமைக்க வேண்டுமென எல்லோரும் வேலை செய்தார்கள். 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' வீடு வீடாகச் சென்று நிதி சேகரிப்பில் இறங்கினர். மக்களும் 'பெடியள்' வெகு விரைவில் 'விமோசனம்' ஏதோ பெற்றுத்தரப் போகிறார்களெனக் கருதி தம்மால் முடிந்ததை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கினர். ஏனைய தேசிய விடுதலை இயக்கங்கள் போலன்றி மிகவும் சொற்ப எண்ணிக்கையிலான ஆட்பலமே எங்களிடமிருந்தது. அத்துடன் 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' மக்களிடையே பிரபல்யமானதொரு அமைப்பல்ல. இதைப்பற்றியெல்லாம் அப்போது நாங்கள் கிஞ்சித்தும் கவலைப்படவில்லை. ஆனால் மக்கள் அப்போது எந்த அமைப்பு, என்ன பெயர், என்ன இராணுவத்தாக்குதல் செய்திருக்கிறார்கள் என்று பார்க்கவில்லை. ஏதோ தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்திற்கு நிதி சேர்க்கிறார்கள் என்று மாத்திரமே பார்த்தார்கள். நான் ஏனைய தோழர்களுடன் ஊர்காவத்துறையில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தேன். அப்போது ஊர்காவத்துறையில் கொழும்பில் இனவன்செயலினால் பாதிக்கப்பட்டு, காங்கேசன்துறையில் கப்பலில் வந்திறங்கிய பெருமளவிலான அகதிகள் அங்கு இருந்தனர். அவர்கள் தங்கள் துயரம் நிறைந்த கதைகளுடன், எங்களுக்கு தாகசாந்தியும் சாப்பாடும் தந்து உபசரித்த விதமும், அத்தோடு நின்றுவிடாது தம்மால் முடிந்த நிதியை வழங்கியதையும் ஒருபோதும் மறக்கமுடியாது.

1983 ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' என்ற அமைப்பு உருவானது. தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி அமைப்பில் தோழர் விஸ்வா வென்றெடுத்த புதிய சக்திகளே இந்த அமைப்பில் பிரதான பாத்திரம் வகித்தனர். இந்த அமைப்பு, வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் தனியான ஒரு தேசிய இனம், ஒடுக்கப்படும் இனம் என்ற வகையில் தமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க பிரிந்து போய் 'தமிழீழம்' அமைப்பதைத் தவிர வேறு வழியில்லையெனக் கூறியது. இதன் முன்னோடி அமைப்பான 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி'யோ, ஒடுக்கப்படும் தேசிய இனமான தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க போராட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்ட போதிலும், பிரிந்து போவதை ஒருபோதும் ஆதரிக்கவில்லை.

1970 களிலிருந்தே 'தமிழீழம்' என்ற சொல்லாடல் முதலில் தமிழ் பாராளுமன்றவாதிகளாலும், பின்னர் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியொற்றி விரக்தியடைந்து வன்முறைப்பாதையை நாடிய இளைஞர்களாலும் தமிழ் மக்களிடையே பிரபல்யமானதாக இருந்தது. அதைவிடவும் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக வாழும் நிலப்பரப்பில், ஒரு புதிய ஆட்சியை நிறுவலாமெனவும் இந்த பிற்போக்குத் தேசியவாதிகள் முழுதாக நம்பினர். இதற்கு அங்கு வாழ்ந்த மக்களும் அமோக ஆதரவினை வழங்கினர். எனவே தமிழ் மக்கள் தங்களுக்கென 'தனியரசு' ஒன்று நிறுவுவதை ஆதரித்து, தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவதின் மூலமாகவே, குறுந்தேசியவாதிகளின் பின்னால் அணிதிரளும் தமிழ் மக்களை தடுத்து நிறுத்தலாமென்ற முடிவுக்கு 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' வந்தடைந்திருந்தது.

'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யில் இருந்தவர்கள் சொற்ப எண்ணிக்கையிலானவர்களாக இருந்தபோதும் அமைப்பினை வளர்த்தெடுப்பதற்கு எல்லோரும் உற்சாகமாக வேலை செய்தார்கள். இவர்கள் அனைவரும் பெரிய இயக்கங்களின் 'ஆயுதம்' மற்றும் 'ஆயுதப்பயிற்சி' என்ற கவர்ச்சிக்குப் பின்னால் ஓடாமல், 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யின் அரசியல் கருத்துக்களை ஓரளவிற்கேனும் விளங்கிக்கொண்டு அதில் இணைந்திருந்தனர். ஆனால் தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்காக போராடுவதற்கும், சுத்த இராணுவக் கண்ணோட்டங்கொண்ட தனிநபர் பயங்கரவாதிகளிடமிருந்து தற்காத்துக் கொள்ளவும், ஆயுதமும் ஆயுதப்பயிற்சியும் அவசியம் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டவர்களாக இருந்தனர்.

மார்க்சிய – லெனினிச பார்வையில் இலங்கை தமிழ் மக்களின் தேசியவிடுதலைப் போராட்டம் பற்றிய ஓரளவு தெளிவான சிந்தனைகள் கொண்டவர்களால் அமைப்பிலுள்ளவர்களுக்கு அரசியல் வகுப்புகள் எடுக்கப்பட்டன. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ, போன்ற ஆசான்களின் புத்தகங்கள் அமைப்பில் புதிதாக சேர்பவர்களுக்கு பரிமாறப்பட்டன. எனினும் அரசியல் வகுப்புகள் எடுத்தவர்களில் சிலரிடையே இருந்த மார்க்சியம் பற்றிய தவறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கங்களும் வரட்டுத்தனமான பார்வையும், அமைப்பில் எப்போதுமே பெரிய குறைபாடாக இருந்தது. அத்துடன் குறுகிய காலத்தில் இடதுசாரிக்கருத்துகள் கொண்ட புத்தகங்களை தமிழில் வாசித்ததால் பெற்ற அறிவாலும் அமைப்பில் அரைவேக்காட்டுத்தனமும் முளைவிடத் தொடங்கியிருந்தது. இடதுசாரித் தத்துவங்களை சேர்ந்து படித்து, விளக்கி, விஞ்ஞான பூர்வமாக அணுகுவதற்கான சிந்தனை முறைகளை வளர்த்தெடுப்பதற்கு முன்னணி தோழரான விஸ்வாவைத் தவிர அமைப்பில் வேறெவரும் இருக்கவில்லை. கலை, இலக்கியப் படைப்பாளிகள் வெறும் குட்டி முதலாளித்துவப் புத்திஜீவிகள் அல்லது புத்தகப்பூச்சிகள் என்ற சிந்தனை அமைப்பின் தலைமையிலிருந்த சிலருக்கு இருந்தது. இந்தப் போக்கின் உச்சக்கட்டமாக அமைப்பிலிருந்த கலை, இலக்கியப் படைப்பாளி ஒருவரின் சேகரிப்பிலுள்ள புத்தகங்களை பறிமுதல் செய்யவும் முயற்சித்தார்கள். ஆனால் இந்த அதிதீவிர இடசாரித்துவ அதிகாரப் போக்கிற்கு எதிராக தோழர் விஸ்வானந்ததேவன் இடைவிடாது போராடினார்.

'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' அமைப்பின் ஒன்றிரண்டு அரசியல் வகுப்புகளில் கலந்து கொண்ட அல்லது அமைப்பின் கருத்துக்களை அமைப்பிலுள்ளவர்களின் வாயிலாக செவிமடுத்த குறுந்தேசியவாதச் சிந்தனைகள் கொண்டவர்களில் பலர் 'இவர்கள் கதைத்துக் கொண்டு மாத்திரம்தான் இருக்கிறார்கள், ஒன்றுக்கும் சரிவரமாட்டார்கள், அடிச்சுப்பிடிச்சு தமிழீழத்தை எடுக்க இவர்களிடம் ஆயுதங்களும் இல்லை' என்று சொல்லிக்கொண்டு ஆயுதப்பயிற்சிக்காக வேறு இயக்கங்களை நோக்கி ஓடிக்கொண்டும் இருந்தனர். ஆயுதப்பயிற்சி எடுக்க வேண்டுமென்று அவசரப்பட்ட இளைஞர்களை, இயக்கங்கள் போட்டி போட்டுக்கொண்டு படகுகள் மூலம் தென்னிந்தியாவிற்கு அனுப்பிக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு இயக்கவாரியாகப் பிரித்து இந்தியா பயிற்சிகளை வழங்கியது. ஜுலை இனவன்செயல், இலங்கையில் தடைசெய்யப்பட்ட இந்த இயக்கங்கள் அனைத்திற்கும் தமிழ்நாட்டில் இலங்கை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஓர் உத்தியோகபூர்வ அந்தஸ்தை வழங்கியது. இவர்கள் சென்னையில் தலைமையகத்தினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளில் ஆயுதப்பயிற்சி முகாம்களையும் நிறுவிச் செயற்படத் தொடங்கினர்.

1983 ஜூலை இனவன்செயலினைத் தொடர்ந்து தென்னிலங்கைக்கு சென்று வாழத் தமிழர்கள் அஞ்சினர். 1977 ஆண்டு ஜூலையில் ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு வந்து ஒரு மாதகாலத்தில், ஓகஸ்ட் மாதத்தில், தென்னிலங்கையில் தமிழர்களுக்கு எதிராக பெரிய இனவன்செயல் நிகழ்ந்தது. அதனைத் தொடர்ந்து தென்னிலங்கையில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தொட்டுத்தொட்டு சிறியளவிலான இனவன்செயல்கள் நிகழ்ந்த வண்ணமேயிருந்தன. எனவே பெரும்பான்மையினத்தில் சிறுபான்மையாகவுள்ள இனவாதிகள் மேலும் இனவன்செயல்களுக்கு தூபமிடலாமென அனைத்து தமிழ் மக்களும் நம்பினர். அதனால் கொழும்பு, மொரட்டுவ மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுவந்த யாழ்ப்பாண குடாநாட்டைச் சேர்ந்த மாணவர்கள், 1983 ஜூலை இனவன்செயலின் பின்னர் மீண்டும் அதே பல்கலைக்கழகங்களில் தொடர்ந்து கல்விகற்கத் தயங்கினார்கள். தமக்கு யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் கல்விகற்க ஏற்பாடு செய்து தருமாறு தென்னிலங்கையில் கல்விகற்று வந்த யாழ்ப்பாண குடாநாட்டுத் தமிழ் மாணவர்கள் கோரிக்கையினை முன்வைத்தனர். ஆனால் இது முற்றுமுழுக்க ஒரு சாத்தியமற்ற கோரிக்கை என்பதை அவர்கள் அப்போது உணரத்தவறிவிட்டனர்.

ஏற்கனவே தென்னிலங்கை பல்கலைக்கழகங்களிலுள்ள கற்கைநெறிகள் அனைத்தும் வடக்குக் கிழக்கு பல்கலைக்கழகங்களில் இல்லை. அதாவது பொறியியல், விவசாயம், பல் மற்றும் மிருக மருத்துவம் போன்ற பீடங்கள் புதிதாக நிறுவப்பட வேண்டும். ஒருபுறம் இலங்கையைப் பிரித்து தமிழீழத்திற்காக தமிழ் மக்கள் அணிதிரட்டப்பட்டுக் கொண்டிருக்கையில், இலங்கை அரசு 'அமையப்போகும் தமிழீழத்தில்' புதிய பல்கலைக்கழக பட்டப்படிப்பிற்கான பீடங்களை குறுகிய காலத்தில் நிறுவுவதற்கு முன்வருமா என்பதைப்பற்றி இடம்பெயர்ந்த தமிழ் மாணவர்கள் சார்பில் கோரிக்கையினை முன் வைத்தவர்கள் யோசிக்கத் தவறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு தென்னிலங்கை பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் உடனடியாக பல்கலைக்கழகங்களுக்கு திரும்ப வேண்டுமென்று அரசு காலக்கேடு விதித்தது.

அரசின் காலக்கேட்டினை நிராகரித்த யாழ்ப்பாண குடாநாட்டை மாத்திரம் பிரதிநிதித்துவப் படுத்திய இடம்பெயர்ந்த மாணவர்கள் அமைப்பு, 1984 ஜனவரி 9th திகதியிலிருந்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் என்று பிழையானதொரு போராட்டத்தினை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளவில் ஆரம்பித்தார்கள். இதற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் சங்கமும் ஆதரவளித்தது. சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஏழு ஆண்களும் இரண்டு பெண்களுமாக மொத்தம் ஒன்பது பேர் பங்குபற்றினர். இவர்களில் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தினைச் சேர்ந்த அச்சுவேலியை வசிப்பிடமாகக் கொண்ட குகனேசன் மற்றும் பல் மருத்துவபீடத்தினைச் சேர்ந்த முருகானந்தனும் எனக்கு நன்கு அறிமுகமானவர்களாக இருந்தார்கள். மாணவர்களின் இந்த போராட்டத்திற்கு பொதுவாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தை மையப்படுத்தி வேலை செய்து கொண்டிருந்த, சென்னையை தலைமையகமாகக் கொண்ட ஆயுதப் போராட்ட இயக்கங்கள் அனைத்தும் ஆதரவினை வழங்கின.

இடம் பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தினை அரசு கண்டுகொள்ளவேயில்லை. இந்த போராட்டத்திற்கு யாழ்ப்பாண குடாநாட்டில் இடம்பெயர்ந்திருந்த மாணவர்கள் மத்தியிலும் பெரியளவில் ஆதரவு இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. பெரும்பாலான இடம்பெயர்ந்திருந்த மாணவர்களின் கருத்துக்களை பொருட்படுத்தாத, அந்த மாணவர்களை பெருமளவில் ஈடுபடுத்தாத போராட்டமாகவே, அந்த போராட்டமிருந்தது. ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் உற்சாகமாகக் கலந்து கொண்டு உண்ணாவிரமிருந்தவர்களை பார்வையிட்டு, இடம்பெயர்ந்த மாணவர்களின் போராட்டத்திற்கு உற்சாகம் ஊட்டினார்கள். உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்த நாளிலிருந்து பகல் வேளைகளில் பல்கலைக்கழக வளவிலேயே எனது பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிந்து கொண்டிருந்தது. நான் உண்ணாவிரதக் கொட்டகைக்குள் அடிக்கடி சென்று குகனேசனுடனும் முருகானந்தனுடனும் அளவளாவிய வண்ணமிருப்பேன். அதனால் உண்ணாவிரமிருந்த பெண்களில் ஒருவரான பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தினைச் சேர்ந்த மதிவதனி மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழக பொறியியற் பீடத்திற்கு தெரிவாகியிருந்த சிற்சபேசன் ஆகியோருடனும் அறிமுகங்கள் ஏற்பட்டன.

ஆனால் உண்ணாவிரதிகளால் சில நாட்கள் மாத்திரமே எல்லோருடனும் நன்றாக அளவளாவ முடிந்தது. பின்னர் அவர்கள் எல்லோருமே பலவீனமடையத் தொடங்கினர். தடிப்பான போர்வைகளுக்குள் நடுங்கிய வண்ணம் அந்தக் கொட்டகைக்குள் அவர்கள் படுத்துக்கிடந்தனர். உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவிகளில் ஒருவரின் நிலை கவலைக்கிடமானது. உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்து எட்டு நாட்களின் பின்னர், ஜனவரி 16ம் திகதி அந்த உண்ணாவிரத மாணவியை பரிசோதித்த மருத்துவர், அடுத்த 24 மணித்தியாலத்திற்குள் அவர் கோமா நிலையை அடையலாமென எச்சரித்துவிட்டு சென்றார். இடம்பெயர்ந்த மாணவர்கள் அமைப்பு என்ன செய்வதென்று தெரியாது தடுமாறியது போல் எனக்குத் தெரிந்தது. அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தினால் அரசுக்கு ஒரு பாரிய நெருக்கடியினைக் கொடுத்து, தமது கோரிக்கையினை வென்றெடுக்கலாமெனத் தப்புக்கணக்குப் போட்டிருந்தனர். ஆனால் தமது கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதிகளை சாகக் கொடுக்க அவர்கள் தயாராக இருக்கவில்லை. எனவே பிழையாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தை வெற்றிகரமாக பின்வாங்குவதே சரியான தீர்வு. ஆனால் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் தோல்வியில் முடிந்தது என்பதை பகிரங்கப்படுத்துவது பிழையானதொரு முடிவென அவர்கள் கருதினார்கள். அதைவிடவும் அப்படி பகிரங்கப்படுத்துவது தமிழ் மக்களின் ஒட்டு மொத்த போராட்டத்திற்கே ஒரு முகச்சரிவு எனவும் கருதினார்கள்.

எனவே இடம்பெயர்ந்த மாணவர்கள் அமைப்பினர் உண்ணாவிரதிகளைக் கடத்த வைப்பதின் மூலம் உண்ணாவிரதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக ஒரு 'நாடகத்தை' அரங்கேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினர். அதற்காக தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்கள் சிலவற்றை அவர்கள் அணுகினார்கள் என்று கூறப்பட்டது. அவர்கள் அணுகிய இயக்கங்களில் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' மாத்திரமே அவர்களின் எண்ணத்தை நிறைவேற்ற உடனடியாக ஒப்புக் கொண்டனர் என்றும் சொல்லப்பட்டது. புலிகள் உண்ணாவிரதிகளை கடத்தும் திட்டம் அன்று மாலை வேளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளவினுள் பலர் மத்தியிலும் கசிந்தது. உண்ணாவிரதிகளின் சம்மதம் பெறப்பட்டு அவர்கள் கடத்தப்படவில்லை என்பது குகனேசன் மூலமாக நான் தெரிந்து கொண்டேன். இடம்பெயர்ந்த மாணவர்கள் அமைப்பு என்ற பெயரில் இயங்கியவர்களில் முக்கியமானவர்களில் சிலர் 'தமிழீழ விடுதலைப்புலிகளி'ன் அனுதாபிகளே என்பதை நான் அந்த எட்டு நாட்களில் அவதானித்து இருந்தேன். இந்த அமைப்பின் தலைவராக இருந்த மொரட்டுவ பல்கலைக்கழக பொறியியற் பீடத்தைச் சேர்ந்த தணிகாசலம் தயாபரன், தற்போது 'நாடு கடந்த தமிழீழ அரசாங்க'த்தின் 'அரசியல் மற்றும் வெளிவிவகார அமைச்சரா'க இருக்கிறார்!

உண்ணாவிரதிகளை கடத்தும் போது சூரியன் மறைந்து பல்கலைக்கழக வளவிற்குள் அமைந்திருந்த அந்த உண்ணாவிரதக் கொட்டகையில் மின்விளக்குகள் எரியத் தொடங்கியிருந்தன. அப்போது உண்ணாவிரதிகளின் மிக அருகிலேயே நானும் இன்னும் சில நூற்றுக்கணக்கானவர்களும் நின்று கொண்டிருந்தோம். துப்பாக்கிகள் சகிதமே புலிகள் இயக்கத்தினர் பல்கலைக்கழக வளவிற்குள் புகுந்து, அந்த கொட்டகைக்குள் வான் ஒன்றில் வந்தனர். சாகும் தறுவாயிலிருக்கும் உண்ணாவிரதிகளை சிநேகபூர்வமாகக் கடத்துவதற்கு புலிகள் துப்பாக்கிகளோடு அதிரடியாக வருவார்களென்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தமிழீழ விடுதலைக்கழகத்தின் மத்தியகுழுவைச் சேர்ந்த கேதீஸ்வரன் (அவன் பின்னர் 1984 ஆண்டு ஏப்பிரல் 11ந் திகதி இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டு, யாழ்ப்பாணம் பௌத்த விகாரைக்கு அருகில் மேலும் பலருடன் சேர்த்து எரிக்கப்பட்டான்) உண்ணாவிரதிகள் துப்பாக்கி முனையில் கடத்தப்படுவதை எதிர்த்துக் கத்தினான். துப்பாக்கி தாங்கிய புலிகளில் ஒருவன் கேதீஸ்வரனை துரத்திக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடியபோது, அவன் கொட்டகைக்கு பின்புறமிருந்த இருளுக்குள் மறைந்து போனான்.

நடக்கவும் பேசவும் முடியாத நிலையிலிருந்த உண்ணாவிரதிகளை அந்தத் துப்பாக்கிதாரிகள் காலிலும் கை இடுக்குகளிலும் பிடித்து அலாக்காக வானில் தூக்கிப் போட்டனர். உண்ணாவிரதிகளை முரட்டுத்தனமாக தூக்கிச் செல்லும் காட்சியை சில நூற்றுக்கணக்கானோர் செய்வதறியாது பார்த்துக் கொண்டிருந்தனர். புலிகள் ஏனைய சக உண்ணாவிரதிகளின் உடலைப் பற்றித் தூக்குவது மதிவதனிக்கு ஏதோ சங்கடமாகவும் அசிங்கமாகவும் பட்டிருக்க வேண்டும் போலும். அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். பின்னர் என்னைச் சைகை காட்டி அருகில் வருமாறு அழைத்தாள். நான் அருகில் சென்றபோது, அந்த வேளையில் அங்கு வருகை தந்திருந்த தனது பெற்றோரின் உதவியுடன் புலிகளின் வானுக்குள் செல்ல விரும்புவதாக முனகிய வண்ணம் சொன்னாள். அந்த கொட்டகையின் ஓரமாக நின்று கொண்டிருந்த அவளது பெற்றோரின் காதுகளுக்குள் நான் அவளின் அந்தச் செய்தியை குசுகுசுத்தேன். அவர்கள் மதிவதனியை தூக்குவதற்காக அவள் அருகில் சென்றபோது, புலித்துப்பாக்கிதாரி ஒருவன் அவர்களை மிரட்டி விலகச் செய்தான். பின்னர் ஏனையவர்களைப் போலவே அவளையும் வானுக்குள் தூக்கிப் போட்டார்கள். உண்ணாவிரதிகளை ஏற்றிக் கொண்டு வான் புறப்பட்ட போது, அந்த வானுக்கு வழிவிட பலர் மறுத்தனர். ஆட்களோடு ஆட்களாக நின்று கொண்டிருந்த வேறு சில புலிகள், வழிமறித்தவர்களது நெஞ்சுகளில் தள்ளிப்பிடித்து, வான் உண்ணாவிரதக் கொட்டகையை விட்டு வெளியேற வழியை ஏற்படுத்தினர்.

இடம்பெயர்ந்த மாணவர்கள் அமைப்பின் போராட்டம் கடத்தல் நாடகத்துடன் முடிவுற்று, சில வாரங்களில் யாழ்ப்பாண குடாநாட்டைச் சேர்ந்த கணிசமான மாணவர்கள் கொழும்பு, மொரட்டுவ மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களுக்கு திரும்பச் சென்றுவிட்டனர். ஜூலைக் கலவரத்தின் பின்னர் தென்னிலங்கை பல்கலைக்கழகங்களுக்கு தமது பிள்ளைகளை அனுப்பத் தயங்கிய பெற்றோர்கள், இந்தியாவிற்கும் வேறு நாடுகளுக்கும் தமது பிள்ளைகளை அனுப்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியிருந்தனர். இது உண்ணாவிரதப் போராட்டத்தின் தோல்வியின் பின்னரும் தொடர்ந்தது. இதனால் ஏறத்தாள 25 சதவீதமான யாழ்ப்பாண குடாநாட்டைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் தென்னிலங்கை பல்கலைக்கழகங்களுக்குத் திரும்பிச் செல்லவில்லை. இவர்களில் சொற்பமானோர் ஆயுதப்போராட்ட இயக்கங்களில் இணைந்து பயிற்சிக்காக படகுகளில் தென்னிந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது பெயர் பிரபல்யமாகிவிட்டதால், நான் திரும்பிச் செல்வது பாதுகாப்பற்றதென என்னைச் சூழ இருந்த பலரும் கருதினார்கள். இதனால் இலங்கையில் எனது பல்கலைக்கழகப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்தேன். எனது எதிர்காலத்திட்டத்தை பற்றிக் கலந்தாலோசிப்பதற்கு எனது தந்தையைத் தவிர்த்து, தனிப்பட்ட நட்பு மற்றும் அரசியல் தோழமை என்ற ரீதியில் பலர் இருந்தார்கள். ஆனால் தோழர் விஸ்வா அதில் முக்கியமானவர். ஆனால் அப்போது அவர் இலங்கையில் இருக்கவில்லை, தமிழ்நாட்டில் இருந்தார்.

உண்ணாவிரதப் போராட்டம் முடிவுற்று ஒரு மாதத்தின் பின்னர் என்று நினைக்கிறேன், அதாவது பெப்ரவரி மாத இறுதியில் ஒரு நாள் காலை ஒன்பது மணியளவில் முதன்முறையாக எனது வீட்டை நோக்கி இலங்கை இராணுவத்தினர் வந்தனர். நான் ஓடித் தப்பக் கூடிய தூரத்திலேயே அவர்களைக் கண்டதினால் தப்பிவிட்டேன். அதன் பின்னர் எனது வீடு சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. 1981 இல் எனது தம்பியொருவர் 'தமிழீழ மக்கள் விடுதலைக்கழக'த்தில் முழுநேரமாக இயங்குவதற்காக வீட்டைவிட்டு வெளியேறி விட்டார். எனவே அவரைத் தேடி வந்தார்களா அல்லது என்னைத் தேடி வந்தார்களா என்பது எனக்குப் புரியாமலிருந்தது. நான் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு இன்னமும் திரும்பாமலிருப்பது என்னைத் தேடி வருவதற்கான காரணமாக இருக்கலாமென நான் என்னுக்குள் நினைத்தேன். இராணுவத்தினர் சென்ற பின்னர் நான் எனது வீட்டிற்கு திரும்பியபோது அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த எனது தந்தையாரை, அயல்வீட்டு மருத்துவர் ஒருவர் தேற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணமிருந்தார். எனது வீட்டிலிருந்த சகல பொருட்களும் இருந்த நிலையைப் பார்க்க, இராணுவம் அக்கு வேறு ஆணி வேறாகத் தேடியிருப்பது தெரிந்தது. சில நிமிடங்கள் கூட தந்தையார் அங்கு என்னை நிற்க விடவில்லை. அவர் உடனடியாக என்னை வீட்டைவிட்டு வெளியேறுமாறு கூறிக் கொண்டிருந்தார். என்னையா அல்லது எனது தம்பியையா இராணுவத்தினர் தேடி வந்தார்கள் என்பதைக்கூட கூறமுடியாத நிலையில் அவர் இருந்தார். நான் அத்தியாவசிய உடுப்புக்களை எடுத்துக் கொண்டு வீட்டைவிட்டு மாத்திரமல்ல, அளவெட்டியை விட்டும் அன்று வெளியேறினேன்.

அதன் பின்னர் ஒரு சில நாட்கள் நிரந்தரமாகப் படுப்பதற்கு இடமில்லாமல் அலைந்து திரிந்துவிட்டு, இறுதியில் நெருங்கிய உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றேன். இலங்கை அரச படைகளால் தேடப்பட்டு ஒளித்துத்திரிந்த தமிழ் இளைஞர்கள் சிலரை நான் எனது சிறு வயதிலிருந்தே என் கண்ணால் பார்த்திருக்கிறேன், மேலும் பலரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்களில் பலர், ஏதோ இலங்கை அரசுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டவர்களாக இருந்திருக்கிறார்கள் என்றே நினைத்து வந்திருக்கிறேன். ஆனால் நான் எதுவுமே செய்யவில்லையே! 'இராணுவம் ஏன் எங்கள் வீட்டிற்கு வந்தது? நான் இவ்வாறு ஏன் ஒளித்திருக்க வேண்டும்?' போன்ற கேள்விகள் என்னைக் குடைந்த வண்ணமிருந்தது. அந்த வேளையில் 'தமிழீழ விடுதலைக்கழக' உறுப்பினர் ஒருவர் எனது தம்பி திரிகோணமலையில் கைது செய்யப்பட்டதை எனக்கு தெரியப்படுத்தினார். அவன் கைது செய்யப்பட்ட பின்னரே இராணுவம் எனது வீட்டிற்கு வந்திருக்க வேண்டுமென்று நான் ஊகித்துக் கொண்டேன். எனினும் அதன் பின்னரும் நள்ளிரவில் எனது அளவெட்டி வீடு மீண்டுமொரு முறை இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டதாக எனக்கு செய்தி வந்தது. அந்தச் சோதனையின் போது, எனது பெயரைச் சொல்லி எங்கேயென எனது தந்தையிடம் விசாரித்ததாகவும் எனக்கு தெரியப்படுத்தப்பட்டது. இதன் பின்னர் நான் இலங்கையிலிருப்பது உசிதமல்ல என எனக்குப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டுக்குச் செல்லலாம் என்பதுதான், அப்போது எனக்கிருந்த நம்பிக்கை ஒளிக்கீற்று.

தோழர் விஸ்வா ஏப்பிரல் மாதமளவில் தான் தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்தார். அவர் வரும் போது சென்னையில் அச்சிடப்பெற்ற 'தமிழீழ தேசியவிடுதலை முன்னணி'யின் முதலாவது தேசிய மகாநாட்டின் அறிக்கையினையும், அரசியல் தத்துவார்த்த விமர்சன ஏடான *இலக்கு* முதலாவது இதழையும் கொண்டு வந்திருந்தார். பொதுவாக அப்போது ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இயக்கங்கள் பொலிஸ் நிலையங்கள் மற்றும் அரசபடைகள் மீதான தாக்குதல்களாலும் வங்கிக்கொள்ளைகளாலுமே பிரபல்யமாகி, 'பெடியங்கள் தமிழீழத்திற்காக போராடுகிறார்கள்' என்ற பிரமையை மக்களிடம் ஏற்படுத்தி இருந்தனர். இவற்றிற்கு அப்பால் சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைகள் மற்றும் வானொலிகள் வாயிலாக அவர்கள் பிரச்சாரத்திலும் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் 'தமிழீழ தேசியவிடுதலை முன்னணி' அமைப்போ, அப்போது அதன் வளர்ச்சிக்கு மக்களிடையேயான அரசியல் பிரச்சாரத்தில் மாத்திரமே தங்கியிருந்தது. இதனால் அமைப்பின் வெளியீடுகளை மக்களிடம் கொண்டு சென்று விநியோகிப்பது என்பது எமது தோழர்களின் முக்கிய பணியாக இருந்தது.

தமிழ்நாட்டிலிருந்து திரும்பியிருந்த தோழர் விஸ்வாவுடன் சைக்கிளை மிதித்தபடி கதைப்பதற்கு பல விடயங்கள் இருந்தன. இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தினைப் பற்றி நான் பிரஸ்தாபித்த பொழுது, ஒரு சில வாரங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்லாயிரக்கணக்கான மக்களை கவர்ந்த போராட்டத்தினைக் கண்டு வியந்தார். பிழையான போராட்டம் என்றாலும், மக்களை அணிதிரட்டுவது எப்படியென அவர்களுக்கு தெரிந்திருந்ததென அவர் கூறினார். இந்தமாதிரியான ஒரு சிலரை பின்னணியாகக் கொண்ட வெகுஜனப் போராட்டத்தில், 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' மாத்திரமல்ல, ஏனைய சக இயக்கங்களும் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றார். இனிமேல் இலங்கையில் தலைமறைவாக மாத்திரமே வாழ முடியுமென்ற நிலைக்கு வந்திருந்த நான், தோழர் விஸ்வாவுடன் நீண்ட கலந்துரையாடல் ஒன்றினையும் நடாத்தினேன். இன்றுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையில் தமிழ்நாட்டிற்கு செல்வதனைத் தவிர வேறு எந்த வழியுமில்லை என்ற எனது நிலைப்பாட்டினை ஏற்றுக்கொண்ட அவர், அமைப்பினுள் அதனை முன்வைப்பதாகக் கூறிச் சென்றார். நான் பல்கலைக்கழகப் படிப்பை முடிக்க வேண்டிய ஒரு மாணவன், அம்மாவையும் இழந்து ஐந்து சகோதரிகள் கொண்ட எனது குடும்பப் பின்னணி மற்றும் தனிப்பட்ட வாழ்வில் நான் எதிர்கொண்டிருந்த நெருக்கடிகள் காரணமாகவும் என்னை அமைப்பினுள் ஒரு முழுநேர ஊழியனாக உள்வாங்குப்படுவதினை அவர் எப்போதும் வேண்டுமென்றே தவிர்த்து வந்திருக்கிறார். அதனை பல தடவைகள் அவர் என்னிடம் கூறியுமிருக்கிறார். அமைப்பினுள்ளும் அமைப்பின் வெளியிலும் சரி சமமான பலமாக இருந்தால் மாத்திரமே நாங்கள் மக்கள் விடுதலை இயக்கமாக பூரணத்துவமடைய முடியுமென அவர் நம்பினார்.

அமைப்புக்குள் கலந்தாலோசித்த தோழர் விஸ்வா விரைவில் தமிழ்நாட்டிற்கு தன்னுடன் என்னைக் கூட்டிச் செல்ல இருப்பதாக தெரிவித்தார். இருமாதத்திற்கு ஒருமுறை அமைப்பின் அரசியல் தத்துவார்த்த விமர்சன ஏடாக வெளிவர ஆரம்பித்திருக்கும் *இலக்கு* பத்திரிகை மற்றும் எதிர்கால வெளியீடுகளை வடிவமைப்பதும் பதிப்பிப்பதும், இயக்கங்கள் சாராத அங்குள்ள இலங்கை தமிழர் நிறுவனங்கள் மற்றும் இலங்கை மாணவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதும் போன்ற வேலைகளை நான் தமிழ்நாட்டில் செய்ய வேண்டுமென்றும் கூறினார். அத்துடன் எனது கல்வியை நான் தமிழ்நாட்டில் தொடரலாமெனவும் எனக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் குறிகட்டுவானிலிருந்து புறப்பட்டு, நெடுந்தீவு வழியாக 1984 ஆண்டு மே மாதம் 24ந் திகதி அதிகாலை தோழர் விஸ்வா உட்பட நாங்கள் எழுவர் படகொன்றில் இராமேஸ்வரத்தை வந்தடைந்தோம். அந்த எழுவரில் நாங்கள் மூவர், இராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்டு 25ந் திகதி காலை சென்னை, கோடம்பாக்கம் நகருக்கு வந்து சேர்ந்தோம். அங்கு 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யின் அமைப்பு சார்பாக வீடொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டு மாணவர்கள் இருவர் தங்கியிருந்தனர். அவர்களுடன் நாங்களும் சேர்ந்து கொண்டோம். சென்னையில் கல்வியைத் தொடர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பும் இலங்கையைச் சேர்ந்த மாணவர்களில் அமைப்போடு தொடர்புடையவர்களை எதிர்காலத்தில் அந்த வீட்டில் தங்க வைக்கலாம் என்பதே எதிர்பார்ப்பாக இருந்தது. அந்த வீடு அமைப்பின் தொடர்பு முகவரியாகவுமிருந்தது. அக்காலகட்டத்தில் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' மிகச்சிறிய அமைப்பாக இருந்தபோதிலும், மார்க்சிச – லெனினிச பாரம்பரியத்தில் வழிவந்த ஓர் அமைப்பாக எல்லோராலும் அறியப்பட்டு இருந்தது. இதனால் ஏனைய இயக்கங்கள் போன்று பகிரங்கமாக அலுவலகங்களை 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யால் நிறுவ முடியாமலிருந்தது.

இலங்கையின் வடக்கிலுள்ள சிறிய குடாநாட்டு நிலப்பரப்பில் பிறந்து வளர்ந்த எங்களை பெரிய ஜனசமுத்திரத்தின் நடுவே கொண்டு வந்து விட்ட மாதிரியான உணர்வையே சென்னை நகரம் எங்களுக்கு ஏற்படுத்தியது. எப்படியோ சில மாத தலைமறைவு வாழ்க்கை முடிவுக்கு வந்ததையிட்டு நான் பெருநிம்மதி அடைந்தேன். தென்னிந்திய தமிழ்ப்படங்கள் வாயிலாக சென்னை நகரத்தினதும் ஏனைய தமிழ் நாட்டு மக்களினதும் வாழ்க்கை முறைகள் இலங்கைத் தமிழர்களுக்கு ஓரளவு பரீட்சயமாக இருந்தது. ஆனால் அவ்வாறு தமிழ் நாட்டு மக்களுக்கு இலங்கைத் தமிழர்களது வாழ்க்கை முறைகள் பற்றி அவ்வளவு தெரியாது. அதனால் எங்கள் தமிழ் உச்சரிப்பினைப் பார்த்து, 'நாங்கள் மலையாளம் பேசுகிறமா' எனப் பொதுவாக எல்லாருமே கேட்டார்கள். 'நாங்கள் இலங்கைத் தமிழர்கள்' என்று கூறும்போதெல்லாம், எங்களையும் இலங்கை நிலைமைகளையும் அக்கறையோடும் வாஞ்சையோடும் விசாரித்தார்கள். அது எங்களுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. அவர்களின் அனுதாபம் தமிழ் நாட்டில் நாங்கள் வரவேற்கப்பட்ட பிரஜையாக இருக்கிறோம் என்ற பாதுகாப்பான உணர்வை எங்களுக்கு ஏற்படுத்தியது. 1983 ஆண்டு ஜுலை இனவன்செயல் சென்னைத் தமிழர்களிடையே பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பது எல்லா இடங்களிலும் காணக்கூடியதாக இருந்தது. எங்களுக்கு சென்னைத் தமிழ் உச்சரிப்பினைப் புரியக்கூடியதாக இருந்த போதும், அவர்களுக்கு எங்கள் யாழ்ப்பாணத்தமிழ் உச்சரிப்பினைப் புரிவது கடினமாகவிருந்தது என்பது எங்களால் உணரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் நாங்கள் சென்னை வாழ் தமிழர்களுடன் அவர்களது 'பாஷையிலேயே உரையாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

நான் சென்னைக்கு வந்து சில நாட்களில், 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யின் பதிப்பக வேலைகளுக்காக தோழர் விஸ்வா என்னை சென்னையைச் சேர்ந்த தோழர் ஒருவரை அறிமுகப்படுத்தினார். அவர் என்னையும் தோழர் விஸ்வாவையும் திருவல்லிக்கேணிப் பகுதியில் அமைந்திருந்த இரண்டு அச்சகங்களுக்கு அழைத்துச் சென்றார். அதில் எங்களுக்கு ஏற்புடையானதொன்றை நாங்கள் தெரிவு செய்தோம். பின்னர் ஒரு மாத காலத்தில் இரண்டாவது *இலக்கு* இதழ் அந்த அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. 1984 ஆம் ஆண்டில் மூன்றாவது மற்றும் நான்காவது *இலக்கு* இதழ்களையும் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யின் அரசியல் அறிக்கையினையும் அதே அச்சகத்தில் பதிப்பித்தோம். எனக்கு தமிழ்நாட்டில் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. அதனால் நான் பெரிதும் மனமுடைந்து விடவில்லை. அந்த நேரத்தில் என்னைப் போன்று பலர் பல்கலைக்கழகக் கல்வியைத் துறந்து மாற்று இயக்கங்களில் சேர்ந்து ஆயுதப்பயிற்சிகளை முடித்திருந்தனர். அவர்களில் பலர் இயக்கங்களைவிட்டு வெளியேறி சாவுக்குப் பயந்து தலைமறைவாக வாழும் தகவல்களும், சிலர் போரில் மரணித்துவிட்டார்கள் போன்ற செய்திகளும் வந்து கொண்டிருந்தன.

தமிழ் நாட்டில் தங்கியிருந்த தோழர் விஸ்வாவும் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யின் ஏனைய தோழர்களும் அமைப்பு சார்ந்த வேறு பல அரசியல் வேலைகளை முன்னெடுத்து இருந்தனர். இலங்கையில் மாத்திரமல்ல, இந்தியாவிலும் தலைமறைவாக இயக்க வேலைகளை முன்னெடுக்க வேண்டிய கட்டாய நிலையில் எமது அமைப்பு இருந்ததால் பல தோழர்கள் தங்களை இனங்காட்டாமல் இருந்தார்கள். அவர்களது பணிகளும் மிகவும் இரகசியமாகவே இருந்தது. எனினும், இப்போது அமெரிக்காவை வதிவிடமாகக் கொண்டிருக்கும் தோழர் அகிலன் என்பவர் அமைப்பு சார்பில் பகிரங்கமான வேலைகளில் சென்னையில் ஈடுபடுத்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார். அவர் 19.03.1985 இல் திடீரென்று காணாமற் போய்விட்டார். சென்னையில் எமது அமைப்பிலிருந்த எல்லோருக்கும் அதிர்ச்சியாக இருந்தது. 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யின் அரசியல் எதிரிகளே அவர் காணாமல் போனதின் பின்னணியில் இருக்கிறார்கள் என்பதை எல்லோரும் நிட்சயமாக நம்பினார்கள். ஆனால் யாரை நோக்கி சுட்டுவது? பல நாட்களின் பின்னர் அவர் தப்பி வந்து, கோடம்பாக்கம் தமிழர் தகவல் நிலையத்திற்கு நடந்து சென்று கொண்டிருக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரால் கடத்தப்பட்ட செய்தியைத் தெரிவித்தார். அமைப்பின் தலைமை பற்றியும் அவர்கள் இருப்பிடங்கள் தொடர்பாகவும் தெரிந்து கொள்வதற்காக புலிகளால் அவர் மிகவும் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டு இருந்தார். அதன்பின்னர் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தினை முழுமையாக புலிகள் தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவர முயல்கிறார்கள் என்பதை 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யினர் புரிந்திருக்க வேண்டும்.

1985 ஆம் ஆண்டில் ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது *இலக்கு* இதழ்கள் வெளிவந்தன. *இலக்கு* இதழ்களின் பதிப்பு, வடிவமைப்பு, ஒப்புநோக்கு வேலைகளில் நான் ஈடுபட்டிருந்ததினால், ஆக்கங்களை மீண்டும் மீண்டும் பல தடவை படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மறுபிசுரங்கள் தவிர்ந்த, எல்லா *இலக்கு* இதழ்களிலும் வெளிவந்த புதிய ஆக்கங்கள் அனைத்தும் அமைப்பு சார்ந்தவர்களால் மாத்திரமே எழுதப்பட்டன. அவைகளில் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' அமைப்பினை தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முன்னணிக்கு கொண்டு வருவதற்கான பங்களிப்புகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. அதீத இடதுசாரித் தீவிரவாதமும் வரட்டுவாதமும் மேலோங்கியிருந்தன. அன்றைய இலங்கை, இந்தியா மற்றும் சர்வதேச சூழல்களின் யதார்த்த நிலைகளைக் கவனத்திலெடுக்காமல் 'கன்னா பின்னா' வென்று பல விடயங்கள், அன்றைய சூழலுக்குப் பொருந்தாத, ஒரு சில புத்தகங்கள் வாசித்ததின் பிரதிபலிப்பாக எழுதப்பட்டன என்ற மாதிரியான உணர்வே எனக்கு ஏற்பட்டன. அத்துடன் கட்டுரை எழுதியவர்களின் பெயர்களும் போடப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இயக்கங்களில் இருந்தவர்கள் ஏறத்தாழ எல்லோருமே வேறு பெயர்களிலேயே அழைப்பட்டார்கள். அவ்வாறு கட்டுரை எழுதியவர்களுக்கும் எமது அமைப்பில் வேறு பெயர்கள் இருந்தன. அவர்கள் அந்தப் பெயர்களை கட்டுரையாளர்களாக வெளியிடுவதில் எந்தத் தவறுமில்லையென நான் கருதினேன்.

*இலக்கு* இதழ்கள் தொடர்ச்சியாக வரவேண்டும், பக்கங்கள் நிரப்பப்பட வேண்டும் என்ற அவசரத்தில் கருமங்கள் நடந்து கொண்டிருந்தன. இரண்டாவது *இலக்கு* இதழ் வெளிவந்ததிலிருந்தே தொடர்ச்சியாக எனது விமர்சனங்களை தோழர் விஸ்வாவிற்கு முன்வைத்தேன். *இலக்கு* இதழ்களில் வெளிவருபவைகளில் குறைந்தது முப்பது வீதத்தினையாவது வெளியாரிடமிருந்து பெறப்படும் ஆக்கங்களுக்கு ஒதுக்குங்கள் என்று அவரிடம் வலியுறுத்தினேன். அப்போதுதான் தேசிய விடுலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பலதரப்பட்ட சாராரின் சமூக நிலையைப் பிரதிநிதித்துவம் செய்யும் பன்முகத்தன்மை வெளிப்பட்டு, *இலக்கு* வெளிவருவதின் நோக்கம் பூரணத்துவமடையுமெனக் கூறினேன். 'எல்லாவிதமான படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்களைப் பெற்று வெளியிடப்படும் ஒரு கலை, இலக்கிய சஞ்சிகை போன்று, *இலக்கு* இதழை நடாத்த முடியாது. இது ஓர் அமைப்பு சார்ந்த தத்துவார்த்தப் பத்திரிகை' என்று தோழர் விஸ்வா எதிர்வாதம் புரிந்தார். 'அமைப்பு சார்ந்த பத்திரிகையென்றால் அமைப்பிலுள்ள சிலர் மாத்திரம் எழுத வேண்டிய அவசியம் கிடையாது. அமைப்பின் ஆதரவாளர்களிடமும் தேசிய விடுதலைப் போராட்டத்தினை முற்போக்கு பாதையில் இட்டுச்செல்ல வேண்டுமென்று எண்ணுகின்றவர்களிடமும் ஆக்கங்களைப் பெற்று, அவர்களின் பெயர்களுடன் பிரசுரிக்கலாம்' என்று நான் பதில் கூறினேன். ஆனால் அவர், *இலக்கு* அமைப்பு சார்ந்த பத்திரிகை, இதில் வேறு எவரது ஆக்கங்களையும் பிரசுரிக்க முடியாது என்பதில் உறுதியாக இருந்தார். இது அவரின் சொந்தக் கருத்தோ அல்லது அமைப்பின் நிலைப்பாட்டினை எனக்குச் சொல்கிறாரோ என எனக்கு அப்போது தெரியவில்லை. எனினும் எனது கருத்து செவிமடுக்கப்பட்டோ என்னவோ, நாலாவது *இலக்கு* இதழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யின் அரசியற் திட்டம் பற்றிய சமுத்திரனின் ஆய்வு ஒன்றுக்கு இடமளிக்கப்பட்டது.

இலக்குப் பத்திரிகைகளில் கட்டுரைகளை எவரெவர் எழுதுகிறார்கள் என்பது 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' அமைப்புக்குள் பலருக்கும் தெரிந்தே இருந்தது. அப்படித் தெரிந்த பின்னரும் அவர்களின் பெயர்களைப் போடுவதற்கு ஏன் மறுக்கிறார்கள்? அக்கட்டுரைகள் எழுதப்பட்ட பின்னர், அமைப்பின் முன்னணித் தோழரான விஸ்வாவின் பார்வைக்கு உட்படுத்தப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்டு வெளிவரவில்லை என்பதற்கு நான் சாட்சியமாக இருந்தேன். பல கட்டுரைகளைப் பார்த்து அவர் அதிருப்தி அடைந்ததையும், நான் பல தடவைகள் அவதானித்திருக்கிறேன். அதனால் அவர்கள் மொத்த அமைப்பின் கருத்துக்களை உள்வாங்கி எழுதுகிறார்களா என்பதில் எனக்கு சந்தேகமிருந்தது. இதன் வெளிப்பாடே 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யிலிருந்து பிளவுற்று 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி' உருவாகக் காரணமாக இருந்தது.

நான் சென்னைக்கு வந்து சில வாரங்கள் கழித்து, மரீனா கடற்கரையில் 'தமிழீழ விடுதலை இயக்க'த்தைச் சேர்ந்த மனோ மாஸ்ரர் (இவர் 1984 இன் பிற்பகுதியில் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' இயக்கத்தால் கொல்லப்பட்டார்) தலைமையில் நடந்த உண்ணாவிரதத்தினைப் பார்க்க நானும் தோழர் விஸ்வாவும் சென்றிருந்தோம். அந்த இயக்கத்தைச் சேர்ந்த ரமேஸ், சுதன் என்பவர்கள் 'தமிழீழ விடுதலை இயக்க'த்தினராலேயே கடத்தப்பட்டிருந்தனர். அவர்களை விடுதலை செய்யக் கோரியே அந்த உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. அதாவது உட்கட்சி ஜனநாயக மீறலுக்கு எதிரான போராட்டம். 1983 ஜுலை இனவன்செயலும் அதைத் தொடர்ந்த இந்திய ஆயுதப்பயிற்சியும் இயக்கங்களைத் திடீரென்று வீங்கச் செய்தன. வீங்கினால் வெடிக்கத்தானே செய்யும்! நாங்கள் அந்த உண்ணாவிரதப் போராட்டத்தினைப் பார்த்துவிட்டு வீடு திரும்புகையில் 'இப்படி எல்லா இயக்கங்களிலிருந்தும் கன ஆட்கள் உடைஞ்சு வெளியில் வரப்போறான்கள்' என்ற பொருள் தொனிக்கவே தோழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வா என்னுடன் பேசிக்கொண்டு வந்தார். எனக்கு அது கொஞ்சம் அதிர்ச்சியாக இருந்தது. இயக்கங்களிடையே மோதல்கள் வருமென்று பலரைப்போலவே நானும் எதிர்பார்த்தேன். ஆனால் இயக்கங்களுக்குள்ளும் 'கோஷ்டி கட்டி' சண்டை பிடிக்கப் போகிறார்கள் என்பது தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெரிய திருப்பு முனையாகவே எனக்குப்பட்டது.

ஆனால் தோழர் விஸ்வா கூற்றினை மெய்ப்பிப்பது போல் இயக்கங்களிலிருந்து இளைஞர்கள் வெளியேறத் தொடங்கினர். பெரும்பாலானவர்கள் இலங்கையில் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவர்களாகவும் அல்லது பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு அடுத்து என்ன செய்வதென்று தெரியாமலிருந்தவர்களாகவும் இருக்கையில், ஆயுதப் பயிற்சிக்காக இயக்கங்களின் பின்னால் ஓடி வந்து தமிழ்நாட்டிற்கு வந்து சேர்ந்தவர்கள். அவர்களை சென்னையின் வீதிகளிலும் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களது வீடுகளிலும் காணக் கூடியதாக இருந்தது. அவர்களில் பெரும்பாலானோர் தங்கள் உயிருக்கு ஆபத்துக்கள் வந்தே இயக்கங்களிலிருந்து வெளியேறியதாகக் கூறினார்கள். வெளியேறிய பின்னரும் அவர்களது இயக்கக்காரரின் கண்களில் படாமல் எப்படி ஒளித்திருப்பது பற்றியே அவர்கள் சதா சிந்தித்த வண்ணம் இருந்தனர். அவ்வாறானவர்களில் மிகச் சிறிய பகுதியினர் தொடர்ந்து தேசியப் போராட்டத்தில் ஈடுபட வேண்டுமென்பதில் அப்பொழுது உறுதியாக இருந்தனர். அப்படியானவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதும், அவர்களில் மிகவும் நம்பிக்கையானவர்களை அமைப்புக்குள் உள்வாங்குவதிலும் தோழர் விஸ்வா மிகுந்த ஈடுபாடு காட்டினார்.

நம்பிக்கையான செயலூக்கங்கொண்ட புதிய தோழர்கள் அமைப்பில் உள்வாங்கப்பட்டும் கொண்டிருந்தனர். அதனால் அமைப்பு வளர்ந்து கொண்டு செல்வது போலவும் தெரிந்தது. ஆனால் அந்த வளர்ச்சி தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகிப்பதற்குப் போதாமல் இருந்தது. எனவே குறைந்த பட்சம் உடன்படக் கூடியவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஐக்கிய முன்னணி அமைப்பதுதான், அமைப்பினைப் போராட்டத்தில் நிலைநிறுத்துவதற்கான ஒரேயொரு வழியாக இருந்தது. அந்த ஐக்கிய முன்னணி பற்றி தொடர்ச்சியாக அமைப்புக்குள் பேசப்பட்டுக் கொண்டிருந்த போதிலும் அதற்கான எந்த முயற்சியும் செய்யப்படவில்லை. இதற்குக் காரணம், ஐக்கிய முன்னணிக்கு எதிரான போக்கினை அமைப்பில் ஒரு சாரார் கடைப்பிடித்ததே. இவர்கள் ஐக்கிய முன்னணியை வலியுறுத்துபவர்களை 'தேசிய சனநாயகவாதிகள்' என்று எள்ளி நகையாடினார்கள்.

கலாச்சாரப் பரப்பிலும் கால் பதிக்க வேண்டுமென்ற தேவை அமைப்பால் உணரப்பட்டு *பார்வை* என்றொரு பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. அதனைப் பதிப்பித்தல், வடிவமைத்தல் போன்றவற்றோடு ஆக்கங்களைச் சேகரிக்கும் சுதந்திரமும் எனக்குத் தரப்பட்டது. 'மாணவர் கலாச்சார ஒன்றிய'த்தின் சார்பில் வெளியிடப்பட்ட அந்த இதழில் படைப்பாளிகளின் பெயர்களுடன் படைப்புகள் வெளியாகின. சமுத்திரன், செ.கணேலிங்கன் போன்றவர்களின் ஆக்கங்கள் அதில் வெளியாகியிருந்தன. இது 1985 ஆண்டு இறுதியில் வெளிவந்து ஒரேயொரு இதழுடன் மாத்திரம் நின்றுபோனது. 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'க்குள் அப்போது கருத்து மோதல்கள் மும்முரமாக ஆரம்பித்து, சென்னையில் ஸ்தாபனத்தின் அனைத்து செயற்பாடுகளும் ஸ்தம்பித்திருந்தமையே, இந்தப் பத்திரிகை நின்று போனதற்கான காரணம். பின்னர் அமைப்பு இரண்டாகப் பிளவுபட்டபோது *இலக்கு* பத்திரிகையின் உரிமம் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யினரிடம் போனது. பின்னர் 1986 ஆம் ஆண்டில், விஸ்வா தலைமையிலான 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி'யினர் *பயணம்* என்றொரு பத்திரிகை வெளியிட்டார்கள்.

'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' உருவாகி அதன் வளர்ச்சிப் பாதையை அவதானித்தால், அந்த அமைப்பு தேசிய விடுதலைப் போராட்டத்தினை முற்போக்காக இட்டுச் செல்லக் கூடிய வல்லமை வாய்ந்ததாக ஒருபோதும் இருக்கவில்லை. பாட்டாளிவர்க்கத் தலைமையில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, புதிய ஜனநாயகப்புரட்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுத்து தமிழீழத்தை உருவாக்குதல் என்பதே அதன் கொள்கையாக இருந்தது. ஆனால் 1983 ஆண்டு ஜுலை இனவன்செயலிற்கு முன்னரும் பின்னரும், அப்போதும், இப்போதும், பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்கள் 'தமிழீழம்' என்பதை விளங்கிக்கொண்டு ஆதரவளித்தது, ஆதரவளிப்பது, குறுந்தேசியவாதக் கருத்தியலின் அடிப்படையிலேயே. அதாவது 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன தவறு' அல்லது 'தமிழனுக்கு என்றொரு நாடு உருவாக வேண்டும்' என்ற மாதிரியான கண்ணோட்டத்தில். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் பிரிந்து போவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமை அவர்களுக்கு உண்டு என்ற நிலைப்பாட்டினை ஏற்றுக் கொண்டே, தோழர் விஸ்வா போன்றவர்கள் தமிழீழத்தினை ஆதரித்தார்கள். 'தமிழீழம்' 'தேசிய விடுதலை' என்ற இரு பதங்களையும் இணைத்து 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' உருவாக்கப்பட்டது. ஆனால் தமிழீழப் பிரிவினைக்கான போராட்டத்தினை எப்போதுமே பிற்போக்குத் தேசியவாதிகளே தமது கையில் வைத்திருந்தனர். எனவே இந்தச் சூழ்நிலையில் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' என்ன பங்கினை வகிக்கலாம் தத்துவார்த்த ரீதியிலும் தந்திரோபாய ரீதியிலும் எந்த மார்க்கத்தைக் கடைப்பிடிப்பது, எந்தப் பாதையில் செல்வது போன்ற விடயங்களில் அமைப்புக்குள் கருத்து மோதல்கள் ஏற்பட்டன.

ஐந்து 'பெரிய' இயக்கங்களிலிருந்து தமிழ் நாட்டிற்கு ஆயுதப்பயிற்சிக்காகச் சென்றவர்களில் ஒரு பகுதியினர் 1984 இன் பிற்பகுதியிலிருந்து இலங்கைக்குத் திரும்பத் தொடங்கினர். இவர்கள் இலங்கை அரச படைகளுக்கு எதிராகத் தாக்குதல்களை தீவிரமாக்கிய அதேவேளையில், தமது துப்பாக்கிகளை சக இயக்கப் போராளிகள் மற்றும் தமது சொந்தப் போராளிகள் மேலும் திருப்பத் தொடங்கியிருந்தனர். இதற்கு எமது அமைப்பான 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யும் இலக்காகியது. ஆயுதமேந்திய போராட்டம் என்று 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யினர் கூறிக்கொண்ட போதிலும், தம்மைப் தற்பாதுகாத்துக் கொள்ளவேணும் பலமான இராணுவ அணியின்றி இருந்தனர். இயக்கங்களிலிருந்து கருத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடு காரணமாக வெளியேறுபவர்களையும் துரோகிகளாகக் கருதி அதே இயக்கங்கள் சுட்டுக் கொன்றன. அவ்வாறு வெளியேறியவர்கள் பாதுகாப்புத் தேடியும், அமைப்பில் இணைந்து வேலை செய்வதற்கும் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யினரை நோக்கி வந்து கொண்டிருந்தனர். இதனால் தற்பாதுகாப்பேனும் சிறியளவில் ஆயுதப்படை ஒன்றைக் கட்டவேண்டிய சூழலுக்குள் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' இருந்தது. ஆனால் அவ்வாறாக அவசரமாகக் கட்டப்படும் ஆயுதப்படைக்கு முழு ஸ்தாபனமும் கட்டுப்பட வேண்டிய நிலை உருவாகலாமென்று கூறி அமைப்புக்குள் எதிர்க்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

1985 இன் பிற்பகுதியில் கருத்து முரண்பாடுகள் உச்சம் பெற்று அமைப்பின் பிளவு தவிர்க்கமுடியயததாகி விட்டது. தமிழ் நாட்டிலிருந்த அனைத்துத் தோழர்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு சென்றார்கள். அமைப்புக்குள் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றதாக அறியக் கிடைத்தன. அமைப்பு பிளவுபடுவதை எதிர்த்த பலர் அமைப்பிலிருந்து ஒதுங்கினார்கள். தோழர் விஸ்வா தலைமையிலான பிரிவினர் முன்வைத்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு பாட்டாளிவர்க்கத் தலைமையை உத்தரவாதம் செய்தல், ஐக்கிய முன்னணிக்காக வேலைசெய்தல், படை கட்டுதல் போன்ற கருத்துக்களை, ஒதுங்கியவர்கள் போக எஞ்சியிருந்த 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யினரின் பெருமபான்மையினர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யிலிருந்து 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி' என்ற அமைப்பு உதயம் பெறுவது அன்றைய காலகட்டத்தின் கட்டாயமாக இருந்தது.

புதிய அமைப்பு உருவாகிய பின்னர், 1986 இன் முற்பகுதியில் விஸ்வாவும் ஏனைய தோழர்களும் சென்னைக்குத் திரும்பியிருந்தனர். 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி' என்ற அமைப்பை உருவாக்கியது தனது வரலாற்றுக் கடமையென என்னிடம் கூறினார். 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யின் பாட்டாளிவர்க்கக் கோஷங்கள், வெற்றுக் கோஷங்கள் எனவும் அந்த அமைப்பு விரைவிலேயே முட்டி மோதிச் சிதறும் என்றும் கூறினார். விஸ்வா தனது அரசியல் பாதையில் ஏற்கனவே சில பிளவுகளைச் சந்தித்தவர். அவரது ஒவ்வொரு பிளவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியிலும் புரட்சிகர அரசியல் இருந்தது. ஒவ்வொரு 'பிளவின் பின்னரும் அவர் புதிய உத்வேகத்துடனே இருந்திருப்பார் என்பது இந்தப் பிளவின் பின்னரும் தெரிந்தது. பிளவின் மேல் பிளவு என்ற விளைவை வைத்து இடதுசாரிகளை விமர்சிக்கும் போக்கு அப்போதும் இருந்தது. அதனால், சிறியதொரு அமைப்பு, இரண்டு மிகச்சிறிய அமைப்புகளாக பிளவுபட்டுக் கிடப்பதைப் பற்றிய தோழர் விஸ்வாவின் அபிப்பிராயத்தை கேட்க நான் தவறவில்லை. அமைப்பில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது முக்கியமில்லை, அவர்கள் சரியானதொரு கருத்தின் பின்னால் நிற்கிறார்களா என்பதே முக்கியமென விஸ்வா அழுத்தம் திருத்தமாகக் கூறினார். நூறு கருத்துப் பிளவுகள் முட்டி மோதித்தான் இறுதியில் ஒரு சரியான புரட்சிகர அமைப்பு உருவாகும் என்பதில் அவர் நம்பிக்கை வைத்திருந்தார். எல்லாவிதமான ஆக்கபூர்வமான விவாதங்களும் கருத்து மோதல்களும் புரட்சிக்கே இட்டுச் செல்லும் என்பதே அவரது வாதமாக இருந்தது.

'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி'யில் யாழ்ப்பாணக் குடாநாட்டினை மையப்படுத்தி வேலை செய்த பெரும்பான்மையினருக்கும் தமிழ் நாட்டில் தங்கியிருந்து வேலை செய்தவர்களுக்கும் இடையில் பாரிய கருத்து வேறுபாடு இருந்தது. குறிப்பாக தோழர் விஸ்வா 1983 - 1985 காலப்பகுதியில் பெரும்பகுதியினை தமிழ் நாட்டில் கழித்ததால், அமைப்பினை ஒட்டு மொத்தமாக (சித்தாந்தம் மற்றும் நடைமுறை) வழி நடத்த முடியாமல் இருந்தது. இதுவும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இப்படியான சிக்கல் எதிர்காலத்தில உருவாகாமலிருப்பதற்கான வழிவகைகளை பற்றிச் சிந்திக்குமாறு விஸ்வாவிடம் நான் கூறினேன். அதற்கு, தனியொருவரைச் சுற்றி ஓர் அமைப்பினைக் கட்ட முடியாதென்றும், ஓர் அமைப்பில் தனியொருவரின் செயற்பாட்டினால் எல்லாவற்றையும் சீர் செய்து விடமுடியாதெனவும் விஸ்வா என்னிடம் கூறினார்.

தோழர் விஸ்வாவின் துணைவியார் ஜெயா அக்காவும் ஆனந்தியும் இலங்கையிலிருந்து 1984 ஆம் ஆண்டு ஒகஸ்டில் சென்னை வந்து சேர்ந்தனர். அதன் பின்னர் நானும் ஆனந்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடம்பாக்கத்திலிருந்து சென்னையில் வேறு பல வீடுகளுக்கு மாறிச் சென்று, இறுதியில் அண்ணாநகரிற்கு வந்து சேர்ந்தோம். விஸ்வா தம்பதியினர் சிறிது காலம் சென்னையிலிருந்துவிட்டு 1985 இல் கடலூருக்குக் குடிபெயர்ந்தனர். அமைப்பு பிளவுபடும் காலகட்டத்தில், 1985 ஆம் ஆண்டு நவம்பரில் விஸ்வா பெண் குழந்தை ஒன்றுக்கு தந்தையானார். அந்தக் குழந்தைக்கு சிந்து என்று பெயர் சூட்டப்பட்டது. அவர்கள் குழந்தையுடன் கடலூரிலிருந்து சென்னைக்கு மீண்டும் இடம்பெயர விரும்பி, எல்லோரும் தங்குவதற்கு ஏதுவாக பெரிய வீடொன்று பார்க்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டார்கள்.

1986 ஆம் ஆண்டின் முற்பகுதியிலிருந்து விஸ்வா தம்பதிகளுடனும் அவர்களது மூன்று மாதக்குழந்தை சிந்துவுடனும் விஸ்வாவின் தங்கை விஜயலக்ஷ்மியுடனும் அண்ணா நகரில் வசிக்கத் தொடங்கினோம். எங்களுடன் 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி'யின் தோழர்கள் சிலரும் அவ்வப்போது தங்குவதும் போவதுமாக இருந்தனர். 1990 இல் 'தமிழீழ விடுதலைப்புலிகளா'ல் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதை செய்து கொல்லப்பட்ட எமது அமைப்பின் தோழர், எனது நல்ல நண்பன் ரஜீசும் எங்களுடன் அந்த வீட்டில் தங்கியிருந்தான். அந்த வருடத்தில் விஸ்வாவின் ஆரம்பகாலத் தோழர், இலண்டனில் அமைப்பு சார்ந்து செயற்பட்ட சிறிதரன் அவர்களும் இலண்டனிலிருந்து வந்து எங்களுடன் தங்கிச் சென்றார். விஸ்வாவை நினைக்கும் போதெல்லாம் அவர் கடைசியாக குடும்பத்துடன் குடியிருந்த அந்த அண்ணாநகர் வீடும் நினைவுக்கு வரும். அந்த வீட்டில் விஸ்வாவுடனும் மற்றும் தோழர்களுடனும் கழித்த நாட்கள், எங்களைப்போலவே உலகமெல்லாம் சிதறியிருக்கும் எல்லாத் தோழர்களுக்கும் எப்போதுமே மகிழ்ச்சியும் துக்கமும் கலந்த நினைவுகளைத்தான் கொண்டுவரும்.

தோழர் விஸ்வா தமது ஸ்தாபன அரசியல் வேலைகளுக்கான பணத்தேவையின் நிமித்தம் 1981 ஆண்டளவில் தனது பெற்றோருக்கு சொந்தமான காணியொன்றினை அடமானம் வைத்திருந்தார். அந்தக் காணியை மீள வேண்டிய காலத்தவணை முடிவடைந்திருந்ததால், அந்த காணியை மீள்வதற்காகவே 1986 ஆண்டு செப்டம்பர் மாதமளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு அவர் அவசரமாக போக வேண்டியிருந்தது. அத்துடன் 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி' என்ற அமைப்பு உருவாகி எட்டு மாதங்களே ஆகியிருந்ததால், சில அமைப்புக் கருமங்களையும் ஆற்றலாமெனவும் எண்ணியிருந்தார். அவர் அந்தக் கருமங்களையெல்லாம் முடித்துவிட்டு தமிழ்நாட்டை நோக்கி சாதாரண மீன்பிடிப் படகொன்றில் திரும்புகையிலேயே யாழ்ப்பாண குடாநாட்டுக் (குருநகரிற்கும் நெடுந்தீவிற்கும் இடைப்பட்ட) கடற்பரப்பில் காணாமல் போனார். *15.10.1986* அன்று மாலை ஆறரை-ஏழு மணியளவில், குருநகர் கடற்கரையிலிருந்து நெடுந்தீவை நோக்கிப் புறப்பட்ட அந்தப் படகில் அவருடன் மேலும் 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி'யின் இரு தோழர்களும், இருபது சாதாரண பயணிகளும் இருந்தனர். இந்த சாதாரண பயணிகள் யுத்தத்தின் கொடுமையால் யாழ்ப்பாணக் குடாநாட்டைவிட்டு வெளியேறி தமிழ் நாட்டிற்கு தப்பி வர முயன்றவர்கள். இவர்களும் விஸ்வாவின் மனிதாபிமானத்திற்குச் சாட்சியாய், விஸ்வாவுடன் மறைந்து போனார்கள்.

குருநகரில் இராணுவ முகாம் ஒன்று இருந்ததால், அந்தப் படகு இலங்கை அரச படைகளின் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கலாம் என்ற எண்ணமே உடனடியாக எல்லோருக்கும் ஏற்பட்டது. அதனால் விஸ்வாவின் தோழர்கள், நண்பர்கள், அந்தப் படகில் சென்ற அவரது தோழர்களின் மற்றும் ஏனைய பயணிகளின் குடும்பத்தினர் இலங்கை அரசின் இராணுவ முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் தேடிப்பார்ப்பதற்கு பலரின் உதவியை நாடினார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு எங்குமே வைத்திருக்கப்படவில்லை என்பது சில மாதங்களிலேயே உறுதியானது. சில உறவினர்கள் கிறிஸ்தவ மதகுருமாரின் உதவியுடன் குருநகர் இராணுவ முகாமின் கட்டளைத் தளபதியையும் சந்தித்துப் பேசியபோது, அவரும் அத்தினத்தில் அந்தக் கடற்பரப்பில் வைத்து எவரும் கைது செய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தினார். அந்தப் படகு புறப்பட முன்னரும், புறப்பட்ட பின்னரும், வேறு சில படகுகளும் குருநகரிலிருந்து நெடுந்தீவை நோக்கிப் புறப்பட்டு பாதுகாப்பாக நெடுந்தீவை வந்தடைந்துள்ளன என்பதும், அந்தக் கடற்பரப்பில் நள்ளிரவில் மீன் பிடிக்கச் சென்ற படகுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பாக திரும்பி வந்தன என்பதும் பின்னர் தெரிய வந்தன.

தோழர் விஸ்வா காணாமற்போய் ஒரு மாதத்தின் பின்னர் சிந்து தனது முதலாவது பிறந்ததினத்தை நாங்கள் இருந்த அண்ணாநகர் வீட்டில் உறவினர்கள், தோழர்கள் மற்றும் நண்பர்கள் சகிதம் கொண்டாடினாள். விஸ்வாவின் மனைவி ஜெயா அக்காவையும் மகள் சிந்துவையும் இனிமேல் தமிழ் நாட்டிலும் வைத்திருக்க முடியாது, இலங்கைக்கும் திருப்பி அனுப்ப முடியாது என்ற நிலையில், வெளிநாட்டிற்கு அனுப்புவதே ஒரேவழியென்று முடிவெடுக்கப்பட்டது. அவர்களைப் பாதுகாப்பாக இலண்டனிற்கு அனுப்பி வைப்பதற்கு துணைசெய்யுமாறு அமைப்பினர் என்னிடம் பொறுப்பினை ஒப்படைத்தார்கள். 1987 ஆண்டின் முற்பகுதியில் அவர்களை முதலில் மும்பாயிற்கு அழைத்து வந்தேன். பின்னர் அங்கிருந்து புதுடெல்கிக்குக் கூட்டிச்சென்று அவர்களை இலண்டனிற்கு அனுப்பி வைத்தேன். இத்துடன் விஸ்வாவின் மீது நான் கொண்டிருந்த தோழமைக்கும் நட்புக்கும் அளவு கடந்த விசுவாசத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டேனென நான் நினைக்கவில்லை. அவருடனான எனது பந்தம் தொடர்கின்றது, இனிமேலும் தொடரும்.

தோழர் விஸ்வா காணாமற்போய் முப்பது வருடங்கள் ஆகின்றன. அவர் அப்போது காணாமற் போயிருக்காவிடினும் எதிரிகள் இன்றுவரை அவரை துரத்திக்கொண்டே தான் இருந்திருப்பார்கள் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. அவர் இலங்கை என்ற நாட்டை நிரந்தரமாகப பிரிப்பதற்காகப் போராடவில்லை. தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலை உணர்வினை முன்னேறிய போராட்டக் குணாம்சமாக அவர் கருதினார். அதனால் தமிழீழத்திற்கான போராட்டத்தினை இலங்கையின் ஒட்டுமொத்த மக்களின் விடுதலைக்கான முதற்படியென அவர் எண்ணிச் செயற்பட்டார். ஆனால் கடந்த முப்பது வருடத்தில் இலங்கையில் நடந்து முடிந்ததோ வேறு. அவற்றினை வரிசைப்படுத்துவது எனது இந்தப் பதிவின் நோக்கங்களில் ஒன்றல்ல. ஆனால் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையை சிங்கள இனவாதிகளும் பிற்போக்கு தமிழ் தேசியவாதிகளும் முழுமையாகக் கையாளும் நிலையேற்பட்டால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது தமிழ் மக்ககளின் தேசிய விடுதலைப்போராட்டம் பிற்போக்குத் தமிழ் தேசியவாதிகளின் கைகளில் முற்றுமுழுதாக வீழ்ந்தால், இலங்கை சர்வதேச சக்திகளின் ஒரு விளையாட்டுக்களமாகுமென விஸ்வா அடிக்கடி கூறிவந்தது இன்று நிஜமாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை மார்க்சிய - லெனினிசக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினரும், 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி'யின் முக்கிய செயற்பட்டாளரும், 'தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி' (NLFT) 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி' (PLFT) என்ற அமைப்புகளை ஸ்தாபித்து வழிநடாத்தியவருமான தோழர் வி.விசுவானந்ததேவன் மறைந்து இவ்வருடம் (15.10.2016) 30 ஆண்டுகளாகின்றன.

தோழர் வி.விசுவானந்ததேவனை நினைவுகூரும் முகமாக, 1982 ஆம் ஆண்டில் அவரால் எழுதப்பட்ட இரண்டு கடிதங்கள், 1983 ஆம், 1984 ஆம் ஆண்டுகளில் அவரால் எழுதப்பட்ட இரண்டு கட்டுரைகள் இந்த நூலில் இடம்பெறுகின்றன. இக்கடிதங்களும் கட்டுரைகளும் அக்காலகட்ட அரசியல் நிலவரங்களை பிரதிபலிக்கின்றன. எனவே அக்காலப்பகுதியிலான நாட்டின் மொத்த அரசியல் நிலைமைகளையும் கருத்திற்கொண்டு இவைகள் வாசிக்கப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக மறைந்த தோழர் வி.விசுவானந்ததேவனின் அக்காலகட்டத்து கருத்துக்கள் என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசுவானந்ததேவன் கடிதம் (1)




தொடர்ச்சி மறுபக்கம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விசுவானந்ததேவன் கடிதம் (1) தொடர்ச்சி:






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவானந்ததேவன் கடிதம் (2)



தொடர்ச்சி மறுபக்கம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விசுவானந்ததேவன் கடிதம் (2) தொடர்ச்சி:






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையக மக்களின் பிரச்சனை



இலங்கையின் மலைப் பகுதியில் உள்ள பெரும் தோட்டங்களில் தொழிலாளர்களாக வாழும் தமிழ் மக்களையே மலையக மக்கள் என அழைக்கிறோம். இவர்களில் பலர் கொழும்பு போன்ற நகரங்களுக்கும் வேறு பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்ததாலும் இவர்கள் சமூக, கலாச்சார, மொழி ஒருமைப்பாட்டால் மலையக மக்களில் ஒரு பகுதியினராகவே தம்மை இனங் காட்டுகின்றனர். கொழும்பில் வாழும் ஞானம் மற்றும் பெரும் இந்திய முதலாளிகள் தம்மை இவர்களுடன் இனம் காட்டுவதில்லை. நாமும் இவர்களை மலையக மக்களில் ஒரு பகுதியினராகக் கருத முடியாது. மலையக மக்களின் பிரச்சனை இன்று மிகவும் சிக்கலான பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. எமது பொருளாதாரத்தின் பெரும்பகுதியை ஈட்டித்தரும் (1) நாம் தினமும் அருந்தும் தேநீருக்கான தேயிலையை உருவாக்கும் இம்மக்களைப் பற்றி நம்மில் எத்தனைபேர் சிந்திக்கின்றோம்? கடந்த காலங்களில் நவீன அடிமைகளாய் வாழ்ந்த இம்மக்களைப்பற்றி தமிழ், சிங்கள பாராளுமன்ற அரசியல்வாதிகள் அக்கறைப்பட்டதே கிடையாது. மலையக மக்களிடையே உருவான தலைவர்கள் இவர்களை வைத்துப் பிழைப்பு நடத்தினார்களே தவிர ஆக்க பூர்வமான எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளையும் மேற்கொண்டதில்லை. மலையக மக்களின் பிரச்சினையின் தோற்றப்பாட்டையும் அது வளர்ந்து வந்த வரலாற்று, சமூக, பொருளாதார காரணிகளையும் ஆராய்வது அத்தியாவசியமானது. இப்பிரச்சினையை முழுமையாக இச்சிறு கட்டுரையில் ஆராய முடியாதெனினும் சில அடிப்படைப் பிரச்சனைகளை முன் வைப்பதுடன் மேலும் ஆக்க பூர்வமான ஆய்வுகளையும் விவாதங்களையும் நடத்த வழியைத்திறந்து விடுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**மலையக மக்களின் வருகையும் அதன் தாக்கங்களும்**

இலங்கைக்கு பிரிட்டிசார் வருகைதந்தவுடன் சில மாற்றங்களைக் கொண்டு வந்தனர். எமது பொருளாதாரத்தை தமது தேவைக்கேற்ப மாற்றினர். எமது நீர்ப்பாசன முறைகள் அழிக்கப்பட்டன அல்லது கவனிக்கப்படாமல் விடப்பட்டன. மலையகத்தில் கண்டிய நிலப்பிரபுக்கள் விவசாயிகளின் நிலங்கள் பறிக்கப்பட்டு மலைகளிலுள்ள காடுகளும் அழிக்கப்பட்டு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு அந்த காலத்தில் தமிழ் நாட்டின் தென்மாவட்டங்களில் நிலவிய வறட்சியான சூழ்நிலையைப் பாவித்து அங்கிருந்து தோட்டங்களிற்கு கூலித்தொழிலாளர்களை கொண்டு வந்தனர். அக்காலத்தில் தமிழ் நாட்டில் நிலவிய சாதிமுறையைத் தமக்கு சாதகமாக பயன்படுத்தினர். உயர்சாதியினரைக் கங்காணியாக நியமித்து அவர்களே ஆட்களைச் சேர்த்து வந்தனர். ஆரம்பத்தில் வீதிகள், புகையிரதப்பாதைகள் அமைப்பதற்கும், பின் காடுகளை அழித்து தோட்டங்கள் உருவாக்கவும் கொண்டுவரப்பட்ட தொழிலாளர் பயன்படுத்தப்பட்டனர். இவர்கள் நவீன அடிமைகளாக தோட்டங்களில் வைக்கப்பட்டனர். மற்றைய ஆலைத்தொழிலாளருக்கு உரிய உரிமையான தொழில் சுதந்திரமில்லை. தமது உழைப்பு சக்தியை விரும்பிய இடத்தில் சுதந்திரமாக விற்கும் உரிமை கூட இருக்கவில்லை. ஒரு தோட்டத்திலிருந்து இன்னொரு தோட்டத்திற்கு நிர்வாகத்தின் அனுமதியின்றிப் போகமுடியாது. சிங்கள கிராமங்களிலிருந்து பிரித்து வைக்கப்பட்டனர். பிரிட்டிசார் இங்குள்ள மக்களைக் கூலிக்கமர்த்தாது இந்தியாவிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு வந்ததன் காரணங்களை பின்வருமாறு தொகுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இங்குள்ள மக்கள் குறைந்த கூலிக்கு வேலைசெய்யத் தயாராக இருக்கவில்லை.

2. உள்ளூர் மக்களின் சுதந்திர வேட்கை

3. இவர்களைக் கொண்டு வருவதன் மூலம் இனங்களுக்கிடையில் குரோதத்தினை உருவாக்கி தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தல்.

பிரிட்டிசார் பல தேசிய இனங்களையும் வலுக்கட்டாயமாக ஒரு நிர்வாகத்தில் இணைத்து பின் பிரித்தாளும் தந்திரத்தையும் கையாண்டனர். ஆரம்பத்தில் 1830 ஆம் ஆண்டளவில் தோட்டப்பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்கள் கோப்பித் தோட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்டனர். கோப்பிச் செய்கை எதிர்பார்த்த வருவாயைத் தராததினால் கோப்பிச் செய்கை கைவிடப்பட்டது. தேயிலை, றப்பர், தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. கோப்பிப் பயிர்ச்செய்கை காலத்தில் சில மாதங்களில் மட்டும் தொழிலாளர் வந்து பின் திரும்பி செல்லும் போக்கிருந்தது. தேயிலை, றப்பர் செய்கை ஆரம்பமானவுடன் பெரும்பான்மையோர் நிரந்தரமாகவே தங்கிவிட்டனர். 1860 ஆம் ஆண்டளவிலிருந்து தேயிலை, றப்பர் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன.

தோட்டத் தொழிலாளரது பெருமளவான வருகை 1930 ஆண்டு வரைக்கும் இடம்பெற்றது. ஆரம்பத்திலிருந்தே தோட்டத் தொழிலாளருக்கு எதிரான உணர்வுகள் சிங்கள மக்களிடம் சிங்களத் தலைவர்களால் ஊட்டப்பட்டன. இவர்கள் வந்தனாலேயே சிங்கள விவசாயிகளுக்கு நிலப்பிரச்சனை ஏற்பட்டதாகப் புகட்டப்பட்டது. மேலும் தோட்டங்களுடன் கிராமங்கள் தொடர்புபட முடியாமல் தோட்ட நிர்வாகம் வைத்திருந்ததனால் ஒருவரையொருவர் புரியவோ தமது பொதுப்பிரச்சனைக்காக இணைந்து போராடவோ முடியாத நிலை நிலவி வந்தது. இவர்களிடம் போராட்ட குணாம்சம் மறைந்திருந்ததை யாரும் மறக்க முடியாது. ஆலைத் தொழிலாளர்போல் முன்னேறிய உற்பத்திச் சாதனங்களுடன் உறவில்லாமை, நிலப்பிரபுத்துவத்தை உடைத்து வராமல் ஏகாதிபத்தியத்தால் புகுத்தப்பட்ட முதலாளித்துவ உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவு என்பன காரணமாக இவர்கள் நகர்ப்புற பாட்டாளிகளின் அளவு அரசியல் உணர்வு பெற்று முன்னணி பாத்திரம் வகிக்க முடியவில்லை. சில போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. 1939 ஆம் ஆண்டு ஹங்குராங்கந்தவில் உள்ள முள்ளோயா தோட்டத்தில் முதன்முதலாக கோவிந்தன் என்னும் தொழிலாளி வீரமரணம் எய்தினார்.

தோட்டத் தொழிலாளருக்கு எதிரான உணர்வுகளைத் தொழிலாளர்கள் தலைவர்களும் கொண்டிருந்தனர். முதலாவது அரசாங்க சபையில் (1931க்கு பின்) பெரும் தொழிலாளர் தலைவர் எனச் சொல்லப்படும் ஏ.ஈ. குணசிங்கா போன்றோர் தோட்டத் தொழிலாளருக்கு எதிரான குரலெழுப்பினர். தம்மை சோசலிஸ வாதிகளாகக் காட்டிய சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த என்.எம். பெரேராவும் பிலிப் குணவர்த்தனாவும் அரசாங்க சபையில் தோட்டத் தொழிலாளர்களை வெளியேற்றும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். தோட்டத் தொழிலாளர்களை ஸ்தாபனப்படுத்த முதலில் முனைந்தவர் எஸ். நடேசஐயராகும். இவர் 1931 இல் அகில இலங்கை உழைப்பாளர் சம்மேளனம் எனும் அமைப்பை உருவாக்கினார். இது 1933 வரையும் தான் நிலைத்து பின் 1940 இல் ஜவகர்லால் நேருவின் ஆலோசனைப்படியே இலங்கை - இந்திய காங்கிரஸ் உருவானது. இதுவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாக உருவெடுத்தது. தொண்டமானின் தலைமையில் தொழிலாளர்கள் அணிதிரண்டனர். 1947 பாராளுமன்றத் தேர்தலில் 7 பிரதிநிதிகள் மலையக மக்களிலிருந்து தெரிவாயினர். அத்தோடு மலையக மக்கள் இடதுசாரிகளை ஆதரித்து அவர்களது வெற்றிக்கு உதவினர். அன்று நடைபெற்ற இடைத்தேர்தலில் இலங்கரத்தினாவுக்கு ஆதரவு நல்கி வெற்றி பெறச்செய்தனர்.

இவை யாவும் சேர்ந்து டி.எஸ். சேனநாயக்காவை விழிப்படைய வைத்தது என்றும், இவர்கள் இடதுசாரிகளுடன் நிற்பார்கள் என்பதைப் புரிந்து, சுதந்திரம் கிடைத்தவுடன் 1948 இல் முதல் செய்த வேலை பிரஜா உரிமைச் சட்டத்தை நிறைவேற்றி இவர்களது பிரஜா உரிமையை இல்லாது செய்தார். டி.எஸ். இன் இந்நடவடிக்கைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் தனிப்பெரும் தமிழ் தலைவரான ஜீ.ஜீ அவர்கள். டி.எஸ்.உம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீ.ஜீ உம் தமது வர்க்க நலனில் ஒன்றிணைந்ததில் வியப்பொன்றும் இல்லை. ஏற்கனவே தோட்ட நிர்வாகத்திலும், தோட்டப்பாடசாலை ஆசிரியர்களாகவும் இருந்த யாழ்ப்பாணத்தவர் நடந்து கொள்ளும் மோசமான போக்கினால் யாழ்ப்பாண எதிர்ப்பு தோட்டத் தொழிலாளரிடையே இருந்தது.

ஜீ.ஜீ யின் இத்துரோகத்தனம் யாழ்ப்பாண எதிர்ப்பை மேலும் அதிகமாக்கியது. ஜீ.ஜீ யின் இந்நடவடிக்கையை எதிர்த்தே தமிழ்க் காங்கிரஸிருந்து வெளியேறி தழிழரசுக்கட்சியை செல்வநாயகம், வன்னியசிங்கம் போன்றோர் உருவாக்கினாலும் தோட்டத்தொழிலாளரை அணிதிரட்டிப் போராடவில்லை. தமிழரசுக்கட்சி தமிழ் தேசிய, குட்டி முதலாளிகளின் நலனையே ஆரம்பத்தில் பிரதிபலித்தது. தோட்டத் தொழிலாளரின் நலனில் தேசிய, குட்டி முதலாளிகளின் நலன் தங்கியிருக்காததும், தமிழரசுக்கட்சி பாராளுமன்றக்கட்சி ஆகையால் தோட்டத்தொழிலாளருக்கு வாக்கின்மையாலும், தோட்டத் தொழிலாளர்களைப்பற்றி அக்கறைப்படவேயில்லை. தொண்டமான 1948 இல் பிரஜா உரிமைச் சட்டத்திற்கு எதிராக ஒருநாள் ஹர்த்தாலுடன் போராட்டத்தை நிறுத்திக்கொண்டார். பின் தொண்டமான் தோட்டத்தொழிலாளரைக் காட்டிக்கொடுத்து நியமன எம்.பி பதவிக்கும் மந்திரிப்பதவிக்கும் யூ.என்.பி யுடன் சங்கமமானார். இடதுசாரிக் கட்சிகளான லங்கா சம சமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவை கூட வாக்கு இல்லாத இவர்களைத் திரும்பிப் பார்க்கவில்லை. மற்றும் இடதுசாரிகள் பலரும் பாராமுகமாயிருந்தனர். மக்கள் விடுதலை முன்னணியினர் 1971 கிளர்ச்சிக்கு முன்பு மிகவும் கீழ்த்தரமான முறையில் இவர்களுக்கெதிராக பிரச்சாரம் செய்தனர்.

1971 ஏப்ரல் கிளர்ச்சியின் முன்னோடியான தயாரிப்பு வகுப்புகள் ஐந்தில் இரண்டாவது வகுப்பு முழுவதும் இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற பொருளில் பிரதானமாக மலையகத் தொழிலாளருக்கெதிராகவும் பொதுவாக தமிழ் மக்களுக்கு விரோதமானதாகவுமே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையக தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்தான் ஆரம்பத்தில் பெரிய சங்கமாக இருந்தது. இதன் இந்திய சார்புத்தன்மை பிற்போக்கு தலைமை காரணமாக தொழிலாளர்கள் சிந்திக்கும் ஆற்றலிழந்து தொழிற் சங்க சேற்றுக்குள்ளேயே இருந்தார்கள். இப்பிற்போக்குத் தலைமை சிங்களத் தொழிலாளர்களுடன் தோட்டத்தொழிலாளர் இணைய முடியாதவாறு தடுத்தே வைத்திருந்தது. பின்னர் உருவான அஸிஸ். வெள்ளையன் போன்றோரின் சங்கங்களும் தொழில் தகராறுகள் போன்ற சிறு பிரச்சினைகளுக்கான தொழிற் சங்க நடவடிக்கை என்ற எல்லைக் கோட்டிற்கு அப்பால் செல்லவில்லை. சம சமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சிகளினால் உருவாக்கப்பட்ட தோட்டத் தொழிலாளருக்கான தொழிற் சங்கங்களும் தொழிற் சங்க வாதத்திலேயே மூழ்கின. 1965ஆம் ஆண்டிற்குப் பின் உருவாக்கப்பட்ட சண்முகதாசனின் தலைமையிலான செங்கொடிச்சங்கம் ஓரளவு தொழிலாளர்களை அரசியல் மயப்படுத்தினர். இவர்கள் பாராளுமன்றப் பாதையில் செல்லாததனால் இப்படிச்செய்வது சாத்தியமாயிற்று. செங்கொடிச்சங்கத் தோட்டங்களில் தலைமையின் வழிகாட்டலின்றியே பல போராட்டங்கள் நடத்தினர். மடக்கும்பரை, கீனாக்கலை, றங்கலை ஆகிய பகுதிகளில் போராட்டங்கள் நடத்தினர். கீனாக்கலை போராட்டத்தில் இரு தொழிலாளர்கள் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகினார்கள். இவ்வமைப்புக் கூட தொடர்ந்து முன்செல்ல முடியாது போயிற்று. இதற்கான காரணங்கள்:

1. மலையகமக்களின் யதார்த்த நிலைமையை உணராத வறட்டு மார்க்ஸிய பார்வை.

2. தோட்டத் தொழிலாளரே புரட்சியின் முதன்மை சக்தி எனும் தவறான கண்ணோட்டம் (இவர்கள் முக்கியமான சக்தி, முதன்மை சக்தியன்று).

3. தொழிற்சங்கத் தலைமையின் துரைத்தனம்.

இன்னொரு தவறான போக்கும் மலையகத்தில் இருந்த சில அதிதீவிர சக்திகளால் முன்வைக்கப்பட்டது. தொழிற்சங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையே திரிபுவாத வேலை எனவே தொழிற்சங்கங்களை முற்றாக நிராகரிக்க வேண்டும் என்பதே இத்தவறான கண்ணோட்டம் இந்தியாவிலுள்ள சில அதிதீவிரவாதிகளிடமிருந்து இவர்களுக்குக் கிடைத்தது. 1971 ஏப்ரல் கிளர்ச்சியைத் தொடர்ந்து தொழிற்சங்கத் தலைவர்கள் பயம் காரணமாகவும் சுயலாபம் கருதியும் அரசியலற்ற தொழிற் சங்கம், தொழிற்சங்கத்தின் சுயாதீனம் எனும் தவறான கருத்துக்களை முன்வைத்தனர். இதனால் செங்கொடிச்சங்கம் போன்ற தொழிற்சங்கங்கள் கூட சில துரைமார்களின் வியாபார நிறுவனங்களாக மாறியுள்ளன.

**ஒப்பந்தங்கள்**

இந்நாட்டில் காலத்திற்கு காலம் பல ஒப்பந்தங்கள் பொருட்களை விற்பது வாங்குவது போல் செய்யப்பட்டன. ஆயினும் நாடற்றவர் பிரச்சனை தீர்ந்தபாடில்லை. முதலில் இந்திய பாகிஸ்தானிய பிரஜா உரிமைச்சட்டம் கொண்டுவரப்பட்டு 1இலட்சத்து 35ஆயிரம் பேருக்கு பிரஜா உரிமை வழங்கப்பட்டது. பின்னர் 1954ஆம் ஆண்டு நேரு-கொத்தலாவலை ஒப்பந்தம் செய்யப்பட்டும் அதனால் எதுவித பலனும் கிடைக்கவில்லை. நாடற்றவர் பிரச்சனையைத் தீர்க்க எண்ணி ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் 1964ஆம் ஆண்டு செய்யப்பட்டது இது மக்களினுடைய எந்த விருப்பு வெறுப்பையும் கணக்கிலெடாது இரு நாட்டுத் தலைவர்களும் சரக்கு பரிவர்த்தனை போன்ற தமது ஒப்பந்ததைச் செய்து முடித்தனர்.

இவ்வொப்பந்தப்படி 5இலட்சத்து 25ஆயிரம் பேரை இந்திய அரசு ஏற்றுக் கொள்வதாகவும் 3இலட்சம் பேரை இலங்கை அரசு ஏற்றுக் கொள்வதாகவும் உடன்பாடானது. இவ்வொப்பந்தம் 79ஆம் ஆண்டுடன் காலாவதியாகியும் மேலும் 5 ஆண்டுகள் நீடிக்கப்பட்டது. இதுவரைக்கும் 3இலட்சத்து 50ஆயிரம் பேர் தான் இந்தியா சென்றுள்ளார்கள். இனப்பெருக்கத்தைக் கணக்கிலெடுப்பின் 3இலட்சம் பேர்தான் இந்தியா சென்றுள்ளனர். 1974ஆம் ஆண்டு ஸ்ரீமாவும் இந்தியாவும் எஞ்சிய 1½இலட்சம் பேருக்கான ஒப்பந்தம் செய்தார்கள். 75ஆயிரம் பேரை இலங்கையும் 75ஆயிரம் பேரை இந்தியாவும் ஏற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. மொத்தமாக 6இலட்சம் பேருடன் குடிப்பெருக்கத்தால் அதிகரிப்பவர்களையும் இந்தியா ஏற்க வேண்டும். மொத்தமாக 4இலட்சமும் குடிப்பெருக்கத்தால் அதிகரிப்பவர்களும் இலங்கையில் குடியுரிமை பெறத் தகுதியுள்ளவர்கள். ஆனால் இலங்கையரசு 7பேர் இந்தியா சென்றால் 4பேருக்குத்தான் பிரஜா உரிமை வழங்குகிறது. எப்படியிருப்பினும் இதுவரைக்கும் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டும் நாடற்றவர் பிரச்சினை தீராத ஒரு பிரச்சனையாகவேயுள்ளது. இவ்வொப்பந்தங்கள் எழுதிய காலத்தில் குறிப்பாக ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் எழுதிய பொழுது சில வறட்டுவாதிகள் இரு முதலாளித்துவ அரசுகளுக்கும் இவ்வொப்பந்தம் எழுதும் அருகதையில்லை. இதுபற்றி நாம் அக்கறைப்படத் தேவையில்லை. சோசலிஸம் வந்த பின்தான் இவையெல்லாம் தீர்க்கப்படும் என்று பிதற்றினர். அன்றைய அரசில் ஒட்டிக்கொண்டிருந்த சமசமாஜக் கட்சியினரும் கம்யூனிஸ்ட் கட்சியினரும் இவ்வொப்பந்தத்தை ஆதரித்தனர். அன்று இவ்வொப்பந்தத்தை ஆதரித்த பலரும் இன்று பாவமன்னிப்புக்காக இவ்வொப்பந்தத்திற் கெதிராகக் கூச்சலிடுவது வேடிக்கையானது. காலங்கடந்து ரத்துச் செய்யும்படி கேட்பதில் அர்த்தமில்லை. விரும்பியோர் இங்கு வாழவும் விரும்பியோர் இந்தியா செல்லவும் வழிவகுக்கும் நிலைமையே நியாயமானது. ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் நடைமுறையிலுள்ள இவ்வேளையில் இங்கு இருக்கப்போகும் சகலருக்கும் உடனடியாக இங்கு பிரஜா உரிமை வழங்கும்படி போராடுவதே அவசியமானது.

**மலையக மக்களின் இன்றைய நிலையும் பிரச்சினைக்கான தீர்வும்**

நாட்டில் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகள் வேலையில்லாத் திண்டாட்டம் என்பன சிங்கள மக்களைத் தோட்டங்களை நோக்கி நகர்த்தியது. தோட்டத் தொழிலாளரைக் காட்டி அவர்களுக்கு எதிரான துவேசத்தைக் கோஷித்தே பல அரசியல்வாதிகளும் சிங்கள மக்களை அணிதிரட்டினர். சென்ற அரசாங்க காலத்தில் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டு சில தோட்டங்களிலிருந்து தொழிலாளர் விரட்டப்பட்டு சிங்கள மக்களுக்குக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. சில தோட்டங்களில் தமிழ்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்கள் உத்தியோகத்தர் வெளியேற்றப்பட்டு சிங்கள தொழிலாளர் உத்தியோகத்தர் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இவைகளைக் காரணம் காட்டியே இன்று தொண்டமான் இவ்வரசுக்கு விசுவாசமாக நடக்கும்படி தோட்டத் தொழிலாளரைக் கேட்கிறார். கடந்த அரசாங்கத்தால் தோட்ட முதலாளி தொண்டமானின் தோட்டங்களும் தேசியமயமாக்கப்பட்டது. தொண்டமான் சென்ற அரசாங்கம் பதவியிலிருந்த போது வட்டுக்கோட்டை மாநாட்டுத் தீர்மானத்தை ஏற்று தமிழ் ஈழ கோரிக்கையை அங்கீகரித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் பதவியும் பெற்று சில காலத்திலேயே அவை எல்லாவற்றையும் ஒரு புறம் வைத்து விட்டு ஜே ஆருடன் கூட்டுசேர்ந்து மந்திரிப் பதவியும் பெற்றுத் தோட்டத் தொழிலாளர்களைக் காட்டிக்கொடுத்தார். தொண்டமான் அரசுடன் சேர்ந்திருந்தும் கூட இவ்வரசு பதவிக்குவந்து சில நாட்களில் 1977 ஓகஸ்டில் இனக் கலவரத்தில் தோட்டத்தொழிலாளர் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கப்பட்டனர். கொலை, கொள்ளை, கற்பழிப்புகள், தீவைப்பு என்பன நடைபெற்றன. பலர் உயிருடன் கொழுத்தப்பட்டனர்.

1977 வடுக்கள் அழிய முன்னரே மீண்டும் 1981இல் மீண்டும் 1977 போன்ற கொடுமைகள் தொண்டமானுடன் ஒன்றாகவிருக்கும் அதே மந்திரிமாரின் வழி காட்டலில் நடந்தன. இவ்வரசு நட்சா எனப்படும் கிராம விஸ்தரிப்பு மூலம் தொழிலாளரைப் படிப்படியாகத் தோட்டங்களை விட்டு அப்புறப்படுத்தத் திட்டம் தீட்டியுள்ளது. இவற்றை நோக்கும் போது தொண்டமான் தனது வர்க்க நலன் கருதி அரசுடன் இணைந்திருப்பது வியப்புக்குரியதல்ல. 1977 தேர்தலுக்கு தமிழ் ஈழக் கோரிக்கையை உரக்கக்கத்திய கூட்டணி, மலையக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுக்கு இரகசிய திட்டம் இருப்பதாகச் சொல்லியது. 1977 ஓகஸ்ட் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு வடகிழக்கு நோக்கி வந்த அகதிகளைப் பாதுகாக்க வாழ வழிவகுக்கத் திராணியற்று கூட்டணியினர் கைவிட்டனர். சில சமூக சேவை நிறுவனங்களே இவர்களைக் குடியேற்றியுள்ளன. இவ்விதம் சமூக சேவை நிறுவனங்களின் உதவியுடனும் தன்னிச்சையாகவும் இது வரைக்கும் 1இலட்சம் பேரளவில் வடகிழக்கு பகுதிகளில் வந்து குடியேறியுள்ளனர். இவ்விதம் குடியேறியவர்களுக்கும் வடகிழக்கில் பாரம்பரியமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த மக்களுக்கும் இடையில் இன்னமும் சமூக. பொருளாதார, கலாசார வேறுபாடுகள் காரணமாக சில வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. காலப்போக்கில் அவை படிப்படியாக மங்கி மறையும்.

இன்று மலையகத்தில் மூன்று வகையான ஸ்தாபனங்கள் மக்களிடையே வேலைசெய்கின்றன. (1) தொழிற்சங்கங்ள் (2) சில சமூக சேவை ஸ்தாபனங்கள் (3) மலையக மக்களின் தனித்துவமான பிரச்சினைகளின் நிமித்தம் உருவான வெகுஜன ஸ்தாபனங்கள்.

தொழிற்சங்கங்கள் யாவும் இன்று வெறும் சீர்திருத்த ஸ்தாபனங்களாகவும் வெறும் சந்தாபிடிக்கும் வியாபார நிறுவனங்களாகவும் மாறியுள்ளன. சுமூகசேவை ஸ்தாபனங்கள் பல்வேறு நோக்கங்களுக்காக சில சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இவைகள் சிலவற்றின் நடவடிக்கைகள் சந்தேகத்திற்குரியனவாகவும் உள்ளன. மக்களை சரியான வழியில் சிந்தித்து பிரச்சினைகளுக்கான தீர்வுக்காகப் போராடவிடாது தடுப்பதுதான் நோக்கம் என சந்தேகிக்கத் தோன்றுகிறது. பெருமளவு வெளிநாட்டு நிதி இவற்றிற்குக் கிடைக்கிறது.

வெகுஜன ஸ்தாபனங்களை நோக்கின் அவை மலையகத்தில் உள்ள சில படித்த இளைஞர்களினால் உருவாக்கப்பட்டன. மலையகத்தில் இப்போது தான் படித்த வர்க்கம் ஒன்று உருவாகியுள்ளது. எல்லா இடங்களிலும் ஆரம்பத்தில் குட்டி பூர்ஷ்வா வர்க்கம் தான் விழிப்புணர்ச்சி பெறும். மலையக மக்களுக்கான தனியான ஸ்தாபனம் உருவாவது சரியானதும் தேவையானதும் கூட. இவ்வியக்கங்கள் இன்னமும் படித்த சில இளைஞர்களை விட்டு மக்களிடம் செல்லவில்லை. இவ்வியக்கங்களில் குட்டி பூர்ஷ்வா சிந்தனையிலிருந்து விடுபட்ட ஊழியர்கள் உருவாகாமைதான் மக்களிடம் செல்ல முடியாத நிலைக்கான காரணமாகும். இவற்றிற் சில மலையக மக்களை தனியான தேசிய இனம் (Nation) எனும் கருத்தை முன்வைத்துள்ளனர். இதற்கு எதிராக தமிழ் மக்களிடையே உள்ள சில இயக்கங்கள் எல்லாத் தமிழ் பேசும் மக்களையும் சேர்த்து (மலையக மக்கள், முஸ்லிம் மக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத்தமிழர்) ஒரே தேசிய இனம் (Nation) என முன்வைக்கின்றனர். இதனை ஈழவர் எனவும் அழைக்கின்றனர். இவ்விரண்டு கருத்துக்களையும் தெளிவாகப் பார்ப்போம்.

மலையக மக்களைத் தனியான தேசிய இனம் என்று சொல்பவர்கள் பல நோக்குடையவர்கள் உள்ளனர். ஒரு சாரார் தேசிய இனம் என்பது என்ன என்பதில் தெளிவின்றிச் சிறுபான்மையினங்கள் யாவும் தேசிய இனம் என்று கருதுகின்றனர். இன்னொரு சாரார் மலையக மக்களை தேசிய இனம் என்று சொல்வது அவர்களது அந்தஸ்தைக் கூட்டும் என்ற தவறான சிந்தனையிலும் மலையக மக்களிடையே தமது தனித்துவமான தலைமையை உருவாக்கவும் வேண்டி இந்த கோசத்தை முன் வைக்கின்றனர் மலையக மக்களைத் தனித் தேசிய இனம் என்று அங்கீகரிக்கக் கோரும் இலங்கைத் தொழிலாளர் கொங்கிரஸின் பின்னணியை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பரந்த அளவில் கிளர்ந்து வருகையில் மலையக மக்களை அத்துடன் இணைய விடாது குறுக்கே பிரிக்கின்ற தந்திரோபாயமாகத்தான் இ.தொ. கொங்கிரஸ் இதனைக் கையாள்கிறது. இந்நிலையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் குடியேறிய மலையக மக்களையும் இலங்கைத் தொழிலாளர் கொங்கிரஸ் வடக்கு - கிழக்கு மக்களின் போராட்டங்களோடு இணையவிடாது தனியே பிரித்து வைக்க தன்னாலான எல்லாப் பிரயத்தனங்களையும் செய்கிறது. இது மிகவும் அபாயகரமான போக்கு ஆகும். யதார்த்தத்தில் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் குடியேறிய மலையக மக்கள் தங்களை தங்களை அப்பிரதேச மக்களின் போராட்டங்களுடன் இணைக்க முடியாதவிடத்து இம் மலையக மக்கள் 'தனித்துப்' போய்விடுவார்கள்! இதனை அவர்களுக்கு வலியுறுத்துகிற அதே உயர்த்திய தொனியில் தமிழ் மக்களுடைய விடுதலைப் போராளிகளுக்கும் சில விடயங்களை வலியுறுத்த வேண்டி இருக்கிறது. வடக்கு கிழக்கு மக்கள் மத்தியில் வேலை செய்வதற்கு எடுக்கிற கவனத்தைவிட நூறு மடங்கு அதிகளவு மலையக மக்கள் மத்தியில் அவர்கள் இறங்க வேண்டும். குறிப்பாக வடக்கு-கிழக்கு பகுதியில் குடியேறியுள்ள மலையக மக்களைத் தம்மோடு அணிதிரட்டுவதோடு மலையகத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவர்களுக்கு அவர்களுடைய தனித்துவத்தை பேணும் வகையில் அவர்கள் எடுக்கின்ற எல்லாப் போராட்டங்களுக்கும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்க வேண்டும்.

ஈழவர் என்ற கருத்து வெறும் வறட்டுத்தனமான அணுகுதலிருந்தே உருவானது. யுதார்த்த நிலையைக்கணக்கிலெடுக்காது பிரச்சனையைக் குறைக்கும் நோக்குடன் சுயமனவிருப்பின் அடிப்படையிலே முன்வைக்கப்பட்டது.

ஈழவர் என்ற கருத்தாக்கம் தேசிய இனங்களின் வரலாற்று ரீதியான உருவாகத்தை மறுப்பதோடு மட்டுமல்லாமல் நடைமுறையைக் கவனத்திலெடுக்காத வெறும் கற்பனையாகும். இங்கு முஸ்லிம்கள், மலையக மக்கள் போன்றவர்களுடைய தனித்துவங்கள் சிதைக்கப்படுகின்றன.

தேசிய இனப்பிரச்சனை என்பது சாராம்சத்தில் வர்க்கப் பிரச்சனையே. குறிப்பாக இது விவசாயப்புரட்சியுடன் சம்மந்தப்பட்டது. முதலாளித்துவம் வளர்ந்து சந்தைப் பொருளாதாரம் உருவானவுடனேயே ஒரு மொழி பேசும் மக்கள் ஓரே பிரதேசத்தில் வாழும் மக்களிடையே ஒரு பொருளாதார பிணைப்பு உருவானது. இதன் நிமித்தமே தேசிய இனங்கள் (Nation) உருவானது. மலையக மக்கள் காலனித்துவவாதிகளால் கொண்டு வரப்பட்டதால் சுயமாக நிலப்பிரபுத்துவத்தை வீழ்த்தி உருவான மக்களிடம் உள்ள நிலத்துடனான பிணைப்பிருக்கவில்லை. இந்தியாவிலிருந்து பூரணமாக விடுபடாத நிலை (தமது தாய்நாடான இந்தியாவை எண்ணும் நிலை) இருந்தது. சமூக வரலாற்று பொருளாதாரக் காரணங்களால் இவர்கள் வடக்கு- கிழக்கு தமிழ் மக்களிடம் இருந்து வேறுபாடுடையவர்களாக இருந்தனர். 1948 இல் பிரஜா உரிமை பறிக்கப்பட்டமையாலும் ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தம் காரணமாகவும் இவர்கள் இலங்கையின் தேசிய அரசியல் வாழ்விலிருந்து விலகியிருந்தனர். இவர்கள் ஒரு தனியான தேசிய இனமாவதற்குரிய சாத்தியக் கூறுகளை இனவாத அரசுகள் அழித்தன. இதனால் இவர்களால் தனியான தேசிய இனமாக வளர முடியாமல் போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977 இல் இனக்கலவரம் நடந்து முடிந்தவுடன் மலையகத்தில் முன்னோடிகளாக இருந்த பலர்கூட மலையக மக்கள் யாபேரும் இந்தியா செல்ல வேண்டுமென எனப்பிரச்சாரம் செய்தனர் தேசிய இனம் என்ற நிலையில் இருந்திருப்பார்களாயின் சரியானதோ பிழையானதோ தலைமையில் போராடியிருப்பார்கள். இவையாவற்றையும் பார்க்கும் போது மலையக மக்கள் தேசிய சிறுபான்மையினர் என்ற நிலையிலேயே இன்று உள்ளார்கள்.

## இவர்களின் பிரச்சனைக்கு தீர்வு என்ன?

இவர்களில் ஒரு பகுதியினர் சிங்கள கிராமங்களில் மத்தியில் வாழ்பவர்கள். குறிப்பாக கண்டி, கம்பளை, மாத்தளை, இரத்தினபுரி, தெனியாய பகுதிகளில் இவ்விதமாக உள்ளவர்கள் உண்டு. இவர்களில் இந்தியா செல்பவர்கள் போக மிகுதியானவர்கள். வடகிழக்குக்கு அல்லது மலையக மக்களுக்கு செறிவாக உள்ள பகுதிகளுக்கு குடிபெயர்வது அவசியமானதாகும். செறிவான பகுதிகளில் வாழ்வோர் தம்மை அமைப்புரீதியில் அணி திரட்டி தற்பாதுகாப்பிற்காக போராடுவதற்கு தாயாராவது அவசியமானதாகும். இவர்களது எதிர்காலத் தீர்வு மாறி வரும் சூழல் மற்றும் மக்கள் போராட்டத்தின் வளர்ச்சி என்பவற்றில் தங்கியுள்ளது.

## பின் குறிப்பு

மலையக மக்களின் பிரச்சனையின் முழுவடிவங்களையும் விரிவாகவும் தெளிவாகவும் ஆராய முடியவில்லை. தொடர்ந்து வரும் கருத்தின் விவாதங்கள் இதற்கான பாதையைத் திறக்கும் என நம்புகிறேன். மலையை மக்களின் சோகத்தை இங்குடன் முடியவில்லை. இங்கு ஆரம்பமாகி ஹட்டன். கண்டி ரெயில்வே ஸ்ரேசன்களிலும் தலைமன்னாரிலும் இராமேஸ்வரம் மண்டபத்திலும் இச்சோகக்கதை தொடர்ந்து பின் தழிழ் நாட்டின் கிராமங்களிலும் நீலகிரியிலும் அந்தமானிலும் முடிவுற்று நீள்கிறது.... .இங்கிருந்து குடிபெயரும் குடிபெயர்ந்த நண்பர்களின் கடிதங்கள் பல கதைகள் சொல்லும். எனது நண்பன் சிவானந்தன் கண்டி கலாச்சார குழுவினால் வெளியிடப்பட்ட 'நதி' எனும் சஞ்சிகையில் எழுதிய சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'வருகிறேன் ஜென்ம பூமியே' எனும் கவிதை இம் மண்ணை நேசித்து இச் சமூகத்தின் கொடுமையால் நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட ஒரு பிரஜையின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்துகிறது. இக்கட்டுரையை எழுதும் போது அக் கவிதையை நினைக்காமல் இருக்கவே முடியவில்லை...

*(இக்கட்டுரை 1983 ஆம் ஆண்டு ஏப்பிரல் - மே மாதத்து புதுசு சஞ்சிகையில் வெளியானது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுத்திரனின் இலங்கை தேசிய இனப்பிரச்சனை என்னும் நூல் அறிமுகம்



1983 ஜுலையில் நடந்த கோரமும் கொடுமையும் மிகுந்த சம்பவங்கள் பற்றி வந்த செய்திகள் பல நாடுகளிலும் வாழ்ந்த ஈழத்தமிழர்களை தாக்கியது. அப்படித் தாக்கப்பட்டவர்களில் ஒருவரான சமுத்திரனின் உளத்தாக்கத்தின் உள்ளுலக உந்துதலின் ஒருவெளிப்பாடே இந்நூலாகும். இது வெறும் உள்ளுலக உந்துதலோ அல்ல, உணர்ச்சிப்பெருக்கோ அல்ல, யதார்த்தத்தின் பிரதிபலிப்பும் கூட.

இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசுகள் யாவும் தம்மை நிலை நிறுத்திக் கொள்ளவும், பாதுகாப்பிற்கும், பலமாக அமைந்த நிறுவனமயப்படுத்தப்பட்ட பௌத்த சிங்கள இனவாதமே அத்திவாரமாக அமைந்துள்ளது. இனவாதம் ஒரு கருத்தமைவு வடிவத்தை பெற்று இன்றைய ஆட்சியாளருக்கு நல்ல கருவியாக எப்படிப் பரிணாமம் பெற்றதென்பதை இந்நூல் தெளிவாகவும் ஆழமாகவும் சித்தரிக்கிறது.

விஞ்ஞானபூர்வமான சமூகக் கண்ணோட்டத்ததுடன் பிரச்சனைகளை அணுகுபவர்களாக தம்மைக் காட்டிக் கொள்ளும் பலரும் கடந்த காலங்களில் வெறுமே இலகுவான அணுகுமுறையான பொருளாதாரமே சகலதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானிக்கிறது. என்பதை தவறாக புரிந்ததால் வரட்டுச் சிந்தனையை கொண்டிருந்தனர். இதனால் இவர்களால் மார்க்ஸின் முழுமையான அரசியல் பொருளாதாரமே அடித்தளமானது. அதன் வெளிப்பாடாக உள்ள அரசியல், கல்வி, கலாச்சாரம், அரசு, சட்டம் போன்றவை மேற்கட்டுமானம் என்பது மார்க்சிச அணுகுமுறையாகும். பொருளாதாரத்திற்கும் மேற்கட்டுமானத்திற்கும் இடையிலான உறவு இருவழியானது (Reciprocal) என்பதைச் சரியாகப்புரிந்து கொள்வதன் மூலம் தான் பிரச்சனைகளை சரியாக அணுகமுடியும். சிலகட்டங்களில் மேற்கட்டுமானம் தீர்மானிக்கும் ஆற்றல் கொண்டதாக மாறுகின்றது. இந்த அடிப்படையில் பார்க்கும் போது இலங்கையில் சிங்கள பௌத்த இனவாதம் என்ற கருத்தமைவு இன்றைய அரசியல் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் ஆற்றலையும் ஓரளவு சுயாதீனத்தையும் கொண்டுள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இது எவ்வாறு உருப்பெற்று வளர்ச்சி பெற்றது என்பதை இந்நூலாசிரியர் அழகாக சித்தரிக்கிறார்.

குறைவிருத்திப் பொருளாதாரத்தின் விளைவாக சிறு உடமையாளர்களும், வர்த்தகர்களும் நாட்டில் பிரதான சக்திகளாயினர். தொழில் வளர்ச்சியின்மை இன்னமும் விரிவாகச் சொல்வதானல் ஏகாதிபத்தியவாதிகள் தமது காலனிகளில் சுயமான முதலாளித்துவவளர்ச்சிக்கு இடமளிக்கவில்லை. இதனால் பலமான முதலாளிவர்க்கத்தினதோ, தொழிலாளி வர்க்கத்தினதோ உருவாக்கம் முழுமை பெறவில்லை. ஏகாதிபத்தியத்தின் இந்நடவடிக்கைகளை விபரித்திருந்தால் இந்நூல் முழுமை பெற்றிருக்கும்.

தமது சுயநலன்களின் அடிப்படையில் இக்குட்டி பூர்ஷ்வாக்களும் புத்திஜீவிகளும் கற்பனையான பொற்காலங்களை உருவாக்கி பொய்மையான சமூகத்தை சிருஷ்டிக்கிறார்கள். இது பின் நோக்கிய நகர்வேயின்றி வேறில்லை. அதன் வெளிப்பாடாகவே 2500 வருடங்களின் பௌத்த சிங்கள வரலாற்றைக் காணக் கூடியதாக உள்ளது. இதன் வெளிப்பாடே தமிழர்களை திராவிடப் படையெடுப்பாளர்களின் வழிவந்தோராயும் முஸ்லீம்களை அழையா விருந்தினர்களாயும் சித்தரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கு இந்நூலின் முன்னுரையில் மேற்கூறிய விடயங்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

காலனித்துவவாதிகளின் ஏஜன்டுகளான கிறிஸ்தவ மிஷன்மாருக்கு எதிராக ஆரம்பித்த பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் காலப்போக்கில் தமிழர்களையும் முஸ்லீம்களையும் எதிர்க்கும் இயக்கமாக உருவெடுத்தது. இதுவே பௌத்த சிங்களவர் பூமிபுத்திரர்கள் என்றும் கருத்தாகவும் வெளிப்பட்டது. தேசியவீரர் எனப் புகழப்படும் அநாகரிக தர்மபாலா போன்றோர் இதன் மூலகர்த்தாக்களாவர். தமது இனவாதக்கருத்தமைவிற்கு தர்மபாலா புராணக் கட்டுக்கதைகளை ஆதாரமாக கொண்டு வந்தார். இதுவே காலப்போக்கில் சகல சிங்களப் பாராளுமன்ற அரசியல்வாதிகளுக்கும் வழிகாட்டியாகவும், சிறந்த ஆயுதமாகவும் பயன்பட்டது. தீவிர பிரிட்டிஷ் எதிர்ப்பாளராயும் தொழிற்சங்கவாதியாயும் இருந்த A.F. குணசிங்கா தேர்தல் நோக்கத்திற்காக இனவாதியாக மாறியமையை இங்கு உதாரணிக்கலாம். 1931 காலத்தில் சிங்கள மகாசபையில் இருந்த S.W.R.D பண்டாரநாயக்கா சிங்கள பௌத்தவாதத்தினை கருத்தமைவாக்கி பிரச்சாரம் செய்தார். **பண்டாரநாயக்காவின் இன அடிப்படை ஒற்றுமைக் கொள்கையான முதலில் சிங்களவர்களை ஒன்று திரட்டி அவர்களின் தனித்துவத்தை பலப்படுத்திய பின்னரே இனங்களுக்கிடையில் ஒற்றுமையை பெறமுடியும் என்பது நடைமுறையில் பெரும்பான்மையின் இனவாத ஒருமைப்பட்டிற்கூடாக பாராளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றும் மார்க்கம் என்பது பின்னர் தெளிவானது.**

1948 இல் D.S. சேனநாயக்காவின் லட்சக்கணக்கான தோட்ட தொழிலாளர்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்ட கொடுமையை "1915ம் ஆண்டையும் விட (1915 இல் சிங்கள முஸ்லீம் கலவரம் நடைபெற்றது) 1948இன் இந்த இரத்தம் சிந்தாத வெற்றி மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது" என்று குறிப்பிடுவதன் மூலம் ஆசிரியர் தெளிவாக வெளிக்காட்டுகிறார்.

சுதந்திரத்தின் பின் பெருந்தேசிய இனவாதத்தில் ஸ்தாபனமயமாக்கல் வளர்ச்சி பெற்றதை இந்நூல் எடுத்துக் காட்டியுள்ளது. இந்தக் காலகட்டத்தில் சிங்கள பௌத்த தேசிய வாதம் சிங்களப் பெருந்தேசிய இனவாதமாக பூரணமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபன ரீதியான வளர்ச்சியையும், ஆட்சிச் செல்வாக்கையும் பெறுகிறது. இது D.S.சேனநாயக்காவிற்கு பிறகு பண்டாரநாயக்காவினால் முன்னெடுக்கப்பட்டது. பண்டாரநாயக்கா தன் சமகாலத்து சமூகத்தின் தேவைகளை உணர முடிந்ததால் அவரால் சிங்கள பௌத்தவாதத்திற்கு மேலும் வலுவளிக்க முடிந்தது. தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் தொடரப்பட்டன. இடதுசாரிகள் உள்ளிட்ட சகலரும் இனவாதத்தில் மூழ்கினர் என்பதையும் இந்நூல் எடுத்துக் காட்டியுள்ளது.

கலாச்சார அமைப்புகளினூடாகவும் இனவாதம் வெளிப்பட்டதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். சிங்கள மொழியிலான பாடப்புத்தகங்கள், ஒலிபரப்பு போன்றவை இனவாதப் பிரச்சாரம் செய்த அதேசமயம் தமிழ்ப் புத்தகங்கள் ஒருமைப்பாட்டை வலியுறுத்தின.

இவையாவினதும் மொத்தவிளைவின் பிரதிபலிப்பே 1983 இன் இனக்கலவரம். இந்நூல் குறிப்பிடுவது போல் ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களாயினும் இதற்கான திட்டமிடல் வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நாம் உணரக்கூடியதாய் உள்ளது.

இன்றைய அரசின் சுதந்திரப் பொருளாதாரக் கொள்கை அமுல்படுத்தப்படும் அதேசமயம் பௌத்த சிங்கள இனவாதத்திற்கு இசைவான பொருளாதாரக் கொள்கைகளே அமுல் நடத்தப்படுகின்றன. இந்நூலில் குறிப்பிட்டது போல் இன்றைய தர்மிஸ்ட் அரசால் குறிப்பிடப்படும் தார்மீக சமூகத்தை நோக்கிய ஊர்வலம் பின்னோக்கிய ஊர்வலம். இவ்வூர்வலம் விடுதலையை நோக்கிப் போகவில்லை. மனித தத்துவத்தின் மீட்சியை நோக்கி நகரவில்லை. அழிவை நோக்கியே செல்கிறது. நாம் ஒன்றை மட்டும் சொல்லலாம் இவ்வூர்வலம் இடையில் அடித்து நொருக்கப்பட்டு மக்கள் முன்னோக்கிய பயணத்தை தொடர்வார்கள்.

மொத்தத்தில் இந்நூல் ஆழமான விவாதங்களை நடத்தவும், பிரச்சனைகளை விஞ்ஞான பூர்வமான சமூகக் கண்ணோட்டத்தில் அணுகவும் தூண்டும். சமுத்திரன் பிரச்சனைகளை சொல்லும் விதமும் மொழிநடையும் அழகாயும் இரசிக்க கூடியதாகவும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரனும், அவரைப் போன்றவர்களும் இன்னும் இத்தகைய நூல்களை எழுதுவது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சூழலில் மேலும் அறிவு பூர்வமான ஆய்வுகளுக்குத் துணைபுரியும்

*(இக்கட்டுரை 1984 ஆம் ஆண்டு ஜூலை மாதத்து புதுசு சஞ்சிகையில் வெளியானது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி உருவானதற்கான அரசியற் காரணங்கள்

இந்த ஸ்தாபனம் (PLFT- தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி) எங்கிருந்தோ புதிதாக வந்து முளைத்த ஒன்றல்ல. கடந்தகால எமது அரசியல் நடவடிக்கையின் தொடர்ச்சியாகவே இந்த ஸ்தாபனத்தின் உருவாக்கம் அமைந்துள்ளது. முன்னர் நாம் இயங்கிவந்த ஸ்தாபனமான, தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் (NLFT) அரசியல் போக்கினாலும், சூழலின் மாற்றங்களின் விளைவாலும் இது தோன்றியதாகும். இவ்வகையில் NLFT இன் கடந்தகால நடவடிக்கைகளின் சரி, பிழை இரண்டிற்கும் நாங்களும் காரணமானவர்கள் என்ற வகையில், அதுபற்றிய ஒரு சரியான ஆய்வை மேற்கொள்வதன் மூலமே, இத்தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆக்க பூர்வமான பாத்திரத்தை வகிக்க முடியும்.

கடந்தகால இடதுசாரி இயக்கங்களின் வேலைகளில் தொடர்ச்சியாகவே தமிழீழ தேசிய விடுதலை முன்னணி உருவானது. தேசிய இனப்பிரச்சினை தொடர்பான, முன்னைய இடதுசாரிகளின் தவறை உணர்ந்து தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி உருவாக்கப்பட்டது. கடந்தகால இடதுசாரிகளின் வேலைப்பாணி தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியிலும் வெளிப்பட்டது. தாராளவாதம், இழுபட்ட போக்கு, செயற்திறன் இன்மை, போர்க்குணாம்சம் போதாமை என்பன தமிழ்மக்கள் ஜனநாயக முன்னணியின் குறைபாடுகளாகவிருந்ததுடன், நிகழ்ச்சிக்குப் பின்னால் இழுபட்டுப் போகும் போக்கும் காணப்பட்டது. 1983 யூலைக் கலவரம் எமது ஸ்தாபனத்தையும் பாதித்தது. சரியான இயக்கம் ஒன்றைக் கட்டியமைக்க வேண்டிய தேவையேற்பட்டது. தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் வேலை முறைகளை சுயவிமர்சனம் செய்துகொண்டு, அந்த ஸ்தாபனத்தைப் புனரமைத்து அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியாகவே தமிழீழ தேசிய விடுதலை முன்னணி உருவாக்கப்பட்டது. (தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் தோற்றம் பற்றிய வரலாறு *இலக்கு* இதழ் 4 இல் பார்க்கவும்)

தமிழீழ புதிய ஜனநாயகப்புரட்சியை நிறைவுசெய்து, தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசை அமைப்பதன் மூலமே தமிழ்மக்களின் விடுதலையை உத்தரவாதம் செய்ய முடியுமென தீர்மானித்திருந்தோம். இது, போராட்டம் பாட்டாளிவர்க்கத் தலைமையில் முன்னெடுக்கப்பட்டால் மாத்திரமே சாத்தியமானதாகும். 1983 செப்டெம்பர் முதலாவது மாநாட்டில் இவை தீர்மானிக்கப்பட்டிருந்தன. (முதலாவது தேசிய மாநாட்டு அறிக்கை அடிப்படையில் சரியானதென இன்னமும் நம்புகிறோம்) பல விடயங்கள் தெளிவாகவும் விளக்கமாகவும் முன்வைக்கப்படவில்லை. தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சியை வெற்றிக்கிட்டுச் செல்ல மக்கள் யுத்தத்தை முன்னெடுப்பதன் மூலமே சாத்தியமாகும். மக்கள் யுத்தமென பொதுப்படையாகக் குறிக்கப்பட்டிருந்ததேயொழிய, எமது நாட்டின் குறிப்பான சூழலில் எப்படி மக்கள் யுத்தத்தை முன்னெடுப்பது என்பது, குறிப்பிடப்படவில்லை. நகர்ப்புற கெரில்லா நடவடிக்கை ஒரு பிரதான போராட்ட வடிவம் என்பதும் குறிப்பிடப்பட்டிருந்தது. பாட்டாளிவர்க்கத் தலைமையை எப்படி உருவாக்குவது என்பது தெளிவாக முன்வைக்கப்படவில்லை.

பாட்டாளி வர்க்கத் தலைமையை உத்தரவாதம் செய்ததன் பின்னால்தான் தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஈடுபடமுடியும் என அமைப்பினால் (NLFT) முன்வைக்கப்பட்ட கருத்து தவறானதென நாம் கருதுகிறோம். போராட்டம் முனைப்படைந்து ஏனைய வர்க்கங்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து விலகியிருந்து பாட்டாளிவர்க்கத்தை அணிதிரட்டுவது என்பது சாத்தியமற்றது. ஏனைய வர்க்கங்களால் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இப்போராட்டத்தில் பல குறைபாடுகளைக் காணக் கூடியதாகவிருக்கின்றது. இப்போராட்டம் தேசிய விடுதலைக்குரிய சகல பரிமாணங்களையும் கொண்டிருக்கவில்லை. இந்நிலையில் இயங்கியல் ரீதியாகப் பார்க்குமிடத்து முற்போக்குத் தேசியவாதத்தை வளர்த்தெடுக்காமல், தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப்போராட்டத்தை முன்னெடுக்காமல் பாட்டாளிவர்க்கத் தலைமையை உத்தரவாதம் செய்ய முடியாது. தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சியையும் நிறைவு செய்ய முடியாது. எனவே இப்போராட்டத்தை தேசியவிடுதலைப் போராட்டமாக வளர்த்தெடுத்து புதிய ஜனநாயகப் புரட்சியாக முன்னெடுப்பதன் மூலம் மட்டுமே எமது இலக்குகளை அடைய முடியும். பாட்டாளி வர்க்கத் தலைமையைக் கொண்டு வருவதற்கு அடிப்படைமக்களின் பகுதிப் போராட்டங்களை முன்னெடுப்பதும், அதனை தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு உட்படுத்தியும் முன்னெடுப்பதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும். வெறுமனே அதீத பாட்டாளி வர்க்க கோசங்ளை வெளியிடுவதால் அல்ல. நாம் அரசியல் அறிக்கையிலும் எமது அரசியல் திட்டத்திலும் பல விடயங்ளைத் தெளிவாகக் குறிப்பிட்டாலும், நடைமுறையில் அவற்றை சரியென உணர்த்தக் கூடிய வகையில் எமது நடைமுறைகளில் இருக்கவில்லை. தமிழீழ தேசிய விடுதலை முன்னணி பல்வேறு வர்க்க சக்திகளையும் உள்ளடக்கிய யுத்த தந்திர ரீதியான (புதிய ஜனநாயகப் புரட்சிக்கான) கீழிருந்து கட்டும் ஐக்கிய முன்னணி எனக் குறிப்பிட்டாலும் நடைமுறையில் (NLFT) ஒரு வர்க்க ஸ்தாபனமாக பார்த்த பார்வையே இருந்தது. இவ் ஐக்கிய முன்னணியானது ஏனைய விடுதலை ஸ்தாபனங்களுடன் ஐக்கியமும் போராட்டமும் எனும் கோட்பாட்டை பின்பற்றும் என முடிவு செய்திருந்தோம். ஆனால் இவ்வடிப்படையில் ஸ்தாபனத்தின் வேலை முறை இருக்கவில்லை. தமிழீழப் போராட்டத்தை தேசியவாத சக்திகள் முன்னெடுக்கும்போது இது தேசியவாதிகளின் போராட்டம் வெற்றியடையாது எனக்கூறி போராட்டத்தில் ஈடுபடாது இருந்தோம். மாறாக இப்போராட்டத்தில் மனப்பூர்வமாக ஈடுபட்டு எமது பங்களிப்பை நல்குவதன் மூலமே நாம் சரியான வழியில் போராட்டத்தை முன்னெடுக்க முடியும். அத்துடன் சக இயக்கங்களின் தவறுகளை சிநேக பூர்வமாக சுட்டிக்காட்டுவதன் மூலம் அவர்களையும் சரியான பாதையை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும். இதுவே ஐக்கியமும் போராட்டமும் என்ற கோட்பாட்டைப் பின்பற்றுவதுமாகும்.

எமது போராட்டம் ஆயுதமேந்திய போராட்டம் என நாம் கூறிக்கொண்டோம். அதற்கான ஒரு இராணுவ அமைப்பு அவசியம் எனவும் கூறிக்கொண்டோம். ஆனால் அதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறை வேலை எதையும் முனைப்பாக கைக்கொள்ளவில்லை. எமது நாட்டுச் சூழலில் படையை எப்படிக்கட்டுவது, அதற்குரிய ஸ்தாபன அமைப்பு என்ன என்பது பற்றிய தெளிவுகள் அமைப்புக்கு இருக்கவில்லை. படை கட்டலின் அவசியம்பற்றி வலியுறுத்தியவர்கள் சுத்த இராணுவவாதிகளாகக் காட்டப்பட்டனர். இன்று போராட்டத்தை முன்னெடுக்க ஒரு மைய இராணுவக்குழுவும் ஸ்தல இராணுவ அமைப்புக்களும் கட்டப்படல் அவசியமானது.

இன ஒடுக்குமுறை உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் இந் நேரத்தில், எதிரியிடமிருந்து எம் தேசத்தைப் பாதுகாக்க தேசிய தற்காப்பு யுத்தத்தை முன்னெடுப்பது அவசியமென நாம் கருதுகிறோம். தேசிய தற்காப்பு யுத்தம் என வைக்கப்படுவது தவறானதென (NLFT) கருதுகின்றது. இத்தேசிய தற்காப்பு யுத்தத்திற்கு பகுதிப்போராட்டம் உட்படுத்த வேண்டியதன் அவசியம் மறுக்கப்பட்டது. இன்றைய பிரதான முரண்பாட்டை தீர்க்கும் போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் மட்டுமே ஏனைய முரண்பாடுகளும் தீர்வுக்கு கொண்டுவர முடியும் என்பதும் மறுக்கப்பட்டது. இவ்வாறாக கருத்து வைப்பது பூர்ஷ்வா நலன்சார்ந்தது என்றும் கூறப்பட்டது. எமது நாட்டில் நகரங்களிற்கும் கிராமங்களிற்கும் இடையே பாரிய வேறுபாடின்மை, மற்றும் சிறிய பிரதேசம் என்பவை கிராமம் நகரம் இணைந்த போராட்டமுறையையே வேண்டி நிற்கின்றது. நகரப் போராட்டம் கிராமியப் போராட்டத்திற்கு உதவும் வகையிலும், கிராமியப் போராட்டம் நகரப் போராட்டத்திற்கு உதவும் வகையிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். நகர்ப்புற கெரில்லா நடவடிக்கை மக்கள் யுத்தப் பாதையில் ஓர் போராட்ட வடிவமாகும். NLFT முதலாவது மாநாட்டு அறிக்கையில் இலங்கை ஒரு நவகாலனித்துவ நாடு என்னும் கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால் இன்று, இலங்கை ஓர் அரைக்காலனித்துவ நாடு என NLFT இனால் கூறப்படுகிறது. இம்மாற்றம் தகுந்த ஒரு ஸ்தாபன முறையில் செய்யப்படவில்லை. இலங்கை ஒரு நவகாலனித்துவ நாடு என்றே நாம் இன்னமும் கருதுகின்றோம். NLFT பல விடயங்களிற்கு சீனப்புரட்சியின் அனுபவங்களை மாதிரியாகப் பின்பற்றும் போக்கைக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரசியல் கருத்து முரண்பாடுகள் காரணமாகவும் ஸ்தாபன நடைமுறை முரண்பாடுகள் காரணமாகவும் தமிழீழ தேசிய முன்னணியிலிருந்து பிரிந்து தமிழீழ மக்கள் முன்னணி என்னும் பெயரில் புதிய ஸ்தாபனமாக இயங்குகின்றோம் என்பதையும் அறியத் தருகின்றோம்.

*(இக்கட்டுரை 1986 ஆண்டு வைகாசி மாதம், தமிழீழ மக்கள் முன்னணியின் தத்துவார்த்த ஏடான* பயணம் *முதலாவது இதழில் வெளிவந்தது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழீழ தேசிய விடுதலை முன்னணி அமைப்புகளிலிருந்து உயிர்நீத்த போராளிகள்

1.

நேரு என்று அழைக்கப்பட்ட கந்தசாமி ஜெகதீஸ்வரன். கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழீழ விடுதலை இயக்கத்தில் இணைந்திருந்து விலகியவர். இவர் 10.10.1984 இல் தமிழீழ விடுதலை இயக்கத்தால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

2.

கலைதாசன். இவர் கரவெட்டியைச் சேர்ந்தவர். இலங்கை இராணுவத்தின் சுற்றி வளைப்பில் 1985 ஆண்டு மார்ச் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

3.

தவம் என்று அழைக்கப்பட்ட அமலதாஸ். மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 30.04.1985 இல் மாதகலிருந்து வேதாரணியம் செல்கையில் படகு விபத்துள்ளாகி மரணித்தார்.

4.

தங்கராசா யோகராசா. கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 30.04.1985 இல் மாதகலிருந்து வேதாரணியம் செல்கையில் படகு விபத்துள்ளாகி மரணித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


5.

சந்திரன் என்று அழைக்கப்பட்ட அருள். இவர் கரவெட்டி சண்டிக்குளத்தைச் சேர்ந்தவர். 10.05.1985 இல் நெல்லியடியில் இலங்கை இராணுவத்தின் சுற்றி வளைப்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

6.

கேசவன். இவர் கரவெட்டி சண்டிக்குளத்தைச் சேர்ந்தவர். 10.05.1985 இல் நெல்லியடியில் இலங்கை இராணுவத்தின் சுற்றி வளைப்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

7.



மணியம் அல்லது வசந்தன் என்று அழைக்கப்பட்ட சந்ததியார். இவர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (PLOTE) ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர். அந்த அமைப்பின் அரசியல் செயலராகவும் இருந்தவர். 1984 ஆண்டில் இவர் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தில் செயற்படுவதிலிருந்து ஒதுங்கி சென்னை அண்ணாநகரில் வசித்து வந்தவர். இவர் 18.09.1985 இல் சென்னையில் மக்கள் விடுதலைக் கழகத்தினரால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


8.

பாஸ்கரன். இவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர். இலங்கை இராணுவத்தால் 1986 ஆண்டில் கிளிநொச்சி கரடிபோக்குச் சந்தியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

9.

இயற்பெயர் தெரியாது. இவர் மாவை கலட்டியைச் சேர்ந்தவர். இலங்கை இராணுவத்தால் 1986 ஆண்டில் மாவிட்டபுரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

10.



மோகன் என்று அழைக்கப்பட்ட விசுவலிங்கம் விசுவானந்ததேவன். கல்லுவத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 15.10.1986 இல் குருநகரிலிருந்து நெடுந்தீவுக்கு படகொன்றில் செல்லும்போது காணாமற் போனார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.

விசு என்று அழைக்கப்பட்ட நரேஸ் சர்மா. காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 15.10.1986 இல் குருநகரிலிருந்து நெடுந்தீவுக்கு படகொன்றில் விசுவானந்ததேவனுடன் செல்லும்போது காணாமற் போனார்.

12.



கண்ணன் என்று அழைக்கப்பட்ட சந்தாம்பிள்ளை ரோய் ஜோன்சன். முருங்கன்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 15.10.1986 இல் குருநகரிலிருந்து நெடுந்தீவுக்கு படகொன்றில் விசுவானந்ததேவனுடன் செல்லும்போது காணாமற் போனார்.


13.

வசந்தா என்று அழைக்கப்பட்ட தர்மபாலசிங்கம். இவர் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். இவரை 1987 ஆண்டிலிருந்து காணவில்லை. தரைவழியாக ஐரோப்பாவை வந்தடையும் முயற்சியில் இவரது மரணம் நேர்ந்திருக்கலாமென்று கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14.



ரமணி என்று அழைக்கப்பட்ட செல்வகுமார். வல்வெட்டித்துறையைபி றப்பிடமாகவும் பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவத்துறை மாணவருமாவர். இவர் 1989 ஆண்டில் யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் வைத்து தமிமீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

15.

தவமண்ணை என்று அழைக்கப்பட்ட ராஜருந்தவம். கல்லுவத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் கல்லுவத்திலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிமீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

16.

கனகரத்தினம் கஜேந்திரன். திக்கத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் திக்கத்திலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.

ஞானி அண்ணை. மந்திகையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், இராமநாதபுரத்தில் வசித்து வந்தார். இவர் 1990 ஆண்டில் இராமநாதபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

18.

சின்னத்தம்பி செல்லம். திக்கத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் திக்கத்திலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

19.

இராசையா கரன். திக்கத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் திக்கத்திலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

20.

தம்பிப்பிள்ளை சாந்தன். திக்கத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் திக்கத்திலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

21.

வைரவப்பிள்ளை சுரேஸ்வரன். திக்கத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் திக்கத்திலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22.

பசுபதி கதிரமலை. திக்கத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் திக்கத்திலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

23.

மதன் என்று அழைக்கப்பட்ட தெய்வேந்திரன். மண்டானைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் மண்டானிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிமீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

24.

குஞ்சம்பு என்று அழைக்கப்பட்ட கதிரமலை. கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் மண்டானிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிமீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

25.

சிங்கன். தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் தும்பளையிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

26.

கண்ணாடி என்று அழைக்கப்பட்ட கே.தங்கவேலாயுதம். அம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் அம்பனிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


27.

ஆர். கனகசிங்கம். கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் கரவெட்டியிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

28.

பழனி அல்லது சுப்பையா என்று அழைக்கப்பட்ட சுரேஸ்வரன். கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1990 ஆண்டில் கரவெட்டியிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்

29.



றமணன் அல்லது அறிவு அல்லது ஞானம் என்று அழைக்கப்பட்ட அந்தோனிப்பிள்ளை ரஜீஸ். தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 01.09.1990 இல் தெல்லிப்பழையிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.



அன்ரன் என்று அழைக்கப்பட்ட சாரங்கபாணி ஐயர் விவேகானந்தன். உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 10.09.1990 இல் இணுவிலுள்ள அவரது மனைவியின் இல்லத்தில் வைத்து செங்கதிர் தலைமையில் வந்த தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

31.

சோமசுந்தரம் தங்கவேல். டேவிட் என்று அழைக்கப்பட்டவர். ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழீழ விடுதலை இயக்கத்தில் இணைந்திருந்து விலகியவர். இவர் 1995 ஆண்டில் தமிழ்நாட்டில் விபத்தொன்றில் மரணமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் அடையாளம் சர்வதேச ரீதியாக உள்நாட்டில் நிலவும் இனப்பிரச்சினையால் அறியப்பட்டு இருக்கின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் பேசும் நாடுகள் உலகில் எத்தனையோ உள்ளன. ஆனால் பல்லினங்கள் வாழும் பெரும்பாலான நாடுகளில், இலங்கையைப் போன்று, இனப்பிரச்சினை என்பது சர்வதேச ரீதியாக பேசும் பொருளாக இல்லை. இது அங்கு வாழும் பல்லின மக்களிடையே நிலவும் புரிந்துணர்வினால் மாத்திரமே சாத்தியமாயிற்று.

இலங்கையின் இனப்பிரச்சினை உள்நாட்டு யுத்தமாக உருவெடுத்து, பல அழிவுகளைச் சந்தித்து, இப்போது புதியதொரு தரிப்பிடத்தை வந்தடைந்திருக்கின்றது. இந்த அழிவுகளிலிருந்து ஆக்கபூர்வமான பாடங்களைக் கற்றுக்கொண்ட மக்கள், இப்போது உருவாகியிருக்கும் சூழல் நீடித்து நிலைத்து நிற்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இலங்கையின் இனப்பிரச்சினையை சாக்காக வைத்து, சமாதான, மனித உரிமைக் காவலர்களாக இலங்கைக்குள் மூக்கை நுழைத்திருக்கும் அந்நிய சக்திகள், உள்நாட்டு இனவாத, தேசியவாத சக்திகளின் துணையுடன் இலங்கையைத் தொடர்ந்து கொதிநிலையில் வைத்திருக்க விரும்புகின்றன.

இந்தச் சூழல் உருவாகலாமென நாற்பது வருடங்களுக்கு முன்னர் எச்சரித்ததோடு நின்றுவிடாமல்,
அதைத் தடுப்பதற்காக சிந்தித்துச் செயலாற்றிய மறைந்த தோழர் விசுவானந்ததேவன் பற்றி,
25 பேர்கள் இந்நூலில் கருத்துச் சொல்கிறார்கள்.

ஆய்வகம் வெளியீடு

விலை ரூ.250/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD